

# விடுதலை

தந்தை பெரியார் 93வது பிறந்தநாள் விழா மலர்

ESTD. 1959

Phone: Office 3704
Res. 5879

*Best Wishes For Thanthai Periyar's 93rd Birth Day*

**Contact us**

**WE ARE UNDERTAKING :**

Crank shaft Grinding,
Cylinder Re-Boring,
Fitting New Sleeves,
Main Line Boring,
Re-Mettaling Jobs,
Valve Refacing,
Valve seat Grinding &
Valve Sleeves Inserting,
Truing Brake Drums In-Brake Drum Lathe,
Surface Facing Cylinder Heads,
Reconditioning All Parts Etc, Etc.,
All Tractors, Cars, Trucks &
Oil Engines.

**MOORTHY ENGINEERING WORKS**

1 B/2, KHAJA MOHIDEEN STREET
PALAKARAI, TIRUCHIRAPALLI-8

PHONE : 445142

With the Best Compliments

From

# J. J. CORPORATION

(CIVIL ENGINEERING CONTRACTORS)

2, FLOWER STREET, SAIDAPET, MADRAS-15.

தொலைபேசி எண் : தலைவர் இல்லம் எண் 44
அலுவலகம் எண் 34

# கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய வங்கி

## (வரையறுக்கப்பட்டது)

**எண். ஐ. ஐ. 106**

**கள்ளக்குறிச்சி.**

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | 1,00,000-00 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | 80,426-00 |
| அலுவல் நிதி | 5,36,890-00 |

**நிரந்தர வைப்பு (Fixed Deposit)**

| | |
|---|---|
| 6 மாதம் | 4 சதவிகிதம் |
| 1 வருடம் | 5 ,, |
| 2 வருடம் | 5½ ,, |
| 3 வருடம் | 6 ,, |

அங்கத்தினர்கட்கு குறுகியகால, நீண்டகால கடன்கள் உடனுக்குடன் கொடுத்து உதவுகின்றது. காசோலை, டிராப்டு, பில்ஸ் முதலியன குறைந்த கட்டணத்தில் துரிதமாக வசூலித்துக் கொடுப்பதுடன், தமிழகத்தின் எப்பகுதி கட்கும் குறைந்த கட்டணத்தில் டிராப்டுகள் கொடுக்கப்படுகின்றது.

பாங்கில் சிறந்த முறையில் கலப்பு உரங்கள், பாமணி உரங்கள், இஃப்கோ கலப்பு உரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. கூட்டுறவு சங்கத் திற்குத் தேவையான புத்தக பாரங்கள், ஸ்டேஷனரி விற்பனை செய்யப்படு கின்றது. மற்றும் பட்டாசு வகைகள் வங்கியில் விற்பனை செய்யப்படுகின்றது.

வங்கியின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் :

**திரு. கோ. சாமிதுரை**, M.A.B.L. தலைவர்.
,, **தே. கேசவலு**, M.L.A. உபதலைவர்.
,, **க. நாராயணசாமி நாய்கர்**, பொருளாளர்.
,, **இரா. மாயகிருட்டினன்**, இயக்குநர்.
,, **நா. இரத்தினம்**, ,,
,, **பெ. ராமசாமி**, ,,

செயலாளர், தலைவர்,
**உ. கலியபெருமாள். கோ. சாமிதுரை**, M.A., B.L.

# விடுதலை
## தந்தை பெரியார் பிறந்தநாள் மலர்

# காணிக்கை

தமிழ்ச் சமுதாயத்தின் ஆயிரக்கணக்கான ஆண்டு அடிமைத் தளையை உடைத்து, அறியாமை இருளகற்றி, தன்மானச் சுடர்கொளுத்தி, பேதவாழ்வை நீக்கி, ஏற்றமும் எழுச்சியும் பெறும் புது சமுதாயமாக அதனை மாற்றிவரும் மகத்தான தலைவராம் வணக்கத்திற்குரிய நம் அய்யா அவர்கள், இன்று தமது 93-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்கள்!

தொண்டு செய்து பழுத்த பழமாகியும், அவர் துவண்டுவிடவில்லை; இலட்சியப் பயணம் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது—முன்னிலும் வேகமாக, முடுக்குடன்!

பழம் பெருமை பேசி, பகுத்தறிவை மறந்து, தன்மானம் இழந்து, சமத்துவம் அறியாது சாய்ந்த சமுதாயத்தை சமநிலைப்படுத்தும் பணி—சறுக்குப் பாறையில் ஏறிச் செல்வதுபோன்ற அபாயகரமானதொன்று என்பதை அவர்கள் அறிந்தே, அஞ்சாத தீரத்துடன் அதில் ஈடுபட்டார்கள்!

அரை நூற்றாண்டு காலத்தில் அவர்கள் செய்துள்ள கொள்கைப் புரட்சிகளால் ஏற்பட்டுள்ள அறுவடைகள்...அப்பப்பா!...பலரை ஆச்சரியத்துக்கும் சிலரை அதிர்ச்சிக்கும் ஆளாக்குவதாகும்!

1971ஆம்ஆண்டு தேர்தல் அவர்களை மையமாக வைத்தே சுழன்றது! பகுத்தறிவின் வெற்றியாய்—பழமையின் சமாதியாய் அது அமைந்தது!

மக்களின் அறியாமையை மூலதனமாகக்கொண்டு அதிகாரம் செலுத்திய ஆரியம், 'தாம் வாழத் தமிழகம் லாயக்கற்ற மண்ணாகிவிட்டது!' என்று புலம்பி, 'வெளியேறுகிறோம்' என்று ஒப்பாரி வைக்கும் வேதனை நிலைக்குத் தள்ளப்பட்டது—அய்யாவின் அரும்பெரும் வெற்றி அல்லவா?

"இந்த அரசு நாலாந்தர அரசு. அதாவது பிராமண—க்ஷத்திரிய—வைசிய—சூத்திர என்ற நாலு சாதிப் பிரிவில், தந்தை பெரியார் மொழியில் சொல்லுகிறேன்—இது—நாலாந்தர சூத்திரர்களின் அரசுதான் என்பதை மிகுந்த கர்வத்தோடு, பெருமையோடு, மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கின்றேன்" என்று தமிழக முதல்வர்,—அவரது தலைமகனாம் அண்ணாவுக்கு அடுத்து அப்பணி மேற்கொள்ளும் தனயன்—டாக்டர் கலைஞர் சட்ட மன்றத்திலேயே பிரகடனப்படுத்தினார்! அது ஒன்றே போதாதா—அய்யா அவர்கள் 93-ஆம் ஆண்டில் அடைந்துவரும் வெற்றிகள் எத்தகையவை என்பதைப் பாரறியச் சொல்ல? 'தி மாடர்ன் ரேஷனலிஸ்ட்' இங்கிலீஷ் ஏடும், பகுத்தறிவாளர் கழகங்களும் அவர் பெற்றுள்ள அண்மைக்கால கூடுதல் வெற்றிகள் அல்லவா?

இனமானம் காக்கும் ஈரோட்டு ஏந்தலாம் நம் அய்யாவின் பணி மேலும் வெற்றிக் களத்தில் வேக நடைபோடும் என்பதற்கு இவை அச்சாரங்கள்!

ஆயிரம் பிறை கண்டு அதற்கப்பாலும் காணும் நம் அய்யாவின் தொண்டு—ஒரு தொடர் கதை.

பரந்த தமிழ்ச் சமுதாயம் அதனால் பெரும் பயனடைந்து வருவதுஉறுதி! உறுதி!!

வாழ்க நம் தந்தை!
வளர்க அவர்களது வாகை மலர்கள்!!

சென்னை,
17—9—1971

ஆசிரியர்,
'விடுதலை'

உயர்ந்த ரகம் ! தகுந்த விலை !

எல்லோராலும் விரும்பி சுவைக்கப்படுவது

# "ஏ. ஆர். ஆர். ஸ்பெஷல் சீவல்"

## தாம்பூலத்திற்கு சிறந்தது!




A.R.R. SEEVAL. KUMBAKONAM.

## ஏ.ஆர்.ஆர்.சீவல்

சுகாதார முறைப்படி 'பிளாஸ்டிக்' டப்பியில் அடைக்கப்பட்டு
எல்லோரும வாங்கி உபயோகிக்கும் முறையில்
குறைந்த விலையில் கிடைப்பது

**"ஏ. ஆர். ஆர். வாசனைச் சுண்ணாம்பு"**

தயாரிப்பாளர்கள் : A. R. R. சீவல் பாக்டரி, கும்பகோணம்.

# மலரினுள்ளே......!


வரிசை எண் பக்க எண்

1. பிறந்த நாள் விண்ணப்பம்—தந்தை பெரியார் ... 6
2. ஓராயிரம் எண்ணங்கள்—முதல்வர் டாக்டர் கலைஞர் ... 9
3. பெரியார்—ஒரு உலக சாதனை—திரு. நாவலர் நெடுஞ்செழியன் ... 11
4. விழிப்படையச் செய்த வித்தகர்
—அமைச்சர் திரு. க. அன்பழகன் ... 17
5. ஆரியம் கண்டஞ்சிய அரிமா!—திரு. சி. பி. சிற்றரசு ... 20
6. இன்றே போல்க!—தவத்திரு. குன்றக்குடி அடிகளார் ... 22
7. மெஜாரிட்டியை மைனாரிட்டி ஆளுவதா?—தந்தை பெரியார் ... 25
8. வழிகாட்டும் தந்தையே வாழ்க!
—அமைச்சர் திரு. என். வி. நடராசன் ... 29
9. பார்ப்பனரின் வன்முறைக்கு ஆதாரம்—தந்தை பெரியார் ... 33
10. பெரியார் பிறந்திருக்காவிட்டால்!
—அமைச்சர் திரு. அன்பில் தருமலிங்கம் ... 35
11. பெரியார் பித்து—திரு. ஏ. பி. சனார்த்தனம் ... 39
12. புதிய தலை முறையும்—பழைய நிகழ்ச்சியும்
—அமைச்சர் திரு. க. ராசாராம் ... 41
13. நாடாள வருவதற்குமுன் செய்த நற்பணிகள்
—திரு. கருணானந்தம் ... 44
14. அப்போலோ பயணமும் ஆஸ்திகமும்
—பேராசிரியர் திரு. கே. எஸ். மகாதேவன் ... 47
15. என் கருத்து—திரு. ஜி. டி. நாயுடு ... 57
16. சேலம் நிகழ்ச்சி பற்றி கன்னட ஏட்டின் விளக்கம் ... 59
17. இயக்கம் போட்ட எதிர் நீச்சல்கள் ... 65
18. சட்டசபையில் கடவுள் பட்டபாடு ... 70
19. **Periyar, The Father and the Mother—Thiru. A. N. Sattanathan** ... 73
20. **Patriarch of Dravidanad—Prof. S. Sivasamy** ... 75
21. **Rationalism—All over the World** ... 77
22. காவியங்கள், கலைகள் அவன் பெருமை பேசும்
—திரு. குலோத்துங்கன் ... 81
23. அய்யாவின் அருந்தொண்டு—திருவாரூர் திரு. கே. தங்கராசு ... 83
24. தந்தை பெரியார் சுற்றுப் பயணம் ... 89
25. கடந்த ஆண்டில் கழக டைரி ... 100
26. சித்திரபுத்திரன்—கேள்வி பதில் ... 113
27. பாரெங்கும் பகுத்தறிவாளர் கழகங்கள் ... 115
28. தாய்க் குதிரையும், குட்டிக் குதிரையும்
—புலவர் திரு. ந. இராமநாதன் ... 125
29. வரலாறு காணா இனக் காவலர்—திரு. இறையன் ... 129
30. வாழ்க பெரியார்—திரு. சந்த்ராம் ... 133
31. தமிழ் இலக்கியத்தில் பகுத்தறிவுக் கருத்துக்கள்
—திரு. சாலை இளந்திரையன் ... 135
32. தினமணியாரின் கேள்விக்குக் குடியரசு பதில் ... 143
33. வேதியம் வீழ்வதைப் பார்!—கலி. பூங்குன்றன் ... 144
34. அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவு ஓவியம் ... 145
35. அய்யாவின் தனி வாழ்க்கை—திரு. கி. வீரமணி ... 153
36. சிலை உடைப்பு வரலாற்றில் ஓர் சுவை ஏடு—ஆராய்ச்சியாளன் ... 161
37. சங்கராச்சாரியார் திருவுளப்படி ... 165
38. எனது உற்சாகத்தின் ரகசியம்—தந்தை பெரியார் ... 169


---


ஓவியம் :—அரசு, குருசாமி, சிபி, பாலன்.
புகைப்படங்கள் :—சுந்தரம், டாக்டர் ஜான்சன், குருசாமி.

எனது 93-வது ஆண்டு பிறந்தநாள் மலருக்கு ஒரு செய்தி வேண்டும் என்று நண்பர் திரு. வீரமணி அவர்கள் கேட்டார். சற்றேறக்குறைய 10 ஆண்டுகளாகவே எனது பிறந்தநாள் மலருக்கு சேதி கொடுத்துக்கொண்டுதான் வருகிறேன். முதலாவதாக எனது பிறந்தநாள் என்பது எனது பிரசாரத்திற்கு ஒரு சாதனமாக ஒரு ஆதாரமாக விளங்கு கிறது என்பது ஒரு கல்லுபோன்ற சேதியாகும்.

### நான் ஒரு சமத்துவத் தொண்டன்

நான் சமுதாய சமத்துவத்திற்குப் பாடுபடுகின்ற ஒரு தொண்டனாவேன். அதாவது ஜாதி அமைப்பை அடியோடு ஒழிக்கப் பாடுபடுபவன். ஜாதி அமைப்பு என்பது "கடவுள், மதம்" மற்றும் அவைகள் சம்பந்தமான எதையும் ஒழித்தாக வேண்டும் என்று கருதி அவைகளை ஒழிக்கப் பாடுபடுகின்றவன். அதில் எந்த அளவும் மக்களுக்குச் சந்தேக மில்லாமல் நடந்தும் வருகின்றேன். மக்களோ பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் ஆவார்கள். கடவுள் ஒழிப்பு என்பது மக்களுக்கு ஆத்திரத்தையும் கோபத்தையும் உண்டாக்கக் கூடியதாகும். இது மாத்திரமல்ல, நம்மைச் சபிக்கவும் கூடியதாகும். ஆகையால் சபிக்கப்பட்டும் வருகின்றேன். சபிக்கும் மக்களோ கடவுளை சர்வசக்தி உடையவர் என்று பலமாக நம்புகின்றவர்கள். அவர்கள் சாபம் பலிக்கா விட்டாலும் கடவுள் என்னை சும்மா விட்டுக்கொண்டு இருக்கமாட்டார் என்றும் நம்புகிற வர்கள் ஆவார்கள்.

### கடவுள் இருந்தால் இப்படி நடக்குமா ?

நானோ எனது பிரசாரத்தில், கடவுளே இல்லை என்று சொல்வதற்காகவே சிறு மைப்படுத்தி, இழிவுப்படுத்தி—செய்கையாலும் காட்டிக்கொண்டே, நடந்து கொண்டே வருபவன். இந்த நிலையில், எனது 92-வது வயதில் கடவுள் நம்பிக்கை ஒரு மூடநம்பிக் கையில் பட்டதென்பதை நல்ல வண்ணம் மக்களுக்கு விளங்கும்படி "கடவுளை செருப் பால் அடிக்கும்படி" நான் சொல்லும் அளவுக்கு ஆளாகி இருக்கின்றேன்.

இந்த நிலையில் எனது 92-வது வாழ்நாள் முடிந்து 93-வது வாழ்நாள் தோன்றி விட்டது என்றால் கடவுள் இருந்தால் இப்படி நடக்குமா? விட்டுக்கொண்டு இருப் பானா—என்று, எந்த-எப்படிப்பட்ட கடவுள் நம்பிக்கை பக்தனும் நினைத்து—அவனுக்கு ஒரு சிறு அறிவிருந்தாலும் கடவுளாவது வெங்காயமாவது என்று கருதி, ஓரளவுக்காவது தெளிவு பெற முடியும் என்பது எனது கருத்து. அதனாலேயே எனது 93-வது வருஷப் பிறப்பு என்பது எனது பிரசாரத்திற்கு ஆதாரம் என்று கருதுகிறேன்.

### மக்களிடையே மாறுதல்

சென்ற எனது 92-ம் ஆண்டு மலருக்கு நான் எழுதிய எனது பிறந்தநாள் செய்தி யில், "எனது 91-வது ஆண்டு எனக்கு உற்சாகமாகவே கழிந்தது. மன சலிப்பு அடைய வேண்டிய அவசியம் இல்லாமல் இருப்பது மாத்திரம் அல்லாமல், இதுபோல் வாழ்நாள் நீண்டால் மேலும் பல முன்னேற்றகரமான காரியம் செய்ய வாய்ப்பு ஏற்படலாம் என்று

## பிறந்தநாள் விண்ணப்பம்

தோன்றுகிறது. மற்றும் மக்களிடையில் ஒரு மாறுதலைக் காண்கின்றேன். அதுவும் தீவிரமான மாறுதலுக்கு இணங்குபவர்கள்போல மக்களைக் காண்கிறேன்.

**கடவுள், மதம், ஜாதி முதலிய விஷயங்களால், மக்கள் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் மாறுதல் அடைய பக்குவமாய் இருக்கிறார்கள் என்றே காண்கின்றேன். இந்த நிலைதான் எனது உற்சாகத்திற்கும், மேலும் இருந்து தொண்டு செய்யலாம் என்ற நம்பிக்கைக்கும் அவாவிற்கும் காரணமாகும்''**

## சலிப்பை நீக்கிய ஆட்சி

இந்தப்படி எழுதிய நான், முந்திய ஒரு ஆண்டில் எனக்கு மனச் சலிப்பு ஏற்பட்டு "நான் ஏன் இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று'' என்று எழுதி சலிப்படைந்து இருக்கின்றேன். இந்த சலிப்பைக்கண்டு காலஞ்சென்ற மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களும் திரு. காமராஜர் அவர்களும் எனக்கு ஆறுதல் எழுதி உற்சாக மூட்டினார்கள்.

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியவர்களது ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான் நான் உண்மையிலேயே நன்னம்பிக்கையும் உற்சாகமும் அடைந்தேன்.

## சாதி முறையின் மூலபலம் ?

உண்மையில் எனது தொண்டு ஜாதி ஒழிப்புத் தொண்டுதான் என்றாலும், அது நமது நாட்டைப் பொறுத்தவரையில் கடவுள், மதம், சாஸ்திரம், பார்ப்பனர் ஒழிப்புப் பிரசாரமாகத்தான் முடியும். இந்த நான்கும் ஒழிந்த இடம்தான் சாதி ஒழிந்த இடமாகும். இவற்றில் எது மீதி இருந்தாலும் ஜாதி உண்மையிலேயே ஒழிந்ததாக ஆகாது.

ஏன் எனில், ஜாதி என்பது இந்த நான்கில் இருந்தும் ஆக்கப்பட்டதே ஆகும்.

இப்போதும் சொல்லுவேன்: நாகரிகத்திற்காக சிலர் ஜாதி ஒழியவேண்டும் என்று கூறுகின்றார்கள். ஆனால், அவர்கள் மேற்கண்ட நான்கையும் ஒழிக்கத் துணிவு கொள்ளமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களால் நமக்கு ஒரு பயனும் ஏற்படாது. சில சமயங்களில் அவர்கள் நமக்கு எதிரிகளாகவும் ஆகக்கூடும். மனிதனை மடையனாக, அடிமையாக ஆக்கப்பட்டபின்புதான் ஜாதி புகுத்தப்பட்டதாகும். சுதந்திர உணர்ச்சியும் அறிவும் ஏற்படாமல் சாதியை ஒழிக்க முடியாது. மடமைக்கும் அடிமைத் தன்மைக்கும் ஆக்கம் அளித்து ஜாதியை நிலைநிறுத்துவதுதான், ஜாதியை ஒழியாமல் பாதுகாப்பதுதான், கடவுள், மதம், சாஸ்திரம், பார்ப்பனர் என்பவைகளாகும்.

உண்மையில் ஜாதி ஒழியவேண்டும் என்று கருதுபவர்கள், இந்த நான்கு ஒழிப்புக்கும் சம்மதித்தவர்களாகவேதான் இருப்பார்கள். நமது மக்களில் பெரும்பாலோர் இன்று அப்படி ஆகிவிட்டார்கள் என்பதுதான் எனது உற்சாகத்திற்கும் காரணமாகும். எதனால் இப்படி சொல்கிறேன் என்றால் சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டையும், அதனை அடுத்து நடந்த நமது தி. மு. க. தேர்தலையும் (பொதுத் தேர்தலையும்) கொண்டுதான் இப்படிச் சொல்லுகின்றேன்.

## ஜாதி ஒழிப்பிற்கு எதிர்ப்பு இல்லை

அதாவது, "கடவுளைச் செருப்பால் அடித்ததாக'' 10 லட்சக்கணக்கான பத்திரிகைகள், 10 லட்சக்கணக்கான துண்டு பிரசுரங்கள், மாணவர்கள், வக்கீல்கள், அதிகாரிகள், சில பெண்கள், மற்றும் காங்கிரஸ் இயக்கம், சுதந்திரா இயக்கம், ஜனசங்க இயக்கம் முதலிய ஜாதி துவேஷமற்ற தமிழ் உணர்ச்சிக்கு மாறான பல இயக்கங்களும் எதிராகப் பாடுபட்டு—230 இடங்களில் சுமார் 200 இடங்களுக்கு மேல் (தி. மு. க.) வெற்றிபெற நேர்ந்தது என்றால், சென்ற ஆண்டு பிறந்த நாள் செய்திக்கு நான் கொண்ட கருத்து—அதன் அளவுக்குமேல் மெய்யாகி வெற்றி பெற்றது என்பது யாருக்கும் விளங்கும்.

இனி, நமது ஜாதி ஒழிப்புக்கு மக்களில் யாரும் எதிர்ப்பு இல்லை என்பது உறுதி யான செய்தியாகிவிட்டது.

## எனது திட்டம்

இந்த நிலையில், நான் நமது மக்களை அடிபணிந்து வேண்டிக்கொள்வதெல்லாம்—கோயில்களுக்குப் போகாமல் இருக்கவேண்டும்; உற்சவங்களில் கலவாமல், மதப் பண்டிகைகள் கொண்டாடாமல், நெற்றிக்குறி அணியாமலும் இருக்கவேண்டும் என்பதே யாகும்.

மற்றும் நான் நினைக்கின்றேன்-அண்மையில் ஓர் மாநாடு கூட்டி, கோயில்களுக்குப் போகின்றவர்களை அடிபணிந்து வேண்டிக் கொள்வது மூலம் போகாமல் இருக்கச் செய்யலாமா என்று, யோசனை கேட்டு காரியத்தில் தொடரலாமா என்று சிந்திக்கிறேன்.

இதுதான் எனது 93-வது பிறந்த நாள் விண்ணப்பம்.

---

## அதே முழக்கம்—வாய்தான் வேறு




அர்ச்சகர் பதவி பார்ப்பனரல்லாதவர்களுக்கும் வழங்கப்பட்டு, தமிழிலும் அர்ச்சனை நடந்தால், நான் சொல்வதை ('கடவுள் ஒழிக' என்ற கோஷத்தை) பார்ப்பனர்களே தங்கள் வாயால் சொல்லுவார்கள் என்று தந்தை பெரியார் கூறியதை சென்னை கோயில் ஒன்றின்முன் பார்ப்பனர்கள் செயல்படுத்திக் காட்டினார்கள்.



# ஓராயிரம் எண்ணங்கள்!

— முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி —

அந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன்.

அய்யா அவர்களிடம் 'குடியரசு' இதழில் துணையாசிரியர் பொறுப்பில் இருந்ததை நினைத்துப் பார்க்கிறேன்.

அந்தப் பெருமை மிக்க நாட்கள்தாம் எவ்வளவு அனுபவங்களை அள்ளித் தந்தன.

திராவிடர் கழகத்திற்குப் புதிதாக ஒரு கொடி தேவை; அதற்கு ஒரு மாதிரிக்கொடி வரைந்து தாருங்கள் என்று அய்யா கேட்டார்கள்.

அட்டையில் கறுப்பு மையால் கொடி போல் வரைந்து மையத்தில் வட்டமாக சிவப்பு மை வைக்க விரும்பினேன். இரவு நேரம். குடியரசு அலுவலகத்தில் சிவப்பு மை இல்லை. குண்டூசியால் என் கை விரல் நுனியில் குத்தி—கொப்பளித்த குருதியை எடுத்துச் சிவப்பு மையாகப் பயன்படுத்திக் கொடி அமைத்ததையும், பரபரப்பாக அன்று இரவு அய்யா அவர்களிடம் கொடியைக் காட்டி அவர்களுடைய பாராட்டைப் பெற்றதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

1945-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திருத்துறைப்பூண்டியில் திராவிட மாணவர் மாநாடும், முதலாவது கறுப்பு சட்டைப்படை மாநாடும் நடைபெற்றபொழுது ஈரோட்டிலிருந்து உடல் நலங்குன்றிய நிலையில் வந்து, அம்மைக் கொப்பளங்கள் உடல் முழுதும் தோன்றிக் கொண்டிருந்த நேரத்தில் மேடை ஏறி முழங்கியதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

அருமைத் தந்தை மறைந்தபொழுதும், ஆருயிர் மனைவி இறந்தபொழுதும் பொது கூட்ட மேடையில் பேசிக்கொண்டிருந்ததையும் நினைத்துப் பார்க்கிறேன்.

இப்படி ஒன்றா இரண்டா?

ஈரோட்டையும் காஞ்சியையும் எங்கள் புனிதத் தலங்களாக ஆக்கிய அய்யாவுடனும் அண்ணாவுடனும் பழகிய அந்த நாட்களையும் நிகழ்ச்சிகளையும் நினைத்துப் பார்க்கிறேன்.

உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்கள் உருண்டு வருகின்றன.

ஓடிவரும் அந்த நினைவுகளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்ப்பதில் ஒரு நிறைவு! நிம்மதி.

ஆனால், ஏற்றுள்ள பொறுப்பு எப்படி எனக்கு நேரத்தைத் தரும்?

எத்தனை எத்தனைப் பிரச்சினைகள்!

ஏழை எளியவர்களின் நல்வாழ்வுக்காக எடுக்கின்ற முடிவுகளுக்கும் தடைக்கற்களாக அமைவோரும் உண்டு.

இனிமைத் தமிழிலும் இறை வழிபாடு உண்டு என்றால் அதனை எதிர்க்கும் ஒரு கூட்டமும் உண்டு.

சாமானியனாகச் சாதாரண நிலையில் நான் பிறந்ததன் விளைவோ என்னவோ? எனக்கு எதற்கும் எதிர்ப்புகளா?

என்பால் அன்பு கொண்ட நெஞ்சங்கள் பாராட்டு விழா நடத்தினாலும், பார்க்கப் பொறுக்காமல் பகை கக்கும் புகையும் நெஞ்சங்களும் உண்டு.

இந்த நேரங்களில் எல்லாம் அய்யாவை நினைப்பேன். அண்ணாவை நினைப்பேன்.

அஞ்சா நெஞ்சினராய், எவ்வளவு எதிர்ப்புகள் ஏளனங்களுக்கிடையே பகுத்தறிவுப் பயணத்தை அய்யா தொடர்ந்தார்கள்.

'இதுகளும் நாடாள முடியுமா?' என்று மிகப்பெரிய இடத்திலிருந்து கொண்டு மிகப் பெரியவர்கள் பேசியதையெல்லாம் பொறுத்துக்கொண்டு, புகழுச்சிக்குச் சென்ற அண்ணாவை நினைக்கின்றேன்.

அய்யாவின் அஞ்சாமை!

அண்ணாவின் பொறுமை!

இந்த இரண்டும் ஓராயிரம் எண்ணங்களை என்னிடம் குவிக்கின்றன.

அது மட்டுமா?

எதிர்வரும் இடரும் இன்னலும் எவ்வளவானாலும் நான் மனந்தளராது நடைபோட மாமருந்தாக அமைந்துள்ளன!

தமிழினத்தின் நல்வாழ்வுக்காக வெற்றிப் பயணம் தொடங்கியுள்ளோம்.

தந்தை பெரியாரின் பெருந்துணை உண்டு!

அன்பு வழியில் செல்ல அண்ணனின் வாழ்த்தும் உண்டு.

வன்முறை களைந்து, வறுமை நீக்க உங்கள் ஒத்துழைப்பும் உண்டு!

பின்னர் வெற்றி நமக்குத்தானே?

## தந்தை பெரியார் போட்ட தாளம்

பெரியாரவர்கள் நினைத்ததை சாதித்தே தீருவார் என்பதற்கு ஒரு வேடிக்கையான உதாரணம்: ஒருமுறை இவருக்கு வேண்டிய ஒரு மாது மைசூருக்கு—மகாராஜா திருமணத்துக்கு நாட்டியக் கச்சேரிக்காகச் சென்றார். இவரும் கூடச் சென்றார். அரச சபையில் கச்சேரி. சபைக்குச் செல்லவேண்டுமானால், முன் அனுமதி பெற்ற பெரிய மனிதர்கள்தான் செல்லமுடியும். மற்றவர்கள் உள்ளே போகமுடியாது. இவரோ முன் அனுமதி பெறவில்லை. அனுமதிச் சீட்டின்றி வாயிலோன் உள்ளே விடமாட்டான். எப்படியோ உள்ளே போய்த் தீரவேண்டும். இதற்கொரு தந்திரம் செய்தார். தம் கையில் ஒரு ஜோடி தாளத்தை வாங்கிக்கொண்டார். நாட்டியக் குழுவில் தாமும் ஒருவர்போல் நடித்துக்கொண்டு உள்ளே சென்றுவிட்டார். இறுதிவரையிலும் இருந்து நாட்டியம் பார்த்துவிட்டு அந்தம்மாளுடன் திரும்பினார். இதைப் போலவே பல சந்தர்ப்பங்களில் தம் காரியத்தைச் சாதிப்பதற்காகத் தம் அந்தஸ்தையோ கௌரவத்தையோ கவனிக்காமல் எதையும் செய்திருக்கிறார். இப்போதும் அப்படியே.

—'**தமிழர் தலைவர்**' **நூலிலிருந்து.**



# பெரியார் ஓர் உலக சாதனை!

அமைச்சர் திருநாவலர் இரா. நெடுஞ்செழியன்

'பெரியார்' என்ற பெயருக்கு ஏற்ப அறிவிலும், ஆற்றலிலும், வயதிலும் பெரியவரான பகுத்தறிவு இயக்கத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 93-வது வயதில் அடியெடுத்து வைப்பது எம்போன்றார்க்குப் பெருமிதமும், பெருமகிழ்வும் அளிப்பதாகும்.

பரந்த முகம் மலர, விரிந்த நெற்றி மிளிர, கூர்த்த கண்கள் ஒளிர, வெள்ளிய தாடி அசைய, பழுத்த முதுமை தழுவ, தாங்கிய தடியுடன் பெரியார் அவர்கள் தமிழகம் முழுவதும் தலை தாழாச் சிங்கமென நடைபோட்டு வருவது அவரது வியப்புக்குரிய தனிச் சிறப்பாகும். தமிழகம் முழுவதும் பெரியார் அவர்கள் சுற்றிச்சுற்றி வலம் வந்து நாடு-நகரம்-பட்டிதொட்டிகளிலெல்லாம் அருஞ் சமூகத்தொண்டாற்றிவருவதுபோல், உலகில் எந்த நாட்டிலும் எந்த ஒரு தலைவரும், இந்த வயதில் தொண்டாற்றியதாக யாரும் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள்.

உலகில் நீண்டநாள் வாழவேண்டும் என்று 'கடவுளை' ஓயாமல் வேண்டிக் கொண்டிருக்கிற கடவுள் வழிபாட்டுக்காரர்களில் பல பேர்கள், அந்த விருப்பம் நிறைவேறாமலேயே குறுகிய ஆண்டுகளில் மாண்டுபோய் விடுகிறார்கள். ஆனால் 'கடவுளை' ஓயாமல் வெறுத்துக்கொண்டிருக்கிற பெரியார் அவர்கள், 93-வயதிலும் மன உறுதியோடு இருக்கிறார்கள். இதுவே பகுத்தறிவுக் கொள்கையின் வலிவுக்குச் சிறந்ததொரு சான்றாகும்.

'இளைஞர்' என்பது ஒன்று; 'இளைமை உள்ளம்' என்பது வேறொன்று. அதுபோல 'முதியவர்' என்பது ஒன்று; 'முதுமைஉள்ளம்' என்பது வேறொன்று. இளைஞர்களாக இருப்பார்கள் சிலர். அவர்களிடம் எதிர்பார்க்கின்ற இளைமை உள்ளம் இருக்காது; சோர்ந்த முதுமை உள்ளம் படைத்தவர்களாக இருப்பார்கள். சிலர் முதியவர்களாக இருப்பார்கள்; அவர்களிடம் எதிர்பார்க்கின்ற முதுமை உள்ளம் இருக்காது; சுறுசுறுப்பான இளைமை உள்ளம் படைத்தவர்களாக இருப்பார்கள். முதுமைப்பருவத்தில் இளைமை உள்ளத்தோடு திகழ்பவர்தான் பெரியார் அவர்கள்.

நன்மையைச் செய்வதற்கு எவ்வளவு துணிவு வேண்டுமோ அவ்வளவு துணிவு தீமையைக் களைவதற்கும் வேண்டும். உழவனுக்குப் பயிர் வளர்ப்பதிலே எவ்வளவு ஆர்வம் இருக்கவேண்டுமோ, அவ்வளவு ஆர்வம் களையெடுப்பதிலும் இருக்க வேண்டும். பெரியார் அவர்கள் சென்ற நாற்பத்தைந்து ஆண்டு காலமாகத் தமிழகத்தில் பகுத்தறிவுப் பயிரையும் வளர்க்கிறார்; அதேநேரத்தில் சமூகத்தில் முளைத்துவிட்ட

மூடக்களைகளையும் வெட்டி யெறிகிறார். 'தீமையை வெறுக்கத் தெரிந்தவனே வெற்றி பெறுவான்' என்ற பொன்மொழியைத்தான் பெரியார் அவர்கள் பல்லாண்டு காலமாகக் கூறி வருகிறார்கள்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தைக் காட்டிலும், தமிழ்நாட்டில் ஓரளவுக்கு சமுதாய மறுமலர்ச்சியும், விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டிருப்பதற்குப் பெரியார் அவர்களின் பகுத்தறிவுநெறித்தொண்டுதான் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் மூட நம்பிக்கைகளும், குருட்டுப்பழக்க வழக்கங்களும் மறைய—பண்பட்ட வாழ்க்கை நெறி அமைய, பெரியார் அவர்கள் இன்னும் பல்லாண்டுக்காலம் வாழ்ந்து எல்லோர்க்கும் வழிகாட்டியாகத் திகழ்வார்களாக!




அட்டமி நவமி நாளில்
தொட்டது துலங்கா தென்று
மட்டியாம் பார்ப்பான் சொல்லை
மண்கவ்வச் செய்து விட்டு
கொட்டிடும் பகுத்தறிவு
கொள்கை சேர் அச்சுக்கூடம்!

எண்ண எழுச்சிகளை...வண்ண வரிவடிவில்...எழிலுற அச்சிட்டுத்தர...
என்றும் அணியமாயுள்ளோம்!

**எழில் அச்சகம்**

**244, வடக்கு மாசி வீதி, மதுரை-1**

**டாக்டர் சத்தியவாணி முத்து,**
தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை-9
12—8—1971

தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்த நாளை யொட்டி விடுதலை நாளிதழ் சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தந்தை பெரியார் அவர்களுக்குத் தமிழர் சமுதாயம் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. அவர்கள் காட்டிய நல் வழியில் நல்லதோர் சமுதாயத்தினை உருவாக்குகின்ற உயர்ந்த பணியில், இன்று தமிழக அரசு ஈடுபட்டுள்ளது. இந்த அரசுக்குத் தமிழ் மக்களின் மனப் பூர்வமான ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை.

வெளிவரவிருக்கும் சிறப்பு மலர் சிறந்து அமைய, என் நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, நமது தந்தை பெரியார் அவர்களுக்கு எனது அன்பான வாழ்த்துக்களையும் வணக்கத்தையும்-அவர்களது பிறந்த பொன்னாளை ஒட்டித் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சத்தியவாணிமுத்து.**

**சி. பா. ஆதித்தனார்,**
கூட்டுறவுத்துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை-9
17—8—'71

தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்த நாளையொட்டி 'விடுதலை' நாளிதழ் மலர் வெளியிடுவது கண்டு மகிழ்வடைகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் இந்த நாட்டில் பிறக்காமல் இருந்திருப்பாரேயானால், "தாழ்ந்து கிடந்த சமுதாயம் தலைதூக்கி இருக்க முடியுமா ?". நிச்சயம் முடியாது என்றே அனைவரும் கூறுவர்.

மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாமல்—தொடர்ந்து தன் பகுத்தறிவுப் பிரசாரத்தை நடத்தி வருகிறார். தொடரட்டும் அவர் தூய பணி !

**சி. பா. ஆதித்தனார்.**

**ஓ. பி. இராமன்,**
மின்சாரத்துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை-9
12—8—'71

சமுதாய சீர்திருத்தம் என்பது மிகவும் கடுமையான உழைப்பின் பேரில் நிகழக்கூடிய ஒன்றாகும். அத்தகு கடுமையான பணியை மேற்கொள்வது மிகச் சிலரால்தான் முடியும். புரட்சிகரமான கருத்துக்களாலும், பகுத்தறிவுக் கொள்கைகளாலும் தமிழகத்தை, தமிழ்ச் சமுதாயத்தை மாற்றி அமைத்த பெருமை தந்தை பெரியார் அவர்களைத்தான் சாரும். தந்தை பெரியார் அவர்கள் பல ஆண்டுகள் வாழ்ந்து நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் தொடர்ந்து பணிகள் ஆற்ற வேண்டுகிறேன்.

தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்த நாளில் என் வணக்கத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஓ. பி. இராமன்.**

தந்தை பிறந்த நாளில்
அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்

* பார்ப்பனர் புரட்டை பளிச்சென உணர்த்தும்...
* பக்திப் புரட்டுகளை தோலுரித்துக் காட்டும்...
* பக்த கோடிகளின் இளிச்சவாய்த்தனத்தை விளக்கும்...

**அரியதோர் பகுத்தறிவு நாடகம்**

**பெரியார் நாடக கலா மன்றத்தினர் வழங்கும்**

# சந்தனத் தேவி

(பகுத்தறிவுப் பிரசார நாடகம்)



**29—8—'71** அன்று காரைக்குடியில் அரங்கேறிய **'சந்தனத் தேவி'** நாடகத்தின் உணர்ச்சி வழியும் ஓர் காட்சியில், காரைக்குடி நகர தி. க. தலைவர் **ஆர். சுப்பிரமணியமும்,** நடிகை திருச்சி **B. S. மங்களமும்.**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**ஆர். சுப்பிரமணியம்,**
நகர தி. க. தலைவர்,
காரைக்குடி, முகவை மாவட்டம்.

**C. D. NATARAJAN,**
(Secretary to Government,
Legislative Assembly Department)
President,
Rationalist Forum, Madras.

17-B, Taylors Road,
Madras-10
11—9—1971.

The signal services of Thanthai Periyar in the cause of Rationalism are inestimable. His ceaseless efforts to redeem the Tamils from superstition and restore Rationalism to its rightful place in the life and conduct of the Tamils are praiseworthy and merit the eternal gratitude of the people. His courageous campaign against exploitation, social, economic and political, has really awakened the Tamils to their legitimate and fundamental rights. His indomitable Will and inexhaustible energy have overcome all antagonism and hostility and have instilled in the Tamils the Dignity of Man and a deep sense of Self-Respect. His life is truly a Saga of service and sacrifice in the cause of Reformation and Rationalism. It is the ardent wish of all his admirers and followers that he shall live for many, many years to come to espouse, propagate and establish Rationalism and I, in all humility, pay my humble meed of tribute to the Grand Old Man who has written a new Chapter in the history of the Tamils during the last two score and ten years.

Long live Periyar and Rationalism shall triumph.

C. D. NATARAJAN.

செட்டி நாட்டரசர்,
**டாக்டர் ராஜா சர் முத்தய்யா செட்டியார்**

செட்டிநாடு அவுஸ்,
சென்னை-28
7—9—'71.

17—9—71-ல் நம் பெரியார் அவர்கள் 93-வது பிறந்த தினத்தை எய்துகிறார்கள் என்பது தெரிந்து மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். நம் பெரு மதிப்பிற்குரிய பெரியார் அவர்கள் மக்கள் நலனே தன் நலம், நாட்டின் நலனே தன் வாழ்வு என்ற பெருநோக்குடன் தன் வாழ்நாளையே நாட்டிற்காக அர்ப்பணித்து கொண்டவர். தமிழ் வாழவேண்டும், தமிழக மக்கள் வாழ வேண்டும், தமிழ்நாடு சீரும் சிறப்புடன் பொலிவுறவேண்டும் என்பது அவர்கள் இலட்சியம். பெரியார் அவர்கள் உயர்ந்த உள்ளமும் பெருங்குணமும் படைத்தவர்கள். அவர்கள் போதிய திடகாத்திரத்துடன் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து நம் நாட்டிற்கு நன்மை செய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**மு. அ. முத்தய்யா செட்டியார்.**

தந்தை பெரியார் அவர்களின் 93வது பிறந்த நாளில்
எங்கள் நல் வாழ்த்துக்கள் !

போன் : **4823**

## ஸ்ரீ ராஜகோபால் டிரான்ஸ்போர்ட்ஸ்
## (பிரைவேட்) லிமிடெட்

**28-B, இரண்டாவது குறுக்குச் சாலை,**
**தில்லை நகர் (வடக்கு) திருச்சி-3.**

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 2,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 45,000 |

மொத்தம் பஸ்கள் ஆறு.

**பஸ் போகும் பாதைகள் :**

1. திருச்சி—ஆத்தூர் (வழி : கெங்கவல்லி)
2. திருச்சி—ஆத்தூர் ( ,, மல்லியகரை)
3. திருச்சி—செந்தாரப்பட்டி (வழி : தம்மம்பட்டி)
4. திருச்சி—விசுவாம்பாள் சமுத்திரம்
5. திருச்சி—பச்சை பெருமாள்பட்டி (வழி : எறகுடி)

## மக்கள் தொண்டே எங்கள் நோக்கம்

டைரக்டர்கள் :

**R. இராசாராம்,** B.A., B.L.,
**R. இராமராசு,** M.A., B.L.,
**R. தர்மராசு,** M.SC.

**து. மா. பெரியசாமி,**
பொது நிர்வாகி.

# விழிப்படையச் செய்த வித்தகர்!

அமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன்

நமது நாட்டு மக்கள் எவ்வளவு தொன்மையான நாகரிகமும் வாழ்க்கை முறையும் கொண்டவர்களோ-அந்த அளவு பழமையில் ஊறிய மனத்தினராகவும் புதுமையைக் காணவும் உணரவும் திறமற்றவர்களாகவுமே உள்ளனர். முன்னோர் வாழ்ந்த முறை எதுவெனினும்—அதுபற்றி சிந்திக்கவோ, ஆராயவோ சக்தியற்ற ஒரு நிலையில்—பல்வேறு நம்பிக்கைகளுக்கிடையிலே நசுங்கிக் கிடந்தனர்.

எதை நம்புவதற்குப் பழகிவிட்டார்களோ அது உண்மை. எது பெற்றோர்களும், பெரியோர்களும் கைக்கொண்டிருந்த முறையோ அது தவிர பிறவற்றைப் பிறர் கூறினாலும் அதை கேட்குமளவு பொறுமை கூடக் காட்ட முடியாத நிலையினர்.

சிந்தனையைத் தோற்றுவிக்கும் சங்க இலக்கியங்களும், வாழ்வின் வழியை விளக்கித் தெளிவடையத் துணையாகும் திருக்குறளும்—மேலும் பலப்பல இலக்கியக் கருவூலங்களும் இருந்தன எனினும் அவை பொது மக்களில் பெரும்பாலோர்க்கு எட்டாத செல்வங்களாகவும்—எட்டிய சிலருக்கும், அவர்தம் உளப்பான்மை காரணமாக அதன் கருத்துக்கள் கொள்கைகள் ஆராய்ச்சிக்கு ஆளாகாதவையாகவுமே இருந்தன. மிகச் சிலரே—அவற்றைக் கற்றுத் தெளிந்து சிந்தித்து ஆராய்ந்து சமுதாய நல்வாழ்வுக்கும் காலத்துக்கும் ஏற்புடைய கருத்துக்களை உணர்ந்தவராயினர். அவருங்கூடக் காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களையும், மக்கள் முன்னேற்றத்தையும் நல்லுறவையும் கெடுக்கும் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் மறுக்கவோ, கண்டிக்கவோ முன்வருவது அரிதாகவே அமைந்தது.

பழமைப் பற்றுடன்கூடிய சமூகத்தில், வேரூன்றிய சாதி எண்ணமும், மக்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்த சமய மூட நம்பிக்கைகளும், வாழ்வைப் பற்றிய கவலையும், உயிரைப்பற்றிய அச்சமும் அன்றாட வாழ்வை ஓட்டினாலே போதும் என்ற நினைப்பும், நாட்டு மக்களை இறவாமலே இறந்தவர்களாக ஆக்கிவைத்திருந்தது. எதற்கும்—எல்லாவற்றுக்கும் அஞ்சி அஞ்சிச் சாவாராக இருந்தனர். பகல் ஒளியைக் காணவும் கூசும் அறிவுக் கண்ணினராக, 'இருட்டறையில் உள்ளதடா உலகம்!' என்று புரட்சிக் கவிஞர் கூறும் நிலையில் மங்கியும், மயங்கியும், மயக்கறுப்பார் யாரும் துணிந்து வராத நிலையில், விழிப்பற்றுக் கிடந்தனர், இன்றும் கிடப்பவர் பலர்.

அந்நிலையிலேதான், தாமாகவே எதைப் பற்றியும் துருவிப் பார்க்கும் அறிவும், தமது அறிவுக்குச் சரி என்று தோன்றாத எதையும் ஒப்புக் கொள்ளாத மனமும், தமக்குச் சரியென்று பட்ட எதையும் பிறர் என்ன நினைப்பார்கள் என்ற கவலைக்குத்

தம்மை ஆளாக்கிக்கொள்ளாத நெஞ்சுரமும் பெற்ற ஒருவர்—தாம் எண்ணுவதை வெளியிட—மக்களிடம் எடுத்துச் சொல்ல முன் வந்தார். தம்மை மதிப்பார்களா? போற்றுவார்களா? எதிர்ப்பார்களா? ஏளனம் செய்வார்களா—என்று அவர் கவலைப்படவில்லை.

ஊத வேண்டிய சங்கை ஊதினால், விடிகிறபோது விடியட்டும், இல்லாவிடினும் மக்களுக்கு விழிப்பேனும் ஏற்படட்டுமே என்று தொடங்கினார் தமது பணியை! வாழ்க்கை என்பது—பிறர் பாராட்டுவதற்காகவே நடத்தப்பட வேண்டியதல்ல! ஒப்புக்கும் உறவுக்கும் அஞ்சி ஒடுங்கிய கருத்தோடு முடங்குவதைவிட, உண்மை எதுவென்று கேட்டு, வெட்டு ஒன்று, துண்டு இரண்டு பேசியேனும், தமது கேள்விக்கு விடைகாணச் செய்வோம் என்று முனைந்தார் அவர்.

சாதிப் பித்தத்தில் ஆழ்ந்த மக்களையும், சமய பக்தியில் மூழ்கிக் கண்மூடிக் கிடந்த சமுதாயத்தையும், மூடநம்பிக்கை ஆட்கொண்டிருந்த நிலையில், அவர் தம் நிலையிலிருந்து கண் திறக்கச் செய்வது எளிதுமல்ல! எதிர்ப்பும் தாக்குதலும் இருக்கத்தான் செய்யும் என்று நன்கு அறிந்திருந்தால்கூட, 'மயிரைக்கொண்டு மலையைக் கட்டி இழுக்கிறோம்; ஆவது ஆகட்டும்!' என்று பலன் எதிர்பாராத துணிச்சலுடன் அந்த எதிர் நீச்சலில் அவர் ஈடுபட்டார்.

'அயர்ந்து தூங்குகிறவர்களை எழுப்புவதே கடினம்! அதிலும் அறிவு செயலிழந்த நிலையில், மத மூட நம்பிக்கைளால் மூடப்பட்டு, தன்னறிவை இழந்து, மாளாத தூக்கத்தில் ஆழ்ந்திருந்த மக்களை—சமுதாயத்தை எழுப்புவது எளிதாமோ? ஆயினும் அந்தப் பெரும் பணியை—தொல்லை மிகுந்த கடமையை அவர் மேற்கொண்டார். 'என் கடன் அறிவுப்பணி செய்து கிடப்பதே' என்ற முடிவுடன், ஒரு இயக்கத்தையே உருவாக்கினார்.

பல புதுமைக் கருத்துக்களையும்—பகுத்தறிவு வாதத்தையும் தாம் நினைத்த வண்ணமாகவே மிகவும் எளிய முறையில் எவருக்கும் விளங்குமாறு-பேசவும் எழுதவும் செய்தார்.

தமது கருத்தை ஏற்போரும் ஆதரிப்போரும் மிகச் சிலரே எனினும்—அவர்தம் கொள்கை உறுதியே-தமது வெற்றிக்கு அறிகுறி என்று கொண்டார். தமது எழுத்தை எவரும் படிக்கவில்லை என்றாலும் தாமே அச்சடித்து, தாமே படித்து 'என் கடமையை செய்ததை எண்ணி மகிழ்ச்சியடைவேன்' என்று ஒரு உறுதியை உலகுக்கு அறிவித்துச் செயலாற்றலானார். 'கொள்கையுடையான் எதிர்ப்புக்கு அஞ்சான்' என்னும் மொழிக்கு இலக்கானார்.

தமது கருத்தும் கொள்கையும் அடிப்படையான சமுதாய சீர்திருத்தத்துக்கு வழிகோலும் என்னும் நம்பிக்கையுடன் நாடெங்கும், பட்டி தொட்டியெல்லாம் அதைப் பரப்புவதே தமது தொழில் என்றார். கல்லடியும் சொல்லடியும், கலவரமும் கடுந்தாக்குதலும் நிகழ்ந்தபோதும்—சோர்வடையாமலும், இலட்சியத்தைக் கைவிடாமலும், 'மக்களுக்காகவேதான் தாம் வாழ்கிறோம்!', இழிவுக்கும் பழிக்கும் ஆளான தாழ்ந்த நிலைபெற்ற மக்களுக்குவாழ்வளிப்பதைவிட எனக்கேது வேறு வாழ்வு என்ற எண்ணத்துடன்—'தியாக நாட்களாக' தமது வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொண்டார்.

இன்றுள்ள சூழ்நிலையில் அதன் அருமையும் பெருமையும் உணராதோர் இன்றைக்கு 45 ஆண்டுகட்கு முன்னர் (1925) அந்தப் பெரும் பயணம் தொடங்கப்பட்டபோது நாட்டின் நிலைமையை எண்ணிப் பார்த்தால் விளங்காமற் போகாது.

சுதந்திர வேட்கை வளராத மக்கள்—நாட்டு விடுதலை எதுவென அறியாத காலம்!

படிப்பறிவு இடம் பெறாத சமூகம்!

தமிழ்ப்பற்று அறியாத நிலை!

எந்த ஆதிக்கத்தையும் எதிர்க்கத் தெரியாத மக்கள்!

கையும் காலும் தளையூட்டப்பட்டு—கண்கள் கட்டிவைக்கப்பட்டு, காது அடைக்கப்பட்டு, வாயில்லாப் பூச்சிகளாக—இருட்டறையில் தள்ளப்பட்டுக் கிடந்த மக்களிடையே பகுத்தறிவுச் சுடர் கையிலேந்தி-சுயமரியாதை உணர்வு என்னும் தளையறுக்கும் வாளேந்தி—'தன்மான இயக்கத் தோழர்கள்' என்னும் வீர உணர்வு கொண்ட சிறு படையுடன் சென்று, அவர்

களையெல்லாம் விடுவிக்க முற்பட்டார் அவர் என்றால் அது வியப்பன்றோ! அவர் தோற்றுவித்த அந்த அறிவுப் படை எத்தனை வைதீகப் படையை, சமயச் சழக்கர்களை எதிர்த்துப் போரிட்டு, எப்படியோ தன்னைக் காத்துக்கொண்டு தன் கடமையைச் செய்தது என்பது அறிந் தோருக்கு இன்றும் வியப்பேயாகும்.

சாதி என்பது ஏதடா? பிறப்பால் உயர்ந்தவன் எவனடா? தாழ்வுதான் பிறவியில் நமக்கு வருமோடா—என்று கேட்க முற்பட்டு, 'சமய வாதங்கள் ஒருசிறு கூட்டத் தின் சுயநலமல்லவோ! அதை மறைக்கவே வெளிவேடம்' என்று முழக்கி, 'கடவுள் நம்பிக்கையின் பேரால் கண்மூடிக் கிடப்ப தேனோ!' "அறிவியல் காணமுடியாத ஆண்டவனுக்கு ஆறுகால பூசைதான் ஏனோ?" என்றெல்லாம் மக்கள் செவிப் பறை கிழிய சங்கநாதம் செய்து விழித் தெழ வைத்தவர் அவர். ஆம்; அவர் நடத் தியது 'அதிர்ச்சி வைத்தியம்'தான்! அது தவிர வேறு வழியில்லை அவருக்கு! நாட்டு மக்களுக்கும் அவரைவிட்டால், விழிப்புற வேறு கதியில்லை! இப்படி—மக்களை விழிப்படையச் செய்த வித்தகரே, தமிழகத் தின் தனிப்பெருந் தலைவர், திராவிடத் தந்தை, பகுத்தறிவுச் செம்மல் பெரியார் அவர்கள்! அவரது பாசறையில் படித்தவன் என்பதில் பெருமையடைபவன் நான்! என் போன்றார் ஏராளம் இங்நாட்டில்!

அவர் தந்த பெரு வாழ்வை, புது வாழ்வை, புதிய சமுதாயத்தை யார்தான் மறக்கமுடியும்! தம்மை 'மனிதன்' ஆக்கிய வரை—'மனிதனாக' உள்ள யார்தான் மறப்பர்! அவர் வாழ நாம் வாழ்கிறோம்! என்னும் நினைவுடன் எனது வாழ்த்துக் களைத் தந்தை பெரியார் தம் திருவடிகளில் குவிக்கின்றேன்.

## கீரிக்கு அபயமளிக்கும் மூலிகை




பல்வேறு சமூகப் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும் நாங்கள், பாம்புக் கடியால் ஏற்பட்ட விஷத்தைப்போக்க கீரி மூலிகை தேடுவதுபோல, பெரியாரிடம் வந்து பாராட்டும் பரிசும் பெறுகிறோம் என்று முதல்வர் கலைஞர் குறிப் பிட்டார்.

# ஆரியம் கண்டஞ்சிய அரிமா!

மேலவைத் தலைவர் திரு சி.பி. சிற்றரசு



தேர்னா, புரந்தர், ராசகிரி, கல்யாண் என்ற கோட்டைகளைத் தகர்த்தெறிந்த மராட்டிய மாவேந்தன் சிவாஜி—இஸ்லாமிய வேந்தனால் சிறை வைக்கப்பட்ட போதும், கம்பிகளை உடைத்து வெளிவந்த சிவாஜி மொகலாய மன்னர்களின் பிறைக் கொடியைக் கண்டஞ்சாத சிவாஜி—வீரம் போர்க்களத்தில் திறந்த கண்களோடு விழ்ந்து விட்ட மாவீரர்களின் உடலில் வழிந்தோடிய குருதியைக் கண்டு கலங்காத சிவாஜி—அவன் சென்ற புரவியின் கொளம்படி சத்தம் கேட்டு குலை நடுங்கிப் போனவர் ஏராளம்.

மராட்டிய மண்டலத்தில் தோன்றிய மத வேழம்; மாற்றாரின் நெஞ்சத்தைக் கலங்கவைத்த சுத்த வீரன். அவன் வாள் மின்னிய நாடுகள் பல. எனினும் அவன் மின்னவில்லை. எதிரிகளை அடக்கியாளும் வீரம் பெற்றவன். 'ஆரியர்குல முதல்வனான காகபட்டன் தர்ப்பைக்குப் பயந்துவிட்டான். யாருக்கும் அடிபணியாத மாவீரன் ஒரு சாதாரண உஞ்சிவிர்த்திக்கு மயங்கிவிட்டான்.

அங்கே, இமயமலையடிவாரத்தில் ஒரு குப்த சாம்ராச்சியம் இருந்தது. அங்கும் ஒரு பார்ப்பனன் இருந்தான், அவன் பெயர் தான் சாணக்கியன். நவநந்தர்களுக்கு சட்டப்படி உரிமையாக வேண்டிய நாட்டை சந்திரகுப்தனுக்கு ஆக்கித் தந்தான். அர்த்த சாத்திரம் என்பதை எழுதியவனும் அவனே. நவநந்தர்களிலே ஒருவன் தன்னை அவமானப்படுத்தினான் என்பதற்காக, அவர்களை அரியாசனத்திலேயிருந்து கீழே தள்ளும் வரையில் குடுமியை முடிப்பதில்லை என்று சூள் உரைத்த கேரள நாட்டுப் பார்ப்பனன்.

வேத காலத்தின் நிலைதான் என்ன? மதுரையை யாண்டிருந்தான் மன்னன் நிறை நின்ற சீர் நெடுமாறன். அவனுக்கொரு அமைச்சன் இருந்தான்—குலச்சிறை என்ற பேரால் அந்த அமைச்சனை கைக்குள் போட்டுக்கொண்டு சமணர்கள்எண்ணாயிர வரை கழுவிலேற்ற வகைசெய்துவிட்டான். இவ்வளவுக்கும் காரணமாக இருந்தவன் சீர்காழியிலே பிறந்ததொரு பார்ப்பனச் சிறுவன் ஞானசம்பந்தன்.

இவன் விட்ட ஓலை தண்ணீரை எதிர்த்துச் சென்றதென்றான். இது அன்று ஒரு பெரிய அதிசயமாகத்தான் பட்டது—அன்றிருந்த மக்களுக்கு. அன்றோ, ஈரோட்டில் பெரியாரிடம், நான் எழுதிய 'இரத்தத் தடாகம்' என்ற நாடகத்திற்கு விளக்கம் சொன்னபோது, ஞானசம்பந்தன் விட்ட ஓலை தண்ணீரை எதிர்த்துப் போச்சு, என்று எழுதியிருக்கின்றானே. நீ நாடகத்தில் என்ன எழுதியிருக்கின்றாய் என்று கேட்டார். "ஓலையை மீன் வாலில் கட்டி விட்டிருப்பான், அதனால்தான் தண்ணீரை எதிர்த்துப் போச்சு" என்று வசனத்தை எழுதியிருக்கின்றேன் என்றேன். பெரியாரும், எம். ஆர். இராதாவும் விழுந்து விழுந்து சிரித்தனர். ஏன்? அப்போதே இதையெல்லாம் சிந்திக்கும்படி பெரியார் நமக்கு சொல்லி வைத்திருந்தார்.

எவ்வளவுதான் ஆங்கில மேதையாக இருந்தாலும், எவ்வளவு பெரிய பதவிகளை

வகித்தாலும், போதையருந்துவது முதல் புலால் உண்பதுவரை செய்தாலும், புகை பிடித்தாலும் பல கண்டங்கள் சுற்றி வந்தாலும் எவ்வளவு பொதுநலம் பேசினாலும், சமுதாயம் ஒன்றாக வேண்டுமென வாய் கிழிய பேசினாலும், தன் மகளை வேறோர் சின்னப் பையனுக்கு திருமணம் முடித்தாலும், இனம் என்று வருகிற போதுதான்—சிறிதும் வியர்வை சிந்த உழைத்து வாழக் கூடாது; புல் சுமந்து, கல் சுமந்து, வில்லெடுத்து, வாள் எடுத்து, போர் கண்டு குருதி சிந்தி, மாட்டை மேய்த்து, வீட்டைக் கட்டி, அழுக்குப் படிந்த மேனியாய், கிழிந்த உடைக் காட்சியாய் வாழக்கூடாது என்பதில்—ஆண்டாண்டு காலமாக, அதற்கான திட்டங்களைத் தீட்டி, அவைகளே வேதமென்றும், வேள்வியென்றும், அவிர்ப்பாகம் என்றும், எதிர்ப்பவர் யாராயிருந்தாலும், எரித்து விடுவோம் செங்கண்ணால் என்றும், பூணூலை உருவி விட்டு பயங்காட்டிக் கொண்டிருந்த பார்ப்பனர்கள் இந்த செப்படி வித்தையை எப்போது தொடங்கினார்கள் என்று நாம் உறுதியாக கூற முடியவில்லை. எனினும், கங்கை சமவெளியிலிருந்து தங்கள் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு தென்புலம் நுழைந்ததும் தொடங்கி விட்டார்கள் என்பது மட்டிலும் உண்மை.

சீர்திருத்தம் பேசி செத்துமடிய ஒரு 'சவன ரோலா' இங்கே தோன்றமாட்டான் என்று இறுமாந்திருந்தனர். பகுத்தறிவு பேசியதால் பகைவர்கள் தன்னைப் பொசுக்குவார்கள் என்று அறியாமல், தன் பகுத்தறிவு பயணத்தைத் தொடர்ந்த **'ஜான்ஹெஸ்'** இங்கு தோன்றமாட்டான் என்று இறுமாந்திருந்தனர். ஆனாலும், ஈரோட்டில் தோன்றி விட்டது ஒரு அரிமா என்று கண்டு கொண்டனர். அந்த ஈரோட்டு பெரியாரை—ஆரியர் கண்டஞ்சும் அரிமாவையும் அந்த ஆரியத்தின் எந்த மனிதனும் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து கொண்டிருக்கின்றனர்.

பகுத்தறிவு தேவை என்று உணர்ந்து கொண்டிருக்கின்றனர். இனி, அந்த அரிமாவை யாரும் எதையும் செய்ய முடியாது. படைக் கலன்கள் ஏராளம்! அவரது தொண்ணூற்றி மூன்றாவது ஆண்டில் நாம் பூரிப் படைகிறோம்! வாழ்த்தலாம் நாம். வயதிருக்கிறதா நமக்கு? நாம் அவர் பெரும் படையில் ஒரு சிறிய தொண்டன். அவருக்குப் பிறகும் அந்த சுயமரியாதைச் சுடரை ஏந்தி நிற்போம். பெரியாருக்கு நமது வணக்கங்கள்.


## கழக வெளியீடுகள்

| | |
|---|---|
| இந்தி பொது மொழியா? ... | 1—00 |
| பழந்தமிழாட்சி—ஞா. தேவநேயப்பாவாணர் ... | 2—25 |
| ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்—கா. அப்பாதுரை... | 6—75 |
| தமிழ்ப் பேரொளி —அறிஞர் அண்ணா பற்றிய தொகுப்பு நூல்... | 6—75 |
| குறள் கூறும் சட்ட நெறி —மா. சண்முக சுப்பிரமணியம்... | 6—75 |
| Can Hindi be the Lingua Franca of India —Maraimalai Adigal... | 1—00 |
| திருவள்ளுவர் விழா மலர் ... | 8—75 |
| விடுதலை வீரர்கள் ஐவர் (கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கவியரங்கக் கவிதைகளின் தொகுப்பு)... | 1—50 |

மற்றும் சங்க இலக்கிய நூல்கள், ஜேம்ஸ் ஆலன் நூல்களின் தமிழாக்கங்கள் இன்ன பிற.

விவரங்கட்கு :

**திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.**

**சென்னை-1.**

திருநெல்வேலி-6. மதுரை-1. கோயமுத்தூர்-1.

# இன்றே போல்க!

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்



தமிழினம் காலத்தால் மூத்த இனம்; கருத்தாலும் மூத்து வளர்ந்த இனம்; அறிவின் ஆக்கமும் ஆள்வினையின் ஈட்டமும் பெற்று வளர்ந்து புகழ்பூத்து வாழ்ந்த இனம். உலக வரலாற்றில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு திறம்பட வாழ்ந்து புகழ்பெற்ற இனம்; தமிழினமே! சிந்துவெளிச் சீமை முதல் தென்குமரிக் கண்டம் வரை புகழ் பரப்பி வாழ்ந்த இனம் தமிழினம். இவ்வளவு புகழ்பெற்று வாழ்ந்த தமிழினத்தின் வரலாறு, நெடியதாக—தொடர்ச்சியானதாக இல்லாமல் இடையீடு பட்டு நொய்ந்துபோன காலங்களும் உண்டு. ஏன்? தமிழினத்தின் ஆற்றலிலும் விஞ்சிய பிறிதொரு ஆற்றல் தமிழினத்திற்குக் கேடு செய்ததில்லை. அப்படியொரு விஞ்சிய ஆற்றலும் வரலாற்றில் இருந்ததில்லை. ஆனால், தமிழர்கள் வாள்போன்ற பகைவரை வீறுடன் எதிர்கொள்வர். ஆனால், கேளிர்போல நடித்துக் கேடு செய்யும் பகைவரிடம் பண்பாட்டின் பெயரால் சிக்கி விடுபவர் சிலர். பலர், தன்முனைப்பு, தற்பெருமை ஆகியவற்றின் காரணமாகவும் கேள்போல் நடிக்கும் பகைவரின் புகழ்ச் சொற்களில் மயங்கி இனப்பகைக்கு ஆளாவர். இனநலம் காக்கும் பண்பு, பண்டைத் தமிழரிடத்தில்விழுப்பமாக வளர்ந்ததில்லை. ஒரோவழி இனநலம் காக்கும் பண்பைத் தமிழினத்தில் கண்டபொழுது தமிழ்க் கவிஞர்கள் களிப்பெய்திப் பாடியிருக்கிறார்கள். பாராட்டிப் பாடியிருப்பதுமன்றி இனப்பகை வாராவண்ணம் தடுத்து இன ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குரிய வாழ்க்கை நெறி முறைகளையும் எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

தமிழின வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு, இன ஒருமைப்பாட்டின் இணையற்ற வரலாற்று நூற்றாண்டாகும். இந்தத் தலைமுறை தந்தை பெரியாரின் தலைமுறை. அறிஞர் அண்ணா தமிழினத்தின் தானைத் தலைமகனாக அமர்ந்து புகழ்மிக்க வரலாற்றைப் படைத்த பொன்யுகம். பழந்தமிழகத்தின் வரலாற்றில் கடற்கோள்கள் குறுக்கிட்டதுபோல இந்தத் தலைமுறையில் காலன் குறுக்கிட்டு எடுத்துக்கொண்டான். தமிழகம் துணுக்குற்றது. துணுக்குற்றதைத் தொடர்ந்து நெஞ்சிற் கவலையும் படர்ந்தது. கலைஞர்—நாவலரிடையே ஏற்பட்ட பிணக்கு தமிழினத்தின் நற்காலம் இணக்கமாக மாறி உருவெடுத்தது. இந்த இணக்கத்திற்கு உரிய கலைஞரையும் நாவலரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். அறிஞர் அண்ணா, இனநலத்தின்—இனமானத்தின் புகழ்மிக்க திருவுருவம். அவர் அரிதில் முயன்றார் தமிழினத்தை ஒன்றுபடுத்த! எண்பது விழுக்காடு, ஒருங்கிணைந்தது. இருபது விழுக்காடு வழக்கம்போல இனங் கொல்லும் புல்லுருவியாகவே விளங்கிற்று. 1970 இல் இருபது விழுக்காடு, அயலினத்தின் அரவணைப்புடன் எண்பது விழுக்காட்டை விழுங்க நினைத்தது. இனப்பகைவர்கள், காவிரிப்பூம்பட்டினத்து காரிக்கண்ணனார் காட்டிய யுக்திகள் அனைத்தையும் காட்டினர். தமிழினத்தின் நல்ல காலம்-அந்த யுக்திகள் விலைபோகவில்லை. எனினும், இன நலத்துக்கு மாறான வித்துக்கள் தமிழினத்தில் முற்றாக அழிந்துவிட்டன என்று இன்னமும் கருதுதற்கில்லை. இன நலங்காத்தற்குரிய பண்புகள், மேலும் செழிப்பாக இந்த எண்பது விழுக்காட்டினரிடையிலும் வளரவேண்டும். வழக்கத்தின் காரணமாக விலகியிருக்கும் இருபது விழுக்காட்டினரையும் இணைத்து ஓரினமாக்கவேண்டும்.

அன்றே தமிழினத்தின் வரலாறு தடையற்ற வரலாறாக வளர முடியும். தந்தை பெரியாரின் இலட்சியப் பயணமும் நிறைவுறும்.

இன நலத்தைக் காக்க எத்தகைய பண்புகள் தேவை. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் கவிதையைப் பார்ப்போம். தமிழினத்தார் ஒருவருக்கொருவர் உளமார உதவி செய்து வளர்தல் வேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்து வளர்க்க வேண்டும்; வளரவும் வேண்டும். உலகத்து இயற்கை உதவி செய்தலும் உதவி பெறுதலுமேயாம். ஒருவர் உதவியின்றி ஒருவர் வாழ்ந்து விடுவதென்பது நிலவுலகத்தின் இயற்கையன்று. உதவி செய்யும் வாய்ப்பைப் பருவ மழையை எதிர்பார்க்கும் பயிர் போல எதிர்நோக்கி இருந்து வாய்ப்பு வந்துழி உயர்மனப்பான்மையின்றி உடனடியாக உதவி செய்தல் உண்மையான உதவியாகும். இங்ஙனம் செய்யும் உதவியே அன்பைப் பெருக்கும்; உறவினை வளர்க்கும். உதவியை நாடியும் உதவிகள் செய்தல் கூடாது. இங்ஙனம் செய்யாமல் உதவியை நாடி வருபவரை இகழ்ச்சியாக நினைத்துப் பார்த்து காலந் தாழ்த்தி ஏதோ செய்யாததைச் செய்வது போல நினைத்துச் செய்வது, அதற்குக் கைம்மாறாக நன்றி, பாராட்டுரைகள், புகழுரைகள், முடிந்தால் பிற உதவிகள் இவ்வளவையும் எதிர்பார்த்துச் செய்யும் உதவி, உதவியுமல்ல. இங்ஙனம் செய்யும் உதவிகள் அன்பைப் பெருக்காது; உறவினை வளர்க்காது. இன நலத்திற்கும் பயன் தராது. ஆதலின், "ஒருவீர் ஒருவீர்க் காற்றுதிர்" என்றபடி இன நலங்காக்க ஒருவர் பிறிதொருவர்க்கு உதவியாக இருத்தலை ஒழுக்கமாகக் கொள்ளல் வேண்டும். இயலாது போனால் குறைந்த அளவு உபத்திரமாவது செய்யாதிருத்தல் வேண்டும்.

இன நலம் காக்கும் ஆற்றலைவிட இனப்பகையூட்டும் முயற்சி எளியது. மனிதன் எளிதில் உணர்ச்சிவசப்படுவான். அவனுடைய தற்சார்புணர்ச்சி மிகவும் நொய்தானது. மேலும், சிலர் எளிதில் முழுதாராய்ந்து உணரும் விருப்பமின்றியும் திறனின்றியும் நல்லன போலக் காட்டித் தீயென விளைவிக்கும் சொற்களில்-செயல்களில் வீழ்வர். வேறு சிலர் எல்லாத் திறனும் பெற்றிருந்தாலும் பரம்பரைப் பழக்கம் என்ற பெயரால் சொல்லப்படும் செய்திகளை எளிதில் நம்பி, அவ்வழி இனப் பகையும் விளைவிப்பர். இனப்பகை விளைவித்த தன்னலம் பேணும் அயலினத்தின் தலைசிறந்த யுக்திகள் இவை. ஆதலால், நல்லன போலச் சொல்லப்படுகின்ற சொற்கள், உண்மையில் நல்லனவா? தனக்கும் தன்னுடைய இனத்திற்கும் நல்லனவா? என்று ஆராய்ந்து எடுத்துக் கொள்ளவேண்டும்? தனக்கு நன்மை தந்து இனத்திற்குத் தீமை தருமானால் அந்த நன்மையை எடுத்துக்கொள்ளுதல் கூடாது. ஓடும் ஆற்றுக்கு, கரையரித்து அகலமாதல் நல்லது போலத் தோன்றும். ஆனால், காலப்போக்கில், ஆறு ஆறென்ற பெயரையே இழந்துவிடும். அதுபோல இனத்திற்குத் தீமை செய்து வளரும் ஒருவன் காலப்போக்கில் அழிவான்; அயலினத்தால் அழிக்கப்படுவான்.

நியாயம்—மிகவுயர்ந்த பண்பு. ஆனால், எது நியாயம் என்று காண்பதில் மனிதர்கள் தவறு செய்கிறார்கள். நம்மில் பலர் நியாயத்தைப் பேணுவதே இல்லை. நியாயம் போலத் தோன்றுவனவற்றைத்தான் பேணுகின்றோம். அதாவது நியாயத்தை அல்ல. அநியாயம் நியாயம் போலப் புனை வேடம் கொண்டிருக்கிறது. அதனையே பூசித்துக் கொண்டிருக்கிறோம். தமிழினத்தைச் சார்ந்த ஒருவன், காவிரிக் கரையில் ஏங்கித் தவிப்பான். அதே பொழுது பிறிதொரு தமிழன் கங்கையில் மூழ்கித் தானங்கள் வழங்கிக் கொண்டிருப்பான். இது நியாயமா? தமிழன் வீட்டில் பூத்துப் பருவ மெய்தி இன்ப வாழ்க்கைக்கு ஏங்கித் தவிப்பாள் பெண்ணொருத்தி; கைகூடவில்லை காசில்லாததால்! அதே பொழுது அதே வீதியில் பிறிதொரு தமிழன் வீட்டில் கொட்டு முழக்கொடு கோலாகலமாக புரோகிதர் துணையுடன் தடபுடலாகத் திருமணம் நடக்கும். இது நியாயமாகுமா? தமிழன் ஒருவன் பஞ்சையாய்க் காலிற்கோர் செருப்புமில்லாது கலங்கித் தவிப்பான். அதேபோழ்து மகவெனப் பல்லுயிரையும் ஒக்கப் பார்க்கும் கடமையைக் கொள்ள வேண்டிய மதத்தலைவர் ஒருவர் வைர வைடூரிய அணிகள் பூண்டு சிவிகையில் உலா வருவார். இது நியாயமா? சின்னஞ் சிறு குழந்தைகளாக அள்ளி முடியக் கூந்தலின்றி வளரும் தமிழ்க் குழந்தைகள் எண்ணெயிட்டு முடிக்க முடியாது



தவியாய் தவிக்கும் பொழுது, தாயிற் சிறந்த தயாவுடையான் திருக்கோயிற் கோபுரத்திற்குத் தங்கமுலாம் பூசுதல் நியாயமா? எண்ணியன முடிக்கும் நோக்கத்துடன் நஞ்சனைய சிந்தனையுடன் நேரில் புகழ்ந்து பேசி, அதே போழ்து நம்முடன்பிறந்தார் ஒருவரை இகழ்ந்து பேசுதலை ஏற்றுக் கொள்ளுதலும் நியாயமா? இல்லை, இல்லை! இன்று நியாயம் போல நடமாடுகின்றன. இந்த அநியாயங்கள் ஒழிந்தாலே நியாயம் வளரும்; இனம் வளரும்.

ஆனால், இவைகளை மாற்ற நினைத்தால் இனப் பகைவர் இவையெல்லாம் ஆன்றோர் சென்ற நெறி என்று கூறி மருட்டுவர். அது வலிமையான கடைசி ஆயுதம். அந்தத் தாக்குதலையும் தாங்கிப் புறங்கண்டு வளர்ந்தால்தான் தமிழினம் வளரும். இனப்பகைவர்கள் திறமையானவர்கள். பல நூறு ஆண்டுகளாக இன மோதலை முறையாகச் செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். கடைந்தெடுத்த பொய்யும்கூட அவர்கள் நாவில் அன்று பிறந்த உண்மையென வடிவம் கொள்ளும். அரிச்சந்திரனின் சத்தியமும் இவர்கள் சத்தியத்திற்கு ஈடாகாது. அவர்கள் பரிந்து காட்டும் பாசம் நம்மை மெய் சிலிர்க்க வைக்கும். ஆனாலும் கூர்ந்து நோக்கின் கறையான் மரத்தை அணைத்துத் தழுவிய தழுவலே என்று அறியமுடியும். இரண்டு காதல் நெஞ்சத்திற்கு இடையேகூட அவர்கள் புகுந்து விளையாட முற்படுவர்; காத்திருப்பர். சிறப்பில்லாத மொழிகளை சிறப்புடையன போலக் கூறிச் சிந்தையைக் கலக்குவர். திறமையாகப் புகுந்து விளையாடுவர். இவைகளிலெல்லாம் மயங்கி விழாமல் இனநலத்தைக் காப்பதில் நாம் அக்கறை காட்ட வேண்டும். இனநலம் நமக்கு ஏமவைப்பாகும். இனம் உயர்ந்தாலே அந்த இனத்தை சார்ந்த தனிமனிதனுக்கும் பெருமையுண்டு: அந்த இனம் பேசுகிற மொழிக்கும் பெருமையுண்டு. அந்த இனத்தின் சமய நெறியும் கூட உலகில் ஏற்றம் பெறும். இனநலத்திற்கு எதிரான எதுவும் நல்லனவல்ல. 'இனநலம் எல்லாம் தரும்' என்பது வள்ளுவரின் ஆணை: இனநலம், இனமானம் என்பதையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு நெடிய பயணத்தை மேற்கொண்டிருக்கிற தந்தை பெரியார் பல்லாண்டு வாழ்க! அவர்தம் நல்வாழ்க்கைக்கு மையம் தமிழினத்தின் இனநலமேயாகும். அதனைக் காப்போமாக!


**With the Best Compliments of**

**Mahaboob Textiles,**

33/8 Mount Road, Madras-35.

நல்வாழ்த்துக்கள்

**கு. ச. த. சங்கரசதாசிவம்,**

லெனின் ஸ்டோர்ஸ்,
குளத்தூர் (அஞ்சல்)
நெல்லை மாவட்டம்.




1970 நவம்பர் முதல் வாரத்தில், தந்தை பெரியார் அவர்களின் பம்பாய் சுற்றுப் பயணத்தின்போது செம்பூரில் (பம்பாய்) அளிக்கப்பட்ட நல்வரவேற்பு.

# மெஜாரிட்டியை மைனாரிட்டி ஆளுவதா?

தந்தை பெரியார்

மைனாரிட்டி சமுதாயத்தை மெஜாரிட்டி சமூதாயம் ஆட்சிசெய்வது என்பது உலக இயற்கை. அதுமாத்திரமல்ல; அது தான் ஜனநாயகம் என்பதும் ஆகும்.

உதாரணமாக, 1000 ஓட்டு பெற்றவனாக இருந்தாலும் மற்றவன் 1001 ஓட்டுப் பெற்றிருந்தால் ஒரே ஒரு ஓட்டுதான் அதிகம் என்றாலும் 1001 ஓட்டு பெற்றவன் தான் வெற்றிபெற்றவனாவான்; ஆட்சிக்கும் அவன்தான் உரிமை உடையவனாவான். 1000 ஓட்டு பெற்றவன் தோற்றவனாவான் என்பதோடு மெஜாரிட்டி (1001 ஓட்டு) ஆட்சிக்குக் கட்டுப்பட்டவனும் ஆவான். இது உலக இயற்கையும், உலக தர்மமும் ஆகும்.

### தகுதி—திறமை என்பது மோசடிக் கூச்சல்

இந்நாட்டைப் பொறுத்தவரை சமுதாயத்தில் மெஜாரிட்டி எண்ணிக்கை உள்ள மக்கள், அதாவது, 100க்கு 97 சத மக்களாக உள்ளவர்களை 100க்கு 3 சதமாக உள்ள மக்கள் சமுதாயத்தில் ஆட்சிசெய்கிறார்கள். இதற்கு மதத்தையும், தர்மத்தையும், அரசாங்கத்தையும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஜாதி மதத்தை ஆதாரம் காட்டுவதுபோல் அரசாங்கத்திற்கு "திறமை" என்ற சொல்லைப் பயன்படுத்தி தங்கள் ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டே வந்தார்கள்.



திறமை என்பதையும் தகுதிக்கு மேற்பட்ட திறமை வேண்டும் என்னும் பேரால் ஏமாற்றி வந்தார்கள்.

இப்போது தகுதி, திறமை என்பது எவ்வித உண்மையான தேவையும் இல்லாமல் மோசடிக்கே பயன்பட்டு வந்ததால் இன்று அந்த மோசடி வெளியாகி, எல்லோருக்குமே குறிப்பிட்ட—தேவையான தகுதி, திறமை இருக்கிறது என்பது வெளியாகிவிட்டதால் சமுதாயத்திலும், அரசாங்கத்திலும் சம உரிமை என்பது சமுதாயஎண்ணிக்கைப்படி அடையத்தக்க நிலை என்று ஏற்பட்டுவிட்டதால் மேல்ஜாதி என்ற உரிமையிலிருந்த எல்லோர் மீதும் இடி விழுந்ததுபோன்ற வேதனை ஏற்பட்டுவிட்டது.

காரணம் என்னவென்றால்-ஜாதிப்பிரிவு ஒழிக்கப்படவேண்டுமானால், ஜாதி உயர்வு—தாழ்வு ஒழிக்கப்பட வேண்டுமானால், அவற்றிற்கு ஆதாரமான கடவுள், மதம் இவ்விரண்டையும் பற்றிய நடப்புக்கள் **அடியோடு ஒழிக்கப்பட்டு ஆகவேண்டும்** என்று மரண தைரியமாய் நாம் வேலைசெய்யப் புறப்பட்டுவிட்டதால்-இதை எதிர்க்க மேல் ஜாதி, மைனாரிட்டி ஜாதி என்பதற்கு எந்தவித ஆயுதமும் இல்லாமல் போகும்படியான நிலைமை ஏற்பட, மெஜாரிட்டி மக்கள் தகுதி அடைந்துவிட்டபடியால் "ஆப்பைப் பிடுங்கி எடுத்த குரங்கை"ப் போல் மேல் ஜாதியார் வேதனைப்படுகிறார்கள்.

### அனுபவித்துக்கொண்டே அலறுகிறார்கள்

இந்த முயற்சியில் மேல்ஜாதி அல்லாதார்கள் தகுதி, திறமை வேண்டாம் என்று சொல்லவில்லை; சொல்ல வரவில்லை. அரசாங்கப் பதவிகளுக்கு, கல்வித் துறையில் -மற்ற துறையில் என்ன தகுதி, திறமை

வேண்டும் என்று சட்டப்படி. சம்பிரதாயப் படி நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதோ அந்த அளவை ஏற்று நடக்க வேண்டுமென்பதில் ஒரு சிறுதுளி மாற்றமும் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்தப் படுத்தி-அதற்கேற்ற ஆட்சியிலும், சமுதாயத்திலும், அரசியலிலும் ஏற்படுத்திவிட்டதால்-மேல்ஜாதியார் இப்போது வரம்பைமீறி கூப்பாடு போட வேண்டியதாக ஆகிவிட்டது.

எந்த நிலையில் கூப்பாடு போடுகிறார்கள் என்றால், அரசாங்கத்தில் உள்ள எந்த இலாக்காவிலும் மேல்ஜாதிக்காரர்கள் என்பவர்கள் தங்கள் விகிதாச்சார எண்ணிக்கைக்குமேல் 5 பங்கு, 10 பங்கு, 20 பங்கு வீதம் அதிகமான பதவிகளை அனுபவித்துக் கொண்டு கூப்பாடு போடுகிறார்கள்.

**அய்க்கோர்ட்டில் 'அவாளு'க்கு மூன்று**

உதாரணமாக, அய்க்கோர்ட் நீதிபதி உத்தியோகத்தை எடுத்துக்கொண்டால் இன்றுள்ள 18 நீதிபதிகளில் மேல்ஜாதியார் என்பவர்களுக்கு அவர்கள் விகிதாச்சாரப் படி ஒரு நீதிபதி இருக்கக்கூட நியாயம் இல்லை. இப்போது இருப்பது 3 நீதிபதிகள். இது 100க்கு 16 விகிதம் இருக்கிறார்கள். இது அவர்கள் உரிமைக்குமேல் 5 பங்கு, 6 பங்கு அதிகமாக அனுபவிக்கிறார்கள். மற்ற இலாக்காக்களில் இதைவிடப் பல மடங்கு அதிகமாக அனுபவிக்கிறார்கள்.

இந்த நிலையில் ஒரு பரிதாபகரமான நிலை என்னவென்றால், ஜாதி அல்லது வகுப்பு எண்ணிக்கைப்படி உத்தியோகங்கள் வழங்கப்பட்டாகவேண்டும் என்கிற தத்துவத்தை இன்றைய அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டு, இந்தத் தத்துவத்தைச் சட்டமாக்கி சில வகுப்புகளுக்கு அளித்து சட்டப்படி அனுபவத்திற்குக் கொண்டுவந்தும், சில வகுப்புகளுக்குக் கொண்டுவர அனுமதி கொடுத்தும், ஒரு அளவுக்கு அது நடைமுறையில் அனுபவத்திற்கு வந்தும் இருக்கும்போது இன்றைய நடைமுறை மீது எந்த மேல்ஜாதிக்காரர்தான் ஆனாலும் குறைகூற இடம் எங்கேயிருக்கிறது? இதில் குறை சொல்லவேண்டுமானால், இந்தப்படியான சட்ட உரிமையை இன்றைய இந்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் சரிவர அமலுக்குக் கொண்டுவரவில்லை என்றுதான் குறை சொல்லவேண்டும்.

மற்றும் குறிப்பாகக் குறை சொல்ல வேண்டுமானால் நமது அய்க்கோர்ட்டில் 18 ஜட்ஜுகளில் சட்டப்படி செய்யவேண்டிய காரியங்களில் ஒன்றாக ஷெட்யூல் வகுப்பினர்களுக்கு அளிக்கப்படவேண்டிய 3 அய்க்கோர்ட் ஜட்ஜு பதவிகளுக்கு ஒன்றுகூட நியமிக்கப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதன் தத்துவம் என்னவென்றால், ஒன்றுக்குக்கூட உரிமை இல்லாதவர்களுக்கு 3 அளிப்பதும் மூன்றுக்கு உரிமை உள்ளவர்களுக்கு இதுவரை ஒன்றுகூட அளிக்கப்படாமல் இருக்கிறது என்பதுந்தான்.

**மேல்சாதியினரின் 'திருட்டு' அழுகை**

ஆகவே, வெகுவெகு அதிகமான எண்ணிக்கை உள்ள ஒரு "ஜாதி"யை, வெகு வெகு குறைவான எண்ணிக்கை உள்ள ஒரு சிறிய கூட்டம் ஆட்சியின் அதிகாரத்தைச் செலுத்தும்படி நியமனம் செய்துகொண்டு, அந்த ஆட்சியின்கீழ் பெருவாரியான மக்கள் வாழவேண்டுமென்றால், அப்படிப்பட்ட ஆட்சியைச் சுய ஆட்சி என்றோ, சுதந்திர ஆட்சி என்றோ, ஜனநாயக ஆட்சி என்றோ சொல்ல முடியுமா என்று ஒவ்வொரு மானமுள்ள ஜாதியும், சமுதாயமும் சிந்தித்தாக வேண்டும்.

திருட்டுப்போன சொத்தை—காவல்காரர் திருப்பிவாங்கி திருட்டுக் கொடுத்தவர்களுக்குவாங்கிக்கொடுக்கிறார்களென்றால், திருடன் துக்கப்படுவதும் அழுவதும் எவ்வளவு நியாயமோ—அதுபோல்தான் இந்த 'மேல்' ஜாதியார் தங்கள் அனுபவம் பறிபோவதாக அழுவது ஆகும்.

மற்றவர்களுக்கு உரிமைகொடுக்க சம்மதிக்காதவன் தன் உரிமை போகிறதே என்று அழுவது எந்தவிதத்தில் யோக்கியமான காரியமாகும்?

**கொலை செய்வதுபோன்ற கொடிய குற்றம்**

பெரிய உத்தியோகங்களில்—பதவிகளில் மேல்ஜாதியார்களை நியமிப்பது, மற்ற ஜாதியாரைக் கொலைசெய்ய ஏற்பாடு செய்வது போன்ற கொடுமையும் குற்றமுமான காரியம் ஆகும். நமது அரசாங்கம் தங்களை நாலாம் ஜாதி—நாலாந்தர அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு, "ஒண்

ணாம் தர, இரண்டாம் தர'' மக்களிடம் நிர்வாக, நியமன பதவிகளை—உத்தியோகங்களை ஒப்படைப்பது என்பது சிறிதும் நேர்மை ஆகாது.

ஒழுக்கக்கேடு—நேர்மைக்கேடு—நாணயக்கேடு—திறமைக்கேடு ஏற்பட்டால், எல்லா வகுப்பாரையும் ஒன்றுபோலவே நடத்துவது என்ற திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிற அரசாங்கம், விகிதாச்சாரப்படி,—'விகிதாச்சாரப்படி பயன்படத் தக்கபடி' ஏன் ஆட்சி செய்யக் கூடாது ?


**தந்தை பெரியாரின் 93-வது பிறந்த நாளில் எமது வாழ்த்துக்கள்**

பண்டை காலமாக பழனி சித்தர் வைத்தியசாலை உண்மையான முறையான நேர்மையான வைத்திய சேவை புரிகிறது !

**வாலிப — வயோதிக — அன்பர்களே !**

பழனி சித்தர் மருந்துகளே பாரில் உயர்ந்தது என்பது உலகம் அறிந்த உண்மை!

பிரபல பழனி
வைத்திய திலகம்
வைத்தியராஜ்



**Dr. S. காளிமுத்து**
R.M.P. (IND) V.V.C.
A.M.I.H.

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து உடல் வலுவில்லாமல் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் வயோதிகரைப் போல் களைப்பு மேலிட்டு வேலைகளைச் சரிவர செய்ய இயலாமையினால் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும், தெரியாமலும் செய்கிற தவறுதல்களால், இப்போது உடல் கெட்டு பலகீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலகீனம், உடல் வலி, களைப்பு, தூக்கக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி, தாய் தந்தையரிடமும், மற்றவர்களிடமும் சொல்ல முடியாமல் மனவே:தனையும் கஷ்டமும் அடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறார்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், கவலைப்பட வேண்டாம். இம்மாதிரியான வியாதியஸ்தர்கள் 74 வருட அனுபவம் பெற்ற நமது சாஸ்த்ரீய முறையான மிக உயர்தரம், உயர்தரம், முதல் தரம், 2-ங் தரம் எதுவாகிலும் சாப்பிட்டாலே எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்தியமும் இல்லை. ஆர்டரில், தேவைப்பட்ட மருந்தின் விலைகளைக் குறிப்பிட்டு எழுதவும். வி. பி. பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும் பொழுதே பலனைக் காணலாம். வி. பி. பி. செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது. சித்த வைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பலன் தரும் என்பதை அறியவும்.

ஒரு மாத சிகிச்சை மருந்துகள் : மிக உயர் தரம் ரூ. 90
உயர் தரம் ரூ. 42. முதல் தரம் ரூ. 33 2-ங் தரம் ரூ. 24

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி-விலாசம் கவனிக்கவும்.
கிளை : 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை. போன் : 21448

**சென்னை கிளை ஆபீஸில் 1 முதல் 7 தேதி; மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்.**

GOVT REGD T. M. No. 204341 REGD 15443.

வைத்திய திலகம் வைத்தியராஜ் டாக்டர் S. **காளிமுத்து**

**பழனி சித்தர் வைத்தியசாலை, (P) பழனி S. I.**

போன் : 316 (தியேட்டர் ஸ்ரீ ரங்கராஜா பக்கம்) தந்தி : சித்தர்.

*With the best compliments*

*of*

V

# A Well - Wisher

# வழிகாட்டும் தந்தையே வாழ்க!

அமைச்சர் திரு என். வி. நடராசன்

மறுமலர்ச்சி இயக்கத் தலைவர், நம் தந்தை பெரியார் அவர்களுக்கு 92 ஆண்டுகள் நிறைவு பெற்று, 93-ம் ஆண்டு தொடங்குவது குறித்து தமிழ்ச் சமுதாயமே பூரிப்படைகிறது.

நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் அவர் ஆற்றியுள்ள அரும்பணிகள் குறித்து மக்கள் சமுதாயம் அவருக்கு என்றும் கடமைப் பட்டுள்ளது.

பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள், அரசியல் பணியை மிகவும் கடினமானது என்றும் ஆபத்தானது என்றும் சொல்லு வார்கள்.

ஆனால் சமுதாய சீர்திருத்தப் பணியோ, கடினமானதும் ஆபத்தானதும் மட்டுமல்லாமல் சிக்கலுக்குரியதுமாகும். ஒரு தலைவரின் அரசியல் கருத்துக்களை ஒப்புக்கொள்வோர், அந்தத் தலைவர் சமுதாயத்தில் ஏதாவது சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்றால் உடனே கொதித் தெழுவார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்துக்கு விடுதலை வாங்கித் தந்த காந்தியடிகளை "மகாத்மா" என்று கூறிக் கொண்டாடிய வர்கள் எல்லாம், அவர் சமுதாயத்துறையில் சீர் திருத்தக் கருத்துக்களைப் புகுத்த விரும்பியபோது தூற்றவே தலைப்பட் டனர்.



காந்தியடிகள் சமுதா யத்தில் பின்னடைந்து போன தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் சரி, நாட்டில் இந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்று சொன்னபோதும் சரி, வைதீகர்களும் பழமையாளர்களும் பழி வாங்கும் முறையில் எதிர்த்தார்கள்.

இந்து — முஸ்லீம் ஒற்றுமைக்காக காந்தியார் நவகாளி என்ற ஊருக்கு, அதாவது பாகிஸ்தான் பகுதிக்குச் சென்ற போது அவரது உயிருக்கே ஆபத்து ஏற் படும் என்று காங்கிரஸ் தலைவர்கள் பலர் எச்சரித்தனர். ஆனால் காந்தியடிகளோ எனது நண்பர் ஜனாப் ஜின்னா இருக்கும் வரை எனக்கு ஒருவித ஆபத்தும் ஏற்படாது என்றுகூறி தைரியமாகச் சென்று இனிதே திரும்பிவந்தார்.

அப்பேற்பட்ட காந்தியடிகள், இந்தியத் துணைக்கண்டத்தில் அவர் ஆற்றிவந்த சமுதாய சீர்திருத்தப் பணிகளைக் கண்டு சகிக்காத ஒரு மதவெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டார்!

அகில உலகுக்கெல்லாம் அருமையான தத்துவங்களையும்—ஜனநாயகத்தின் அரிச் சுவடியையும் போதித்த கிரேக்கம்—சீர் திருத்தக் கருத்துக்களைக் கூறிய **சாக்ர டீசுக்கு** விஷக் கோப்பையை பரிசளித்தது!

ஆகவே அரசியல் பணியைவிட சமூக சீர்திருத்தப் பணி, மிகவும் சிக்கலானது; ஆபத்தானது.

அத்தகைய ஆபத்தும் சிக்கலும் நிறைந்த பணியைத் தமிழகத்தில் தந்தை பெரியார் அவர்கள் எவ்வளவோ எதிர்ப்புக்

களுக்கிடையில் மிகவும் வெற்றிகரமாகச் செய்துவருகிறார்கள்.

சமுதாயத்தில் மலிந்துள்ள நச்சுக் கருத்துக்களைப் போக்க, அந்த வெண் தாடி வேந்தர் ஏற்றுக்கொண்ட விழுப் புண்கள் எண்ணிலடங்கா—ஏட்டிலடங்கா.

அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக அவர் ஆற்றிவரும் அரும்பணியின் காரணமாகத்தான் இன்றைக்குத் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

கேரளத்தில் **வைக்கம்** என்ற ஊரில் தாழ்த்தப்பட்டவர்களின் ஆலய நுழைவு உரிமைக்காக தந்தை பெரியார் நடத்திய போராட்டமும், சந்தித்த அடக்குமுறை களும், ஏற்றுக்கொண்ட இன்னல்களும் அவருக்கு **வைக்கம் வீரர்** என்ற பட்டத் தைப் பெற்றுத் தந்தது.

தந்தை பெரியாரின் தன்மான இயக்கப் பணி தமிழகத்தில் வெற்றி வாகை சூடி வருகிறதென்றால் அதற்கு என்ன காரணம்?

* தந்தை பெரியார் அவர்கள் ஆதிக் கக்காரர்களுக்கு வளைந்துகொடுக்காத **அஞ்சா நெஞ்சினர்.**

* தந்தை பெரியார் அவர்கள் ஆசா பாசங்களுக்கு **அப்பாற்பட்டவர்.**

தந்தை பெரியார் அவர்கள் தன் னுடைய இளமைக் கால முதல் இன்றுவரை **எளிமையைக் கடைப்பிடிப்பவர்.**

தந்தை பெரியார் அவர்கள் கொள்கை யில் உறுதியானவர். கண்டிப்பு அவருக்கு **உயிர் மூச்சு.**

இப்படிப்பட்ட பண்புகள் மட்டுமல்ல— இயக்கத்தை மிகவும் கட்டுப்பாடாக வளர்த்துவந்த காரணங்களால்தான் இன்று அந்த வெண்தாடி வேந்தரால் வெற்றிப் புன்னகை சிந்திட முடிகிறது.

தந்தை பெரியார் அவர்கள் தன் மனதில் பட்டதை அஞ்சாமல் ஆனால் முறையாக எடுத்துக் கூறும் இயல்பினர். இந்த உறுதி யும், பண்புடன் கூடிய அஞ்சா நெஞ்சமும் கொண்டு அவர் பணியாற்றியிருக்கா விட்டால், அதைப் போல் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையும் தமிழ கத்திற்கு கிடைத்திருக்காவிட்டால், நம் நாடு இன்று பெற்றுள்ள ஏற்றத்தைப் பெற்றி ருக்கவே முடியாது

நாட்டுக்கு நற்பணி யாற்றுவதில் பெரி யார் தீவிரமும் கண்டிப்பும் காட்டி வந்தார் என்றால் அறிஞர் அண்ணா அவர்கள் அதை மிகவும் நாசூக்காகச் செய்வார்.

அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் பெரியாருக்கு இருந்த வருத்தமெல்லாம், தனக்குப் பின்னால், தலைமைப் பொறுப் பேற்று கட்சியை நடத்துவதற்கான அக்கரை காட்டவில்லையே என்பதுதான்.

அதனால்தான் கட்சியில் அன்றைய தினம் இருந்த என்னைப் போன்ற தோழர் கள் பெரியார் அண்ணா இருவருமே, தமிழ கத்தின் இரு கண்கள் என்று கருதிப் பின் பற்றி வந்தோம்.

1948ல் "திராவிடன்" பொங்கல் மலரை வெளியிட்ட நான், அட்டைப் படத்தில் தந்தை பெரியாரின் படத்தையும், முகப்பில் அறிஞர் அண்ணாவின் படத்தையும் வெளி யிட்டு, **"பெரியாரின் பிரதிபிம்பம் அண்ணா"** என்று குறிப்பிட்டிருந்தேன்.

தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறி வுப் பயணத்தில் பல்லாண்டு காலம் பங்கு கொண்டிருந்தேன் என்பதைப் பெருமை யோடும்-அதே நேரத்தில் அடக்கத்தோடும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அவர் இயக்கப் பணிக்காக தமிழகம் எங்கும் சுற்றியபோது நானும் உடன் சென்றிருக்கிறேன்.

ஒருமுறை ராசபாளையத்தின் 8-வது மைலில் உள்ள சிற்றூர் ஒன்றில் பொதுக் கூட்டம் மாலை 6-மணிக்கு ஏற்பாடாகி இருந்தது. தந்தை பெரியார் அவர்களுடன் நானும் திருமதி. மணி அம்மையாரும் ராச பாளையத்தில் பயணிகள் விடுதியில் தங்கி இருந்தோம். மாலை 5-மணிக்கெல்லாம் புறப்பட்டு கூட்டம் நடக்கும் ஊருக்குச் சென்றோம்.

அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒலி பெருக்கியில் பழுது ஏற்பட்டு விட்டது. பெரியார் அவர்கள் கூட்டம் ஏற்பாடு செய்த வர்களைக் கண்டித்துக்கொண்டே கூட்

டத்தை 7-மணிக்கெல்லாம் முடித்துவிட்டார். விருந்து சாப்பிட்டுவிட்டு போகச் சொல்லி கழகத் தோழர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும், வழக்கமாக இருந்து விருந்து சாப்பிட்டு விட்டு வரும் பெரியார் அவர்கள் அன்று விருந்தைப் புறக்கணித்துவிட்டு கோபமாக புறப்பட்டு விட்டார். பெரியாரும் நானும் திருமதி. மணி அம்மையாரும் இரவு 8-மணிக்கே ராசபாளையம் வந்து தங்கி விட்டோம்.

பெரியாரின் பகுத்தறிவுப் பிரசாரத்தின் சூடு தாங்காத பழமைவாதிகள், அவரையும் எங்களையும் தாக்கி வீழ்த்துவதற்காக ஒரு இடத்தில் ஒழிந்துகொண்டு இருந்தார்கள். பத்து மணி அளவில் கூட்டத்தை முடித்துக் கொண்டு பெரியார் வருவார்—அப்போது தாக்கலாம் என்பது அவர்கள் திட்டம். ஒலி பெருக்கி கெட்டுவிட்டதால் நாங்கள் 8-மணிக்கே திரும்பிவிட்டோம். ஆனால் இரவு 10-மணிக்கு, கூட்டத்திற்கு வந்திருந்த கழகத் தோழர்கள், ராசபாளையத்திற்கு வந்து எங்களைச் சந்திப்பதற்காக அந்த வழியாக வந்தார்கள். உடனே மறைந்திருந்த மாற்றார்கள், அவர்களைச் சூழ்ந்து கொண்டு திராவகம், திருக்கைவாள் போன்ற பயங்கர ஆயுதங்களால் தாக்கி, தோழர்களின் உடலை மிகவும் படுகாயப்படுத்தி விட்டார்கள். அந்தத் தோழர்கள் எல்லாம் மிகவும் பயந்துபோய், பெரியாருக்கு என்ன நேர்ந்ததோ என்று கவலையுற்று, ராசபாளையத்துக்கு ஓடோடி வந்து அய்யாவையும் எங்களையும் பார்த்த பிறகே அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. தந்தை பெரியார் அவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறினார்கள்.

இப்படி பெரியாரின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடிய நிகழ்ச்சிகள் பலப்பல!

ஒரு முறை சேலம் மாவட்டத்தில் ஒரு கிராமத்துக்கு கூட்டத்திற்காகப் பெரியாரும் மணி அம்மையாரும் நானும் சென்றிருந்தோம். அந்த ஊரில் கழகத் தோழர் ஒரே ஒருவர். அவர் இருளர் வகுப்பைச் சேர்ந்தவர். மிகவும் ஏழை.



அந்த ஊரில் இருந்த பணக்காரர்களும் மற்றவர்களும் பெரியாரை மிகத் தீவிரமாக எதிர்த்து வந்தனர்.

பெரியாரும், நானும், மணி அம்மையாரும் அந்த ஊருக்குச் சென்றவுடன் அந்தத் தோழர் மாட்டுத் தொழுவத்தில் துணியை விரித்து உட்காரச் சொன்னார்கள். பிறகு கொட்டை கொட்டையாக அரிசியை வடித்து, மிளகாய் தண்ணீரைப் போல் குழம்பை வைத்து ஊற்றினார். நானும் மணியம்மையாரும் சாப்பிட முடியாமல் சோற்றைக் குழப்பிக் கொண்டிருந்தோம். உடனே பெரியார் அவர்கள் எங்களைக் கடுமையாகக் கண்டித்து சாப்பிடும்படிச் சொன்னார்கள். நான் பெரியாருடன் போட்டி போட்டுக்கொண்டு அவருக்கு முன்னாலேயே சாப்பிட்டு முடித்தேன்.

கூட்டம் முடிந்து காரில் வரும்போது தந்தை பெரியார் எங்களிடம் கூறினார்கள். "அந்தக் கழகத் தோழரோ ஏழை—ஊரே அவருக்கு எதிர்ப்பாக இருக்கிறது. சமுதாயத்திலும் அவன் தாழ்த்தப்பட்டவன். அவன் அளிக்கும் உணவை நாம் சாப்பிடாவிட்டால் அவன் மனம் எவ்வளவு வருத்தமடையும்? பணக்காரர்கள் அளிக்கும் விருந்தைவிட இதைத்தான் பொது வாழ்விலுள்ள நாம் விரும்பி சாப்பிடவேண்டும்" என்று கூறினார்கள்.

பெரியார் அன்று சொன்ன இந்த அறிவுரை இன்றைக்கும் என் பொது வாழ்க்கையில் ஒளிவிளக்காக விளங்குகிறது.

பெரியாரோடு நான் கொண்டிருந்த தொடர்பில் இன்றைக்கும் அழியாத செல்வமாக நான் கருதும் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எனது இளைய மகன் பன்னீர்செல்வத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் திருமணம் நடைபெற்றது. பெரியார் அப்போது வேலூரில் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். திருமணத்திற்கு அவரை அழைக்க நானும் என் துணைவியார் திருமதி புவனேசுவரி, மூத்த மகன் சோமு ஆகியோர் வேலூர் மருத்துவ மனைக்குச் சென்றிருந்தோம். நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமது அமைச்சரவையில் எனக்கு இடம் அளித்து அமைச்சராக்கி இருந்தார். தந்தை பெரியாருக்கு நானும் எனது துணைவியாரும் மாலைஅணிவித்து வணங்கினோம். பெரியார் உள்ளம் மகிழ்ந்து அங்கே குழுமியிருந்த டாக்டர் ஜான்சன், மற்றும் மருத்துவ

மனை அதிகாரிகளுக்கு என்னை அறிமுகப் படுத்தி வைத்தார். உடன் இருந்த "விடுதலை" ஆசிரியர் தோழர் வீரமணி அவர்கள் மருத்துவமனை அதிகாரிகளிடம் என்னைப்பற்றிக் கூறுகையில் "Hon'ble Minister was Periyar's Secretary for many years" (மாண்புமிகு அமைச்சர் பெரியாரின் செயலாளராகப் பல ஆண்டுகாலம் இருந் தார்) என்று குறிப்பிட்டார்.

உடனே தந்தை பெரியார் அவர்கள் குறுக்கிட்டு ஆங்கிலத்திலேயே கூறினார்: "Not only Secretary, but also honest and sincere"—"செயலாளர் மட்டுமல்ல, உண்மையும் நேர்மையும் மிக்கவர்" என்று பெரியார் கூறியதும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பெரியாரின் இந்த பாராட்டுரையை என் வாழ்நாளில் நான் பெற்ற பெருஞ்செல்வமாகக் கருதுகிறேன்.

ஏனென்றால் தந்தை பெரியார் அவர்கள் மிகவும் சிக்கனமானவர்—பணத்தைக் கூட யாருக்காவது கொடுத்தாலும் கொடுத்து விடுவார்—பாராட்டுரையைக் கொடுக்க மாட்டார். அப்பேற்பட்ட தந்தை பெரியார் என்னைப் பாராட்டியது என் வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவமாகும்!

பெரியார் அவர்கள் ஆற்றிய அரும் பணியின் காரணமாகவும், அறிஞர் அண்ணா அவர்களின் அரிய திட்டங்களாலும் தமிழகத்தில் சமூக சீர்திருத்தம் பெருமளவு வெற்றி பெற்றுள்ளது. பெரியாருக்கும் அண்ணாவுக்கும் கருத்து வேறுபாடு என்று கூறி வந்தோரெல்லாம், அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதல்வரானவுடன் தந்தை பெரியாருக்கு மாலை அணிவிக்கச் சென்ற போது இருவருக்கும் இடையே நிலவிய அன்பையும், பந்த பாசத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

தமிழகத்தின் அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும் ஏற்றம் காண அரும்பாடு பட்ட பெரியாரின் பிரதிபிம்பமாக அண்ணா விளங்கினார். இன்று அறிஞர் அண்ணாவின் பிரதிபிம்பமாக விளங்கும் டாக்டர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையை பெரியார் அவர்கள் ஆதரித்து, கலைஞரின் திட்டங்கள் வெற்றிபெற வாழ்த்தி வருகிறார்.

கழகத்தின் முதல் அமைச்சரவையை, பெரியாருக்குக் காணிக்கை யாக்கினார் அண்ணா! பெரியாரும் தமிழக அமைச்சர்களை தனது மைந்தர்களைப் போலவே நடத்தி அறிவுரை கூறி வருகிறார்!

தள்ளாத வயதில் தடியின்றி நடந்து, தன்மான இயக்கத்தின் வெற்றிக்கு தளராது பாடுபடும் பெரியார் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் நல்ல பணி ஆற்றவேண்டும் என்று 93-வது பிறந்த நாள் விழாவில் என்னுடைய வணக்கங்களை வாழ்த்துக்களாக்கித் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவரது பணிகளுக்கு என்போன்ற தொண்டர்களின் ஒத்துழைப்பு என்றும் உண்டு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க பெரியார்! வளர்க பகுத்தறிவு!

வாழ்க பெரியார்!

பெரியார் ஆண்டு 93



**தந்தை பெரியார் அவர்களின்**

**93-வது ஆண்டு**

**பிறந்த நாள்**

**நல் வாழ்த்துக்கள்**

# செ. மாரியப்பன்

**வியாபாரம், 68, பாண்டிய வேளாளர் தெரு, மதுரை.**



# பார்ப்பனரின் வன்முறைக்கு ஆதாரம்

## தந்தை பெரியார்

இன்று நம் நாட்டில் பார்ப்பனர் எங்கு பார்த்தாலும் வன்முறை—பலாத்காரம் ஆகியவைகளைச் செய்து கொண்டும், தூண்டிவிட்டுக் கொண்டும் வருகிறார்களே இதற்கு ஆதாரம் என்ன என்று நம் மக்கள் சிந்திக்கலாம்—

இன்று பார்ப்பனர் நடந்து கொள்ளும் ஒவ்வொரு காரியமும், அவர்களது சாஸ்திர, புராண, இதிகாசங்களின்படிதானே ஒழிய, அவர்களது சொந்தப் புத்தியைக் கொண்டு அல்ல என்பது ஆதாரபூர்வமான காரியமாகும்.

வெள்ளைக்காரன் ஆட்சியில் வெடி குண்டெறிந்தும், தண்டவாளத்தை பெயர்த்து ரயிலைக் கவிழ்த்தும், கட்டடங்களை நெருப்பிட்டுக் கொளுத்தியும், கலைக்டர்களைச் சுட்டுக் கொன்றதுமான செய்கைகளும், 1948ல் காந்தியைச் சுட்டுக் கொன்ற செய்கையும் அம்பேத்காரை கொன்ற செய்கையும் முதலிய எல்லா செய்கைகளும் அவர்களது தர்ம, சாஸ்திர புராண இதிகாசப்படியான காரியங்கள் தானே ஒழிய புதிய தோற்றங்கள் அல்ல.



மற்றும், R. S. S.—(ஆர். எஸ். எஸ்.) என்னும் **ஸ்**தாபனமும், கம்யூனி**ஸ்**ட் இடது-தீவிர முதலிய **ஸ்**தாபனங்களும் "நக்சல்பாரி!" என்னும் ஸ்தாபனமும் மற்றும், திருச்சி முதலிய இடங்களில் உள்ள இரகசிய **ஸ்**தாபனங்கள் பலவும், "உடல் அப்பியாச**ஸ்**தாபனங்கள்" என்னும் பேரால் உள்ள **ஸ்**தாபனங்களும் அவர்களது ஆதாரப்படி வைத்து நடத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருபவைதான்.

மற்றும் அண்ணாமலை சர்வகலா சாலையில் நடக்கும் "இனச் சதி"களும் இதில் சேர்ந்தவைதான்.

இவற்றிற்கு ஆதாரம் மனுதர்மத்தில் ஏராளமாக இருக்கின்றன. இராமன், கிருஷ்ணன் காரியமெல்லாம் இந்த வன்முறைக்கு வசதிப்படிகள்தான்.

இராமாயணத்தில், "சூத்திரர்கள் பிராமணர்களின் எதிரிகள் என்பதற்கு ஆக" என்று சொல்லிக்கொண்டே இராமன் பல பேர்களைக் கொன்று இருக்கிறான்.

இராமனால் கொல்லப்பட்டவர்கள் அத்தனை பேர்களும் சூத்திரர்கள். அதாவது சுரர் அல்லாதவர்களே ஆவார்கள்.

**"சூத்திரனைக் கொன்றால் பாபம் இல்லை"**—என்பதும் மனுதர்ம வாக்கியம்.

இராமாயணத்திலும் வாலி கொலை முதலியன நடந்திருப்பது பல இடங்களில் இராமன் வாக்காலும், இலக்குமணன் வாக்காலும் காணப்படுகிறது.

"பிராமணனுக்குக் கேடு ஏற்படும் பொழுது பிராமணன் ஆயுதமெடுத்து யுத்தம் செய்யலாம்"—என்பது மனுவாக்கு.

"மனுதர்மப்படி ஜனங்கள் நடக்காத போதும், அரசன் ஆட்சி நடக்காதபோதும், வர்ணாச்சிரம தர்மம் அழியும் போதும், **பிராமணன் ஆயுதம் எடுத்துப் போர் தொடங்கவேண்டும்''**—

இது மனுதர்மம்—அத்தியாயம் 8,—சுலோகம் 348.

இந்தப்படி இருப்பதுடன், "சுரர்—அசுரர்" யுத்தம் கொண்ட புராண, இதிகாசங்கள், அவதாரங்களின் செய்கைகள் முழுவதும் இதையேதான் காட்டுகின்றன—வலியுறுத்துகின்றன: மற்றும் கட்டடங்களுக்கு நெருப்பு வைப்பதுவும் இதை சேர்ந்த காரியமேயாகும்.

இராஜாஜி அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தட்வைகளில் **''பிராமணர்களுக்கு ஆபத்து வந்துவிட்டது''** என்பதாகப் பார்ப்பனர்களுக்கு ஆத்திரம் ஏற்படும்படி எழுதி வந்திருக்கிறார்; வருகிறார்.

காந்தி கொல்லப்பட்டதாலும், அம்பேத்கார் கொல்லப்பட்டதாலும், தங்களுக்கு ஒரு பின் விளைவும் கெடுதியும் இல்லாமல் போய்விட்ட காரணத்தினாலேயே இன்று பல பார்ப்பனர் அதைப் பின்பற்றத் துடிக்கிறார்கள். சீக்கிரத்தில் அதைப் பின்பற்றுதல் நடைமுறைக்கு வரலாம்.

கலைஞர், நமது முதலமைச்சர் அவர்கள்—**''என்னைக் கொல்ல முயற்சிகள்''**—என்று சட்ட சபையிலேயே குறிப்பிட்டிருக்கிறார். அதில் ஒன்றும் இரகசியமில்லை. மற்றும் சில இடங்களிலும் பலாத்கார உணர்ச்சி பரபரப்பாக இருக்கிறது.

பார்ப்பனர்களுக்குப் பொதுவாகவே நம் நாட்டில் இடமோ, இதைத் தவிர வேறு யோசனையும் புகலிடமும் இல்லாத நிலை தாண்டவமாடுகிறது.

இன்றைய அரசியல் நிலையும், வேறு எந்தக் கட்சியாலும் இன்றைய ஆட்சியைக் குறைகூறத் தக்க காரணங்கள் ஒன்றுமில்லாமல் போனதால், எல்லா மாற்றுக் கட்சியும் இந்த ஆட்சியை மாற்றவோ, தொல்லை கொடுக்கவோ, பார்ப்பனரைத் தான் தஞ்சமடைய வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

அதனால் சுரர் அல்லாத நம் மக்கள் சிலருக்கும் பார்ப்பனரை அண்டி, அவர்களது ஆதரவு, விளம்பரச் சலுகை பெற வேண்டி ஏற்பட்டுவிட்டதால் பார்ப்பனரின் வன்முறைக்கு நல்லதொரு ஆதரவும் ஏற்பட்டுவிட்டது.

எனவே, வரும் காலம் நமக்கு பல தொல்லைகளைச் சமாளிக்க வேண்டிய காலமாகையால் நம்மவர்கள் சற்று எச்சரிக்கையாக இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

ஆதலால், பார்ப்பனர் வன்முறைக்கு ஆதாரமாக மனுதர்மம், புராண இதிகாச தர்மம் இருப்பதால் அவற்றைச் சமாளிக்க, நம்மவர்கள் ஒவ்வொருவரும் ஆயுத பாணியாக அதாவது பார்ப்பனர் ஆண் பெண் கடவுள்களைப் போல எந்த நேரமும் ஆயுத பாணிகளாய், கத்தி—பாலா—ஈட்டி மழு சமேதர்களாக இருக்கவேண்டியது அவசியமாகிறது.

இதற்கு, பார்ப்பனருக்கு உள்ள ஆதாரம்போல் நமக்கு ஆதாரம் எதுவும் இல்லையென்றாலும் அவர்களது ஆதாரத்தையே நமது ஆதாரமாகவும் கொண்டு ஆயுதபாணிகளாக இருக்கக் கொஞ்சமும் தயங்கவேண்டியதில்லை என்று கேட்டுக் கொள்கிறேன்.


தந்தை பெரியார் 93-ம் ஆண்டு பிறந்தநாள், வாழ்க பெரியார்!

**போட்டோ & பினிஷிங் என்லார்ஜ்மெண்ட் செய்வதற்கு சிறந்த இடம்**

**சந்தர் போட்டோ நிலையம்**

144, (மாடியில்) முதல் அக்ரகாரம், சேலம்-1.

(Specialist in Colour Enlargements)

# பெரியார் பிறந்திருக்காவிட்டால்?



அமைச்சர் அன்பில் தர்மலிங்கம்

பெரியார் பிறந்திருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்கின்றேன். என் மனக்கண் முன்னே தமிழ்நாடு தெரிகிறது. ஆனால் அது மூட நம்பிக்கை,அறியாமை என்னும் இருளினால் சூழப்பட்டுள்ளது. அந்த இருட்டிலே, உயர்ந்த குடியினர் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் ஒரு சிலர் மட்டும் அறிவு என்னும் அணையா விளக்கை வைத்துக் கொண்டு உழைக்காமலே பிழைத்து வருகின்றனர். ஆனால் தமிழர்கள் பஞ்சைகளாய், பராரிகளாய், அடிமைகளாய் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆயினும் உழைக்கின்ற அவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை ; அவர்கள் குடியிருக்க வீடில்லை ; வரப்பையே தலையணையாகவும் வயலையே பஞ்சு மெத்தையாகவும் கொண்டு களைப்பாறுகின்றனர்; அவர்களுடைய பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லவில்லை. ஆனால் ஆடு மாடு மேய்த்துக்கொண்டு நிற்கின்றார்கள்; அல்லது அப்பன், பாட்டன் தொழிலைச் செய்து கொண்டு நிற்கின்றார்கள். இத்தனையும் செய்யும் அவர்களைத் தீண்டாமை என்னும் வேலி போட்டு ஆடு மாடுகளைவிடக் கேவலமாகத் தனியே ஒதுக்கிவைக்கப் பட்டுள்ளதும் தெரிகிறது. அப்பப்பா! என்ன கொடுமை!



பெரியார் பிறந்திருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும் என்பதை, அதற்கு மேல் என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. எனவே அதை விடுத்து பெரியார் பிறந்ததனால் ஏற்பட்டுள்ள நன்மைகளை எண்ணிப் பார்க்கின்றேன். நன்மைகள் ஒவ்வொன்றும் 'நான் முந்தியா? நீ முந்தியா?' என்று போட்டி போட்டுக் கொண்டு என் எண்ணத்தில் தோன்றுகின்றன. அவைகளில் ஒரு சிலவற்றை உங்கள்முன் வைக்கின்றேன்.

தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் உரிய புரட்சிக் கருத்துக்களைக் கல்லடிக்கும், சொல்லடிக்கும், சிறைச்சாலைக்கும் அஞ்சாமல் பட்டி தொட்டிகளிலெல்லாம், தந்தை பெரியார் அவர்கள் பரப்பி வந்திருக்காவிட்டால் தமிழ் உணர்வு, தமிழன் என்ற எழுச்சி பிறந்திருக்குமா? தமிழும், தமிழினமும் தலைதூக்கியிருக்க முடியுமா ?

பிறப்பால் அனைவரும் சமமானவர்களே; அதனால்தான் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்;
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்று கூறியுள்ளார்.

"எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்;" என்பதுதான் பழந்தமிழனின் மரபு. அப்படியிருக்கப் பறையன், சக்கிலி, பிராமணன் என்ற ஏற்றத் தாழ்வுகள் ஏன்? என்று கேட்டு தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவுப் பிரசாரம் செய்திருக்காவிட்டால், இன்று 'எல்லோரும் சமம்' என்ற நிலை உருவாகியிருக்குமா? 'நீ கீழ்சாதி

யைச் சேர்ந்தவன்; எனவே, என்னருகில் வராதே! என்னைத் தொடாதே! எட்டி நில்!' என்று சொல்லிய உயர்சாதியினர் இன்று வாய் மூடிக் கொண்டிருக்கும் காலம் வந்திருக்குமா ?

கல்விக்கண் பெற்றால்தான் பாமர மக்களும் படிப்படியாக முன்னேற முடியும் என்ற பகுத்தறிவுப் பாடத்தைப் பல ஆண்டு களாகத் தந்தை பெரியார் அவர்கள் போதித்து வந்திருக்காவிட்டால் இன்று கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடம் தோன்றி யிருக்குமா ? புகுமுக வகுப்பு (Pre University Course) வரை எல்லோரும் இலவசக் கல்வி பெறும் வாய்ப்புப் பிறந்திருக்குமா ?

'ஏழை எளியவர்களின் பிள்ளை களுக்குப் படிப்பெதற்கு? எல்லோரும் படித்துவிட்டால் குலத் தொழிலைச் செய் வது யார் ?' என்று கேட்டுக் குலத் தொழில் கல்வித் திட்டம் கொண்டு வந்ததைத் தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பிரசாரம் இல்லாவிட்டால் தடுத்து நிறுத்தியிருக்க முடியுமா ?

மேட்டுக் குடியினர்க்கே படிப்பும், பட்டமும் என்ற நிலைபோய், தாழ்த்தப் பட்ட, பின்தங்கிய இனத்தவரும் படித்து முன்னேறவேண்டும் என்பதற்காகச் சாதி அடிப்படையில் இத்தனை சதவிகிதம் என்று கல்லூரிகளிலும் இடம் ஒதுக்கப் பட்டிருக்குமா ?

உயர்சாதியினர் மட்டுமே அய்.ஏ.எஸ்., சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற படிப்புகளைப் படித்துப் பெரும் பெரும் வேலைக்கு வரமுடியும் என்றிருந்த பரம்பரை நிலைமை மறைந்து, தாழ்த் தப்பட்ட, பின்தங்கிய இனத்தவரிலிருந் தும் அய். ஏ. எஸ். அலுவலர்களும், சட்ட நிபுணர்களும், பொறியியல் வல்லுனர் களும், மருத்துவ மேதைகளும் தோன்றி யிருக்க முடியுமா ?

'நோய் வந்தால், சாமிக்கு வேண்டிக் கொண்டால்தான், நோய் குறையும்; பாம்பு கடித்துவிட்டால் பாடம் போட்டுக்கொண் டால்தான் உயிர் பிழைக்க முடியும்' என்று எண்ணி மூடநம்பிக்கையில் மூழ்கியிருந்த மக்களிடையே, தந்தை பெரியாரின் பகுத் தறிவு பிரசாரம் பரவாதிருந்தால், அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு நோயாளியை அல்லது பாம்பினால் கடிக்கப்பட்டவரை எடுத்துச் சென்று சிகிச்சை செய்யவேண் டும் என்ற பகுத்தறிவு மனப்பான்மை தோன்றியிருக்க முடியுமா ?

'நகரங்களைப் போல் கிராமங்களும் வசதி பெறாவிட்டால், நாட்டின் முது கெலும்பு என்று சொல்லப்படும் உழவர்கள் எப்படி முன்னேற முடியும் ?' என்று 1944-ஆம் ஆண்டிலேயே கேட்டு, எவ்வாறு முன்னேற்றுவது என்ற வழிகளையும் தந்தை பெரியார் சொல்லிவந்திருக்காவிட்டால், இன்று கிராமத்தினர்களுக்கு பாதுகாக்கப் பட்ட தண்ணீர், பாதை, பள்ளிக்கூடம், கூட்டுறவு சங்கம், தொழிற்கூடங்கள் ஆகியவைகள் கிடைத்திருக்குமா ?

பறவைக்கும் கூடு உண்டு; பாம்புக்கும் புற்று உண்டு; பூச்சி பூரான்களுக்கும் பொந்து உண்டு; எலிகளுக்கும் வளைகள் உண்டு; ஆனால் எண்ணற்ற ஏழை எளிய பாமர மக்களுக்கோ வீடில்லை; அவர்கள் உழுது பயிரிட்டு உண்டு வாழ நிலமில்லை! இந்த நிலைமை மாறவேண்டாமா? இத் தகைய கேள்விகளைக் கேட்டு நம்மை யெல்லாம் சிந்திக்க வைக்கத் தந்தை பெரி யார் அவர்கள் தவறியிருப்பாரேயானால், இன்று இலட்சக்கணக்கான ஏழை எளிய வர்களுக்கு மனைப்பட்டாவும், நிலப்பட்டா வும் வழங்கப்பட்டிருக்குமா ? சமுதாயத்தின் அடித்தளத்திலே வாழ வழியின்றி வாடிய ஏழை எளிய மக்கள் ஓரளவுக்கேனும் உணர்வு பெற்றிருக்க முடியுமா ?

தமிழ் மொழியை அழிக்க வந்த இந்தியை எதிர்க்கத் தந்தை பெரியார் அவர்கள் முயன்றிருக்காவிட்டால், இன்று தமிழ்மொழி-அரசு கட்டிலிலும், நீதி மன்றங் களிலும் அமர்ந்து ஆட்சி செலுத்த முடியுமா ?

தந்தை பெரியார் அவர்கள் காமராஜ் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர் களுக்கும், டாக்டர் கருணாநிதி அவர்களுக் கும் பகுத்தறிவுப் பாடம் புகட்டியிருக்கா விட்டால், உயர் சாதியினரே ஆளத் தகுதி படைத்தவர்கள் என்ற நிலைமை ஒழிந்து, ஏழை எளிய குடும்பத்தினரும் ஆளத் தகுதி படைத்தவர்கள் என்ற வரலாறு பிறந்திருக் குமா ? தமிழ் நாட்டில் தமிழ், ஆட்சிமொழி யாக ஆகியிருக்க முடியுமா ? தமிழ்நாடு என்ற பெயர்தான் தமிழ்நாட்டிற்கு மீண்டும் சூட்டப்பட்டிருக்குமா ? 'ஆகாசவாணி' மறைந்து 'வானொலி'தான் தோன்றி யிருக்குமா ?

அடுத்து அவரது ஆற்றலைப் பற்றி நினைக்கின்றேன். நினைவில் தோன்றிய வைகளை உங்களுக்குப் படைக்கின்றேன்.

உலகத்தின் பல நாடுகளில் தோன்றிய மறுமலர்ச்சி வீரர்களெல்லாம் பெரும்பாலும் அரசியலிலோ அல்லது பொருளாதாரத்திலோ தான் மறுமலர்ச்சி ஏற்படுத்தியிருப்பார்கள். ஆனால் தந்தை பெரியார் அவர்களோ அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்று துறைகளிலுமே மறுமலர்ச்சி ஏற்பட அன்றும் பாடுபட்டு வந்தார், இன்றும் பாடுபட்டு வருகிறார்; இனியும் பாடுபட்டு வருவார். அரசியல், பொருளாதார மறுமலர்ச்சியினால் கிடைக்கும் பயன் அனைவருக்கும் கிட்ட வேண்டுமானால், சமுதாயத்திலும் மறுமலர்ச்சி ஏற்பட்டே ஆகவேண்டும். எனவே, அரசியல், பொருளாதாரம் ஆகியவைகளுடன் சமுதாயத்திலும் மறுமலர்ச்சி ஏற்பட தந்தை பெரியார் அவர்கள் தள்ளாத வயதிலும் தளராது பாடுபட்டு வருவதால், **இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மறுமலர்ச்சி வீரர் தந்தை பெரியாரே என்றால் மிகையல்ல !**

தமிழ்நாட்டில் அரசியல், பொருளாதார, சமுதாய மறுமலர்ச்சிக்கு வழி கூறியதோடு மட்டுமல்லாமல், தன் கருத்துக்களுக்கு உருவம் கொடுத்து, செயல்படுத்த செயல் வீரர்களையும் உருவாக்கியவர் தந்தை பெரியார்.

**தந்தை பெரியாரின் மறுமலர்ச்சி கருத்துகளுக்கு உருவம் கொடுத்து, மெருகு ஏற்றி புதிய உலகம் காண கடைக்கால் இட்டார் பேரறிஞர் அண்ணா. அண்ணா அவர்கள் அமைத்த கடைக்காலின்மேல் 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற புத்துலகத்தைக் கட்டி வருபவர் டாக்டர் கலைஞர் அவர்கள். எனவே, இவ்வகையிலும் தந்தை பெரியார் அவர்கள் இணையற்றவரே என்று உறுதியாகக் கூறலாம்.**



சாக்ரட்டீஸ், ரூசோ, வால்டேர், சன்யாட்சென் போன்ற மறுமலர்ச்சி வீரர்களின் பகுத்தறிவுக் கருத்துக்கள், அவர்கள் மறைந்த பின்புதான் பொது மக்களால் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், தந்தை பெரியாரின் பெரும்பாலான பகுத்தறிவுக் கருத்துக்கள் அவரின் காலத்திலேயே பொது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்ற புதிய வரலாறு தோன்றியுள்ளது. அது மட்டுமல்ல—அவருடைய கருத்துக்களில் பெரும்பாலானவற்றை சட்டமாகவும், திட்டமாகவும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தந்தை பெரியார், அவைகளைக் கண்டுகளித்து, தன் முயற்சியில் மேலும் ஊக்கம் பெறுகிறார். எனவே, இதுவரை உலகில் தோன்றியுள்ள மறுமலர்ச்சி வீரர்களைவிட தந்தை பெரியார் அவர்கள் திறமை வாய்ந்தவர்; எதிர்ப்புக்கு அஞ்சாதவர்; திறமையான அரசியல் வாரிசுகளை உருவாக்குபவர்; சிறந்தவர் என்றெல்லாம் புகழ்ந்துகொண்டே போகலாம். ஆனால், அய்யா அவர்கள் இவைகளையெல்லாம் விரும்ப மாட்டார். எதையும், யாரிடமும் இருந்து எதிர்பார்க்காமல் தம் கருத்துக்களைத் துணிந்து கூறும் அஞ்சாநெஞ்சர் தந்தை பெரியார் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த நாடே அவரைப் பற்றி நன்கு அறியும்.

அடுத்து தந்தை பெரியாருக்கு எப்படி நன்றி சொல்வது என்று யோசித்தேன். என் நினைவில் தோன்றிய நன்றி செலுத்தும் முறை பற்றிய உணர்வுகளை உங்கள் முன் வைக்கின்றேன்.

தந்தை பெரியார் அவர்களுக்கு தமிழினம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அவருக்கு நாம் நன்றி சொல்லிவிட்டால் மட்டும் போதாது. அவர் கூறும் பகுத்தறிவுக் கொள்கைகளைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் எழுச்சி பெற்ற தமிழினம் இடையிலே விழுந்து படாமல் தொடர்ந்து சீரோடும் சிறப்போடும் வாழ முடியும்.

தந்தை பெரியாரின் நல்ல கருத்துக்களையெல்லாம ஏற்றுச் சட்டமாகவும், திட்டமாகவும் நிறைவேற்றிவரும் தமிழ்நாடு அரசால் அவரின் ஒரே ஒரு குறிக்கோளை மட்டும் நிறைவேற்ற முடியவில்லை. அந்தக் குறிக்கோள் என்னவென்று தானே சிந்திக்கின்றீர்கள்—இதோ அது :

இந்தியாவில் உண்மையான குடியரசு மலர வேண்டுமானால் மாநிலங்களுக்குச் சுய ஆட்சி வேண்டும் என்ற கருத்தை,

தந்தை பெரியார் அவர்கள் இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பிருந்தே வற்புறுத்தி வருகின்றார்கள். அவர் கூறி வருவது உண்மைஎன்பதை நாம் மட்டுமல்ல; மற்ற மாநிலத்தவரும் ஒப்புக் கொண்டுள்ள னர். மாநில சுய ஆட்சி பெற்றால்தான் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சியும், சமுதாய மறுமலர்ச்சியும் முழு அளவில் ஏற்பட முடியும்.

தந்தை பெரியாரின் இக் குறிக்கோளை எய்திட தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது. அம்முயற்சி வென்றிடும் நாள் வெகு தூரத்தில் இல்லை. அந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்குவதே, தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைகளால் பயன் பெற்ற அனைவரும் மனமுவந்து செய்யக் கூடிய செஞ்சோற்றுக் கடனாகும்.


போன்: 331

உயர்ந்த ரக உணவு வகைகளுக்கும், உளங்கனிந்த உபசரிப்புகளுக்கும்
சிறந்த இடம்

**ராயல் சென்ட்ரல் பிரியாணி ஓட்டல்**

Prop: **K. K. B.**

**பஸ் ஸ்டாண்டு, : : குப்பகோணம்.**

தொலைபேசி: 406

எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் தந்தை பெரியார் அவர்களின் 93-ம் ஆண்டு நன்னாள் வாழ்த்துக்கள்.

**வாழ்க பெரியார் !**



**பெரியார் ஆண்டு 93 !**

எங்களிடம் நயம் அலுமினிய பாத்திரங்களும், நவீன எவர்சில்வர் பாத்திரங்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் உத்திவாதத்துடன் கிடைக்கும்.

**எம். சிதம்பரம் & ஏ. பால்சாமி**

**அலுமினியம், எவர்சில்வர் பாத்திரம் உற்பத்தி & விற்பனையாளர்கள்**
**178, மெயின்ரோடு, திண்டுக்கல்**

பாக்டரி:—**1006 நெட்டுத் தெரு, திண்டுக்கல்**

# பெரியார் மிக்கு !

ஏ.பி. சனார்த்தனம் எம்.ஏ; எம்.எல்.சி.

1934ல் வேலூர் கோட்டை வெளியில் முதல் முதலாக பெரியாரைப் பார்த்தேன். அன்று முதல் அவரது முத்திரை பலமாக பதிந்துவிட்டது. பெரியாரின் சமுதாயப் புரட்சியின் சிறப்பை வெளிநாட்டுக்கார ருக்கு ஆங்கிலத்தில் அடிக்கடி விளக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இரண்டு வாரங் களுக்கு முன்புகூட அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு நண்பரிடம் பெரியாரைப் பற்றி பேசும் வாய்ப்பு கிடைத்தது.

செயற்கரிய செய்தவர் பெரியார். ஒரு தூங்கிக் கிடந்த இனத்தை தட்டி எழுப்பிய வர் பெரியார். உலகிலேயே மிகவும் வெறுக்கத்தக்க சாதி ஆணவத்துக்கு வெடி வைக்கிறார்! புத்தருக்குப் பிறகு வர்ணாசிர மத்துக்கு பெரிய எதிரி பெரியார்தான்! தமிழன் உடலில் புது இரத்தத்தை பாய்ச்சத் துடிக்கிறார்! தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் பெரிய பாதுகாவலர்! இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இராவணன்!

பெரியாரின் உழைப்பை, அஞ்சா மையை, வேகத்தை, துடிதுடிப்பை, பேச ஆரம்பித்தால் நேரம் போவதே தெரியாது. அவர் காலத்தில் வாழ்கிறோம், அவரது அணியில் இருக்கிறோம் என்ற பூரிப்பு நமக்கு!



இந்த ஆண்டு பெரி யார் சுற்றுப்பயணத்தைப் பார்த்தால் நமக்கு லைப்பு ஏற்படுகிறது. ட்டை வண்டியில், நாய் தன் வேகத்தை கண்டு அஞ்சுமாறு நாள் தோறும் சுற்றிச் சுற்றி மக்களை தட்டி எழுப்புகிறார்!

தேன் சொட்டும் பேச்சா! தாலாட்டுப் பாடலா! தெம்மாங்குத் தென்றலா! இல்லவே இல்லை. அத்தனையும் அணு குண்டுகள், அதிர் வெடிகள், வேப்பஞ்சாறு! பழமைக்கு சவால்! ஆதிக்க புரியினருக்கு வேட்டு!

சிலை எழுப்புகிறார்கள்! பண முடிப்பு தருகிறார்கள்! ஊர்வலம் விடுகிறார்கள்! பாராட்டுகிறார்கள்! சரி, இனி நம் வேலை முடிந்து விட்டது, சிறிது ஓய்வெடுப்போம் என்று எண்ணுகிறாரா! நம் தோழர்கள் தானே ஆள்கிறார்கள், நமக்கேன் கவலை என்று இருந்து விடுகிறாரா! உழைப்பு! உழைப்பு! ஓயாத சிந்தனை! பழமை இருட் காட்டை அழிக்க, பதுங்கித் தாக்க வரும் சாதிச் சழக்கர்களுக்கு சவால்விட, நம்மவரின் இன இழிவை துடைக்க துடித்த படி இருக்கிறார்! சிலருக்கு வயது ஏற ஏற தளர்ச்சி ஏற்படும், வழுக்கி விடுவர், பாதை தவறி விடுவர். ஆனால் பெரியாரின் வேகம் நாளுக்கு நாள் அதிகமாகிறது! காரம் கூடு கிறது! தீவிரம் ஏறுகிறது!

பெரியாரை யாருடன் ஒப்பிடுவது? சாக்ரடீசுடன் ஒப்பிடலாமா? சாக்ரடீஸ் ஏதன்ஸ் நகரில் மட்டும்தான் தொண் டாற்றினார். புத்தருடன் ஒப்பிடலாமா? புத்தருக்கு செல்வர்கள், அரசர்கள் உதவி இருந்தது. பிராட்லாவுடன் ஒப்பிடலாமா? படித்தவர்கள் நிறைந்த பிரிட்டனில் பிராட்லா பணியாற்றினார். ஆபிரகாம் லிங்கனுடன் ஒப்பிடலாமா? நீக்ரோக்களை விட அதிகக் கொடுமைப்பட்ட தாழ்த்தப்

பட்டவர்களுக்கல்லவா பெரியாரின் தொண்டு! காரல் மார்க்சுடன் ஒப்பிடலாமா? மார்க்ஸ் பண முதலாளித்துவத்தை வெறுத்தார். பெரியார் அதனினுங்கொடிய பிறவி முதலாளித்துவத்தை எதிர்க்கிறார். எனவே, பெரியார் ஒப்புயர்வற்றவர். மற்றவர்களுக்கு நூல்கள் துணை செய்தன. வெள்ளத்தோடு நீந்தினார்கள். பெரியாருடையது எதிர் நீச்சல்! பிறவியிலேயே சண்டாளர், பஞ்சமர், சூத்திரர் என்ற முத்திரை குத்தப்படுவது இங்குதான்.

பெரியாரின் நெஞ்சுறுதி இருக்கிறதே, அது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருவருக்குத்தான் இருக்கமுடியும்! கசப்பான கொள்கை பேசி, தயவு தாட்சண்ணியம் பார்க்காமல், பட்டம், பதவிகளுக்கு அலையாமல், சூறாவளிப் பிரசாரம் செய்யும் பெரியார் சந்தித்த கற்கள், சாணி உருண்டைகள், கேள்விக் கணைகள், டன்டன்னாக இருக்கும். மடமை வெள்ளம், ஆரிய அட்டகாசம், தேசீயத்தார் கொக்கரிப்பு, இத்தனைக்கும் மத்தியில் பெரியார் புடம் போட்ட தங்கம்போல், மேலெழும்பும் பந்துபோல் தொடர்ந்து பாடுபட்டார். மூத்திரச் சட்டியும், சாப்பாட்டுச் சட்டியும் ஒன்றாக இருந்த நேரத்தில் சிறைபுகுந்தார். சுட்டு விடுவோம், கொன்று போடுவோம் என்ற கொலை மிரட்டல்கள் பழகிப்போன சங்கதிகள். அஞ்சா நெஞ்சம் கொண்ட அந்த ஈரோட்டுச் சிங்கக் கூட்டத்தினர் நாம் என்பதில் எவ்வளவு பூரிப்படைகிறோம்.

பெரியாரின் திட்டங்கள் பல! கிளர்ச்சிகள் பல! சாதனைகள் ஏராளம்! அத்தனையிலும் உயர்ந்தது சுயமரியாதை இயக்கம்தான்.

உலக வரலாற்றிலேயே சுயமரியாதை இயக்கத்தைப் போன்ற துணிச்சலான பகுத்தறிவு இயக்கத்தைக் காணமுடியாது. ஆயிரம் பிராட்லாக்கள், ஆயிரம் இங்கர்சால்கள், ஆயிரம் ரஸ்ஸல்கள், ஆயிரம் பெர்னாட்ஷாக்கள் செய்ய முடியாததை பெரியார் செய்திருக்கிறார். காரணம், புத்தர்களை, சித்தர்களை ஏப்பம்விட்ட வர்ணாச்சிரமம் இங்குதான் உள்ளது. சதுர்வேதி மங்கலங்கள், இரணிய கர்ப்பம், துலாபாரம், பூரி, தட்சிணை, இவைகளால் கொழுத்து, மன்னர்களை மண்டியிடச் செய்த காகபட்டர் பரம்பரை இங்குதான் ஆட்டம் போடுகிறது. விடுதலை போராட்டம், அரசியல் கிளர்ச்சி இவைகளில் ஈடுபடும் தொண்டர்களுக்கு செல்வாக்கு, தியாகி மானியம், அய்ந்து ஏக்கர், பாராட்டு இத்தனையும் உண்டு! ஆனால் சமுதாயப் புரட்சி வீரர்களுக்கு தாய் தந்தையரின் கண்ணீர், உடன் பிறந்தார் ஏசல், சுற்றத்தார் சீற்றம் இவைதான் பரிசு! புரோகிதத்தை விலக்குவதற்கு நம் இளைஞர் பட்ட பாடு! உறுதியான நெஞ்சம் தேவை! எதையும் எதிர்பாராமல், என்றும் பெரியார் புகழ்பாடும் தொண்டர்கள் என் மதிப்புக்குரியவர்கள், நன்றிக்குரியவர்கள்! பழமைக் கோட்டைகளை—தகர்க்கும் பீரங்கிகள்! வேறு யாருக்கும் கிடைக்காத, யாராலும் வாங்க முடியாத, வளைக்க முடியாத அரிமாக்கள்!

அங்குலம் அங்குலமாக எதற்கெல்லாம் பெரியார் போராடினாரோ, அவைகளுக்கு அரசு ஆதரவு கிட்டியுள்ளது. பெரியார் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கள், அவரது சீடர்கள் என்பதில் பெருமை அடைபவர்கள்—இன்று நாட்டை ஆள்கிறார்கள். சுயமரியாதை திருமணங்கள் செல்லுபடியாகிவிட்டன. அலுவலகங்களில் கடவுள் படங்கள் அகற்றும் உத்தரவு! எல்லோரும் அர்ச்சகராகலாம் என்ற சமதர்ம ஆணை! தமிழ் அர்ச்சனை! பள்ளிக்கும், மருத்துவமனைக்கும் கோவில் பணம்!

'இந்த அமைச்சரவை பெரியாருக்கு காணிக்கை ஆக்கப்பட்டுள்ளது' என்ற அறிஞர் அண்ணா அவர்களின் சட்டமன்ற முழக்கம்! 'இந்த அரசு பெரியார் கூற்றுப்படி நாலாந்தர சூத்திர அரசுதான்' என்ற டாக்டர் கலைஞரின் சட்டமன்ற 'முரசொலி!' இவை இரண்டும் பெரியாருக்கு காயகல்ப சிகிச்சை போன்றவை. பெரியாருக்கு பெருமகிழ்ச்சி! இன்னமும் அதிக மிடுக்குடன் தொண்டாற்ற ஊக்கம், டானிக்!

காட்டு நிலாவாகாமல், மடமைக் கடலில் கரைத்த பெருங்காயமாகாமல், பெரியார் கண்ணெதிரிலேயே அவரது அடிநாள் திட்டங்கள் வெற்றிபெறுவது மிக மிக மகிழ்ச்சிக்குரியதாகும்.

'இது நாம் வாழத் தகாத இடம்' என்று எதிரிகள் ஏங்கும் நிலைமை 1971-ல் ஏற்பட்டுள்ளது—பெரியார் பெருந்தொண்டால் கலைஞர் ஆட்சிக்கு அரணாக நின்று மேலும் பல வெற்றிகள் பெற்று, பெரியார் விரைவில் நூற்றாண்டை எட்டவேண்டும் என்பது திராவிடர் அனைவரின் விருப்பம்!

வாழ்க பெரியார்!

# புதிய தலைமுறையினரும் பழைய நிகழ்ச்சியும்!

— அமைச்சர் திரு க.ராசாராம் —

நினைவறிந்த நாள் முதலாய், நான் அறிந்த தலைவர் ஒருவர் உண்டு என்றால் அது பெரியார் அவர்கள்தான்.

தருமபுரியில் பள்ளியில் படித்துக் கொண்டு இருந்தபோதே எனது தந்தையாருக்கும், பெரியார் அவர்களுக்கும் நல்ல தொடர்பு உண்டு.

அப்போதெல்லாம், திராவிடர் கழக மாக கட்சி இயங்கிக் கொண்டிருக்கவில்லை. சுயமரியாதை இயக்கத் தலைவராகவும், நீதிக் கட்சியின் ஆதரவாளராகவும், தந்தை பெரியார் அவர்கள் விளங்கிக் கொண்டு வந்தார்கள்.

இன்று பெரியார் அவர்களை சென்ற விடமெல்லாம் சிறப்பாக அழைத்துப் பெருமைப்படுத்துவதை நாடு கண்டு கொண்டிருக்கிறது.

சுயமரியாதைப் பிரச்சாரத்தின்போது தந்தை பெரியார் அவர்கள் கடும் எதிர்ப்புக் களையெல்லாம் தாங்கிக் கொண்டார்கள்.

தருமபுரியில் இவரது கூட்டம் ஒன்றினை நாங்கள் எல்லாம சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தோம். ராஜாஜியின் அமைச்சரவை அமையாத காலம். காங்கிரசுக்குத்தான் மேடை என்கின்ற நிலை இருந்த நேரம். பேச்சாளர் என்றாலேயே திரு. சத்திய மூர்த்திதான் என்றும், தலைவர் என்றாலேயே காங்கிரஸ் தலைவர்கள்தான் என்றும் வேகமாகப் பிரச்சாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்கள். சென்னை மாநிலத்தை பொப்பிலி அரசர் முதல்வராக இருந்து நடத்திக்கொண்டு வந்தார்.

கூட்டம் என்றால் தற்போது நம்மில் பலர் நினைப்பதைப் போல் ஒலி பெருக்கி வைக்கப்பட்டிருக்கும் என்று கருதக்கூடும். அப்போது ஒலி பெருக்கியும் கிடையாது. பெரியார் சுற்றுப்பயணம் என்றால், பலருக்கு அவரது வேன்தான் கண்முன் தெரியும்.

முன்பு அவரது சுற்றுப்பயணம், ரயிலிலும், காரிலும், பஸ்ஸிலும் மாறி மாறி நடைபெறும்.

எனக்குத் தெரிய சிலமுறை தந்தை பெரியார் அவர்கள் பஸ்ஸில் பயணப்பட்டு தருமபுரிக்கு வந்துள்ளார்கள்.

ரயில் பயணத்தில் அநேகமாக மூன்றாம் வகுப்புப் பெட்டியில்தான் பயணமாவார்கள். ரயில் பயணத்திற்குத் தேவையான டிக்கட் கூட அப்போது சுருளாக விற்கும். எந்த அளவு தூரம் போகிறோமோ, அந்த அளவு தூரம் போகத் தேவையான தொகைக்கு அந்தச் சுருள் டிக்கட்டிலிருந்து கிழித்து விடலாம்.



அநேகமாக அந்தச் சுருள் டிக்கட் குறைந்ததே இல்லை எனும்படிக்கு அவரது பெட்டியில் பல ஆண்டுகள் இருந்தன. காரணம், ரயிலில் அவரை வழியனுப்ப

வருபவர்கள் அவருக்கான டிக்கட்டைத் தந்து விடுவார்கள். அல்லது அவரிடத்தில் எதற்கு டிக்கட் என்று கேட்காமலேயே இருந்து விடுவார்கள். இது அவருக்கு சாதாரண நிலை.

ஒலி பெருக்கி இல்லாத கூட்டத்தில் பெரியார் அவர்கள் பேச தருமபுரிக்கு வந்தார்கள். அய்யா அவர்கள் சாதாரண மாகவே எனது குரல் அய்யாயிரம் பேர் வரைக் கேட்கும் என்று கூறுவார்கள்.

அன்று நல்ல கூட்டம்! காரணம், தரும புரியிலிருந்த காங்கிரஸ்காரர்களும், மற்ற மதப் பித்தர்களுமாகச் சேர்ந்து சுமார் நூற்றி இருபது கேள்விகளை எழுதி அச்சிட்டு, ஊரே வழங்கி இருந்தார்கள்.

இதற்கெல்லாம் இந்த "நாய்க்கன்", பதில் சொல்லியே ஆகவேண்டும் என்று ஊரே தமுக்கடித்திருந்தார்கள்.

தருமபுரியோ, சிற்றூர். ஊரெங்கும் இதே பேச்சாக இருந்தது.

பெரியார் என்ன பதில் சொல்லப் போகிறார் என்பது ஒருபுறம். அப்படியே பதில் சொல்ல ஆரம்பித்தாலும், கலவரம் செய்து கூட்டத்தைக் கலைத்துவிடலாம் என்பது எதிரிகளின் திட்டம்.

எதற்கும் ஆயத்தமாக வேண்டும் என்று நண்பர்கள் எங்களுக்கு அறிவுறுத்தி னார்கள். பெரியார் படையில் அப்போது நாங்கள் சில மாணவர்கள்தான். நாங்களும் தயாராகக் கூட்டத்திற்குப் போனோம்.

கூட்டத்திற்கு காஸ் லைட்டுகள் நான்கு புறமும் வைக்கப்பட்டன. காஸ் லைட்டு களை உடைத்து விடாதபடி பாதுகாப்பு ஏற்பாடும் செய்யப்பட்டது.

பெரியாருக்கு அன்று ஒரே மகிழ்ச்சி! ஊரிலே தன்னை எதிர்க்கப் பெரும் படை இருக்கிறது என்று அறிந்ததும் அவருக்கு, தனது கொள்கை இன்றுதான் மக்கள் மனதில் பதியப்போகிறது என்று எண்ணி னாரோ என்னவோ, மகிழ்ந்தவண்ணம் அனைவரிடமும் உரையாடிக்கொண்டி ருந்தார்.

கூட்டத்தில் அவர் பேச ஆரம்பித்ததும் கேள்வித்தாள்களை சில இளைஞர்கள் கொண்டுவந்து கையில் கொடுத்தனர். பெரியார், கேள்வித்தாள்களைப் பெற்றுக் கொண்டு, பேச்சைத் தொடர்ந்தார். "கேள் விக்குப் பதில் சொல்!". கூட்டத்தின் நாலு மூலையிலிருந்தும் குரல் எழுப்பினார்கள். "எனது கருத்துக்களைப் பேசிவிட்டு பதில் தருகிறேன்" என்றார் பெரியார். 'முடியாது உடனே சொல்!' என்றனர் கேள்வி கேட்ட வர்கள்.

நமது தோழர்கள் அனைவருக்கும் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "பெரியார் பேசும்வரை அமைதியாக இரு" என்று கூறியவண்ணம், 'கேள்விக்குப் பதில் சொல்,' என்று சத்தம்போடும் ஆட்கள் பக்கம் போகத் தொடங்கினர். பெரியாரை சுற்றிலும் பாதுகாப்பாக நாங்கள் அனை வரும் சூழ அமர்ந்திருந்தோம். பெரியார் தனது சால்வையை எடுத்து தலையில் முண்டாசு கட்டிக்கொண்டார். சிம்மத் தைப் போல் கர்ஜனை செய்யத் தொடங்கி னார். கூட்டத்தில் இருக்கும் நமது தோழர் களை அமைதியாக இருக்கும்படிக் கூறி விட்டு கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தொடங்கினார்கள். சுமார் மூன்று மணி நேரம், கூட்டத்தில் ஒருவரும் சற்றும் அசையவில்லை. அனைத்துக் கேள்விகட் கும் பதில்கள்; அத்துணையும் சத்தானவை; பல ஆணித்தரமானவை; பல நகைச்சுவை ததும்பியவை. சொற்பொழிவைவிட இந்த நிகழ்ச்சி அவ்வளவு சிறப்பாக அமைந்து விட்டது.

மூன்று மணி நேரமும் சளைக்காமல் பதில்களை வாரி, வாரி இறைத்தவுடன் எதிரிகள் என்ன செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடினர்.

பெரியாரை நேரடியாகத் தாக்கும் கேள்விகள் பலவற்றை எழுதி அனுப்பி, பதிலை எதிர்பார்த்தனர். அதற்கும் அவர் மனந்தளரவில்லை. சிரிக்கச் சிரிக்கப் பதில் சொல்லித் தீர்த்தார். போலீசார் பெரிய கலவரத்தை எதிர்பார்த்திருந்தனர். கூச்சல் போட்டவர்கள் அனைவரும் வாயடைத்துப் போயினர்.

பெரியார், பதிலை வேகமாக சொல்லச் சொல்ல எதிரிகட்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பாதி நேரம் கடந்ததும், காங்கிரசைப் பெரியார் நேரடியாகத் தாக்கினார். தமிழ்ச் சமுதாயத்திற்குக்

காங்கிரஸ் எந்த நன்மையும் செய்யாது என பதிலிலேயே தெரிவித்தார்.

எதிரிகளுக்கு இதுதான் சந்தர்ப்பம் கிடைத்தது என்று கருதி, 'நாய்க்கன் ஒழிக' என்று சத்தம் போட்டுக்கொண்டு கலைந் தார்கள்.

கேள்வி கேட்டு கலவரம் விளைக்க வந்த சிறு கூட்டம் கலைந்தவுடன், பெரி யார்—வந்திருந்த மக்கள் அனைவரது உள்ளத்தையும் தனது சிறந்த பதில் களாலேயே கவர்ந்துவிட்டார்.

தமிழகத்திலேயே, ஏறக்குறைய தரும புரியில் கேட்ட அளவு கேள்விகள், ஒரே நாளில் வேறெந்த ஊரிலாவது அவரைக் கேட்டிருப்பார்களா என்பது சந்தேகம்!

பெரியார் அவர்களும் மூன்று மணி நேரத்திற்குப் பதில் சொல்லியே தீர்த்த கூட்டம் தருமபுரிக் கூட்டமாகத்தான் இருந் திருக்கவேண்டும் என நான் கருதுகிறேன்.

எவ்வளவு எதிர்ப்பு இருந்ததோ, அத்தனையையும் தவிடு பொடியாக்கினார் அன்று! எதிரிகள் அவரை, எதிரிலேயே வசை பாடினர். அறியாமையில் மூழ்கி யுள்ள மக்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்று கருதினாரே தவிர, சற்றும் அவர் கோபித்துக்கொள்ளவில்லை.

அன்று அவர் சிங்கக் குரலில் பேசிய பேச்சுக்கள் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு இது நடந்து முப்பதாண்டுகளுக்குமேல் ஆகி விட்டது.

தளராத தொண்டினாலே, தமிழ கத்தை இன்னமும் அவர் தட்டி எழுப்பு வதைக் காண்கிறேன்.

தருமபுரி கூட்டத்தில் காங்கிரசார் யார், யார் அவரை அன்று எதிர்த்தார்களோ, அவர்கள் எல்லாம் பிற காலத்தில், பெரி யாரின் படையில் அணிவகுத்ததைக் கண் டேன்.

இன்றைய தலைமுறை, அவர்தம் தொண்டு எத்தகையது என்பதை தெரிந்து கொள்வதற்காகவே இதனை எழுதினேன்.

எதிர்ப்பை, ஏளனத்தை, ஏசலைப் பொருட்படுத்தாமல் நடைபோட்டவர் பெரி யார். அவரிடம் அளிக்கும் பணம் வீணாகி விடும், அவருக்கே சேர்ந்துவிடும் என்றெல் லாம் வெகுவாகப் பிரச்சாரம் செய்தார்கள்.

இன்று அவர் செய்துவரும் அறக் கட்டளையைக் கண்டு நாடே மகிழ்கிறது.

அவர் கூறும் பகுத்தறிவுக் கருத்துக் களுக்கு மக்கள் மன்றம் செவிசாய்ப்பதைக் கண்ணாரக் காண்கின்றேன்.

எப்பேர்ப்பட்ட உழைப்பு! எவ்வளவு துணிச்சல்! ஓயாத சிந்தனை. இத்தனை யையும் அவர் தனது தொண்ணூற்று மூன்று வயதைக் கடந்துவிட்ட இந்த நாளில் எண்ணிப் பார்க்கிறேன்.

வியக்கிறேன்.

வாழ்க தந்தை பெரியார்!

## "பெட்டி"ச் செய்தி!

1970 நவம்பர் மாதத்தில் தந்தை பெரியார் அவர்களுடன் பம்பாய் செல்லும் பெரும் வாய்ப்பைப் பெற்றோம். பம்பாயில் அய்யா—அவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட வீட்டில் தங்கியிருப்பார்கள். உடன் சென்ற அனைவரும், நண்பர் வீரமணி அவர்களைத் தவிர, பம்பாய்க்கு முதல் தடவையாகப் போனவர்கள். ஊர் சுற்றப்போனால் இரவுதான் திரும்புவோம். நண்பர் வீரமணி, தனக்கு சுற்றுப்பயணப் பெட்டி ஒன்று வாங்கும்படி என்னிடம் சொன்னார். ரூ. 36/-க்கு ஒன்று வாங்கிவந்தேன். அய்யா அவர்கள் பெட்டியைப் பார்த்து, "விலை என்ன?" என்று கேட்டார்கள். ரூ. 36/-க்கு வாங்கியதாகச் சொன்னால், விலை அதிகம் என்று திட்டுவார்களே எனப் பயந்து, ரூ. 18/-க்கு வாங்கியதாகச் சொன்னேன். அடுத்த நாள் நாங்கள் கடை வீதிக்குப் புறப்படும் நேரம். அய்யா அவர்கள் என்னை அழைத்தார்கள். நூறுரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்து, "வீரமணிக்கு வாங்கிய பெட்டி மாதிரியே ஆறு பெட்டிகள் வாங்கி வா" என்றார்கள். உடனிருந்த நண்பர்கள், நான் வகையாக அய்யாவிடம் மாட்டிக்கொண்டதைப் பார்த்து தனித்தனியே சிரித்துக்கொண்டிருந் தார்கள். வேறு வழியின்றி நான் அய்யா அவர்களிடம் உண்மையைச் சொல்லித் தான்—சமாளித்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டது! பற்பல நேரங்களில் பலர் பொய் யைச் சொல்லி சமாளிப்பார்கள். எனக்கோ உண்மையைச் சொல்லி சமாளிக்கும் நிலை ஏற்பட்டது!

—என். எஸ். சம்பந்தம்.

# நாடாள வருவதற்குமுன் செய்த நற்பணிகள்!

கவிஞர் கருணானந்தம்

கடந்த 30 ஆண்டுகளில் தமிழர் வாழ்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் எந்தத் துறையானாலும், அதற்கெல்லாம் மூல காரணம் தந்தை பெரியார் கண்ட சுயமரியாதை இயக்கம் என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ, மறைக்கவோ இயலாது.

உண்மையான கம்யூனிச வாதிகள் செய்திருக்கவேண்டிய பகுத்தறிவுப் பிரசாரத்தை இந்தியக் கம்யூனிஸ்டுகள் செய்யவில்லை; செய்ய அஞ்சினார்கள். ஆனால் பெரியார் செய்தார்!

கேட்பதற்குப் பத்துபேர்கூட இல்லாத நிலைமையிலும், எதிர்ப்புக்கு அஞ்சாமலும், அடிமேல் அடியாக அடித்து அம்மியை நகர்த்துவதுபோல், பழமைப் பாசி பிடித்த நெஞ்சங்களைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுச்—சுயமரியாதை இயக்க வீரர்கள் எதற்கும் துணிந்து, அடி உதைகளைக் கொடுத்தும், பெற்றும், எதிர்ப்பு ஏளனங்களை அளித்தும், ஏற்றும் நிகழ்த்திய தலைகீழ்ப் புரட்சிக்கு ஈடு இணை கிடையாது.

சுயமரியாதை இயக்கம் விளைத்த உண்மையான பயன்களை உணராதவர்கள் இதன்மீது மாசு கற்பிக்கப் பற்பல விதமான பழிச் சொற்களை வீசுவார்கள். இப்படி ஓர் அற்புதத்தைப் படைத்தவர்கள் சாமான்யர்கள், ஏழைகள் என்பதால்தான் அதற்குரிய முக்கியத்துவத்தை அளிக்க இன்னும் சிலர் தயங்குகிறார்கள். தம்மைப் பாதித்ததாகத் தவறாகக் கருதிக்கொண்டே ஒவ்வொரு சாராரும் உண்மையை மறைக்க முயன்றனர். ஆனால் தனிப்பட்ட ஆட்களையோ, சமுதாயத்தையோ பாதிக்காமல் பழமையை, ஆதிக்கத்தை, மௌடீகத்தையே சுயமரியாதை இயக்கம் அசைத்துவிட்டது.

சமயத் துறையில் ஒரு தெளிவான வழியைக் காட்டினோம்; கடைப்பிடித்தோம். கடவுள் ஒன்றோ பலவோ-மனிதன் அதைப் பற்றி எண்ணத் தேவையில்லை; தன்னையேபடைத்த கடவுளுக்கு இவன் ஒன்றும் செய்யத் தேவையில்லை என்பதுதான் அது. இந்த அடிப்படையில் துவங்கினால் பிறகு எந்தச் சங்கடமும் நமக்குக் கிடையாது. இப்படி ஆரம்பமே மிகத் தீவிரமாக இருந்ததால்தான் இந்து மதவாதிகளின் பயங்கரப் பிடியிலிருந்து தமிழர்களாகிய நாம் தப்பித்தோம். உலகிலுள்ள எந்த அறிவாளிக்கும், பகுத்தறிவுவாதியான தமிழன் பின்னடைந்தவன் அல்லன் என்பதை வெளிப்படுத்தினோம்.

சுயமரியாதை இயக்கக் கருத்துக்களைப் பிரசாரம் செய்யத் தந்தை பெரியார் அவர்கள் மலிவானவிலையில் ஏராளமான நூல்களை வெளியிட்டார். கடவுளை நிந்திக்கும் சுயவர்கள் யார்?, வால்மீகி ராமாயண ஆராய்ச்சி, ராமாயணப் பாத்திரங்கள், மகாபாரத ஆராய்ச்சி, ராவணாதி கிரேட் (ஆங்கிலம்) என்பன போன்ற ஏராளமான ஆராய்ச்சி நூல்கள்—தமிழர்களின் சிந்தனையைத் தூண்டி அறிவுத் தெளிவும், மூட நம்பிக்கைகளை முறியடிக்கும் வேகமும், உண்மையான தமிழரின் கடவுள், மதம் எவை என்ற உணர்வும்,

இடைக்காலத்தில் வந்து புகுந்த இந்த நாகரீகம் சுமத்திய தீமையும் பயங்கரமும் புரியும் நிலையையும் உண்டாக்கின. அது வரை உள்ளத்தில் வேரூன்றி ஆழமாகப் பதிந்துபோயிருந்த பழைய கருத்துக்களை அறவே கிள்ளி எறிந்துவிடும் ஆற்றல் படைத்த இந்தப் புதிய கருத்துக்களைப் பரப்பும் முறை மிக்க வேகமாக இருந்து வந்தது.

ஓங்கி அடித்துப் பழைமையைச் சுக்கு நூறாக்காவிட்டால், அங்கே புதுமை நுழைய வழியில்லை என்ற எண்ணம் தந்தை பெரியாருக்கு இருந்ததால் பெரிய தலைகீழ் புரட்சியைச் சமுதாயத்தில் ஏறபடுத்த வன்மையைத்தான் கையாள வேண்டும் எனக் கருதினார். கோயில் களில் உள்ள குழவிக் கல்லைக் குளத்தங் கரையில் போட்டாலும் துணியாவது துவைக்கலாம் என்றும், சல்லியாக உடைத் தால் ரோடு போடலாம் என்றும் சுயமரி யாதை மாநாடுகளில் பேசப்பட்டது உண்டு.

கலப்புத் திருமணங்கள் சாதிபேதத்தை ஒழிக்கும் மாமருந்து என்ற கொள்கையின் படித் தந்தை பெரியார் அவர்களே முன் னின்று தமது செலவில் பெருமளவில் திரு மணங்களை நடத்தியும், அந்த மண மக்களே மேடையேறிப் பிரச்சாரம் செய்ய வைத்தும், புரோகிதம் ஒழிந்த சுயமரி யாதைத் திருமணங்கள், நீத்தார் நினைவு நாள் போன்ற சமுதாயச் சடங்குகள் நடத்தியும் கடுமையாகப் பணியாற்றினார். இவற்றை நடைமுறையில் செயல்படுத்து வகையில் இயக்கத் தொண்டர்கள் முரட்டுத் தனமும் அஞ்சாமையும் கொண்டு வாழ வேண்டியிருந்தது.

டாக்டர் அம்பேத்கார் பெரியாரின் உற்ற நண்பராக விளங்கினார். தென் னாட்டில் எம். சி. ராஜா, சிவராஜ், இரட்டைமலை சீனிவாசன் போன்ற தலை வர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்த்தப் படவேண்டும் எனப் போராடிய சமூகத் தலைவர்கள்.

எனினும், சுயமரியாதை இயக்கம் இவர்கள் வேலையை முழுவதுமாக ஏற்றுக் கொண்டது. 'ஹரிஜன்' என்ற சொல்லைக் காந்தியார்தான் முதலில் புகுத்தினார். கடவுளின் குழந்தைகள் என்று பொருள். அவர் வைணவராயிருந்ததால் ஹரியின் குழந்தைகள் என்றார் போலும்! (நாமா யிருந்தால் சிவனின் குழந்தைகள் என்று சொல்லுவோமா?) இப்படி அழைப்பது அந்த இனத்தை ஏமாற்றத்தான் உதவுமே தவிர உண்மையான, தேவையான பயனை அவர்களுக்கு அளிக்காது என நாம்தான் வாதாடினோம். எடுத்துக் காட்டினோம்.

## ஈரோட்டில் இளைஞர் மாநாடு

இந்தப் புரட்சித் தத்துவங்களால் மாணவர் உலகம் ஈர்க்கப்பட்டது 1944ஆம் ஆண்டில் எனலாம். ஈரோட்டில் நடை பெற்ற திராவிட இளைஞர் மாநாட்டிற்குப் புதிய உத்வேகத்துடனும் எழுச்சியுடனும் மாணவர்களாகிய நாங்கள் சென்றோம். ரயில் வண்டிகளில் ஒரே குதூகலம்; ஒரே ஆரவாரம்!

தன்மானத் தந்தையின் தலைநகருக்கு, அதுவும் அவரது அழைப்பின் பேரில் முதல் முறையாகச் செல்லுகிறோம் என்பதை நினைத்துப் பூரித்துப் போனோம்; களிப்புக் கடலில் திளைத்து கிடந்தோம்.

ஈரோட்டில் மாணவர்கள் பயிற்சி முடிந்ததும், ஒவ்வொரு குழுவிற்கும் மூவர் நால்வர் என்று பிரித்து ஒவ்வொரு மாவட் டத்திற்கும் ஒவ்வொரு குழுவைப் பிரசாரம் செய்வதற்காக அனுப்பி வைத்தார்கள்.

நானும் தவமணியும் செங்குட்டுவனும் தென்னாற்காட்டிற்குச் சென்றோம். நாவ லர் நெடுஞ்செழியன் கோவை மாவட்டத் திற்கும், இளம்வழுதி நெல்லை மாவட்டத் திற்கும் சென்றார்கள்.

நாள்தோறும் ஒரு ஊராக ஆங்காங் குள்ள இயக்கத் தோழர்களின் உதவியோடு கூட்டங்களுக்குச் சென்று பேசினோம். இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது.

பெரியாரின் விருப்பப்படி இந்த பயிற்சி முகாம் அரையாண்டுத் தேர்வு விடுமுறை யின் போதும் நடைபெறலாயிற்று. நானும் தவமணியும்தான் அமைப்பாளர்களாக இருந்தோம்.



பயிற்சி முகாமில் கலந்துகொண்ட மாண வர்களுக்கு உணவும் உறைவிடமும் பெரி யாரால் இலவசமாக வழங்கப்பட்டன.

அடுத்த ஆண்டு முதல் உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் ஏராளமாகக் கலந்து கொண்டு பயிற்சி பெறத் தொடங்கினர். தென்னாற்காடு மாவட்டத்தில் எங்கள் சுற்றுப் பயணம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. அப்போது கழக அமைப்புகள் எங்குமே கிடையாது!

1944ம் ஆண்டு ஏப்ரல்-மே மாதங்களில் கழகம் ஏது?

ஆங்காங்குள்ள சுயமரியாதை அல்லது நீதிக்கட்சிப் பற்றுள்ள நண்பர்கள்தான் வரவேற்பார்கள். உணவு முதலியன வழங்கி உபசரித்துக் கூட்டம் நடத்திப் போக்கு வரத்துச் செலவிற்கும் (டிக்கெட் வாங்க) ஏதேனும் பணம் கொடுப்பார்கள்.

அப்போதெல்லாம் கூட்டமென்றால் நூறு பேர்கள் கூடினால் அதுதான் பெரிய கூட்டமாகும். 'மைக்' இருக்காது. பெரிய அலங்காரப் பந்தல்கள் இருக்காது. கடலூர் போன்ற பெரிய ஊர்களில் மட்டும்தான் மைக்குகள் வைப்பார்கள்.

## 'வீரமணி' கண்டுபிடிப்பு

கடலூரில் இருந்த மா. பீட்டர், ஆ. திராவிடமணி ஆகிய இரண்டு பட்ட தாரிகள்தான், எங்களை வழி நடத்தும் பொறுப்பை ஏற்றனர். கடலூரில் பழைய பட்டினம்தான் நாங்கள் தங்குமிடம். திராவிட மணியின் செலவில் சிக்கனமான சாப்பாடு. அங்குதான் அவரது கண்டு பிடிப்பான வீரமணியைச் சந்தித்தோம்.

வீரமணியைக் கூட்டங்களுக்கு அழைத் துச் சென்று மேஜைமீது ஏற்றி நிறுத்தி வைப்போம்.

"கம்பராமாயணத்தில் காதல் கொண்ட என் தமிழா! வம்பளந்து பேசுவதேன்? வாய்த்த நிலை அறிந்ததுண்டா?" என்று வீரமணி ராகமெடுத்துப் பாடுவார். பிறகு ஒரு சிறு சொற்பொழிவு.

இதேபோல் சிதம்பரத்தில் புலவர் நா. மு. மாணிக்கம் கண்டுபிடிப்புத்தான் கோதண்டபாணியாக இருந்த தில்லை வில்லாளன்.

உயர்நிலைப்பள்ளி மாணவரான அவர் அப்போது சொற்பொழிவு ஆற்றவும் எழுத வும் வல்லவராக விளங்கினார்.

ஈரோட்டில் திராவிட மாணவர் கழகம் என்ற மாநில அமைப்பை ஏற்படுத்தி, அதன் தலைவராக ஈ. வி. கே. சம்பத்தையும், செயலாளராக இளம்வழுதியையும் நியமித் தோம்.

## மதி தலைமையில் மாணவர் கழகம்

சிறிது காலத்திற்குப் பிறகு தலைவராக கே. ஏ. மதியழகனையும், செயலாளராக ஈரோடு அப்பாவு என்ற மாணவரையும் நியமித்தோம்; ஆமாம்! அப்போதெல்லாம் நியமிப்பதுதான்.

பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக் களைப் பரப்பும் தளபதியாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கிடைத்தது, சுய மரியாதை இயக்கத்துக்குப் பரவலான ஆதரவைத் திரட்டித் தந்தது. பெரியார் அவர்களின் பேச்சில் கடுமையும், காரமும் இருக்கும். அண்ணாவின் பேச்சில் கனிவும் கவர்ச்சியும் இருக்கும். பெரியாரின் தீவிரக் கருத்துக்களை நகைச்சுவை கலந்து ஊட்டி கேட்போரை ஈர்த்துத் திருந்தச் செய்தார் அண்ணா.

அண்ணனின் அருமைத் தம்பி கலை ஞர், பெரியாரின் தீவிரமும் அண்ணாவின் மென்மையும் இரண்டறக் கலந்த புதிய சக்தி யாக வந்தார். அண்ணா, கலைஞர், நாவலர், பேராசிரியர் போன்ற எண்ணற்ற இயக்கத் தொண்டர்கள் பெரியாரைப் பின் பற்றி எழுத்தாலும், பேச்சாலும், நாடகத் தாலும், நடிப்பாலும் நாட்டு மக்களைத் திருத்தப் பாடுபட்டார்கள். சமுதாய சீர் திருத்தமே அரசியல் சீர்திருத்தத்தின் அடிப் படை என்பதை உணர்ந்து, சமுதாய சீர் திருத்த மாநாடுகளை நடத்தினோம் சமு தாயத்தின் பழமைப் பற்றினை மாற்றி னோம். திருந்திய மக்கள் தெளிவு பெற்ற னர். அரசியலிலும் ஒரு மாற்றத்தைச் செய்தனர். ஆட்சி மாறியது. நாம் இன்று ஆட்சி மூலமும் நாட்டுக்குத் தொண்டாற் றும் நிலை பெற்றுள்ளோம். இன்றைய நம் ஏற்றத்துக்கு அன்றைய பணியே அடிப் படைக் காரணம். "இந்த ஆட்சியே பெரியாருக்குரிய பரிசாகும்" என்ற அண்ண னின் வாசகம், நூற்றுக்கு நூறு உண்மை. இன்றைய தினம் நாடாளும் இயக்கமாக மாறி இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் காலத்தில் செய்த பணிகளை பற்றி ஓரளவு எடுத்துக் கூறிப் பழைய நினைவுகளை அசைபோட உதவினேன் அல்லவா?



# அப்போலோ பயணமும் ஆஸ்திகமும்

பேராசிரியர் கே. எஸ். மகாதேவன்

அன்று அன்னப் பறவை என்று தன்னைக் கருதிக்கொண்டு, செஞ்ஞாயிற்றுக்குமேல் தோன்றிய சந்திரனைச்-சிவனது சென்னியில் இருப்பதாக நினைத்துப் பாய்ந்தெழுந்த பிரமன் எங்கும் நிலவும் பூமியின் இழுப்பாற்றலுக்கு ஈடுகொடுக்க இயலாது, கண்டவர் மருள வீழ்ந்து கை குவித்து நின்றான். இன்றோ பேரக் குழந்தைகளாகிய நாம் அப்போலோக் கலத்தில் (Apollo Commandship) அமர்ந்து சென்று திங்களில் பலமுறை இறங்கியதோடு அங்குள்ள கற்களையும் கையிற்கொண்டு மீண்டு வந்திருக்கிறோம்! ஆம், சந்திரனை இராகு விழுங்கி உமிழும் பழைய கற்காலம் மறைந்து, சந்திரனை இராக்கெட்டுகள் முத்தமிட்டுத் திரும்பும் அறிவியற் காலம் இன்று முகிழ்த்துள்ளது. பிரம்மனால் செய்யமுடியாத அருஞ்செயலை, இன்று பேரன்மார்கள் செய்து முடித்துப் புகழ்பெறுவது இன்றைய பிரம்மங்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை!

## இராகு போனால் என்ன ? இராக்கெட் வந்தால் என்ன ?

இராகு சந்திரனை விழுங்குகிறது என்று தம்மைக் குழப்பிக்கொள்வதுடன் ஊரிலுள்ள குளம் குட்டைகளையெல்லாம் விடாமல் இறங்கிக்குழப்பும் ஆஸ்திகர்களை இன்றும் நாம் காண்கிறோம்! இராகுசென்ற பாதையில் இன்று இராக்கெட்டுகள் செல்லத் தொடங்கிவிட்டன என்பதை இவர்கள் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டுவிட்டனர். அப்பன், பாட்டன் செய்த தொழிலையே பேரன் செய்துவர வேண்டும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடைய இவர்கள் இராகு இராக்கெட்டானாலும் அன்று பாட்டன் விட்டதுபோன்றே விடுகிற கண்ணீரை விட்டுவைப்போம் என்று திட்டமிட்டிருக்கின்றனர்! திட்டத்தின் முதற்படியாக இராக்கெட்டுகள் சந்திரனது தூய்மையைக் குலைத்துச் சூறையாடுகின்ற காரியத்தைச் செய்துவருகின்றனவே என்று ஓலமிடத் தொடங்கியுள்ளனர்! அடுத்து அப்போலோ-16, சந்திரனைச் சென்று தொடும்போது இவர்கள் மந்திரம் ஓதித் தாரை தப்பட்டைகளை முழக்கிக் குளங்களில் கூட்டமாக இறங்கிக் குளத்து நீரைப் பொங்கி வழியச் செய்தாலும் வியப்பதற்கில்லை!

## அரிச்சுவடிக் குழந்தைகள் அறிவியல் கற்பதா ?

இராக்கெட்டுகளை ஏவும் நாடுகளைப் பார்த்துப் பணத்திற்கு வேறு பயன்களிருப்பது அவைகளுக்குத் தெரியவில்லையே என்று கேட்டு நம் ஆஸ்திகர்கள் இரங்குகின்றனர். சூரியனுக்கும், சந்திரனுக்கும் கோட்டங்களும் கோவில்களும் எடுக்கலாம்; பால் நெய், பலகாரம், பட்டாடை போன்ற மதிப்புள்ள



பொருள்களை வேள்வி என்ற பெயரில் நெருப்பிலிட்டுப் பொசுக்கலாம்; அப்படிச் சூறையிடுவதைத் தடை செய்ய எவருக்கும் உரிமையில்லை என்பதையும் அடிக்கடி எச்சரிக்கை விடுத்துவரலாம்! வானத்தில் விஞ்ஞானத்தின் துணையில்லாமலே இந்திரர், சித்தர், இயக்கர், கின்னரர், கிம்புருடர் போன்ற விண்வெளி வீரர்களுடன் நெருங்கி உறவாடலாம். இப்படி நாம் வழிவழியாகச் செல்லும் பாதையை 'பீடன்று' என ஒதுக்கி சந்திரலோக சஞ்சாரங்களில் இன்று ஏராளமான பணத்தைப் 'பாதாள லோக' வாசிகளாகிய அமெரிக்கர் போன்றவர்கள் செலவிடுவது எப்படித் தர்மமாகும்? அழகிய சந்திரனைத் தாக்கி, அண்டங்களைப் பிடித்துத் தேவர்களை அடிமையாக்க விஞ்ஞானிகள் நினைப்பதை தங்களால் இரசிக்க முடியவில்லை-என்று இங்குள்ள பூ தேவர்கள் சொல்லிவிட்டனர்! இப்பொழுதே பள்ளிகளில் மதப் போதனை இல்லாமல் போய்விட்டது. இருந்திருக்குமானால் நம் சூரியனையும் சந்திரனையும் பாம்புகள் விழுங்கிக் கொண்டிருக்கின்றன என்றால் குழந்தைகள் விழுந்துவிழுந்து சிரிப்பார்களா? அரிச்சுவடி படிக்கும் குழந்தைகளெல்லாம் இன்று அறிவியல் கற்கின்றனர். காவிரியில் முழுக்குப் போட்டுவிட்டு 'கங்கா ஸ்நானம் ஆயிற்று' என்று இனிமேல் எப்படி நம் ஆஸ்திகர்கள் சொல்ல முடியும்? இமயமும் கங்கையும் தோன்றுவதற்குப் பல கோடி ஆண்டுகட்கு முன்னரேயே குடகும், காவிரியும் இருந்திருக்கின்றன என்று நிலநூல் விஞ்ஞானிகள் 'அதர்மம்' பேசும் காலம் இது!

### ஏற்படப் போகும் எதிர்விளைவுகள்!

இப்பொழுது சந்திர கிரகணம் பிடித்தது என்று நாம் குட்டைகளைக் குழப்பிக் கொண்டிருக்கும் நேரத்தில், பிடித்தது சந்திர கிரகணம் அல்ல, சூரிய கிரகணமே என்று-சந்திரனில் மனிதன் விட்டுவந்த கருவிகள் அறிவிக்கின்றன! இனிக் கிரகணம் பிடித்தால் தர்ப்பணம் எப்படிச் செய்ய முடியும்? சந்திர கிரகணம் என்று கொண்டு செய்வதா? சூரியகிரகணம் என்று—எண்ணிச் செய்வதா? மேலும், சந்திரனிலிருந்து 'டன்' கணக்கில் கற்களைக் கொண்டு வருகின்ற அறிவியலாரின் செயலால் காலப்போக்கில் சந்திரன் உண்மையாகவே தேய்ந்து பௌர்ணமி அன்றுகூட முழு வட்டமாகத் தோன்றாமல் போய்விடுமே என்றும் சில மகா புருஷர்கள் கவலைப்படுவதாகத் தெரிகிறது! சட்டத்தில் சந்து பொந்து காண்கின்றவர்கள் சந்திரன் தமது கடவுள் தலையிலுள்ள தெய்வப் பொருளாதலால், அதில் சென்று அயலார் கால் வைப்பதும், வடமொழி அல்லாத ஆங்கில, உருசிய மொழிகளில் அர்ச்சனை செய்து ஆராய்ச்சி செய்வதும் அரசியல் சட்டம் 25, 26-வது பிரிவுகளுக்கு முரணானதாகும் என்றும் வலியுறுத்திப் பேசி வருகின்றனர்! இவர்கள் சந்திரனில் மனிதன் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சியால் பெரிய எதிர் விளைவுகள் ஏற்படக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுகின்றனர். ஆம், இப்பொழுது இவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள விளைவையே ஒரு பெரும் புரட்சி என்றுதான் சொல்லவேண்டும்! அமெரிக்க இராக்கெட்டுகள் சந்திரனில் கடித்து எடுத்துவந்து உமிழ்ந்த பொருள்களைக் கண்ணால் கண்டு இவர்களும், சந்திரன் தேய்வும் வளர்வும் அறியாத கல்லாலும், மண்ணாலும் ஆன ஓர் உருண்டைப் பொருள் என்பதை ஒப்புக் கொள்கின்ற அளவிற்கு உயர்ந்து விட்டனர்!

### வள்ளுவர் இன்று இருந்தால்......!

நம் பூவுலகத்தின் வளத்தைத் துய்க்க அறியாது இருப்போரைப் பார்த்து அன்று,

இலமென்று அசைஇ இருப்பாரைக்
காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்

என்று வள்ளுவர் நகையாடினார். இன்று நம்மிடையே வள்ளுவர் வந்தால், விண்வெளிச் செலவை ரசிக்க முடியவில்லை என்று சொல்வாரைக் கண்டு,

இலமென்று அசைஇ இருப்பாரைக்
காணின்
நிலவென்னும் நல்லாள் நகும்,

என்று எள்ளி நகையாடாமல் இரார்! விண்வெளி ஆராய்ச்சியை வெறுக்கின்றவர்கள் தங்களுக்கென்று ஒரு 'தட்டையுலக சமாஜம்', (Flat Earth Society) அமைத்துக் கொண்டு 'எம்மைப் பூமி தாங்குகிறது; பூமியை ஆதிசேஷன் தாங்குகிறான்; ஆதிசேஷனை அரசியல் சட்டம் 25, 26-வது பிரிவுகள் தாங்குகின்றன' என்று நிம்மதியாக இருந்துவிட்டுப் போகட்டும்!





தேர்தல் வெற்றிக்குப்பின் அண்ணா சமாதியில் அய்யாவும் அமைச்சர்களும் அஞ்சலி!







னிவு—எளிமை—காலந்தவறாமை

தமிழர் இனக்காவலர்கள்





பகுத்தறிவாளர் கழகப் பாராட்டு





பெருமிதம்—லட்சியம்—துல்லியம்




பல்கலைக்கழகம் !



டாக்டருக்கு பகுத்தறிவாளர் கழகத்தின் பரிசு



மிகுந்த பூரிப்போ !







படிப்பு—பாராட்டு—களிப்பு





சிந்தனை—தெளிவு—
கட்டளை



# என் கருத்து

கோவை ஜி.டி.நாயுடு

இந்த மாதம் பெரியாருக்கு 93 வயது பிறந்த நாளைப்பற்றி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் மாதிரி எந்த காலத்திலும், இன்றும், முந்தியும் இனிமேலும் ஒருவராலும் செய்யமுடியாத சொல்ல முடியாத கருத்துக்களையும், பழக்கவழக்கங்களையும் பொதுமக்களுக்கு சொல்லி அறிவூட்டி வருகின்றார். இப்போது Modern Rationalist என்ற ஒரு இங்கிலீஷ் (English) வார இதழ் செப்டம்பர் முதல் தேதியிலிருந்து வெளியிடுவதாக விடுதலையில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. இதற்கு 5,000 சந்தாதாரர்கள் சேர்ந்தால் போதும் என்று சொல்லுகிறார்கள். அய்யாயிரம் அல்ல—அய்ம்பது ஆயிரம் சந்தாதாரர்கள் சேர்ந்தாலும்கூட இந்த நாளிதழோ, மாத இதழோ நஷ்டத்தில்தான் நடக்கும். அதுவும் தவிர இந்த பேப்பர்கள் யாரும் Record ஆக வைத்திருக்கவும் மாட்டார்கள். வந்த மறுநாளே காராபூந்தி கட்ட வைத்து கடைக்கு போய்விடும். குடியரசு பதிப்பகம் 1942, 43-ல் வெளியிட்ட புத்தகங்களையே உண்மை என்கின்ற புத்தகத்தில் சேர்த்து மிகக் குறைந்த விலைக்கு இந்த புத்தகங்களை பரப்பினால் அதுமாதிரி வேறு எதிலும் விளம்பரப்படுத்தமுடியாது. இரு இளைஞர்கள். அல்லது புராண ஆபாசங்கள் என்கின்ற புத்தகத்தில் இரணியன் அல்லது இணையற்ற வீரன் இந்த இரண்டு புத்தகங்களையும் வெளியிடுவதற்கே ஒரு வருடத்திற்கு மேலாகும். இது தவிர கருவூர் ஈழத்து அடிகள் B. A. எழுதிய பெரிய புராண ஆராய்ச்சி முதல் பாகமும், இரண்டாம் பாகமும் இன்னும் இம்மாதிரி அநேக புத்தகங்கள் அச்சாகியிருக்கின்றனவே ஒழிய வெளியில் வரவில்லை. இவற்றை எடுத்து உண்மை என்கின்ற வார இதழிலோ, நாள் இதழிலோ அநேகம் காப்பிகள் அச்சடித்து மிகக் குறைந்த விலைக்கு வெளியிடுவது நலம் என்று சொல்ல விரும்புகின்றேன். எல்லாம் அறிந்திருக்கும் பெரியாருக்கு நான் என்ன சொல்வதற்கு இருக்கின்றது. ஆயினும் இதை கவனித்தாரோ இல்லையோ என்று சந்தேகப்பட்டுத்தான் இதை எழுதுகின்றேன். அவருடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று விருப்பமுள்ளவர்கள் இந்த இரு இளைஞர்கள் அல்லது புராண ஆபாசங்கள் என்ற புத்தகத்தை தொடர்ந்து படித்து அதை மற்றவர்களுக்கு சொல்லுவதுதான் அவர் பிறந்த தினத்தையும், அவரையும் கொண்டாடுவதாக கருதப்படும் என்று நினைக்கின்றேன். நானும்கூட இந்த கடவுள் இருப்பதை இதுவரை அதை பற்றி பேசுவதும் இல்லை என்று இருந்தேன். ஏனென்றால் கடவுள் என்கின்ற மூடநம்பிக்கையினால் அநேகம் பேர் கெடுதிகளை செய்ய தைரியம் இல்லாதிருந்தார்கள். இப்போது அந்த பாகுபாடே போய்விட்டது. ஆகையால் எல்லாரும் மூடநம்பிக்கைகளை ஒழித்து ஒழுக்கமாக நடந்துகொள்வதற்கு அரசாங்கமும், பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு பெரியாரை எல்லாரும் வாழ்த்துவது போல் நானும் அவரை அநேக வருஷங்கள் இருக்குமாறு வாழ்த்துகிறேன்.

வாழ்க பெரியார் !

வளர்க பகுத்தறிவு ! !






அள்ளும் வறுமை அகற்றாமல்
அம்புவிக்குக்
கொள்ளை நோய் போல்
கூட்டிவரும்
வைதீகத்தைப் போராடி
பூக்காமல்—காய்க்காமல்
வேரோடு பெயர்க்க வந்த—
ஈரோடு தந்த வள்ளல்
சுயமரியாதைச் சுடரொளி

**தந்தை பெரியார் அவர்கள்**
**93-வது ஆண்டு நல் வாழ்த்து**

**தயாரிப்பு & விற்பனை நிலையம் :**

கிளை :

**61, மேலமாசி வீதி, மதுரை.**

எங்களிடம் சுகாதார முறையில் தயாரித்த நாவிற்கினிய ருசிமிக்க
முறுக்கு—பக்கோடா—மிக்சர்—அதிரசம்—சேவு மற்றும் இனிப்பு, காரம்
வகைப் பலகாரங்களும் கிடைக்கும்.

உரிமையாளர் : **பே. தேவசகாயம்**



வாழ்க பெரியார் !

வளர்க பகுத்தறிவு ! !



**பெரியார் ஆண்டு 93**

சாதிமத பேதங்கள்—மூட வழக்கங்கள் தாங்கி
நடைபெற்று வரும் சண்டை உலகுதனை ஊதையினில்
துரும்பு போல் அலக்கழித்துப் பின்னர் ஒழித்து—புதியதோர்
உலகு செய்த பகுத்தறிவு பகலவன்—**தந்தை பெரியார்**

**நீடூழி வாழ்க**

போன் : 24117

# அம்சவல்லி பவான்

**கீழவெளி வீதி, மதுரை.**

நிர்வாகி : **சா. கோபால்**

# "சேலம்" நிகழ்ச்சிபற்றி கன்னட ஏட்டின் விளக்கம்

ஈரோட்டு வெங்கடப்ப ராமசாமி நாய்க்கரவர்கள் தமது தொண்ணூறுக்கும்மேற்பட்ட தள்ளாமை மிக்க இவ்வயதில், சமீபத்தில் தமிழ் நாட்டின் சேலத்தில் பகுத்தறிவாளர்களின் மாநாட்டைக் கூட்டியிருந்தார்கள். அதுசமயம் இந்துக்களின் தேவாதி தேவர்களையெல்லாம் ஊர்வலமாக அழைத்துச் சென்றதுடன் நில்லாது, அவற்றின் ஒழுக்கங்கெட்ட, நீசத்தனமான காரியங்களை மக்களுக்கு விளங்கக் காட்டி, இக்கடவுள்களால் மக்களுக்கு எவ்விதபயனும் கிடையாது என்பதை (செருப்பு) பிரயோகத்தினாலேயே எடுத்து காட்டியுள்ளார்கள். இத்தகைய தெய்வங்களின்பெயரால் ஏழைஎளியவர்கள் சுரண்டப்பட்டு, சுரண்டிவாழும் பேர்வழிகள் மட்டுமே பிழைக்க வழிசெய்யும் மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டுமென்றுதான் நாய்க்கரவர்கள் போதித்து வருகிறார்கள். சிலை (மூர்த்தி) களோ, சித்திரங்களோ (கடவுள் என்று சொல்லப்படுபவைகள் எவையாயினும் சரி) அவை தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ள முடியாதவைகளாக இருக்கும் போது, அவைகள்தாம் மக்களைக் காப்பாற்றுவதாகக் கருதுவது மடைமை என்பதை எடுத்துக் காட்டவே மேற்படி நடவடிக்கை மூலம் நிரூபித்துவருகிறார்கள்.

### பெரியாரவர்களின் கிளர்ச்சி இன்று நேற்று துவங்கியதல்ல

இராமசாமி நாய்க்கரவர்கள், 1930-ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே மக்களிடையே மண்டிக் கிடக்கும் மூடநம்பிக்கைகளை ஒழிக்கவும், கடவுள்களின் பெயரால் மக்கள் சுரண்டப்பட்டு ஏமாளிகளாவதைத் தடுக்கவுமே பகுத்தறிவுப் பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்து தெய்வங்களும் தரும சாஸ்திரங்களும் நம்மைத் தூரமாக ஒதுக்கி வைத்திருப்பதைப் போலவே, நாமும் அவற்றையெல்லாம் வெறுத்துத் தூர ஒதுக்க வேண்டும். இக்கருத்தின் அடிப்படையில் தான் இந்நாட்டின் பிரபல அரிஜனத் தலைவராகிய திரு. சியாம்சுந்தரவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் குல்பர்கா (Gulburga) பகுதியில் அரிஜன ஊர்வலம் நடத்தியும், அரிஜனங்களின் வீட்டிலிருந்த கடவுளர்களின் உருவப் படங்களையும் சிலைகளையும் நெருப்பிலிட்டுக் கொளுத்தியும் காட்டினார்கள். இச்செய்திகள் யாவும் பத்திரிகைகளில் வந்திருப்பதை அறியலாம்.

பிறவியினாலேயே மக்களிடையில் உயர்வு—தாழ்வு என்கிற எண்ணத்தை ஏற்படுத்தி, பாகுபாடுகளை வளர்க்கும் கடவுள்களும் அதற்குச் சம்பந்தப்பட்ட தரும சாஸ்திரங்களும் அநாகரிகக் காட்டுமிராண்டித்தனமல்லவா? இந்தியாவில் ஏறத்தாழ அய்ந்தில் ஒரு பகுதி மக்களைத் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கியும், மற்ற மூன்று பகுதி மக்களை 'சூத்திரர்கள்' என்று சொல்லி தீண்டத்தகாதவர்களின் பக்கத்தில் ஒரு தகுதியை வைத்துள்ள இந்துமதத்தின் தரும-சாஸ்திரங்களை-நீதி சாஸ்திரம் என்று ஒப்புக்கொள்ள முடியுமா?

அரிஜனங்கள், மலைவாசிகள் (கிரிஜனம்) சூத்திரர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், மற்றும் பெண்கள் ஆகிய எல்லாரும் இந்து தருமத்தின்படி விலக்கப்பட்டவர்களாவார் கள். இவர்கள் எல்லாரையும் சேர்த்தால் இந்நாட்டு ஜனத்தொகையில் 100இல் 80 பகுதியாகும். இவர்கள் எல்லாரையும் ஒருசேர அவமானப்படுத்தக் கூடிய வகை யில் தூர விலக்கி வைத்துள்ள இந்து தரும சாஸ்திரத்தை **ஜனநாயகப்படி** இத்துனை மக்களும் ஒன்றுசேர்ந்து அவமானப்படுத் தினால் அது எப்படி தவறாகும்? சூத்திரர் களுக்கும், பஞ்சமர்களுக்கும் அடிமை சாசனம் எழுதி வைத்துக்கொண்டு, அதே சமயத்தில் விலங்கினத்தைச் சேர்ந்த மாடு களும், நாய்களும் கோயிலினுள் பிரவேசிக்க அனுமதித்துக்கொண்டு, தங்களைத் தாமே கீழ்சாதியினர் என்றெண்ணிக் கொண் டிருக்கும் மக்களுக்கு விலங்குகளுக்குள்ள உரிமைகளைக்கூட அனுமதிக்காத தரும சாஸ்திரத்தை அநாகரிகக் காட்டுமிராண்டி தருமமென்று சொல்லாமல் இருக்க முடியுமா?

இத்தகைய கொடிய சமூகத் துரோ கத்தை விளைக்கும் அநீதியை—பெரும் பான்மை மக்களின் அவமதிப்பை, சுயமரி யாதையுள்ள மக்கள் எப்படிச் சகித்துக் கொண்டிருக்கமுடியும்? தனக்கு அநீதியை யும், அவமானத்தையும் விளைப்பதைக் காணும் எவரும் அதை அவமதித்து புறக் கணிப்பதே மனித சுபாவமாகும். சுமார் அய்யாயிரம் ஆண்டுகளாக இந்த அநீதி யையும் அவமானத்தையும் அனுபவித்த மக்கள் ஏன் கிளர்ந்தெழக் கூடாது? அவ தூறுக்காளான மக்கள் உண்மையை உணர்ந்து கிளர்ச்சி செய்தால் அது எப்படி மற்றவர்கள் மனதைப் புண்படுத்தும்? ஒரு சில மக்களால் பல கோடி மக்கள் அய்யா யிரம் ஆண்டுகளாகப் புண்படுத்தப்பட்டு வந்திருப்பது மட்டும் நேர்மையா? மனிதத் தன்மையற்ற இச்செய்கையைக் கண்டிக் கவே சுயமரியாதையுள்ள எவரும் முற்படு வார்களல்லவா? ஆகவேதான் பெரியார் இராமசாமி நாய்க்கரும் மனிதத்தன்மையை மதித்தே இச்செயலில் ஈடுபட்டுள்ளார்கள்.

அநீதிக் களஞ்சியமான இந்து தரு மத்தை உலக அறிஞர்கள் பார்ப்பன மதம் என்றுதான் கூறுவர். பண்டைய நாளில் அரசனும், புரோகிதனும் மற்றவர்தம் உழைப்பினால் விளைந்த வளத்தையெல் லாம் சுரண்டி வாழும் வகையில் செய்து வைத்துக்கொண்டதே இந்து தருமமாகும். இம்மதத்தில் எல்லாவற்றிலும் முதன்மை வகிப்பவன் புரோகிதப் பார்ப்பான்தான். ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த இவர்கள் மனம் புண்படுகிறதென்றால் என்ன? அவர்கள் இதுகாறும் செய்துவந்துள்ள மோசடிச் சுரண்டல்களையெல்லாம் அம்பலப்படுத் தினால் அவர்கள் மனம் புண்படுவதேன்? இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இவர்களின் சுரண்டற் கொள்ளையை அனுமதிக்கவேண்டுமென்று இனியும் எதிர் பார்ப்பது என்றால்-இவர்களை எத்தகைய வன்னெஞ்சர்கள் என்று கூறுவது?

## பெரியாரின் தியாகத் தொண்டு

ஒரு காலத்தில் இராமசாமி நாயக்கரவர் கள் தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவராக இருந்து பல தியாகத்தொண்டுகளை ஆற்றி நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டிருக்கிறார். அவர் தமிழகக் காங்கிரசின் தலைவராக இருந்தபோது, "குருகுலம்" என்னும் பெய ரால் ஒரு ஆஸ்டலை நடத்திவந்தார். அஃது காங்கிரசின் கொள்கைப்படியும், காந்தியாரின் கோட்பாட்டிற்கிணங்கவும் செயற்பட்டு வந்தது அதாவது சாதிமத பாகுபாட்டிற்கும் மேல்கீழ் என்கிற பேதத் துக்கும் இடமின்றி நடைபெற ஏற்பாடாகி இருந்தது. அதுசமயம், இப்போது பெற் றுள்ள அவ்வளவு புகழையும் பெறாத நிலையிலிருந்த இராஜாஜியவர்கள் குரு குலத்திலுள்ள தமது சாதியைச் சேர்ந்த சிறுவர்களுக்குமட்டும் பிரத்தியேகமாக சமையற்காரரை ஏற்படுத்த வேண்டும் என்றார். இராமசாமி அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

ஆனால்; அந்த குருகுல அமைப்பில் இடம் பெற்றிருந்த பார்ப்பனர் ஒருவர் மூலம் தமது சாதிச் சிறுவர்கட்கு தனிச் சமையல் ஏற்பாட்டை செய்துகொண்டார்- இராஜாஜி. இராமசாமி நாய்க்கரவர்கள் தலைவராக இருந்தபடியால் குருகுலத்துக் குக் கொடுக்கப்பட்டு வந்த பணத்தை நிறுத்திக்கொண்டார். மீண்டும், இராஜாஜி அவர்கள், அவ்வமைப்பின் துணைச்செய லாளராகவிருந்த பார்ப்பனர் மூலமாக தனிச்சமையலுக்குப் பணம் கொடுபடும்படி செய்துகொண்டார். அப்போது மற்றொரு சிறந்த தலைவராக இருந்த வரதராஜுலு நாயுடு அவர்களும், நாய்க்கரவர்களும் சேர்ந்து இவ்வழக்கை காந்தியடிகளிடம் முறையிட்டுக்கொண்டார்கள். அதுசமயம் காந்தியடிகள் இம்மாநிலத்தின் நந்திமலை

யில் தங்கி ஓய்வுபெற்று வந்தார்கள். அவர் இவ்வழக்கை ஆராய்ந்து முறை செய்யத் தவறியபடியால், சென்னையில் 100க்கு 80 பேர்களான மக்களுக்கு சுயமரியாதை வாழ்வளிப்பதற்கான கிளர்ச்சிகளில் ஈடு பட்டார்—பெரியார் இராமசாமி. இருப் பினும்கூட அச்சமயம் அவர் ஜஸ்டிஸ் கட்சி யில் சேரவில்லை. அக்காலத்திலிருந்த **ஜஸ்டிஸ்** கட்சியானது பார்ப்பனரல்லாத மக்களின் நலன் கருதித் தொண்டாற்றி வந்தது. சாதி—மதப் பாகுபாட்டை வெறுத்த வெள்ளையர்கள் **ஜஸ்டிஸ்** கட்சியை யும் வகுப்புவாதக் கட்சியென காங்கிரசைப் போலவே புறக்கணித்துவந்தனர். இதையே வாய்ப்பாகக்கொண்டு பார்ப்பனர்களும் அக்கட்சிக்கு எதிராகவே பிரசாரம் செய்து வந்தனர். பெரியாரவர்கள் தீவிர சுயமரி யாதைப் பிரசாரத்திலும், கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டிருந்தபடியால், **ஜஸ்டிஸ்** கட்சியும் அவருடன சேர்ந்துகொண்டது. அதன் பின்னர் அதுவே திராவிடர் கழகமாயிற்று. பிறகு அதுவும் இரண்டாகப் பிரிந்து திராவிடர் கழகமாகவும், திராவிட முன் னேற்றக்கழகமாகவும் செயற்படுகின்றன. நாம் தமிழர் கட்சியும், தமிழரசுக் கட்சியும் பின்னால் தோன்றியவைகளே.

1930ஆம் ஆண்டிலிருந்தே பெரியார் அவர்கள் கடவுள் பெயரால் மேல்சாதிக் காரர்கள் என்பவர்கள் செய்துவருகின்ற புரட்டுகளையெல்லாம் பகிரங்கப்படுத்தி வருகிறார்கள். 1953ஆம் ஆண்டில் பெரி யாரவர்கள் மற்றும் இரண்டு தொண்டர் களுடன் திருச்சியிலுள்ள டவுன்ஆல் மைதானத்தில் பிள்ளையார் பொம்மை யைப் போட்டு உடைத்துக்காட்டினார்கள். இதுபற்றி அப்போது முதலமைச்சராக இருந்த இராஜாஜி அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுத்தவரல்ல. மேலும், இது விஷயத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்றே ஃபைலில் எழுதிய தாக வெளியாக்கப்பட்டிருக்கிறது. தனி நபர் ஒருவர் இந்த விஷயத்தைக் கோர்ட் டுக்கு எடுத்துச் சென்றார். அந்தக் கேசு தொடர்ந்து அய்க்கோர்ட்டுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் சுப்ரீம் கோர்ட் டுக்கு சென்றபோது முதலிரண்டு கோர்ட்டு களின் பின்னபிப்ராயத்தை வெளியிட்டது; அவ்வளவுதான்.

கோர்ட்டு தீர்ப்புகளின் சாரம் வரு மாறு: பிள்ளையாருடைய உருவம் புனித மானது என்பதற்குப் போதுமான காரண மில்லை. ஆகவே, பிள்ளையாருடைய பொம்மையை உடைப்பதானது யாருடைய மனதையும் புண்படுத்துவதாகாது. மேலும் அது கடவுள் என்பதற்குத் தக்க ஆதாரம் இல்லை. கடையில் விலைக்கு வாங்கிவந்த எந்தவிதமான விக்கிரக உருவமும் வாங்கிய வருக்குச் சொந்தமானபடியால், அதை உடைப்பதோ அல்லது உடைக்காமல் இருப்பதோ அவருடைய சொந்தப் பொறுப் பாகும். கடவுள் நம்பிக்கை உடையவருக் கும், அந்த நம்பிக்கை இல்லாதவருக்கும் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் வெவ்வேறு அல்ல—ஒன்றேதான். எனவே, நம்பிக்கையில்லாதவர் உடைத்ததைப் பற்றி, நம்பிக்கையுடையவர் ஆட்சேபிக்க வேண்டியதில்லை. அவர் உடைத்தது, நம்பிக்கை உடையவருக்கு அல்லது அவ ருடைய கோட்பாட்டுக்கு அவமானகரமான தல்ல. கோயிலுள்ளே உள்ள உருவம் புனிதமானது என நம்புகிறவர் நம்பலாம்— என்பதாகத் தீர்ப்புகள் வெளியாயின.

அய்க்கோர்ட்டு நியாயாதிபதி மேற்படி வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு கொண்டு செல்ல அனுமதி தரவில்லை; என்ற போதிலும்கூட வழக்கைத் தொடர்ந்தவர் தனி அனுமதி பெற்றே சுப்ரீம் கோர்ட்டில் விண்ணப்பித்துக் கொண்டார். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பிலும்கூட, மக்கள் புனித மானது என்று கருதப்படுவது எதுவும், அவரவர்தம் அபிப்பிராயமேயாகும். அதை மற்றவர்கள் புண்படுத்தக்கூடாது என்ப துடன் இவ்வழக்கு முடிவடைவதற்குள் பல ஆண்டுகள் கடந்துவிட்டபடியால் மேற் கொண்டு இது பற்றி எவ்விதமான நடவடிக் கையும் எடுக்கத் தேவையில்லை. ஆனால் மீண்டும் இத்தகைய நடப்புக்கள் நடைபெறு மானால் சட்ட சம்பந்தமான நடவடிக்கை களைத் தீவிரப் படுத்துவதில் அதிகாரிகள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்-என்றே தெரிவிக்கப்பட்டது.

## இராஜாஜியவர்களின் இரட்டை நீதி

இராஜாஜியவர்கள் சென்னையின் முதல்வராக இருந்த சமயத்தில்தான் பெரியாரவர்கள் இந்து மதத்தின் புரட்டுக் களை அம்பலப்படுத்தினார்கள். அத்துடன் நில்லாது பல்வேறு கிளர்ச்சிகளையும் நடத்தியுள்ளார்கள். அப்போதெல்லாம் எவ் வித நடவடிக்கையும் இராஜாஜியவர்களால் எடுக்க முடியவில்லை. அது மட்டுமா? காம ராஜ் நாடார் அவர்கள் முதல்வராக இருந்த

சமயத்திலுங்கூட, இந்திய அரசியற் சட்டமானது திராவிட மக்களுக்கு அநீதியே விளைத்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் வகையில் இந்திய அரசியல் சட்டத்தையும் இந்திய தேசியக் கொடியையும் கொளுத்தினார்கள். மேல் சாதி கீழ் சாதி என்கிற பாகுபாட்டின் காரணமாக பெரும்பான்மை மக்களுக்கு அநீதிஏற்பட்டுள்ளதை தடுக்க முடியாத நிலையில் நாட்டிற்குச் "சுதந்திரம்" என்பது உண்மையான சுதந்திரமல்ல; அதேபோல இந்நாட்டு மக்கள் குடியுரிமை பெற்றதாகவும் ஆகாது—என்கிற காரணங்களைக் காட்டியே இந்திய சுதந்திர தினத்தையும், குடியரசு நாளையும் நம் மக்கள் துக்க தினங்களாக மதித்து நடக்கும்படி கூறி வந்துள்ளார்கள். மேலும், இராமாயணத்தில் தென்னிந்திய மக்கள் குரங்குகள் என்று இழிவுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதற்காகவே இராமாயணத்தையும் வெளிப்படையாக கொளுத்தியிருக்கிறார்கள். அந்தச் சமயத்திலெல்லாம் இராஜாஜியும், காமராஜரும் எவ்வித நடவடிக்கையுமே எடுத்தவர்களல்ல. இப்போது சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்காக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் பெரியாரவர்கள்மீது வழக்குப் பதிவாகியிருக்கிறது. நாய்க்கரவர்கள் ஊர்வலத்தில் வெளிப்படுத்திக் காட்டியுள்ள காட்சிப் படங்கள் யாவும் இந்தியப் புராணங்களில் வருகின்ற காட்சிகளேயாகும். இவைகள் எல்லாம் அநாகரிகக் காட்டுமிராண்டிக் காலச் செயல்கள் என்பதை எடுத்துக் காட்டவே அவற்றைச் செருப்பாலடித்துக் காட்டப்பட்டது. மேலும் அந்த அநாகரிகச் செயல்கள் யாவும் இப்போதைய சட்ட திட்டங்களின்படி கிரிமினல் குற்றங்களே யாகுமென்றால், அத்தகைய புராணங்களையும், அதைப் புனிதமானது என்று கூறுகிறவர்களையுமல்லவா சட்டப்படி தண்டிக்க வேண்டும்? இந்நாட்டு அறிஞரும், கவிஞருமான சர்வக்ஞரும்கூட "ஹாதரத கதெயன்னு சோதரா வதெயன்னு ஆதரிசி புண்ய கதெயெந்து கேளுவரே!"......விபசாரத் தனத்தையும், சகோதர வதையையும் ஆ தா ர மா க க் கொண்டவைகள்தாம் புராணக் கதைகள்......என்று கூறியுள்ளார்கள். பேலூரு, ஹளேயபீடு, கோணார்க்கா, கஜுராஹோகா முதலான இடங்களில் உள்ள மைதுனச் சிற்பங்கள் (கலவியிலீடுபட்டுள்ளவை) புராணக் கதைகளின்படி காமலீலைகளை விவரிப்பனவாகவே இருப்பினுங்கூட அவைகட்கு கலைப் பொருட் காட்சியென்கிற புனித நற்சான்று தரப்படவில்லையா?

## பழமையா? காட்டுமிராண்டிச் செயலா?

இந்து மதத்தின் கலை, இலக்கியங்களின் உட்பொருள் இதுவேதான் என்று கூறுவதானால், அம்மதத்தின் கலை, இலக்கியத்திலெல்லாம் காம விகாரங்களே மிகுதியென்று கூறிவிடலாமே. பெங்களூர் நகரத்திலுள்ள கப்பன்பார்க்கில் கிரேசியன் வேஸ் (Gracian vase) என்கிற பண்டைய கிரேக்கரின் "பூக்குடலை"யைப் போன்ற மாதிரியில் பலவற்றைக் காட்சிப்பொருளாக வைத்துள்ளனர். அவற்றிலுள்ள சித்திரங்கள் யாவை? காம விகாரக் காட்சிகளே மிகுதியாக உள்ளன. இவைகளெல்லாம் பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள நிர்வாணக் காட்சிகளல்லவா? புராணங்களில் வருகின்ற தேவர்களின் கயமைத் தனத்தை (தீச்செயல்கள், கள்வெறி, போராட்டம் முதலியவற்றை) இந்நாளில் யாராவது செய்வார்களா? பழம்பெரும் நாகரிகம் என்று கூறப்படுகின்ற நாகரிகர்களான கிரேக்கர்கள் இடையில்கூட இத்தகைய அநாகரிகத் தெய்வங்கள் இருக்கவில்லையா? ஆனால், அந்நாட்டவர்கள் காட்டுமிராண்டிக் கால கடவுள்களைக் கைவிட்டு விட்டார்கள்.

குரங்கு, கழுதை, குதிரை, பன்றி, நாய், பூனை, சிங்கம், புலி, எலி, பாம்பு முதலிய விலங்குகள் எல்லாம் தெய்வங்கள் என்று கருதி வணங்கிவந்த காலம் போய்விட்டது. இவ்விருபதாம் நூற்றாண்டில் அவைகள் யாவும் காட்டுமிராண்டிக்கால வழக்கமென்பது விளங்கிவிட்டது. இவற்றை மேலும் நம்புவது என்பது மடைமை—மூட நம்பிக்கை என்பதை விளக்கித்தான் பெரியார் இராமசாமி அவர்கள் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனால் இத்தகைய மடமைகளை நம்பவேண்டுமென்றுதான் புராண நம்பிக்கைக்காரர்கள் பொழுது சாய்ந்ததும் பொய்ப்புராணங்களை பிரசாரம் செய்துவருகிறார்கள். இப்பேர்ப்பட்ட பொய்க் களஞ்சியத்தை நம்பவேண்டுமென்று பிரசாரம் செய்வது ஒரு சிலருடைய உரிமை என்பதாயின், அந்தப் பொய்மையை அம்பலப்படுத்துவது மற்றவர்களின் உரிமையல்லவா? ஒருசிலர் கடவுள்களின் பெயரால் மக்களை வஞ்சித்து ஏமாற்றி வருவதை, பகிரங்கப்படுத்தி அவர்தம் புரட்டை வெளிப்படுத்துவது அச்

சிலரை அவமானப்படுத்துவதாக ஆகுமா? அப்படியானால் அந்தப் பொய்ம்மைப் புரட்டுக்களை சரியென்று ஒப்புக்கொள்ளத் தான் வேண்டுமா?

பூரி மற்றும் துவாரகை என்னுமிடங்களிலுள்ள இரு சாமியார்கள் ஜனசங்கத்துக்கே ஓட்டளிக்க வேண்டுமென்று கூறி வந்தார்களல்லவா? தீண்டாமையும், சாதிப் பாடுகளும் இந்து மதத்தின் விதிகள்தாம் என்கிறார்கள். இவற்றை நிலைநாட்ட அகில இந்தியரீதியில் கிளர்ச்சிகள் நடத்தப் போவதாகவும் கூறினார்கள். இவை இந்து மதத்தின் பெயரால் நடைபெற்றுவரும் புரோகித ஆதிக்கச் சக்தியின் ஆற்றலேயன்றி வேறில்லை. தரும - தத்துவ போதனைகளிலும், மட-மான்யங்களின் வருமானத்திலும் கவலை செலுத்த வேண்டிய சாமியார்கள் சாதி-மதத்தைப் பாதுகாக்கப் புறப்படுவதென்பது எஞ்சியுள்ள பெரும்பான்மை மக்களுக்கு அநீதி விளைக்கப் புறப்படும் செய்கையல்லவா? திரு. கோல்வால்கர் அவர்கள் தமது சொற்பொழிவில் பலாத்காரத்தில் ஈடுபட்டாவது இந்துமத சாதிப் பாகுபாடுகளைப் பாதுகாத்து நிலைநாட்டுவேன்—என்று கூறியுள்ளார்கள். அதை எதிர்த்து மராட்டியப் பகுதியின் காங்கிரஸ் தலைவர், கூட்டங்கள் போடுவதாகக் கூறினார். கோல்வால்கரின் துணிவை என்னென்பது?!

ஆனால், இவைகளின் மூலமாக ஒரு விஷயத்தை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அதாவது, பண்டைநாளில் ஜைனர்கள், பௌத்தர்கள், வீரசைவர்கள் முதலான பெரியார்கள் எல்லாம், சாதி-மத-வருண பேதங்களையெல்லாம் ஒழித்துக்கட்டி சமுதாயச் சீர்திருத்தம் செய்ய முற்பட்ட போதெல்லாம்.........அதுபோலவே, கடந்த நூற்றாண்டில் கோகலே, ரானடே, சந்தாவர்க்கர், ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி போன்றவர்களும் சீர்திருத்த கருத்துக்களைப் பரப்பியபோதெல்லாம் சாதிமதப் பேய் பிடித்த புல்லறிவாளர்கள் செய்யத் துணிந்த அதே கயமைத் தனங்களையேதான் மீண்டும் மீண்டும் செய்துவருகிறார்கள். இந்தத் தீய சக்திகளை எதிர்த்துப் போராட முற்போக்கு சக்திகள் எல்லாம் ஒன்றுசேரவேண்டும். இல்லையேல் மாற்றார் உழைப்பைச் சுரண்டி வாழும் இந்தியப் புரோகிதக் கூட்டத்தின் சிறுபான்மை மக்களுக்கு பெரும்பான்மை மக்கள் அடிமைகளாகித் தான் தீரவேண்டும்.

பண்டைய நாளில் பெரும்பான்மை மக்களை இத்தகைய மடைமையிலாழ்த்தி வைத்திருந்த காரணத்தால்தான் நமது நாட்டின் சுதந்திரம் பறிபோயிற்று. நாடு அன்னியர் வசமாயிற்று. மீண்டும் ஒருமுறை நமது உரிமைகள் பறிபோகாமல் இருக்க வேண்டுமானால், சாதிப் பாகுபாட்டை வளர்க்க எண்ணும் சாமி(யார்)களின் ஒழுக்கக்கேடு, நயவஞ்சகப் புரட்டுக்களையெல்லாம் அம்பலப்படுத்தி, அயோக்கியத்தனங்களை வெளியிட்டு அவற்றை வெறுத்து ஒதுக்கும்படி செய்யவேண்டும். இத்தகு சிறப்பு வாய்ந்த தொண்டுகளைச் செய்ய பலம்வாய்ந்த இயக்கம் கண்டாக வேண்டும். இல்லையேல், இந்நாட்டிற்கு விமோசனமே கிடையாது. அது மட்டுமேயன்றி மக்களிடம் மண்டிக் கிடக்கும் மூடநம்பிக்கை, குருட்டுப் பக்தி முதலியவற்றை ஒழித்துக்கட்டி மக்களைப் பகுத்தறிவுவாதிகளாக்கப் பாடுபட்டுவரும் பெரியார் அவர்களின் சீரிய அருந்தொண்டினையும் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

ஏனென்றால், மேற்குறித்த நற்றொண்டுகளை ஆற்றிவரும் இப்பெரியார் இராமசாமி அவர்கள் ஒரு கன்னடியராவார். இவருடைய வீட்டில் பேசும் தாய்மொழி கன்னடமாகும். தத்தமது முதன்மந்திரிப் பதவிக்காலங்களில் எதிர் நடவடிக்கை எடுக்கஇயலாத இராஜாஜி அவர்களும், காமராஜ நாடாரும் நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலில் தி. மு. க. வைத் தோற்கடிக்க தமக்குச் சாதகமாக சேலத்தில் இராமசாமி பெரியாரவர்கள் நடத்திய ஊர்வலக் காட்சி பொருள்களைப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள். இதனால், ஒருவேளை தி. க. மற்று தி. மு. க.வினருக்கு இன்னல் ஏற்படலாம். ஆனால் இந்தப் போராட்டம் இத்துடன் நின்றுவிடாது. நின்றுவிடவும் கூடாது. நாட்டின் சுதந்திரம் நிலைக்க வேண்டுமானால், இத்தகைய போராட்டம் தொடர்ந்து நடைபெறத்தான் வேண்டும்.

28—2—1971

**ஜனப்பிரகதி (Jana Pragathi)**

கன்னட வார இதழின்
துணைத்தலையங்கம்.

தமிழாக்கம்: **வி. சி. வேலாயுதம்,**
கருநாடக திராவிடர் சங்கம்
பெங்களூர்-2.

தந்தி : "புஷ்பம்" போன் : 24249




கமலா

அலுப்பு மருந்து!

கறி மசால்!

சாம்பார் பொடி

சிறந்தது. வாங்கி

பயனடையுங்கள்

---

தொலை பேசி எண் : 26558 வாழ்க பெரியார்! வளர்க பகுத்தறிவு!






பாராட்டிப் போற்றி வந்த
பழமை "லோகம்"
ஈரோட்டுப் பூகம்பத்தால்
இடியுது பார்—

"சுயமரியாதை சுடரொளி"
**தந்தை பெரியார் அவர்களின்**
93-வது பிறந்த தின நல் வாழ்த்து



# இயக்கம் போட்ட எதிர்நீச்சல்கள்

[ஆரியத்தின் ஆணவப்பிடியாலும் மூடநம்பிக்கையின் முற்றுகையாலும் சிதைக்கப்பட்ட திராவிட இனத்திற்குப் புதுவாழ்வு தந்திட புறப்பட்ட நமது இயக்கம் பிறந்தநாள் தொட்டு பீடுநடை எடுத்துவைக்கும் இன்றைய நாள்வரை அது சந்தித்த அடக்குமுறைகள், ஆட்சியாளர்கள் அதன்மீது ஏவிய சட்டத்தின் தீய நாக்குகள் ஏராளம்! ஏராளம்!!

அத்துணையும் எடுத்துரைத்தால் அது ஒரு நூலாகவே முடிந்துவிடும்— இங்கு ஒரு சில மட்டும் எடுத்துக்காட்டிற்காக வைக்கப்படுகிறது.]

## கருஞ்சட்டையும் தடை உத்தரவும்

### பெரியார் ஈ. வெ. ரா. அறிக்கை

கருஞ்சட்டை பற்றி சர்க்காரின் தடையுத்தரவு சம்பந்தமாகப் பெரியார் ஈ வெ. ராமசாமி அடியிற் கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்.

"நம் இயக்கத்தில், திராவிடர் கழகத்தில் உள்ளோருக்கு கருஞ்சட்டை அணிய வேண்டுமென்று வேண்டுகோள் விட்டதானது, திராவிட சமுதாயத்துக்கு இருந்து வரும் சமுதாய இழிவு நீக்கிக்கொள்ளும் உணர்ச்சியை ஞாபகப்படுத்த வேண்டும் என்பதற்கு ஆகும். இதைக் கழக அங்கத்தினர் பலரும் மற்றும் சில திராவிடர்களும் ஆணும் பெண்ணும் ஆதரித்து அணிந்து வருகிறார்கள்.

இந்தப்படியாக, கருஞ்சட்டை அணிபவர்களுக்கு எந்தவித நிபந்தனையோ, எந்தவித ரிஜிஸ்டரோ, சேனை போன்ற உடையோ, யூனிபாரமோ, அணிவகுப்போ, ஆயுதமோ மற்றும் இவை போன்ற ஓர் சேனைக்கோ, படைக்கோ, உள்ள பயிற்சிகளோ மேற்கொண்டது கிடையாது.

இருப்பினும் சென்னை அரசாங்கம் இதை ஒரு அமைப்பாகக் கருதிச் சட்ட விரோதமாக்கியிருக்கின்றது என்ற போதிலும், நான் திராவிடப் பொது மக்களுக்கு அடிக்கடி தெரிவித்து வருவது போல் இது விஷயத்தில் நம் கழக அங்கத்தினரும் திராவிடப் பொது மக்களும் பொறுமையைக் கையாண்டு சாந்தமும், சமாதானமுமாய் நடந்துவர வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறேன். இதற்கு மாறாக எங்காவது பயிற்சி அணிவகுப்பு இருக்குமானால் அதைக் கண்டிப்பாக நிறுத்திவிட வேண்டும் என்பதைத் தவிர, இந்த உத்தரவினால் நமக்குள் எவ்வித மாறுதலும் ஏற்பட்டு

விட்டதாகக் கருத வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.''

ஈ. வெ. ராமசாமி
—சென்னை, 4—3—48.

## "திராவிட நாடு" (அண்ணா) 7—3—48 தலையங்கம்

### தடை உத்தரவு

திராவிடப் பெருங்குடி மக்கள். பல காலமாகச் சமுதாயத் துறையில் மிகவும் இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்த்தும் முறையில், திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள் எல்லாரும் கருப்புச் சட்டை அணிந்துகொள்ள வேண்டுமென்று திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதன் பேரில் இப்போது சில காலமாகத் திராவிடர் கழகத்தைச் சார்ந்த பலர், தங்கள் குறைபாட்டைத் தெரிவிக்கும் முறையில் கருப்புச் சட்டை அணியும் வழக்கத்தை மேற்கொண்டு வந்தனர்.

**இதனை, இப்போது சர்க்கார் சட்ட விரோத ஸ்தாபனம் என்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.**

கருப்புச் சட்டைக்கென ஒரு தனி ஸ்தாபனமே கிடையாது. திராவிடர் கழகத் திட்டங்களிலும் கருப்புச் சட்டை அணிவதை ஒரு ஸ்தாபனமாகக் கொள்ள வேண்டுமென்ற விதியும் கிடையாது. திராவிடர்கள் தங்களுக்குள்ள குறைகளைத் தெரிவிக்கும் முறையில், கருப்புச் சட்டை அணிவதை ஒரு அடையாளமாகக் கொள்ள வேண்டுமென்பதே அதன் நோக்கமாகும்.

கருப்புச் சட்டை அணிபவர்களுக்கென ஒரு தனிப் பயிற்சி முகாமோ, படை அணி வகுப்போ, ஆயுதம் தாங்கும் முறையோ, பலாத்கார முறைகளைக் கையாள வேண்டுமென்ற திட்டமோ எதுவும் கிடையாது.

திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்கள் கருப்புச் சட்டை போட்டுக்கொள்ள வேண்டுமென்று, பெரியார் அவர்கள் எப்போது சொன்னாரோ, அன்றே சர்க்காருக்கும் இது சம்பந்தமாக எல்லாம் தெரிந்தே இருக்கும். ஆனால், இவ்வளவு காலமும் சர்க்கார் அது சம்பந்தமான நடவடிக்கை ஒன்றும் எடுக்காமல், இப்போது திடீரென்று கருப்புச் சட்டைப்படை என்பதாக ஒரு 'ஸ்தாபனம்' இருப்பதாகவும், அது, சட்ட விரோதமானதென்றும் கருதும்படியான நிலைமை ஏற்பட காரணம் என்ன என்பது தெரியவில்லை.

ஒரு சமுதாயம், தனக்குள்ள குறைகளைக் கூடத் தெரிவிக்கக் கூடாதென்ற முறையில் ஒரு சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாயின், அதனை ஜனநாயக அடிப்படையைக் கொண்ட சர்க்கார் என்று எப்படி கூற முடியும்? ஒரு சமுதாயம், தன்னுடைய குறைகளை எடுத்துக்காட்டி, அவைகளை நிவர்த்தி செய்து கொள்வது கூடத் தவறு என்பதைத் தானே சர்க்காரின் இந்த தடைஉத்தரவு எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இல்லையேல், எந்தவிதமான பலாத்காரச் செயலையும் அடிப்படையாகக் கொள்ளாத கருப்புச் சட்டையினர்மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்கக் காரணம் என்ன?

கருப்புச் சட்டை அணிவது என்பது ஒரு ஒழுங்கு முறை; அதாவது தாங்கள் திராவிடர்கள், தங்களுடைய குறைகள் போக்கப்படவேண்டும், அவை போக்கப் படும் வரையில் துக்க அறிகுறியாகக் கருப்பு சட்டை அணிந்துகொள்ள வேண்டுமென்பதைத் தவிர, கருப்புச் சட்டை அணிவதற்கு வேறு காரணம் எதுவும் இல்லை. என்றாலும், இதனை சர்க்கார் ஒரு சட்ட விரோதமான 'ஸ்தாபனம்' என்று கருதக்கூடிய அளவுக்குக் கருப்புச் சட்டை அணிவதைப் பற்றிச் சர்க்கார் தெரிந்திருக்கிறதென்றால், யாரோ சொன்னதைக் கேட்டுக்கொண்டு, இந்தக் காரியத்தைச் சர்க்கார் செய்திருக்கிறதென்று பொருள் படுமேயன்றி, உண்மையாகவே சர்க்கார் கருப்புச் சட்டையைத் திராவிடர்கள் ஏன் அணியமுற்பட்டனர் என்பதனை அறியவோ, அல்லது அதன் அமைப்பு முறை எப்படி, என்னென்ன காரணங்களுக்காக அந்த முறை ஏற்பட்டதென்பதைத் தெரிந்து அதன்படி இந்தத் தடை உத்தரவை விதித்துள்ளதென்று கூறவோ முடியாது.

பெரியார் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், கருப்புச் சட்டை அணிவதன் காரணத்தை வெளிப்படையாகக் கூறியுள்ளார். இந்த அறிக்கையில் கூறப்பட்ட காரணத்தையே, கருப்புச் சட்டையைத்

திராவிடர்கள் அணிந்து கொள்ள வேண்டு மென்று சொன்ன காலத்திலும் பெரியார் அவர்கள் கூறியுள்ளார்.

ஒரு பெரும் பொறுப்பைத் தன் மீது போட்டுக்கொண்டு, அதிகார பீடத்தில் அமர்ந்துள்ள ஒரு சர்க்கார், விஷய விளக்கம் இல்லாத முறையில் எதேச்சாதிகார மனப் பான்மையோடு காரியங்களைச் செய்வது, பொது மக்களின் ஆதரவையும் ஒத்துழைப் பையும் இழப்பதற்கு அடிகோலுவதாகவே முடியும்.

எனவே, சர்க்காரின் இந்தப் போக்கைக் கண்டு, திராவிடர்கள் தங்கள் பொறுப்பை மறந்து, அமைதி குறைவுக்கும், கிளர்ச்சிக் கும் இடமளிக்காமல், தங்களுடைய பெருந் தன்மையைக் காட்டிக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## பெரியார் வீடும், "குடி அரசு" ஆபீசும் சோதனையிடப்பட்டது

3-3-48 இரவு, ஈரோட்டில், திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்கள் வீட்டைப் போலீசார் சோதனையிட்டுச் சில புகைப் படங்களை எடுத்துச் சென்ற தோடு, "குடியரசு" ஆபீசையும் சோதனை போட்டுச் சில பைல்களையும் எடுத்துச் சென்றனர்.

## காஞ்சிபுரத்தில் சோதனை

3-3-48ல் பெரிய காஞ்சிபுரம் திராவிடர் கழகத் தலைவர் தோழர் வி. கண்ணப்பர் அவர்களையும், தோழர் C. V. M. அண்ணா மலை அவர்களையும், உள்ளூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும், சில கான்ஸ்டேபிள்களுடன் சந்தித்து, நகரிலுள்ள திராவிடர் கழகங்களைச் சோதனையிட்டு, கருப்புச் சட்டை சம்பந்த மான ரிக்கார்டுகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் ஆட்சேபனையில்லை என்று கூறவே, புத்தேரித் தெருவிலுள்ள திராவிடர் கழகத்தையும், பிள்ளையார்பாளையத்தி லுள்ள திராவிடர் கழகத்தையும், சின்ன காஞ்சிபுரம் திராவிடர் மறுமலர்ச்சி கழகத் தையும் சோதனையிட்டுக், கருப்புச் சட் டைகளையும், கழக ரசீதுப் புத்தகங்களை யும் எடுத்துச் சென்றனர்

### திராவிடர் ஆராய்ச்சிக் கழகத்தில் சோதனை

சின்னக் காஞ்சிபுரத்திலுள்ள திராவிடர் ஆராய்ச்சிக் கழகமும் சோதனையிடப் பட்டு, கழக மினிட் புத்தகத்தைத் தோழர் T. P. S. பொன்னப்பா அவர்களிடமிருந்து வாங்கிச் சென்றனர்.

## கருஞ்சட்டைக்குச் சர்க்கார் தடை உத்தரவு

### பல இடங்களில் சோதனை

(7—3—48 திராவிட நாடு)

2—3—48ல் சென்னை சர்க்கார், இம் மாகாணத்திலுள்ள கருஞ்சட்டை ஸ்தா பனத்தையும், ராஷ்ட்ரீய சேவாதளத்தையும் தடை விதித்து, கிரிமினல் சட்ட திருத்தத் தின் 16-வது பிரிவின்கீழ் அறிக்கை விட்டுள்ளனர்.

### நகரில் சோதனை

சென்னை சுங்குராமச் செட்டித் தெரு 6-ம் எண்ணுள்ள கட்டிடத்தில் இருக்கும் "திராவிடன்" பத்திரிகாலயத்தைப் போலீ சார் 2—3—48 மாலை 4-30 மணிக்கு சோதனையிட்டு, சில கடிதங்களையும், "திராவிடன்" பத்திரிகைப் பைலையும் எடுத்துச் சென்றனர்.

பார்க் டவுன், பொம்மு செட்டித் தெருவிலுள்ள தோழர் C. D. T. அரசு அவர் கள் வீட்டையும், வண்ணாரப்பேட்டை மாடசாமி நாடார் தெருவில் இருக்கும் தோழர் K. அண்ணாமலை அவர்கள் வீட்டையும், வட சென்னைத் திராவிடர் கழகத்தையும், மயிலாப்பூர், பிராடீஸ் தெருவிலுள்ள தோழர் M. K. தங்கவேலர் அவர்களுடைய வீட்டையும், பெரிய மெட்டு ஏகாம்பர குமரகுரு தெருவிலுள்ள தோழர் K. ஆரியசங்காரன் அவர்கள் வீட்டை யும், சைதாப்பேட்டை, கூத்தாடும் பிள்ளை யார் கோயில் தெருவிலுள்ள திராவிட இளைஞர் கழகத்தையும் போலீசார் சோதனையிட்டு, கருப்புச் சட்டைகளை யும், கழக மினிட் புத்தகங்களையும் எடுத் துச் சென்றனர்.

### கோவில்பட்டியில்

2—3—48ல் காலை 4-மணிக்கு D. S. P. அவர்களும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும்,

சில கான்ஸ்டேபிள்களும் கோவில்பட்டியி லுள்ள திராவிடர் கழகச் செயலாளர் தோழர் S. அருணாசலம் வீட்டையும், தோழர் வள்ளமுத்து பால்ராஜ் அவர்கள் வீட்டையும் சோதனை செய்து, திராவிடர் கழக சம்பந்தமான புத்தகங்களை எடுத்துச் சென்றனர்.

**மதுரையில்**

3—3—48ல் மதுரையிலுள்ள திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளைச் சோதனை செய்ததோடு, தோழர்கள் செந்தியப்பன், எஸ். முத்து, எஸ். பழனி வேலு, கே. எஸ். இராசமாண், எம். எஸ். இராமய்யா, ஆ. சங்கரய்யா, தங்கராஜ், ல. வ. கிருஷ்ணன் ஆகியோரைப் போலீஸ் அழைத்துச் சென்று, கருப்புச் சட்டை சம்பந்தமாக விசாரித்த பின்னர் விட்டு விட்டனர் என்று தெரிகிறது.

**திருச்சியில்**

2—3—48 இரவு, திருச்சியிலுள்ள ஜில்லாத் திராவிடர் கழகக் காரியதரிசி தோழர் எஸ். பிரான்ஸிஸ் வீட்டை ரிசர்வ் போலீசார் சோதனையிட்டு, கருப்புச் சட்டைகளும், அங்கத்தினர்கள் சேர்க்கும் பாரங்களையும் எடுத்துச் சென்றனர்.

**பொன்மலையில்**

2—3—48ல் இரவு 12-மணிக்கு பொன் மலைத் திராவிடர் வாலிப கழக அங்கத்தினர் தோழர் கைலாசம் வீட்டில் போலீசார் சோதனையிட்டனர்.

**சேலத்தில்**

3—3—48ல் சேலம் D. S. P. அவர்கள், சேலம் செவ்வாய்ப்பேட்டையிலுள்ள சுய மரியாதைச் சங்கத்திற்கு வந்து, கருப்புச் சட்டை சம்பந்தமான ரிக்கார்டுகள் ஏதாவது இருக்கிறதா என்று சோதனை யிட்டதில், அது சம்பந்தமாக ஒன்றுமே இல்லையென்று ரிப்போர்ட் எழுதிக் கொண்டு போய் விட்டனர்.

**அரிசிப்பாளையத்தில்**

3—3—48ல் சேலம் அரிசிப்பாளையத்தி லுள்ள திராவிடர் கழகத்தைச் சோதனை யிட்ட போலீசார், அங்கு எந்தவிதமான ரிக்கார்டுகளும் கிடைக்கவில்லையென்று ரிப்போர்ட் எழுதிக்கொண்டு போய் விட்டனர்.

**விருதுநகரில்**

3-3-48ல் விருதுநகரிலுள்ள தோழர்கள் ஏ. வி பி. ஆசைத்தம்பி, என். ராமசாமி, வி. ஏ. எம். வெள்ளையப்பன், பி. இரத்ன சாமி ஆகியோர்களின் வீடுகளைச் சோதனையிட்டதில், தோழர்கள் ஆசைத் தம்பி, இராமசாமி ஆகியோர் வீடுகளி லிருந்து மட்டும் சில கடிதங்களைக் கைப் பற்றிச் சென்றனர்.

**கடலூரில்**

3—3—48ல் கடலூர் ஒ. டி. யிலுள்ள பகுத்தறிவுக் கழகத்தைச் சோதனையிட்ட போலீசார், கழகத் தலைவர் தோழர் எம். கே. வேலு அவர்கள் பெயரையும், செயலாளர் தோழர் பி. ஏ. இளங்கோ அவர் கள் பெயரையும் குறித்துக்கொண்டு சென்றனர்.

**வேலூரில்**

4—3—48-ல் வேலூரிலுள்ள தோழர் வி. திருநாவுக்கரசு அவர்கள் வீட்டைப் போலீசார் சோதனையிட்டு, சில கருப்புச் சட்டைகளை எடுத்துச் சென்றதோடு, தோழர் சி. பி. சின்னராசு அவர்கள் வீட் டையும் சோதனையிட்டு, கருப்புச்சட்டை யையும், "தீப்பொறி" பத்திரிகையையும் எடுத்துச் சென்றனர்.

**செங்கற்பட்டில்**

4—3—48-ல் செங்கற்பட்டிலுள்ள தோழர் எம். சின்னையாஅவர்கள் வீட்டை போலீசார் சோதனையிட்டு, அங்கு எதுவும் கிடைக்காமல் போகவே, பிறகு தமிழர் உணவு விடுதியிலுள்ள ஒரு அறையைச் சோதனையிட்டதில், ஒரு கருப்புச் சட்டை யையும் சில புத்தகங்களையும் எடுத்துச் சென்றனர்.

**சோழவந்தானில்**

4—3—48-ல் சோழவந்தானிலுள்ள தோழர் T. ஆவுடையப்பன் அவர்கள் வீட்டில் போலீசார் சோதனையிட்டதில் ஒன்றும் கிடைக்கவில்லை.

### ஆலந்தூரில்

4—3-48-ல் ஆலந்தூரிலுள்ள திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எம். கண்ணப்பன் அவர்கள் வீட்டைச் சோதனையிட்டதில், போலீசார், கருப்புச் சட்டைகளையும் கழகக் கொடிகளையும் சந்தாப் புத்தகங்களையும் எடுத்துச் சென்றனர்.

### துறையூரில்

3—3—48-ல் துறையூரில் தோழர்கள் தா. வி. நாராயணன் அவர்கள் வீட்டையும், டி. எம். பாலசுந்தரம் வீட்டையும், ந. கிருஷ்ணசாமி வீட்டையும், டி. ஆர். வீரண்ணன் வீட்டையும் சோதனையிட்டனர்.

### திருப்பூரில்

3—3—48ல் திருப்பூர்த் திராவிடர் கழகத்தைப் போலீசார் சோதனையிட்டு, அங்கு ஒன்றும் கிடைக்கவில்லை என்று எழுதிக்கொண்டு போய் விட்டனர்.

### திண்டிவனத்தில்

4—3—48-ல் திண்டிவனத்திலுள்ள திராவிடர் கழகத்தையும், தோழர்கள் அப்பாண்டநாதன், பழனி ஆகியவர்கள் வீடுகளையும், சோதனையிட்டு கழக சம்பந்தமான புத்தகங்களை எடுத்துச் சென்றனர்.

### வாணியம்பாடியில்

போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தனது பரிவாரத்துடன் வாணியம்பாடி 'திராவிடர்கழகம்' கட்டிடத்தில் சோதனை செய்தார். அவ்விடமிருந்து யாதொன்றும் பறிமுதல் செய்யப்படவில்லை. அதன் பிறகு மாலை 5 மணிக்கு தோழர் சி. கோவிந்தராஜன் வீட்டில் சோதனை போடப்பட்டதில் ஒன்றும் கிடைக்கவில்லை.

### விழுப்புரத்தில்

விழுப்புரம் டாக்டர் தியாகராசன் வீடு—போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் மூவர், போலீஸ் கான்ஸ்டேபிள் சிலருடன் சோதனை இடப்பட்டது. கழக சம்பந்தமான ரசீதுகள், சில கடிதங்கள், மாநாட்டு சம்பந்தமான குறிப்புகள் ஆகியவற்றை எடுத்துச் சென்றனர். 1-15 மணி நேரம் சோதனையிட்டார்கள்.

நடராசன் வீடு சோதனை இடப்பட்டது; ஒன்றும் கிடைக்கவில்லை.

ப. நடராசன் வீடும் சோதனையிடப்பட்டது.

### இராசிபுரத்தில்

3—3—48 இரவு சுமார் 7 மணிக்கு இராசிபுரம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், "பெரியார் மாளிகை" என்ற வீட்டுக்கு வந்து இயக்க கமிட்டி உறுப்பினர்கள் யார் யார் என்பதை விசாரித்துச் சென்றார்.

### சேலம் குகையில்

சேலம்—குகை திராவிடர் கழகத்தை 3—3—48-ல் சேலம் நகர போலீஸ் அதிகாரிகள் சோதனையிட்டனர். இயக்க புத்தகங்களும் பத்திரிகைகளும் மட்டும் இருந்தன. ஒன்றும் எடுத்துக்கொண்டு போகப்படவில்லை.

### தர்மபுரியில்

தர்மபுரி நகர திராவிடர் கழக தலைவர் திரு. பி. பொன்னுசாமி வீட்டையும் அச்சகத்தையும் உள்ளூர் போலீஸ் அதிகாரிகள் சோதனையிட்டார்கள்.

திராவிடர் கழக மினிட் புத்தகத்தையும் சில கழக மீட்டிங் விளம்பரத் துண்டுகளையும் எடுத்துச் சென்றனர்.

### சிதம்பரத்தில்

4-3-48 காலை 8-மணிக்கு சிதம்பரம் திராவிடர் கழகத்தை சோதனை செய்வதாய் போலீசார் டவுன் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள எம்.கே. சுந்தரம் வீட்டையும், பக்கத்தில் 4 மைலில் உள்ள சாலியந் தோப்பு கிராமத்தில் சிதம்பரம் திராவிடர் கழகத் தலைவர் தோழர் கு. கிருஷ்ணசாமி வீட்டையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் போதிய சகாக்களுடன் வந்து சோதனைபோட்டு, விசாரித்துச் சென்றார்கள். யாதொரு ஆட்சேபகரமான பொருளும் கிடைக்கவில்லை.

# சட்டசபையில் கடவுள் பட்டபாடு!

**— ஓர் தொகுப்பு —**

### பத்தம்சப் பிள்ளையார்

**துரைமுருகன்** (தி. மு. க.): சிண்டிகேட் உறுப்பினர் கே. எம். சுப்பிரமணியம் பத்தம்சத் திட்டம் பற்றிப் பேசியது 'திடீர் பிள்ளையார்' போல இருந்தது.

**கே. எம். சுப்பிரமணியம்** (சிண்டிகேட்): 'திடீர்' பிள்ளையாருக்கும் பத்தம்சத் திட்டத்துக்கும் எந்த பொருத்தமும் இல்லை; காங்கிரஸ் உள்ளவரை பத்தம்சத் திட்டமும் இருக்கும்.

**துரைமுருகன்:** பத்தம்சத் திட்டம் எதுவும் இல்லை. இந்திராவை ஒழிப்பது என்ற ஒரு அம்சத் திட்டந்தான் உள்ளது என்று உங்களின் தலைவரே கூறி விட்டாரே; இனி பத்தம்சம் பற்றிப் பேசுவது 'திடீர் பிள்ளையார்' போன்றதுதானே.

(29-3-71 அன்று வரவு—செலவுத் திட்ட விவாதத்தின் போது)

### ஆண்டவனாலும் ஆகவில்லை

**கிட்டப்பா** (தி. மு. க.): பிற்போக்குக் கூட்டணியினர் ஆண்டவன் படத்தைப் போட்டு மிகவும் கேவலமான தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். ஆனால் ஆண்டவனால்கூட அவர்கள் கட்சிகளைக் காப்பாற்ற முடியவில்லை. ஆண்டவனின் சக்தியையும் மீறி மாயூரத்தில் நான் வெற்றி பெற்றேன்.

(30-3-71 அன்று ஆளுநர் உரைக்கான 'நன்றி'ப் பேச்சின் போது)

### கடவுளின் கவலை எப்படித் தீரும்?

**எஸ். சண்முகம்** (தி. மு. க.): மனம் வேதனையில் சிக்கும் காலத்தில் மனிதன் கடவுளை நாடுகின்றான் என்றால் கடவுளுக்கே சங்கடம் ஏற்பட்டு விட்டால் அக்கடவுள் யாரை நாடுவார்?

**அவைத் தலைவர் மதியழகன்:** இது "வேதாந்த விசாரணை" அல்லவா?

(திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி கோயிலுக்கு கடலலைகளினால் ஆபத்து ஏற்பட்டிருப்பது பற்றிய கேள்வியைத் தொடர்ந்து கேட்கப்பட்ட துணைக் கேள்வி. 4-7-'71 அன்றைய சட்டமன்ற நிகழ்ச்சி)

### காவிரிப் பிரச்னைக்கு குருவாயூரப்பன்

**தியாகராசன்** (த. அ. கழகம்): குருவாயூரப்பனுக்குத் தமிழ்நாடு அரிசி வழங்குகிறது. இந்த நிலையில் காவிரி நீர் பற்றி சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்தச் சிக்கலுக்கு நல்ல முடிவு ஒன்று ஏற்பட குருவாயூரப்பன் அருள் புரிவாரா?

**அமைச்சர் ப. உ. ச.:** பக்தர்கள் எனப்படுவோர் வேண்டிக்கொள்ள வேண்டிய விஷயமல்லவா இது.

(காவிரிச் சிக்கல் பற்றி தமிழ்நாடு அரசின் தீர்மானம் மீதான விவாதத்தின்போது: 8—7—71)

### கும்பி வெம்பிய குருவாயூரப்பன்

**சங்கமுத்துத் தேவர்** (சிண்டிகேட்): குருவாயூரப்பன் கோயிலுக்கு தமிழகத்தில் இருந்து இப்போது அரிசி அனுப்பப்பட்டு வருகிறதா?

**அமைச்சர் ப. உ. ச.:** ஆம்; அனுப்பப்பட்டு வருகிறது.

**நரசிம்மன்:** கேரளத்தின் திருவனந்தபுரத்தில் பத்மனாபசாமி கோயில் உள்ளது.

அப்படி இருக்க குருவாயூரப்பன் கோயிலுக்கு மட்டும்—ஏன், அரிசி தமிழ் நாட்டிலிருந்து வழங்கப்படுகிறது ?

**அமைச்சர் ப. உ. ச.** : இந்தக் கோயிலுக்கும் தமிழ்நாட்டு அரிசி அனுப்பப்பட்டு வருகிறது.

**ஆறுமுகம்** : தமக்கு அரிசி வேண்டும் என்று குருவாயூரப்பனே தமிழ்நாடு அரசிடம் மனுசெய்து கொண்டிருந்தாரா ?

**அமைச்சர் ப. உ. ச.** : இல்லை; தர்மகர்த்தாக் குழுவினர்தான் விண்ணப்பம் அனுப்பியிருந்தார்கள்.

**பொன்னப்ப நாடார்** (சிண்டிகேட்) : கேரள அரசே குருவாயூரப்பனுக்கு அரிசி வேண்டும் என்று கேட்டதா—அல்லது தர்மகர்த்தாக் குழுதான் அரிசி கேட்டதா ?

**அமைச்சர் ப. உ. ச.** : தர்மகர்த்தாக் குழுதான் கேட்டது.

**வீராசாமி** (தி. மு. க.) : ஆண்டவன்தான் மக்களுக்குப் படியளப்பதாகச் சொல்வார்கள் ; இப்போது ஆண்டவனுக்கே (குருவாயூரப்பனுக்கு) தமிழ்நாடு அரசு தான் படியளக்கிறது. (சிரிப்பு)

—(கேள்வி நேரம் : 8—7—71)

### அர்ச்சனைக்கு அப்ளிகேஷன்

**சுப்ரமணியம்** (தி.மு.க.): சமஸ்கிருதத்தில் தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று அரசுக்கு ஆண்டவன் விண்ணப்பம் போட்டிருந்தாரா ?

**அமைச்சர் கண்ணப்பன்** : அப்படி விண்ணப்பம் எதுவும் போடவில்லை; தமிழ் உணர்ச்சி உள்ளவர்கள் மூலம் தமிழ் அர்ச்சனை வேண்டும் என்று ஆண்டவன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

**கே. எம். சுப்பிரமணியம்** (சிண்டிகேட்) : ஆண்டவன் கேட்டாரா என்றெல்லாம் கூறி புண்படுத்தலாமா ?

**அவைத் தலைவர் மதியழகன்** : ஆண்டவனைப் புண்படுத்துகிறமாதிரி கேட்கவில்லை.

**கே. எம். சுப்பிரமணியம்** (சிண்டிகேட்) : மனிதர்களை அவமானப்படுத்துவதே ஆண்டவனை அவமானப்படுத்துவது போல் தான்.

**அவைத் தலைவர்** : அப்படி எதுவும் இல்லை.

—(கேள்வி நேரம். 12—7—71)

### ஆண்டவனுக்கும் அரசின் பாதுகாப்பு

**அனந்தநாயகி** (சிண்டிகேட்): ஜனாதிபதி, ஆளுநர் போன்றவர்களின் உயிரைப் பாதுகாக்க அரசு ஏற்பாடு செய்வதாகக் கூறப்பட்டது; ஆண்டவனே அவர்களுக்கு அளிக்கும் பாதுகாப்பு தவிர அரசு பாதுகாப்பு கொடுக்கத் தேவையா ?

**கலைஞர்** : சில சமயங்களில் ஆண்டவனையேகூட அரசு காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்படுகிறது.

—(கேள்வி நேரம் 17—6—71)

### சைவ ஓட்டல்களில் சிவ-பார்வதி தாண்டவம்

**சங்கமுத்துத் தேவர்** (சிண்டிகேட்) : சென்னையில் எத்தனை சைவ-அசைவ ஓட்டல்களில் உணவு—நாட்டியம் நடத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது ?

**கலைஞர்** : ஆறு புலால் உணவு விடுதிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது ; சைவ விடுதிகள் எதற்கும் அனுமதி இல்லை.

**வீராசாமி** (தி. மு. க.) : சைவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? உணவு நடனத்தை சைவ விடுதிகளிலும் நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**கலைஞர்** : சைவ விடுதிகளில், வேண்டுமானால் சிவ-பார்வதி நடனம் ஏற்பாடு செய்யப்படலாம்.

—(கேள்வி நேரத்தின்போது 21—7—71)

### திருட்டுச் சாமி

**தேவராஜன் (தி.மு.க.):** சாமி சிலையைத் திருடி நிறுவினால்தான் மகத்துவம் என்று கூறப்படுகிறதே; இது பற்றி முதல்வர் கருத்து என்ன ?

**கலைஞர்:** சிலையைத் திருடிக்கொண்டு போனால்தான் மகத்துவம் என்று சிலர் நினைக்கலாம்; இதைப்பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை.

**தேவராஜன் (தி.மு.க.):** தியாகராய நகரில் 'திடீர்' என்று தோன்றிய பிள்ளையார் சிலையும்—திருடப்பட்ட சிலையை மற்ற இடத்தில் நிறுவினால்தான் மகத்துவம் என்ற நம்பிக்கையுடன் எழுந்ததுதானா ?

**கலைஞர்:** தியாகராய நகர் திடீர் பிள்ளையார் சம்பவம் பற்றி ஏற்கனவே சபையில் நான் கூறியிருக்கிறேன்; எனவே அதை இத்துடன் விட்டுவிடலாம்.

**துரைமுருகன் (தி.மு.க.):** கடவுள் சிலைகளில் அதிகமாகத் திருட்டுப் போவது ஆண் கடவுள்களா ? அல்லது பெண் கடவுள்களா ? (சிரிப்பு)

**கலைஞர்:** ஆண்—பெண் என்று பால் வேறுபாடு பார்த்து கடவுள் சிலைகள் திருடப்படுவதில்லை.

**கே. எம். சுப்பிரமணியம் (சிண்டிகேட்):** போலீசே சிலை திருடியதாக சம்பவம் ஏதாவது உண்டா ?

**கலைஞர்:** போலீஸ் சிலை திருடுகிறதா—போலி பக்தர்கள் திருடுகிறார்களா என்பது தெரியவில்லை.

('சிலைகள் திருட்டு தொடர்பான கேள்வி பதில்கள்' 22—7—71)

### கருவுக்கு கரு கடவுளா ?

**வீராசாமி (தி. மு. க.):** கரு என்பது ஆண்டவனால் ஏற்படுத்தப்படுகிறது என்கிறார்கள். உங்கள் கருத்து என்ன?

**அமைச்சர் அன்பழகன்:** அந்தப் பெண்ணேதான் அப்போது ஆண்டவன்.

—(கேள்வி நேரம் 23—7—71

# கடவுளில்லை

கடவுளில்லை கடவுளில்லை கடவுளென்பதில்லையே
மடையுடைந்து மோதியெம்மை சூழ்கடித்த போதிலும்
கடவுளில்லை கடவுளில்லை கடவுளென்பதில்லையே
படைதிரண்டு முட்டியெம்மைச் சுட்டெரித்த போதிலும்
கடவுளில்லை கடவுளில்லை கடவுளென்பதில்லையே
இடிஇடித்துத் தாக்கியெம்மை தகர்த்தொழித்த போதிலும்
கடவுளில்லை கடவுளில்லை கடவுளென்பதில்லையே
கடைவிரித்த எங்கருத்தைக் கொள்வாரில்லா போதிலும்
கடவுளில்லை கடவுளில்லை கடவுளென்பதில்லையே
வாளெடுத்துக் கிளம்பிவந்து குடலறுத்த போதிலும்
கடவுளில்லை கடவுளில்லை கடவுளென்பதில்லையே
மறைந்தொழிந்து கல்லெறிந்து வீழ்த்துகின்ற போதிலும்
கடவுளில்லை கடவுளில்லை கடவுளென்பதில்லையே
தடைவிதித்து மடக்கியெம்மை சிறைபிடித்த போதிலும்
கடவுளில்லை கடவுளில்லை கடவுளென்பதில்லையே
விஷங்கலக்கி ஊட்டியெம்மை மாய்த்தொழித்த போதிலும்
கடவுளில்லை கடவுளில்லை கடவுளென்பதில்லையே

—ப. திருவேங்கடம்

# PERIYAR,

# THE FATHER AND THE MOTHER

A. N. SATTANATHAN

My many friends amongst the Brahmans often ask me what is it I find so attractive in Periyar, though I am not known to be a pronounced atheist, or a regular member of the Dravida Kazhagam or of the D. M. K, or a member of the Rationalist Forum. To the outside world he is pictured by the not too friendly English language Press as an iconoclast, a hater of the Epics and Puranas, and a destroyer of traditions and a denouncer of priesthood. He breathes fire and brimstone in his public utterances. He does not even spare Tamil and Tamilians. How could such a person be liked, though he may be admired, may be respected and followed. Can he command love ? That is the question that puzzles the outside world ! He certainly is loved not only by his intimate associates but by all who have had occasion to see him and speak to him even once casually.

The man of iron, has a heart as gentle as the jasmine flower. Stalin, the man of steel, hated crowds and hated the common man. He did not love them. Our revolutionary loves crowds and loves the common man. Stalin distrusted and despised women. Our man of iron loves them, respects them, and is their greatest champion. Stalin followed a ruthless path in the pursuit of power. He wanted to tame the people to submit to his iron will. The giant of Erode wants to convert them, wants to correct their superstitious ways of life. He does not crave either for power or for even popularity. He is selfless. His attitude is that of a mother towards her wayward and erring children. He is more a mother than a father, and talks that way too to people who call on him. Every caller leaves his presence, happy and uplifted.

I heard a story about him in Bombay nearly 35 years ago. He was staying as the guest of a dear friend of mine, with two of his devoted disciples. Of the two, one reached the height of political fame and power and he is no longer with us. The other has turned religious after a period of irreligion and goes his saintly way apart. E. V. R. had even then a saintly white mane and with his two disciples in attendance, could easily be mistaken for a Swamiji or Acharya-the South had always produced this species in abundance. The Gujarati and Maharastrian ladies of the neighbourhood, orthodox and pious Hindus as they were, desired his darshan and turned up in some number with their offerings of fruits and flowers. This unsuspected pilgrimage was brought to the notice of the Master. Any other iconoclast would have seized this opportunity to harangue these superstitious women. Not Periyar ! He did not want to displease them. He sat in silence on the floor of his room, where the visiting devotees were seated. There was a silent communion, reminiscent of the Buddha. After a while he raised his hands in salutation and smiled. The ladies departed thoroughly satisfied with the darshan of the Mahan. His heart must have gone out to them in compassion, and silence communicated this communion more eloquently than any words. I had this story's authenticity confirmed by the surviving disciple and by the Master himself.

He preaches self-respect. His movement was in the beginning called the Self-

Respect Movement. Few who preach self-respect, appreciate the practice of self-respect in others. The preacher demands unquestioning obedience. Recently I had some disagreement with some people. Periyar asked me what exactly led to this disagreement. After explaining the details I concluded by saying, "By conducting myself in this manner I might have incurred their wrath. I would rather risk this, than lead them think that I have no self-respect." Periyar was immensely pleased with this argument, and said that I did the right thing. He certainly can appreciate the other man's point of view if there was honesty and sincerity behind it. Though not a believer in democracy, he believes in man.

On the few occasion I talked to him at close quarters, the things that impressed me most were his unfailing courtesy, and a lively sense of humour. Though poor in health and suffering from handicaps which would have driven a lesser person into an abyss of frustration and self-pity, Periyar receives his visitors, big and ordinary, with folded hands first, and with a hand-shake to follow, and makes very kindly inquiries aided by a prodigious memory. He laughs with you and even laughs at himself! He makes one believe that he is one of the family. Talking of iconoclasm, I told him once, "Father, you preach against idol worship. But you are being worshipped even now, and before very long coconuts will be broken at the feet of your statues (idols) and libations will be poured over your head." He was seized with a fit of mischievous laughter and all of us in the room laughed with him.

Who will not love this man, known as the father to his followers, but who is really a mother and child rolled into one! Remember that it is only in Tamilnadu that God is worshipped as "Thayumanavar"—as one who turned mother.

---

"வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனைய உயர்வு"

"சிதைவிடத்தொல்கார் உறவோர்
புதையம் பிற்பட்டுப் பாடூன்றுங் களிறு"

'உயர் எண்ணங்கள் மலருஞ்சோலை', 'கருணைக் கடல்', 'அறிவுச் சுடர்',
'மனிதாபிமானத் தந்தை'

**பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் 93-ம் ஆண்டு பிறந்தநாட் செய்தி:**

நீங்கள் எந்தப் புத்தகத்தைப் படித்தால்தான் என்ன பயன்? படிப்பது என்பது அறிவு உண்டாவதற்கு. ஆனால் நீங்கள் படிக்கும் புத்தகங்கள் எல்லாம் பெரிதும் மடமை வளர்ச்சிக்கும் மூடநம்பிக்கை ஏற்படவுமே பயன்படுகின்றன. அதனால்தான் 1971-லும் நம் மக்கள் பகுத்தறிவற்றுச் சூத்திரர்கள் என்று சொல்லும்படியாக இருக்கிறார்கள்.

நீங்கள் பெரியார் சுயமரியாதைப் பிரசார ஸ்தாபனக் குடி அரசு பகுத்தறிவு பதிப்பகப் புத்தகங்களை வாங்கிப் படித்தால் கட்டாயம் பகுத்தறிவுவாதிகளாவீர்கள். இந்தப் புத்தகங்கள் மதம் சாதி நம் அரசியல் முதலிய துறைகளில் உள்ள புரட்டுக்களை விளக்கி உங்களைப் பகுத்தறிவுவாதிகளாக்கும். விலை மிக மிக மலிவு. பொது நலத்தை முன்னிட்டே நட்டத்திற்குப் பதிப்பிக்கப்படுகின்றன.

**—ஈ. வெ. ரா.**

**நகர திராவிடர் கழகம், அருப்புக்கோட்டை.**

(இராமநாதபுரம் மாவட்டம்)



# PATRIARCH OF DRAVIDANAD

**Prof. S. SIVASWAMY,** M. A.,

Before Charles Darwin, Western men believed, very simply, that man was a God like creature-Created by God in a single day, in his own image. Then Darwin announced his Theory of Evolution tracing man's descent from apes-and shattered for ever the beliefs that had reigned supreme for 5,000 years of history. Since Darwin the World has never been the same. Your life, your personal beliefs, the World you live in-all are different because of Darwin.

" Is man an ape or angel ? I, my Lord, am on the side of the angels. I repudiate with indignation those new fangled theories!" So spoke Benjamin Disraeli before the House of Commons-denouncing Darwin's Theory of Evolution. But this was only the beginning of the scorn and vituperation heaped upon Darwin-for daring to say that man was descended from apes. In the famous, " Monkey Trial " in America, the Theory actually became the centre of a legal storm. And only recently-in 1968-did the Supreme Court of the United States finally rule that the Theory of Evolution was "Suitable" to be taught in any institution of learning.

The greatest leader of Dravidanad, the grand old patriarch of Dravidian cultures also had to face the most severe opposition from the old-timers steeped in all kinds of superstitious beliefs and inhilition. For more than half a Century he was carrying on with a missionary zeal the great torch of wisdom and common sense trying to dispel the darkness that had enveloped Tamilnadu for centuries together.

Tamilnadu, like other parts of India had produced in the past great saints, Seers and philosophers, But none of them had done as much service to the common illiterate man as Periyar E. V. R. He has given a new look to Tamilnad and a new out look to the Tamilians. We are proud to live in a new epoch, the beginning of an era in the history of Tamils headed and founded by Periyar.

What is this new era in our history? A Classless society based on common sense and enlightened rational thinking is slowly but steadily replacing the old order with a blind religious back ground, with all superstitious beliefs, Castes, and communities, belief in science and not in myth has become the order of the day. Domination of one community over another by virtue of birth is almost out dated in principle. There is a great awakening of the depressed Classes and these 'have-nots' are trying to come up in life by educating themselves. In short a new generation based on equality, liberty, and fraternity has sprung which is enlightened, rational and freedom loving.

This transformation was possible because of the influence and dynamism of Periyar.

What is the secret of the greatness of Periyar? First is his fearlessness. He is not afraid of any form of opposition. He is loyal to his principles. He believes and upholds man's basic rights. It is a rather interesting study of his life, that Periyar E. V. R. who does not believe in the existence of God should lead the Harijans and depresses classes in the Vaikam Sathyagraha. It was not because he believed in the existence of God but because he believed in the equality of man and right of man to worship. It is this right of an individual which became the keynote of his fight for the benefit of the backward classes.

The Backward Communities owe their all to Periyar for the great advance they have made in the field of education and in getting their rights recognised in the modern set up. Without the great efforts of Periyar the brute majority of the backward Communities would be even now limping like a sick member of the common society of man.

The great debating skill and power of oration of Periyar is weil-known. He is the leader of the great School of Powerful speakers in Tamilnadu. His greatest gift to Tamilnadu is our late Chief-Minister Anna and his party which is ruling Tamilnadu today. When we think of Periyar, we feel that he is a character who has stepped out of Plutarch Lives!


**சித்த வைத்திய ஆராய்ச்சி**

**சர்ம நோய்களில் நல்ல பயன் தருகிறது**



பழனி, ஜூன்-1, பழனியில் கடந்த 17 வருடமாக தமிழ் வைத்தியத்தில் சிறந்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. வைத்திய நூல்களைப் பயின்று, அதன்படி மருந்துகளை பொருட் செலவு கருதாமல் செய்து, சோதனைகள் நடத்தி நல்ல பல முடிவுகள் கண்டு வருகிறார்கள். பழனியில் உள்ள பிரபல வைத்திய குடும்பத்தில் தோன்றி சட்டப் படிப்பு படித்தும், தமிழ் வைத்தியத்தில் உள்ள நம்பிக்கையின் காரணமாக, அதையே தொழிலாகக் கொண்டு, பல நற்பணிகளை இன்று செய்து வருகிறார், திரு. சங்கரநாராயண், B.A., B.L.,

சர்ம நோய்களில் பலவற்றிற்கு சித்த மருத்துவத்தில்தான் நல்ல குணம் காணலாம். சாதாரணமாக எக்ஸிமாவில் நீர் வடிதலும், தோல் தடித்து, கருப்பு பத்து போல் ஆகிப் பல வருடங்களாக பல வைத்தியத்திற்கும் கட்டுப்படாமல் இருந்துவரும், இந்த சர்வ சாதாரணமான நோய், முதல் PSORIASIS உடம்பெல்லாம் செதிள்களாக உதிர்தல், செம்மேகம், திமிர் சொரணை குறைந்து விடுதல் போன்ற பெரிய சர்ம நோய்களுக்கும் மிக விரைவில் குணம் காணும் சித்த மருந்துகள் இருக்கிறது. வெண் புள்ளிகள் மிகவும் சாதாரண சித்த மூலிகைகளால் செய்த மருந்துகளால் குணமடைகிறது. மற்றும் ஆஸ்த்மா, நீரிழிவு, சோகை, காமாலை, உடல் மெலிவு, தளர்ச்சி போன்ற நோய்களிலும் சிறந்த பலன் தருகிறது. தமிழ் மருத்துவத்தில் நம்பிக்கை உள்ளவர்கள்—பயனடைய விரும்புகிறவர்கள் பழனிக்கு நேரில் வரலாம். எந்த நாளிலும் கடிதம் எழுதிவிட்டு புறப்பட்டு வரலாம். வசதிப்படாதவர்கள் கடிதம் எழுதி மருந்துகளை தபால் பார்சலில் பெற்றுக் குணமடையலாம். விலாசம்: **ஆனந்தா வைத்திய சாலை "வெற்றி நிலையம்"**, புது தாராபுரம் ரோடு, பழனி. தமிழ்நாடு.

போன்: **364**

# RATIONALISM, ATHEISM AND HUMANISM ALL OVER THE WORLD

INSTITUTIONS :-

1. **The Rationalist Press Association Ltd.,**
   88, Islingten High Street, London-1,
   England.

2. **American Association for the Advancement of Atheism,**
   38, Park Row, New York,
   N. Y. 10038

3. **Free Thinkers of America,**
   257, West 38th Street, New York,
   N. Y. 10018

4. **Free Thought Society of America,**
   P. O. Box 10116, Washington,
   D. C. 20018

5. **Rationalist Association,**
   P. O. Box 1762
   St. Louis Missowri 63199

6. **Humanist Society,**
   South Australia.

7. **Humanist Fellowship of Japan,**
   Tokyo.

8. **Irish Humanist Association,**
Dublin

9. **The International Humanist Ethical Union,**
Utrechet, Holland.

10. **The German Humanist Association,**
Maunover, West Germany.

11. **The British Humanist Association,**
13, Prince of Wales Tenace,
London–W–8.

12. **The Humanist Association,**
Manila.

13. **The New Zealand Rationalist Association,**
Aucland.

14. **Milan Sangh,**
(The Humanist Society of East Pakistan,)
Dacca.

15. **Atheistic Centre,**
Patamata Vijayawada–6.

16. **The Self Respect Propaganda Institution,**
Periyar Maligai, Puthur,
Tiruchi–17.

17. **The Secularist Society of India,**
Bombay.

18. **Indian Radical**
Humanist Movement,
Dehradun.

19. **Rationalist Forum,**
2, Rundalls Road,
Madras-7.

**MAGAZINES :**

1. **" Humanist "**—London—Monthly.
2. **" The Free Thinker "**—London—Weekly.
3. **" The Age of Reason "**—New York—Monthly.
4. **" American Atheist "**—Washington—Monthly.
5. **" American Rationalist "**—Missowri, Bi-Monthly.

With the best compliments of :

# KARTHIKEYAN & CO.

14, Peter's Road,
MADRAS-14.

**தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்தநாளில்**
**எங்கள் உளமார்ந்த வாழ்த்துக்கள்!**

எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் கிடைக்குமிடம்:

# மீனாட்சி மெடிகல்ஸ்,

**பஸ் ஸ்டாண்ட், தஞ்சாவூர்.**

தோற்றம்: 1940

தொலைபேசி:
| தலைமை அலுவலகம்: 164
| காவேரி அங்காடி: 691
| தொலை வரவு: "WHOLESTORE"

**தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனை**
**பண்டகசாலை லிமிடெட், டி. 878, தஞ்சாவூர்.**

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 7,00,000/- |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ரூ. | 4,73,220/- |
| காப்பு நிதி | ரூ. | 1,25,000/- |
| செயற்படும் மூலதனம் | ரூ. | 17,49,300/- |
| ஆண்டு விற்பனை | ரூ. | 1,00,00,000/-க்கு மேல் |

**கிளைகள்:**

**"காவேரி" சிறப்பு அங்காடி,**
**மளிகை-25, ஜவுளி-4,**
**காய்கனி-1, லீகோ-1.**

பண்டகசாலை பணிபெருக ஆதரவு தருக!

**S. அற்புதசாமி,**
நிர்வாக இயக்குனர்.

**S. நடராசன், M.L.A.**
தலைவர்.

# காவியங்கள், கலைகள் அவன் பெருமை பேசும்

1. நீரெல்லாம் அவன்வியர்வை : தமிழ கத்தின்
நிலமெல்லாம் அவன்நடந்த தாரை : வாழும்
ஊரெல்லாம் அவன்மூச்சின் காற்று : எம்மோர்
உயர்வெல்லாம் அவன்தந்த பிச்சை யன்றோ !

2. தன்னலத்தார் வஞ்சத்தால் நைந்து, வேத
சாத்திரத்திற் கடிமையுற்றுச் சமய நோய்ப்பட்(டு)
இன்னலுற்ற தமிழினத்திற் கொளியும் வாழ்வும்
ஈயவந்தான் : பகுத்தறிவின் ஏற்றம் சொன்னான்.

3. வணங்காது நிமிர்ந்ததலை : வாரி யன்ன
வற்றாத கருத்துக்கள் மலரும் உள்ளம் :
உணங்காத தாளாண்மை : எதற்கும் அஞ்சா
உரங் கொண்ட பெருந்தலைவன் : உழைப்பின் சின்னம்.

4. இல்லையென நீள்கரமும், இறுமாப் போடு
இந்தாவென் றெழுகரமும், கடவு ளென்னும்
வல்லவனின் படைப்பல்ல : மனிதன் குற்றம்
மாற்றுவது முறையென்றான் : வழியும் சொன்னான்.

5. “மனிதன் நீ ! வையத்தின் மன்னன் ! தாழ்வு
மனப்பான்மை யில்லாது மண்ணில் நிற்கும்
துணிவு பெறு ! பகுத்தறிவின் துணைகொள்” என்று
சொன்னவன்: எம் தென்னகத்தின் துயர்து டைத்தான்.

6. தடம்சொன்னான்: தமிழருக்குக் கண்ணும் காதும்
தன்னறிவும் மனவலியும் தந்தான் : என்றும்
கடன்பட்ட தமிழுலகம் நன்றி சொல்லும் :
காவியங்கள், கலைகள், அவன் பெருமை பேசும்.

—குலோத்துங்கன்.

துவக்கம் : 1905 தொலைபேசி எண் : 417

**நிக்கல்சன் கோ-ஆபரேடிவ் டவுன் பாங்கு லிமிடெட்,**

**எண். 8, தஞ்சாவூர்-1.**

தலைவர் : **திரு. G. இளங்கோவன்,** B.A., B.T., M.L.A.,

பிக்சட் டிபாசிட் வட்டி விகிதங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 மாதங்கள் | – 5·/. | 2 வருடங்கள் | – 7½·/. | 5 வருடங்கள் | – 8½·/. |
| 6 மாதங்கள் | – 6·/. | 3 வருடங்கள் | – 8·/. | 6 வருடங்கள் | – 8¾·/. |
| 1 வருடம் | – 7·/. | 4 வருடங்கள் | – 8¼·/. | 7 வருடங்கள் | – 9·/. |

ரூ. 10,000/-மும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் ஷை வட்டி விகிதத்திற்கு மேல் ½·/. வட்டி வழங்கப்படும். மற்றும் டிபாசிட்டர்கள் விரும்பினால் மாதம் ஒரு முறை வட்டி வழங்கப்படும்.

இரண்டு வருடங்களுக்கும்
அதற்கு மேற்பட்ட காலத்திற்கும்
ரூ. 5,000/-மும், அதற்கு மேற்பட்ட தொகையை பிக்சட் டிபாசிட்டில் போடுபவர்கள் விரும்பினால் மாதம் ஒருமுறை வட்டி வழங்கப்படும்.

குறிப்பு : வங்கியின் விதிகளின்படி தொகையும், காலமும் எதுவாகினும், அதிக பட்ச வட்டி 9·/. மட்டும் என்பதை அறியவும்.

**சேவிங்ஸ் டிபாசிட்டு (Daily Products) 5·/. p. a.**

GRAMS : ROSE ARUNACHALAM
SHEVAPET SALEM

Phone No.
8307

Rly. Station
Salem Market

**ரொ. சு. அருணாசலம் செட்டி அண்டு சன்ஸ்**

கைத்தறி ஜவுளி வியாபாரம்

**54, கொமாரசாமி செட்டித் தெரு,**

தபால் பெட்டி எண். 209

**செவ்வாய்பேட்டை, சேலம்-2.**



திரு. ரொ. சு. அருணாசலம்
செட்டியார் அவர்கள்

வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி !

நாங்கள் 30 வருடங்களாக ஆடவர்களுக்கு 60s, 80s, 100s நூல் கட்டு வேஷ்டிகளும், மேல் துப்பட்டாக்களும், டைமண்டு வேஷ்டிகளும், லினன் லுங்கிகளும், மகளிர்களுக்கு 6, 7, 8 கெஜம் நூல் சீலைகளும், நார்பட்டு சீலைகளும், அசல் பட்டு சீலைகளும், ரவிக்கைகளும், கைத்தறியில் தயாரித்து, மொத்த வியாபாரிகளுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் விற்பனை செய்து வருகின்றோம்.

வியாபாரிகளின் நல்வரவை
எதிர்பார்க்கின்றோம்.

வணக்கம்.

# அய்யாவின் அருந் தொண்டு!



— திருவாரூர் கே. தங்கராசு —

“ஆத்மா, மோட்சம், நரகம், பாபம் புண்ணியம்” முதலியவைகளைக் கற்பித்தவர்களை அயோக்கியர்கள், மன்னிக்கப் படவே கூடாத கொடியவர்கள் என்பதாக நமது தந்தை பெரியார் அவர்கள் கூறுகிறார்கள்.

நுனிப்புல் மேயும் மனப்பாங்கு கொண்டவர்களுக்கு இது ஏதோ புராணங்களையும், முன்னோர்களையும் வேத விதிகளை ஏற்படுத்தியவர்களையும் தாக்குவதற்காக பெரியார் அவர்கள் கையாளும் கடுமையான வார்த்தைகள் என்ற அளவுக்குத் தான் படும்; யாரோ சிலர் (பார்ப்பனர்கள்) மீது கொண்டு விட்ட கோபங் காரணமாக அய்யா அவர்கள் எல்லாவற்றையுமே மிகக் கடுமையாகச் சாடுகின்றார்கள் என்பதாகவுங் கூறிடுவர்!

ஆனால், ஆய்ந்து பார்த்திட்டால் இன்றைய பார்ப்பனீய உயர்வுகளுக்கும்—சாதி மனப்பாங்கு அழியாது இருப்பதற்கும்—நமது சமயத் தலைவர்கள் பலரது குழப்பங்களுக்கும் மூல காரணமாக இருப்பது, மேலே கூறப்பட்ட “ஆத்மா, மோட்ச, நரக, பாவ, புண்ணிய” சிருஷ்டி தான் என்பது வெள்ளிடை மலையாக விளங்காது போகாது.

மனிதப் பிறவிகளிடை இயல்பாக எழுந்து நிற்கும் ‘சபலங்களை’ (ஆசைகளை) நன்கு உணர்ந்திட்ட வேதகால ஆரியர்களில் சில கொடியவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் ஒரு ‘ஆத்மா’ இருப்பதாகவும் அது அழிவற்றதென்றும்;

உலக வாழ்வின் போது அவரவர் அனுஷ்டிக்கும் ‘தர்ம’ நியதிகளுக்கேற்ப; செய்யும் ‘பாப புண்ணியங்’களுக் கேற்ப; அவரவருடைய ஆத்மாவும் மோட்ச உலகிற்கோ அன்றி நரக உலகிற்கோ செல்வதாகவும் உறுதியாகக் கூறலாயினர்.

உலக வாழ்வின்போது ஆரிய (இந்து) வேத மத தத்துவங்களை அப்படியே ஏற்று ஒழுகினால்—வேத மதத்தின் அடிப்படைச் சடங்காகிய வேள்விகளை (யாகங்களை) முன்னின்று நடத்தினால் நடத்த உதவி புரிந்தால்—அதன் மூலம் வானுறையும் தேவர்கள் திருப்தியடைந்து அப்படிப்பட்டவர்களுக்கு மோட்சத்தில் இடம் பெற்றுத் தருவார்களென்றும் கூறலானார்கள்.

மோட்சத்தில் (சொர்க்கத்தில்) நரை, திரை, பிணி, மூப்புகளுக்கு அப்பாற்பட்ட இன்ப வாழ்வும், அளவற்ற செல்வமும் எழில்மிக்க இளம் மடந்தையர்களும் ஏராளமாக இருப்பதாகவும் அங்கே செல்லும் ‘ஆத்மாக்கள்’ இத்தனை போகங்களையும் அனுபவித்துக்கொண்டு பரமாத்மாவுக்குப் பக்கத்திலேயே—செய்த புண்ணியங்கள் தீருமட்டும் இன்பமாக வாழலாமென்றும்—பின்னர் உலகிலே மறுபடியும் பிறவி எடுக்கலாமென்றும் திடமாக கூறியதுடன்;

மனித ஆத்மாக்களை சொர்க்கத்துக்கு அனுப்பிடும் யாக யக்ஞாதி கர்மங்களை (Key to th heaven) நடத்திடும் உரிமை பார்ப்பனர்களுக்கே உரியது என்பதாகவும் திட்டம் செய்துவிட்டார்கள்!

அதாவது சொர்க்க வாசலின் திறவு கோல் தங்களிடம் மட்டுமே இருப்பதாக நம்பும்படி செய்துவிட்டார்கள்!

அதாவது :

* மனிதர்களுக்கு இருக்கும் நெடுங் காலம்—அழிவில்லாத போகபோக்கி யங்களுடன் வாழவேண்டுமென்ற ஆசை !

* அதற்காக சிருஷ்டிக்கப்பட்ட சொர்க்கம் (மோட்சம்) !

* அங்கே சென்று அனுபவிப்பதற்கா கக் கற்பிக்கப்பட்ட ஆத்மா !
* மோட்சத்திற்கு அனுப்பிடும் சாத னங்களாக (VEHICLES) கற்பிக்கப் பட்ட யாகங்கள், சடங்குகள், அனுஷ்டானங்கள் !

* யாகங்களை நடத்துவதற்காக உரு வாக்கப்பட்ட வேதங்கள், உபநிஷத் கள், மந்திரங்கள். அவைகளுக்கான கல்வி (வடமொழி) முறைகள் !

* அந்தக் கல்வியும் யாகம் நடத்தும் உரிமையும் பிராமணர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) மட்டுமே உரி யது என்ற தர்மம் !

* அதன்மூலம் பார்ப்பனர்கள் மற்ற மனிதப் பிறவிகளிலிருந்து இயல்பா கவே உயர்ந்திட்ட வரலாறு !

இவைகளையெல்லாம் நன்கு ஆய்ந் திட்ட பிறகே உலகின் முதல் பகுத்தறிவுவா தியும் சனாதன வைரியுமான 'புத்தர் பெரு மான்', இன்றைக்கு ஈராயிரத்து அய்நூறு ஆண்டுகட்கு முன்னரே ஆரியர்களது ஷ திட்டமிட்ட மோசடிகளை மிகவும் கடுமை யாகத் தாக்கியதுடன் : 'ஆத்மா' என்ப தாக ஒன்று அறவே இல்லையென்பதையும் தமது 'அநாத்துமவாத' தத்துவத்தின் மூலம் நிலைநாட்டியதுடன்—ஆரியர்களது 'ஆகாயக் கோட்டையான' மோட்ச சாம் ராஜ்யத்தையும் தமது அறிவு வாதங்கள் மூலம் தகர்த்தெறிந்துள்ளார் !

அதனால்தான் புத்தர் காலத்திலும்— பெரும்பாலும் அவரது காலத்திற்குப் பின்ன ரும் எழுதப்பட்ட உபநிஷத்களிலும்—இரா மாயணம்போன்ற இதிகாசங்களிலுங்கூட 'புத்தன்' என்றாலே 'திருடன்' என்பதாக வும் கூறப்பட்டிருப்பதுடன் புத்தநெறியில் ஒழுகுபவர்களைக் கண்டாலே பார்ப்பனர் கள் கோபமும் வெறுப்புங் கொண்டிடும் நிலை அன்றுமுதல் இன்றுவரை இருந்திடக் காண்கிறோம் !

தங்களது சூது முறைகளையும் சூழ்ச் சித் திட்டங்களையும் வெளிப்படுத்திடும் ஆசாமிகள் யாராக இருந்தாலும் அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக உயர்ந்த அறிஞர் பெருமக்களாக இருந்தாலும் அவர்களை நஞ்சாக வெறுப்பதுவும் அவர்கள்பற்றி இல் லாத பொல்லாத இழிமொழிகளை, பழிச் சொற்களைச் சொல்வதும் ஆரியப் பார்ப்ப னர்களது இயல்பு என்பது இன்றும் நாம் கண்கூடாகக் கண்டுவரும் ஒன்றல்லவா ?

எனவேதான் இரண்டாவது புத்தராக இன்று நம்மிடையே வாழ்ந்துவரும் பகுத்த றிவுப் பகலவனாம் நம் தந்தை பெரியார் அவர்கள்—மற்ற நுனிப்புல் மேய்ந்திட்ட சீர்திருத்தவாதிகளைப்போல (ராஜாராம் மோகனராய், விவேகானந்தன்) அல்லாது சனாதன ஆரிய தர்மத்தின் ஆணிவேர் எங்கே இருக்கிறது என்று ஆராய்ந்து அதனை அகற்றிடும் பெரும்பணியில் அய ராது பாடுபட்டு வருகின்றார்கள் !

எனவே, வேத (இந்து) மதத்தின் மூலங் களாகிய வேதங்களையும், உபநிஷத் தத்து வங்களையும், இதிகாசப் புராணங்களையும் அவற்றினில் கூறப்பட்டுள்ள கடவுளர் களையும் அப்படியே—அல்லது சிறு மாற் றங்களோடோ ஏற்றுக்கொண்டு அவை களுக்கு பெருமையும், செல்வாக்கையும் தேடிக் கொடுத்துக்கொண்டே அதேசமயம் மூட நம்பிக்கை ஒழிப்புக்கும் பிறவிச் சமத் துவத்துக்கும் பாடுபடுவதாக யாராவது சொன்னால் அஃது நகைப்புக்குரிய ஒன்றா கவே அமையுமல்லவா ?

அதனால்தான் நமது தந்தை பெரியார் அவர்கள் இந்த விவகாரத்தில் சிறிதும் தாட் சண்ணியத்திற்கோ, விட்டுக் கொடுப்ப தற்கோ இடம் வைத்திடாது மிகவும் கண் டிப்புடன் செயல்பட்டு வருகிறார்கள் என் பதனை—பார்ப்பனீய கொடுமைகளுக்குப் பன்னெடுங்காலமாகப் பலியாகி—மானவாழ் வினையும், உரிமை யுணர்வுகளையும் இழந்து நிபந்தனையற்ற சமுதாய அடிமை களாக (Social Slaves) வாழ்ந்துவரும் திராவி டப் பெருங்குடி மக்கள்—சிறப்பாக மாண வர்களும், இளைஞர்களும் நன்கு சிந்தித்து

'அய்யா' அவர்களது 'பகுத்தறிவு' அணியின்பால் ஒருங்கு திரண்டிட வேண்டுகின்றேன்!

இன்று ஆண்டு தொண்ணூற்று மூன்றிலே வாழ்ந்திட்டாலும் இளைஞர்களும் வெட்கும் சுறுசுறுப்பும்—விஞ்ஞானிகளுக்கும் கைவரப்பெறாத பேரறிவாற்றலுங் கொண்டு உலகின் மிகக் கொடுமையான ஒரு காட்டுமிராண்டிக் கூட்டத்தின் (பார்ப்பனர்களின்) சமுதாய சர்வாதிகாரத்தை எதிர்த்துக் கடும்போர் நிகழ்த்திவரும் நமது தந்தையவர்கள் இந்தப் பெரும்போரில் மாபெரும் வெற்றியினை—வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியினையடைந்து மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து—நமது இனத்தையும் நலிந்திட்ட இந்த நாட்டையும், வாழவைத்திட வாழ்த்துவோமாக!

வாழ்க பெரியார்!

வெல்க அவர்தம் லட்சியங்கள்!




With the Best Compliments From

**R. GOPALSAMY**

(Alias) **Kudanthai. CHENKUTTUVAN**
P. W. D.

EXHIBIT MAKER
IRRIGATION RESEARCH STATION
POONDI,
(VIA) Trivallure.

**With the Best Compliments**

FROM

**Thiru. G. NATARAJAN**

ENGINEERING CONTRACTOR
Plot. No. 2, Vanil Arasu Road,
Rajaram Metha Nagar,
MADRAS-29.

போன் எண் : 220
,, 220A

**93-வது பிறந்தநாள் வாழ்த்து**
**தந்தை பெரியார் நீடூழி வாழ்க !**

# A. O. சோமசுந்தரம் செட்டியார்

**இரும்பு & பெயிண்ட் வியாபாரம்**

**H. O.** அய்யங்கடைத் தெரு, தஞ்சாவூர்.
**B. O.** கீழவாசல், ,,
**B. O. W. B.** ரோடு, திருச்சி-8. போன் : 6750



வாழ்க பெரியார் !

# ஸ்ரீ அம்பிகா எம்போரியம்

M/s பென்னி மில் துணியில் ரெடிமேடு ஆடைகளும்,
மார்க்கெட் பைகளும் தயாரிப்பவர்கள்
**திருநின்றவூர் R. S. P. O.** போன் 68428
(செங்கை மாவட்டம்)

ரிஜிஸ்ட்டர் டிரேட் மார்க் ரிஜிஸ்ட்டர் நெ. 188928

கிளை :
**6/6, பத்ரையன் தெரு,**
**மதராஸ்-1.**
போன் 27800

உரிமையாளர்கள் :
**M. K. ரங்கநாதன்**
**M. R. வெங்கடராமன்**

**AMBIKA DRESSES**



வாழ்க பெரியார்!

**தமிழகத்தின் தலை சிறந்த மருத்துவ மனை**

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தமிழக
அமைச்சர்கள், நீதிபதிகள் மற்றும் பல
அறிஞர்களின் பாராட்டுகள் பெற்றது.

43 ஆண்டுகள் அனுபவம் பெற்ற தலைமை வைத்தியர்
**ச. ராசகோபால்** அவர்களின் ஆலோசனை இலவசம்.

கேட்லாக் இலவசம்

## தண்டபாணி வைத்தியசாலை

இரயில்வே நிலைய ரோடு, பழனி.
(மதுரை-மாவட்டம்)
த. பெ. எண். 1. தொலைபேசி : 250

கிளை : 2/63, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
தொலைபேசி : 85843

With all the very best Wishes for many Happy Returns of the day to our beloved Leader

THANTHAI PERIYAR.

Phone : Off : 24702 Grams : 'LIGHTCAST'
Res :- 25295.

**THE CALCUTTA LIGHT CASTING SUPPLY CO.,**

19, Errabalu Chetty Street, Madras-1.

Authorised Stockists For: (i) 'Everest' Brand Asbestos Cement Products (ii) Stoneware Pipes and specials of the Madras Govt. Salt Glazed Pipe Factory Vridhachalam and Porcelain Wares of the Govt. Ceramic Centre, Vridhachalam.

Major Stockists of: (i) Snow White Glazed Porcelain Wares of E.I.D. 'Parry' make. (ii) Galvanized Iron Pipes and fittings, Gun metal fittings, Lates and Modern Type Bath Room fittings.

Direct Importers and Major Stockists of: Cast Iron Pipe and fittings (Soil & Rainwater Quality) Cast Iron Manhole Covers etc., etc.

வாழ்க பெரியார்!

காரம், மணம், குணம் ஒருங்கே
அமையப் பெற்றது

## K. S. சுப்பையா விலாஸ் பீடியே

(பதிவு எண் : 103718 : 142023)

சோம்பலை நீக்கி சுறுசுறுப்பை கொடுப்பது எங்கள் K. S. சுப்பையா விலாஸ் பீடியே இன்றுபோல் என்றும் எங்கள் பீடியை உபயோகித்து ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உரிமையாளர்.
**கே. சுப்பையா,**

K.S. சுப்பையா விலாஸ் பீடி தொழிற்சாலை,
போன் நிர் : 776.

வடக்கூர்,
தூத்துக்குடி.
(நெல்லை மாவட்டம்)

தொலை பேசி எண் : 283 தபால் பெட்டி எண் : 9

சீர்திருத்தச் செம்மல், வைக்கம் வீரர், பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 93-வது பிறந்த நாளில், அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து அவர்தம் கொள்கைகள் சமுதாயத்தில் நிலைபெறுவதைக் கண்டு களித்து வாழ வாழ்த்துகிறோம்.

## முத்தையா உணவு விடுதி (பர்ம்)

**M. U. V. ரைஸ் மில்ஸ்,**

M. ராஜன் & பிரதர், பேங்கர்ஸ்,

**திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.**

# M. U. V. டிரான்ஸ்போர்ட்ஸ்

**திருச்செங்கோடு, (பி. ஓ.) சேலம் மாவட்டம்.**

லாரி டிரான்ஸ்போர்ட், மற்றும் விவசாய அபிவிருத்திக்காக கம்ப்ரசர் யூனிட் மூலம் குறைந்த செலவில் பழைய கிணறுகளை ஆழப்படுத்தியும் புதிய கிணறுகள் வெட்டியும் கொடுக்கப்படும்.

## திருச்செங்கோடு

# முத்தையா உணவு விடுதி & கோ.,

**பேமஸ் வெஜிடேரியன் & நான் வெஜிடேரியன்**

**திருச்செங்கோடு, (பி. ஓ.) சேலம் மாவட்டம்.**

## சங்ககிரி முத்தையா உணவு விடுதி

**சங்ககிரி, சேலம் மாவட்டம்.**

குறிப்பு : சென்னை கன்னிகட் நெடுஞ்சாலையில் உள்ள எங்கள் ஓட்டலில் காலை 5-மணி முதல் இரவு 10-30 மணிவரை தரமான உணவு வகைகள் கிடைக்கும். லாரி, பஸ், டூரிஸ்ட் கார் நிறுத்த இடவசதி உண்டு.





# 92 க்கும் 93 க்கும் இடையில்

# தந்தை பெரியார் அவர்களது சுற்றுப்பயண விவரம்

## 1970 செப்டம்பர் 17 முதல் 1971 செப்டம்பர் வரை

| செப்டம்பர் 1970 | | ஊர்கள் |
|---|---|---|
| 17-ம் நாள் | ... | மதுரை : தந்தை பெரியார் பிறந்த நாள் விழா<br>காலை : படத்திறப்பு<br>பகல் : விருந்து<br>பிற்பகல் : கருத்தரங்கு<br>இரவு : பாராட்டுப் பொதுக்கூட்டம். |
| 18 ,, | ... | மணப்பாறை : பாரதி தமிழ்க்கல்லூரியின் பாரதிதாசன் மாணவர் இலக்கிய மன்றத்தின் மூன்றாவது ஆண்டு துவக்க விழா. |
| 19 ,, | ... | காட்டூர் (திருச்சி) : காமராஜ நகர் பள்ளி 4-வது ஆண்டு விழாவும் இலவச புத்தகம் வழங்கு விழாவும். |
| 20 ,, | ... | சேலம் : தந்தை பெரியார் சிலை திறப்புவிழா. |
| 21 ,, | ... | பெண்ணாடம் : மாலை 3 மணி : அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி இலக்கிய மன்ற விழா<br>பேரூராட்சி மன்ற வரவேற்பும் அய்யா பிறந்த நாள் விழாவும் துலாபார விழாவும். |
| 22 ,, | ... | சின்னபுங்கனேரி (வீரானந்தபுரம்) :<br>காலை : திருமணம்<br>மாலை : நெய்வேலி: அய்யா—அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழாக்கள். |

23 ,, ... வேலூர் (வ. ஆ.) : குடும்பநலத் திட்ட விழா.

25 ,, ... திண்டுக்கல் : தந்தை பெரியார் உருவச்சிலை திறப்பு விழா.

26 ,, ... திருச்சி : பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன கல்வி நிலையங்களின் நிறுவனர் நாள் விழா.

27 ,, ... திருச்சி : அய்யா பிறந்தநாள் விழா.

29 ,, ... நொய்யல் : மாலை 4 மணி: அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத் துவக்க விழா ; 7 மணி : வேலாயுதம் பாளையம்: அய்யா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்.

**அக்டோபர்**

4 ,, ... காலை : திருச்சி அரசினர் நலப் பள்ளி ஆசிரியர்கள் சங்க மாநாடு.

10 ,, ... பட்டுக்கோட்டை : அய்யா பிறந்தநாள் விழா.

11 ,, ... சென்னை : விக்டோரியா விடுதி தமிழ் மன்றத்தின் சிறப்புக் கூட்டம்.

12 ,, ... சென்னை : தியாகராயநகர் பொதுக்கூட்டம்.

13 ,, ... தர்மபுரி : மாலை 5 மணி : ஊராட்சி ஒன்றியத்தின் வரவேற்பும் அண்ணா உருவப்படத் திறப்பும். 7 மணி : பகுத்தறிவாளர் கழகப் பொதுக்கூட்டம்.

17 ,, ... விருதுநகர் : அய்யா பிறந்தநாள் விழா.

18 ,, ... காலை : மதுரை : திருமணம்

மாலை : அய்யா — அண்ணா பிறந்த நாள் விழாக்கள்.

19 ,, ... காலை : ஏழுமலை ஊராட்சி மன்றத்தில் அறிஞர் அண்ணா படத்திறப்பு

மாலை : பாராட்டு, நன்றி தெரிவிப்பு பொதுக் கூட்டம்.

20 ,, ... பேரையூர் (மதுரை மாவட்டம்) : பேரூராட்சி மன்ற வரவேற்பும் அண்ணா படத்திறப்பும்.

21 ,, ... தஞ்சை : கரந்தை திருமணம்.

22 ,, ... செம்பரை (லால்குடி) : ஊராட்சி மன்ற வரவேற்பும் மின்விளக்கேற்றும் விழாவும்.

| | | |
|---|---|---|
| 23 ,, | ... | காலை: கோம்புப் பாளையம் திருமணம்<br>மாலை: கோபிச்செட்டிப்பாளையம் பகுத்தறிவாளர் மன்ற துவக்க விழா. |
| 24 ,, | ... | கவுந்தப்பாடி (பவானி): பொதுக்கூட்டம். |
| 25 ,, | ... | பூலாம்பட்டி (சேலம் மாவட்டம்): அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்.<br>இடைப்பாடி: தி.மு.க. துவக்க விழாவும் அண்ணா பிறந்தநாள் விழாவும். |

**நவம்பர்**

| | | |
|---|---|---|
| 1 முதல் 5 தேதி வரை | | மாதுங்கா, தாராவி, செம்பூர், மான், கொலாபா, குல்லா முதலிய ஊர்களில் (பம்பாய்) தந்தை பெரியார், அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழாக்கள். |
| 8 ,, | ... | காலை: சிவகங்கை திருமணம்<br>மாலை 5 மணி: காரைக்குடி பகுத்தறிவாளர் மன்ற துவக்க விழா<br>7 மணி: அரியக்குடி: தந்தை பெரியார், அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழாக்கள்-பொதுக்கூட்டம். |
| 9 ,, | ... | மம்சாபுரம் (முகவை மாவட்டம்) பேரூராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பும் பொதுக்கூட்டமும். |
| 10 ,, | ... | வத்திராயிருப்பு: தி. மு. க. பொதுக்கூட்டம். |
| 11 ,, | ... | பெரம்பலூர்: பள்ளி இலக்கிய மன்ற முதலாண்டு விழாவும் கலையரங்க அடிக்கல் நாட்டு விழாவும். |
| 15 ,, | ... | நாகரசம்பட்டி: திருமணம். |
| 18 ,, | ... | காலை: புதுப்பேட்டை (பண்ருட்டி) திருமணம்<br>மாலை: 5-30 மணி: பகுத்தறிவாளர் மன்ற அமைப்புக் கூட்டம்.<br>மாலை: மேலப்பட்டாம்பாக்கம்: அண்ணா பிறந்த நாள் பொதுக்கூட்டம். |
| 22 ,, | ... | காரைக்குடி: அனைத்துலக கல்லூரி மாணவர்சார்பில் அண்ணா பிறந்தநாள் விழாவும் கருத்தரங்கும். |

**டிசம்பர்**

| | | |
|---|---|---|
| 2 ,, | ... | சேலம்: மாலை 4 மணி பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா; 7 மணி: அய்யா பிறந்தநாள் பொதுக்கூட்டம். |
| 3 ,, | ... | காலை: திருச்செங்கோடு திருமணம்<br>கீரிப்பட்டி: திருமணம் |

மாலை: 4 மணி: ஆத்தூர் நகராட்சி மன்ற வரவேற்பு, 6 மணி: பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா.

| | | | |
|---|---|---|---|
| 4 | ,, | ... | கருவேலம் பாளையம்: திருமணம். |
| 6 | ,, | ... | காலை 9 மணி: கும்பகோணம்: இல்லத்திறப்பு விழா; 10 மணி: பகுத்தறிவாளர் கழகத் திறப்புவிழா; மாலை 4 மணி: கடவுள் மறுப்பு கல்வெட்டு திறப்பு; தாராசுரம்: 5 மணி: பேரூராட்சி மன்ற வரவேற்பு; 7 மணி: அய்யா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம். |
| 9 | ,, | ... | தொண்டாமுத்தூர் (கோவை): பழைய மாணவர் கழக பொதுக்கூட்டம். |
| 10 | ,, | ... | பல்லடம் (கோவை): சிந்தனையாளர் கழகப் பொதுக் கூட்டம். |
| 11 | ,, | ... | மதுரை: திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். |
| 13 | ,, | ... | காலை: நிண்ணை கிராமம் (செங்கை மாவட்டம்): திருமணம்<br>மாலை: 5 மணி: செங்கை நகரசபை வரவேற்பு 6-45 மணி: தி. க. பொதுக்கூட்டம். |
| 15 | ,, | ... | மாலை 4 மணி: பையூர் ஊராட்சி மன்ற வரவேற்பும் மின்விளக்கேற்று விழாவும். 6 மணி: காவேரிப் பட்டணம் (தர்மபுரி) பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா பொதுக்கூட்டம். |
| 30 | ,, | ... | சேலம்: நீத்தார் நினைவு நாள். |

**ஜனவரி**

| | | | |
|---|---|---|---|
| 17-ம் நாள் | | ... | கரூர்: புதுமனை புகுவிழா |
| 20 | ,, | ... | சென்ராயன் பாளையம் (சேலம்): பெயர்சூட்டு விழா. |
| 23, 24 | ,, | ... | சேலம்: மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடுகள். |
| 29 | ,, | ... | வாடிப்பட்டி (மதுரை): திருமணம். |
| 30 | ,, | ... | காலை: சென்னை (மயிலை) வாழ்க்கை ஒப்பந்த விழா; மாலை 6-30 மணி: பகுத்தறிவாளர் சிறப்புக்கூட்டம். |

**பிப்ரவரி**

| | | | |
|---|---|---|---|
| 2-ம் நாள் | | ... | சென்னை: மயிலை தி. க. பொதுக் கூட்டம் |
| 5 | ,, | ... | திருச்சி: திருமணம் |

| | | | |
|---|---|---|---|
| 7 | ,, | ... | காலை: பட்டுக்கோட்டை திருமணம்<br>மாலை: திருச்சி சிந்தனையாளர் கழகச் சிறப்புக் கூட்டம். |
| 16 | ,, | ... | முள்ளிப்பாடி: (திண்டுக்கல்) தி. க. பொதுக்கூட்டம். |
| 20 | ,, | ... | திருச்சி: அனைத்துக் கல்லூரி திராவிடர் மாணவர் பொதுக் கூட்டம். |
| 21 | ,, | ... | காலை: திருத்துறைப்பூண்டி திருமணம்<br>மாலை: தஞ்சை தி. க. பொதுக்கூட்டம். |
| 22 | ,, | ... | மாலை: 5 மணி: திருவாஞ்சியம் புதுமனை புகுவிழா<br>7 மணி: நன்னிலம்: அய்யா பிறந்த நாள் பொதுக் கூட்டம். |
| 23 | ,, | ... | சேலம்: பொதுக்கூட்டம். |
| 26 | ,, | ... | மதுராந்தக நல்லூர்; தேர்தல் பிரசார பொதுக்கூட்டம்.<br>சிதம்பரம்: தேர்தல் பிரசார பொதுக்கூட்டம். |

**மார்ச்சு**

| | | | |
|---|---|---|---|
| 1 -ம் நாள் | | ... | கரூர்: தி. மு. க. வேட்பாளர்களை ஆதரித்து பொதுக் கூட்டம். |
| 7 | ,, | ... | சேலம்: திருமணம். |
| 21 | ,, | ... | வேலூர் (வ. ஆ.): வெற்றிபெற்றோர்—வாக்காளர் ஆகியோர்க்குப் பாராட்டு, நன்றி தெரிவிப்புப் பொதுக்கூட்டம். |
| 25 | ,, | ... | விராலிமலை: 4 மணி: ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு<br>5 மணி: அரசினர் உயர்நிலைப்பள்ளி இலக்கிய மன்ற ஆண்டு விழா. |
| 27 | ,, | ... | திண்டுக்கல்: பகுத்தறிவாளர் கழகத் தொடக்க விழா. |
| 28 | ,, | ... | காலை: வாடிப்பட்டி (மதுரை) திருமணம்<br>மாலை: 3 மணி: ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு<br>5 மணி (தமுக்கம் கலையரங்கில்) பகுத்தறிவாளர் கழகத் தொடக்க விழா; 7 மணி: மாபெரும் பொதுக் கூட்டம். |
| 30 | ,, | ... | ஈரோடு: திருமணம் |
| 31 | ,, | ... | காலை: புதுக்கோட்டை திருமணம்<br>மாலை: பொதுக்கூட்டம் |

ஏப்ரல்

4 -ம் நாள் ... காலை: திருவாரூர் திருமணம்
மாலை: மன்னார்குடி திருமணம்

5 ,, ... திருச்சி: பாராட்டுக் கூட்டம்

9 ,, ... தர்மபுரி: நன்றி அறிவிப்போடு பாராட்டுத் தெரிவிக்கும் விழா.

11 ,, ... காலை: அறந்தாங்கி (தஞ்சை) காதணி விழாவும் திருமண விழாவும்;
மாலை: பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா.

12 ,, ... காலை: கும்பகோணம் திருமணம்
மாலை: ஆடுதுறை (தஞ்சை) அய்யா பிறந்த நாள் விழா.

13 ,, ... திருவையாறு: மாலை 5-30 மணி: பேரூராட்சி மன்ற வரவேற்பு.
6-30 மணி: பாராட்டும் நன்றி தெரிவிப்பு விழாவும்.

14 ,, ... மணக்கால் அய்யம்பேட்டை: நன்றி அறிவிப்பு, பாராட்டு, வெற்றிவிழா.

15 ,, ... அரியலூர் (திருச்சி மாவட்டம்): பாராட்டு விழா, பொதுக்கூட்டம்.

16 ,, ... சீர்காழி—வைரவன்கோடி: வெற்றி விழாப் பொதுக் கூட்டம்.

17 ,, ... திருச்சி: சிந்தனையாளர் கழகச் சிறப்புக் கூட்டம்

18 ,, ... திருச்சி: திராவிடர் கழகப் பொதுக் கூட்டம்.

19 ,, ... சுமைதாங்கி (வாலாஜா வட்டம்): தி. மு. க. வெற்றி விழாப் பொதுக்கூட்டம்.

20 ,, ... குடியேற்றம் (வ. ஆ.): திராவிடர் கழகப் பொதுக் கூட்டம்.

21 ,, ... நாட்றம் பள்ளி: ஆசிரியர் சங்க ஆண்டு விழா.

22 ,, ... குமாரபாளையம் (பவானிவட்டம்): திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்.

23 ,, ... செட்டிக்குளம் (திருச்சி): ஆரம்ப ஆசிரியர் சங்க மாநாடும் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் வரவேற்பும்.

24 ,, ... தேவக்கோட்டை : பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா.

25 ,, ... மாலை : 5 மணி: அரியக்குடி : வரவேற்பும் நன்றி தெரிவிப்பும். 7 மணி: காரைக்குடி: தமிழகஅரசுக்கு பாராட்டுக் கூட்டம்.

26 ,, ... காலை : சிவகங்கை இராமலட்சுமி உயர்நிலைப் பள்ளி இலக்கிய மன்ற நிறைவு விழா.
மானாமதுரை : 4 மணி: ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு. 7 மணி: பகுத்தறிவாளர் கழகம் துவக்கவிழா.

27 ,, ... சிவகங்கை : திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்.

28 ,, ... விருதுநகர் : பாராட்டுரை வழங்கும் பொதுக்கூட்டம்.

29 ,, ... புளியம்பட்டி : திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்.

30 ,, ... கூத்தூர் (திருச்சி) : தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்க ஆண்டுவிழா.

மே

3 -ம் நாள் ... திருத்துறைப்பூண்டி : அய்யா பிறந்த நாள் விழா.

4 ,, ... காலை : மாயூரம்: பாவேந்தன் பாரதிதாசன் விழா.
மாதிரிமங்கலம்: அய்யா பிறந்தநாள் விழா.
மாலை : மூட நம்பிக்கை ஒழிப்புக் கூட்டம்.

5 ,, ... பேரங்கியூர் : அய்யா பிறந்தநாள் விழா.

6 ,, ... விழுப்புரம் : பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா.

7 ,, ... சென்னை : தமிழக அமைச்சரவைக்குப் பாராட்டு விழா.

9 ,, ... ஒரத்த நாடு (தஞ்சை) : பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா.

10 ,, ... பாய்ச்சூர் (லால்குடிவட்டம்) : காதணி விழா.

11 ,, ... கடத்தூர் (தர்மபுரி மாவட்டம்) : பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா.

12 ,, ... அரூர் (தர்மபுரி மாவட்டம்) : 6 மணி: பாராட்டு விழா.
பிற்பகல் 3 மணி: வட்டக் கமிட்டிக் கூட்டம்.

13 ,, ... நாகர்கோவில் : திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்.

15 ,, ... திருவாரூர் : பகுத்தறிவாளர் கழக மாநாடு
(தஞ்சை மாவட்ட மாநாடு)

| | | | |
|---|---|---|---|
| 16 | ,, | ... | திருவாரூர்: திராவிடர் கழக மாநாடு (தஞ்சை மாவட்ட மாநாடு.) |
| 18 | ,, | ... | காலை: அரகண்டநல்லூர்: திருமணம்<br>மாலை: சென்னக்குணம் திராவிடர் கழகப் பகுத்தறிவு பொதுக்கூட்டம். |
| 19 | ,, | ... | காட்டுமன்னார்குடி: திராவிடர் கழகப் பொதுக் கூட்டம். |
| 21 | ,, | ... | பெருவளப்பூர் (லால்குடி): திராவிடர் கழகக் கட்டிடத் திறப்பு விழா. |
| 22, 23 | ,, | ... | திருச்சியில் மாநாடுகள்: நாத்திகர் மாநாடு, பார்ப்பனரல்லாதார் மாநாடு. |
| 24 | ,, | ... | மணக்கால் (லால்குடி): தி. க.—தி. மு. க: மாபெரும் பாராட்டுக் கூட்டம். |
| 26 | ,, | ... | காலை: ஈரோடு திருமணம்<br>மாலை: அய்யா பிறந்த நாள் விழா. |
| 27 | ,, | ... | குருப்ப நாயக்கன் பாளையம் (கோவை மாவட்டம்): பகுத்தறிவாளர் மன்ற துவக்க விழா. |
| 28 | ,, | ... | கொளத்தூர் (மேட்டூர்வட்டம்): பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா. |
| 29 | ,, | ... | காலை: ஜலகண்டாபுரம் (மேட்டூர்): வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா.<br>மாலை: பொதுக்கூட்டம். |
| 31 | ,, | ... | மேச்சேரி: பாராட்டு விழா. |

**ஜூன்**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் நாள் | | ... | கூடலூர்: மின்சார நீட்டிப்பு வேலை துவக்கவிழா. |
| 2 | ,, | ... | குரும்பலூர்: பகுத்தறிவாளர் கழக துவக்க விழா. |
| 3 | ,, | ... | காலை: கும்பகோணம் திருமணம்<br>மாலை: அய்யா பிறந்த நாள் விழா. |
| 5 | ,, | ... | வேலூர்: பகுத்தறிவாளர் கழக துவக்க விழா. |
| 6 | ,, | ... | காலை: கொடைநகர்: திருமணம்—10-30 மணி<br>செய்யாறு: நீத்தார் நினைவு நாள்<br>மாலை: திருவத்திப்புரம் பேரூராட்சி மன்றம் வரவேற்பு. |
| 8 | ,, | ... | காஞ்சிபுரம்: திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். |

| | | | |
|---|---|---|---|
| 9 | ,, | ... | சென்னை : திருவள்ளுவர் முன்னேற்ற கழக 16-வது ஆண்டு விழா. |
| 10 | ,, | ... | காலை : சென்னை திருமணம்<br>மாலை : சைதாப்பேட்டை பொதுக்கூட்டம். |
| 11 | ,, | ... | அச்சிறுபாக்கம் : அரசினர் உயர்நிலைப்பள்ளியில் வரவேற்பிதழ் அளித்தல். |
| 12 | ,, | ... | பெண்ணாடம் (தெ. ஆ.) : பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா; அமைச்சரவைக்கு பாராட்டு விழா. |
| 13 | ,, | ... | காலை: பண்ருட்டி பகுத்தறிவு மன்ற துவக்கவிழா<br>மாலை : அமைச்சர் ராமச்சந்திரனுக்குப் பாராட்டு விழா. |
| 14 | ,, | ... | காலை : ஆலங்கோட்டை திருமணம்<br>மாலை : நாச்சியார் கோவில் (குடந்தை வட்டம்) திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். |
| 15 | ,, | ... | தொண்டராம்பட்டு (ஒரத்தநாடு வட்டம்) : பொதுக் கூட்டம். |
| 17 | ,, | ... | கீரமங்கலம்—வேப்பங்குடி (பட்டுக்கோட்டை வட்டம்) : பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா. |
| 18 | ,, | ... | சிறுகனூர்—பெருகனூர் (லால்குடி வட்டம்) : மின்விளக் கேற்றுவிழா. |
| 19 | ,, | ... | ஆடுதுறை (பெரம்பலூர்) : வட்க்கலூர் வட்டார சிந்தனையாளர் கழகத் துவக்க விழா. |
| 20 | ,, | ... | விருத்தாசலம் : மாலை 6 மணி: ஊராட்சி ஒன்றியம் வரவேற்பிதழ் அளித்தல்; கலைஞர் படத்திறப்பு விழா, 7 மணி: பொதுக்கூட்டம். |
| 22 | ,, | ... | மேட்டுப்பாளையம் (கோவை மாவட்டம்) : நகரசபை வரவேற்பும் பகுத்தறிவாளர் கழகத் துவக்கவிழாவும். |
| 24 | ,, | ... | திருப்பூர் : பகுத்தறிவாளர் முன்னேற்ற கழகப் பொதுக் கூட்டம். |
| 25 | ,, | ... | பொள்ளாச்சி : பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா. |
| 26 | ,, | ... | வேலூர் (வ. ஆ.) : திருமணம் |
| 28 | ,, | ... | வள்ளியூர் (நெல்லை) : ஊராட்சி ஒன்றியம் வரவேற் பிதழ் அளித்தல் ; திராவிடர் கழகப் பொதுக் கூட்டம். |
| 30 | ,, | ... | சேரகுளம் (நாங்குனேரி வட்டம்) : மாலை 5-30: ஊராட்சி மன்ற வரவேற்பு ; 7 மணி : மூலக்கரைப்பட்டி திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். |

**ஜூலை**

| | | |
|---|---|---|
| 1 -ம் நாள் | ... | ஸ்ரீவைகுண்டம்: பகுத்தறிவுமன்றப் பொதுக்கூட்டம். |
| 2 ,, | ... | தூத்துக்குடி: மாலை 5 மணி பகுத்தறிவாளர் கழக அமைப்புக்கூட்டம்; 7 மணி: அய்யா—அண்ணா பிறந்தநாள் விழாக்கள். |
| 3 ,, | ... | அம்பாசமுத்திரம்: அய்யா பிறந்ததின விழா: |
| 4 ,, | ... | திருநெல்வேலி: காலை: செய்துங்கநல்லூர் தேவேந்திர குல வேளாளர் கல்லூரி அடிக்கல் நாட்டுவிழா.<br>பகுத்தறிவாளர் கழக துவக்க விழா; மாலை: திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். |
| 5 ,, | ... | கடைய நல்லூர்: கலைஞர் பிறந்த நாள் விழா. |
| 6 ,, | ... | சங்கரன் கோவில்: பகுத்தறிவு மன்றப் பொதுக் கூட்டம். |
| 8 ,, | ... | உல்லியக்குடி (ஜெயங்கொண்டம் வட்டம்): திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். |
| 9 ,, | ... | திருபுரந்தான் (திருச்சி மாவட்டம்): பகுத்தறிவு பிரசார பொதுக்கூட்டம். |
| 10 ,, | ... | செந்துறை (திருச்சி மாவட்டம்): சிந்தனையாளர் கழகத் துவக்க விழா. |
| 11 ,, | ... | பாபிரெட்டிப்பட்டி (அரூர்வட்டம்): வட்டார பகுத்தறி வாளர் கழக துவக்க விழா. |
| 13 ,, | ... | காட்டுப்புத்தூர்: சிந்தனையாளர் மன்றத் துவக்க விழா. |
| 14 ,, | ... | காலை: மாப்படுகை ராமாபுரம் திருமணம்<br>மாலை: சீர்காழி தென்பாதி: திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். |
| 15 ,, | ... | பிற்பகல்: தஞ்சை திறந்தவெளிச் சிறையைப் பார்வையிடல்.<br>மாலை: ஹவுஸ் சர்ஜன்ஸ் கழகத் துவக்க விழா. |

**ஆகஸ்டு**

| | | |
|---|---|---|
| 8-ம் நாள் | ... | திருச்சி: திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். |
| 11 ,, | ... | முசிறி: அண்ணா கலைக் கல்லூரி-டாக்டர் கலைஞர் மாணவர் விடுதிக்கு அடிக்கல் நாட்டுவிழா. |
| 12 ,, | ... | மணப்பாறை: பிற்பகல் 3 மணி: தியாகேசர் ஆலை உயர்நிலைப்பள்ளி இலக்கிய மன்றம் துவக்க விழா<br>மாலை: 7மணி: திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். |

| | | | |
|---|---|---|---|
| 14 | ,, | ... | சென்னை : டாக்டர் கலைஞருக்கு பாராட்டு விழா. |
| 15 | ,, | ... | காலை : மருதூர் மின்விளக்கு ஏற்று விழா. |
| 19 | ,, | ... | அம்பலூர் (வ. ஆ) தி. க. பொதுக்கூட்டம் |
| 20 | ,, | ... | ஆம்பூர்—தி. க. பொதுக்கூட்டம் |
| 22 | ,, | ... | திருவண்ணாமலை (திருமணம்) |
| 23 | ,, | ... | செங்குன்றம் (சென்னை) திருமணம் |
| 24 | ,, | ... | சென்னை (சலவைத் தொழிலாளர் மாநாடு) |
| 25 | ,, | ... | பட்டுக்கோட்டை (கசங்காடு) திருமணம். |
| 28 | ,, | ... | அரக்கோணம் (பாசறை விழா) |
| 29 | ,, | ... | நாகரசம்பட்டி (தருமபுரி மாவட்டம்) திருமதி. தாயாரம்மாள் உருவப்படத் திறப்பு நிகழ்ச்சி. |
| 31 | ,, | ... | பிற்பகல் : மீன் சுருட்டி (உயர்நிலைப் பள்ளி இலக்கிய விழா)<br>மாலை : தா. பழூர் (தி. க. பொதுக் கூட்டம்) |

**செப்டம்பர்**

| | | | |
|---|---|---|---|
| 1 | ,, | ... | பட்டுக்கோட்டை |
| 2 | ,, | ... | திருவத்திபுரம் (வ. ஆ.) திருமணம் |
| 3 | ,, | ... | அவலூர் பேட்டை (தெ. ஆ.) பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா |
| 4 | | ... | விழுப்புரம் பகுத்தறிவாளர் கழகச் சிறப்புக் கூட்டம் |
| 5 | ,, | ... | கலிதீர்த்தான்குப்பம் (பாண்டி)<br>காலை: திருமணம்<br>மாலை 4 மணி: காதணி விழா<br>இரவு 7 மணி: பாண்டிச்சேரி பொதுக் கூட்டம் |
| 11 | ,, | ... | மணப்பாறை: பகுத்தறிவாளர் கழகச் சிறப்புக் கூட்டம் |
| 12 | ,, | ... | புள்ளவராயன் குடிகாடு: காலை: திருமணம்<br>மாலை : கும்பகோணம் திருமணம் |
| 14 | ,, | ... | சீதேவி மங்கலம் (லால்குடி): மின்விளக்கேற்று விழா |
| 15 | ,, | ... | பாபநாசம் (தஞ்சை): திருமணம், பொதுக் கூட்டம் |

# கடந்த ஆண்டில் கழக டைரி

### மதுரையில் உணர்ச்சிப் பெருக்கு

17-9-70

தந்தை பெரியார் அவர்கள் தம் 92-வது பிறந்த நாளில் 17-9-70 அன்று மதுரையில் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு "சுயமரியாதைக் குடும்ப உணர்வும் பகுத்தறிவாளர் கழகங்களும் நாடெங்கும் தோன்ற வேண்டும்" என்று அன்புக்கட்டளையிட்டு அறிவித்தார்கள். அன்று தந்தை பெரியார் பிறந்த நாள் மிகவும் சிறப்பாக காலை முதல் மாலைவரை கழகத்தின் சார்பில் நடைபெற்றது.

### சேலத்தில் திருவுருவச் சிலை

20-9-70

சேலத்தில் ஸ்டேட் பாங்க் எதிரில் 20-9-70 ஞாயிறு மாலை 5-45 மணிக்கு கோவை தொழில் மேதை ஜி. டி. நாயுடு அவர்கள் தலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்களின் கரவொலிக்கிடையில் டாக்டர் எஸ். சந்திரசேகர் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து புகழாரம் சூட்டினார். தந்தை பெரியார் அவர்களும் கலந்துகொண்டு அறிவுரையாற்றினார்

### பார்ப்பன ஏடுகள் புறக்கணிப்பு

21-9-70

தமிழினத்தைச் சீர்குலைத்து வாழ்வதற்கென்றே பார்ப்பனர்கள் நடத்திவரும் செய்தி ஏடுகள் மூலம் ஏற்படும் கேடுகளை விளக்கியும், அந்த ஏடுகளைப் புறக்கணிக்குமாறும் தந்தை பெரியார் அவர்கள் அறிக்கை விட்டதற்கிணங்கி 'விடுதலை' யிலும் 21, 22-9-70 தேதிகளில் வலியுறுத்தி தலையங்கம் எழுதப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தொடர்ந்து பார்ப்பன ஏடுகளை காசு கொடுத்து வாங்குவதில்லை என்று பல்லாயிரக்கணக்கான மாணவர்களும், பொது மக்களும் உறுதி ஏற்றனர்.

### திண்டுக்கல்லில் திருவுருவச் சிலை

25-9-70

திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகில் 25-9-70 மாலை 5-30 மணிக்கு தந்தை பெரியாரின் திருவுருவ முழு வெண்கலச்சிலையை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி திறந்துவைத்து "தமிழினத்துக்கு தந்தை பெரியார் எப்போதுமே தேவை" என்று குறிப்பிட்டார். விழாவிற்கு குன்றக்குடி அடிகளார் எம். எல் சி. தலைமை வகித்துச் சிறப்பித்தார். தந்தை பெரியார் அவர்களும் கலந்துகொண்டு அறிவுரையாற்றினார்.

### திடீர் பிள்ளையார் அகற்றப்பட்டது

27-9-70

திருச்சியில் உள்ள துப்பாக்கி தொழிற்சாலையின் குடியிருப்புப் பகுதியில் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து திடீர் பிள்ளையார் சிலை ஒன்றை பொது இடத்தில் நிறுவினர். அதை அறிந்த திராவிடர் கழகத்தோழர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து எச்சரித்தனர். உடனே அந்தத் திடீர் பிள்ளையார் அப்புறப்படுத்தப்பட்டது.

### பர்மாவில் பெரியார் விழா

3-10-70

தந்தை பெரியார் அவர்களின் 92-வது பிறந்த நாள் விழாவை பர்மா தலைநகரான



சேலத்தில் தந்தை பெரியார் சிலை திறப்பு விழா. திரு. ஜி. டி. நாயுடு தலைமையில் டாக்டர் எஸ். சந்திரசேகர் திறந்துவைததார்.



கலைஞரின் "நானே அறிவாளி" நாடகத் தலைமையில் அய்யா.

ரங்கூனில் அங்குள்ள தமிழர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து 3-10-70 அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். ரங்கூன் காந்தி நினைவரங்கில் அனைத்து பர்மா இந்து சென்ட்ரல் போர்டு துணைத் தலைவர் சத்தியானந்தன் தலைமையில் விழா நடைபெற்றது. சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

### சென்னை திடீர் பிள்ளையார் ஒழிப்பு —பகுத்தறிவு வெற்றி!

9-10-70

சென்னை தியாகராயர் நகர் பஸ் நிலையம் அருகில் பொது இடத்தில் அப்பகுதி பார்ப்பனர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து 9-9-70 அன்று இரவோடு இரவாக ஒரு பிள்ளையாரைக் கொண்டு வந்து நட்டு வைத்து, (சங்கராச்சாரியும்) 'சுயம்புவாக' தோன்றியது என்று கதை கட்டி விட்டார்கள். பார்ப்பன ஏடுகள் அதை பெரும் பரபரப்பான செய்தியாக்கி நகரத்திலேயே ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகச் சித்தரித்து அதிசயம் அதிசயம் என்று அலறி புராணப் புளுகுமூட்டைகளையெல்லாம் அதற்கு ஆதாரம் காட்டி அவிழ்த்து விட்டனர். இந்தச் சூழ்ச்சியை நமது 'விடுதலை' தொடர்ந்து அம்பலப்படுத்தி பொதுமக்களுக்கு இதுபற்றிய உண்மைகளை வெளியிட்டது. அதைத்தொடர்ந்து சென்னை நகரப் போலீசார் தீவிரமாக விசாரித்து அந்தப் பிள்ளையார் சிலை தியாகராயநகர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரின் உதவியாலும் பார்ப்பனர் ஆதரவிலும், தலைமை போலீஸ்காரர் செல்வராஜ் என்பவர் ரூ. 71- விலைக்கு வாங்கி வந்து வைத்தது என்று கண்டுபிடிக்கப்பட்டு 10-10-70 அன்று அப்புறப் படுத்தப்பட்டது.

### 'பிராமணாள்' பெயர் அழிப்பு

14-10-70

திருவரங்கம், திருவானைக்காவல் ஆகிய ஊர்களில் உள்ள "பிராமணாள்" ஓட்டல்காரர்கள் தங்கள் ஓட்டல் விளம்பரப் பலகைகளில் உள்ள 'பிராமணாள்' என்ற பெயரை அழிக்காமல் இருந்து வந்தனர். கழகத் தோழர்கள் அதனைக் கண்டித்தும் எச்சரித்தும் 14-10-70 அன்று மறியல் கிளர்ச்சி ஆரம்பித்தனர். மேலும் தாக்குப்பிடிக்க முடியாத பார்ப்பனர்கள் 'பிராமணாள்' பெயரை அவர்களே அழித்துவிட்டனர்.

### தந்தை பெரியாருக்கு பம்பாயில் விழா வடபுலத்தில் பெரியார் முழக்கம்

1-11-70

பம்பாய் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக்கழகமும் தந்தை பெரியார்-அறிஞர் அண்ணா ஆகியோரது பிறந்த நாள் விழாக்களுக்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்து அழைப்பு விடுத்திருந்தன. அழைப்பினை ஏற்று 28-10-70 பகல் 2-15மணிக்கு தந்தை பெரியார், ஈ. வெ. ரா. மணியம்மையார், 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி ஆகியோர் பம்பாய்க்குப் புறப்பட்டனர். அங்கு 1, 2, 5 ஆகிய மூன்று தேதிகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். பம்பாயில் தந்தை பெரியார் கலந்துகொண்ட ஒவ்வொரு நிகழ்ச்சியும் தமிழின உணர்வு பீறிட்டுக் கிளம்புவதை எடுத்துக்காட்டுவதாக அமைந்தன. நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு தந்தை பெரியார் குழு 7-11-70 அன்று பெங்களூர் வழியாக திருச்சியை அடைந்தது.

### தெருக்களில் சாதிப் பெயர் ஒழிப்பு

22-11-70

தந்தை பெரியார் கொள்கையைப் பின்பற்றி தெருக்களில் உள்ள சாதிப் பெயர்களை நீக்கிவிடுவதென செங்கற்பட்டு நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி அரசின் அனுமதிக்கு அனுப்பி வைத்திருந்தது. தமிழக அரசு அதற்கு அனுமதி கொடுத்தது.

### பார்ப்பனர்களுக்குள்ள ஏகபோக அர்ச்சகர் உரிமை ஒழிந்தது!

30-11-70

அர்ச்சகர் தொழிலுரிமையை பார்ப்பனர் மட்டுமே பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வருவதை ஒழிக்கவேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் வலியுறுத்தி வந்த கொள்கையைப் பின்பற்றி "அர்ச்சகர் தொழிலுக்கு பார்ப்பனரல்லாத பிற வகுப்பினரும் பயிற்சி பெற்று நியமனம் பெறலாம்" என்பதற்கு வழிசெய்யும் மசோதா ஒன்றைத் தமிழக சட்ட மன்றத்தில் 30-11-70 அன்று அறநிலைய அமைச்சர் தாக்கல் செய்தார்.

### கர்ப்பகிருக கிளர்ச்சி வெற்றி

2-12-70

தந்தை பெரியார் அவர்கள் அறிவித்த கர்ப்பகிருக நுழைவுக் கிளர்ச்சியின்



தீச்சட்டி ஊர்வலம்




திருவாரூரில் பகுத்தறிவுக் கண்காட்சி

## மதப் புரட்டையே உலுக்கி எடுத்த சேலம் மாநாடு

23-1-71

ஆண்டாண்டு காலமாக தமிழகத்தின் பெருங்குடி மக்களையெல்லாம் பார்ப்பனப் பெருஞ் சூழ்ச்சியால் அழுந்தி வைத்திருந்த மூடக் கருத்துக்களை ஒழித்துக்கட்ட வகைசெய்ய 23-1-71 அன்று காலை 9-50 மணிக்கு சேலம் போஸ் மைதானத்தில் மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாடு ஆரம்பமானது. தந்தை பெரியார் அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி மூட நம்பிக்கை ஒழிப்புக்கான அரியதோர் விளக்கம் கூறி அறிவுரையாற்றினார். கோவை தொழில் மேதை ஜி.டி. நாயுடு மாநாட்டைத் திறந்துவைத்தார்.

## இந்தியாவையே தன் பக்கம் திருப்பிய 2-ஆம் நாள் நிகழ்ச்சி

24-1-71

தமிழக வரலாற்றில் பொன்னேடாகப் போற்றப்படும் 2-ம் நாள் நிகழ்ச்சியாக மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நடைபெற்றது.

ராஜேந்திரா சத்திரத்திலிருந்து புறப்பட்ட இந்த மிகப் பெரிய ஊர்வலத்தில் மூடநம்பிக்கையை விளக்கிக் காட்டும் தீச்சட்டி எடுத்தல், அலகு குத்துதல் போன்றவை நூற்றுக்கணக்கான கழகத் தோழர்களாலும், தாய்மார்களாலும் பொதுமக்களுக்குச் செய்து காட்டப்பட்டன. ஒன்றரை மைல் நீளமுள்ள இந்த ஊர்வலத்தில் ராமாயண கதாபாத்திரங்களான ராமன், சீதை போன்றவர்களைக் கடவுளாகக் கருதும் பித்தலாட்டமும் அம்பலப்படுத்தப்பட்டது.

மாநாட்டில் இரு நாட்களும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :—

1. மத உணர்ச்சியைப் புண்படுத்தும் இ. பி. கோ. சட்டப் பிரிவை எடுத்துவிட வேண்டும்.
2. கடவுள்—மதத்துக்கு அரசின் பாதுகாப்பு கூடாது.
3. ஒருவன் மனைவி மற்றவனை விரும்புவது என்பதைக் குற்றமாக்கக் கூடாது.
4. கடவுள், மதம், ஜாதி, மொழி, தேசம் ஆகியவற்றில் பற்றுக் கூடாது.
5. சுப்ரீம்கோர்ட்டை எடுத்து விடவேண்டும்.
6. பார்ப்பனர்களை பிராமணர் என்று சொல்லக்கூடாது.
7. பார்ப்பனப் பத்திரிகைகளை தமிழர்கள் கண்டிப்பாக பகிஷ்கரிக்க வேண்டும்.
8. இந்துமதம் என்பது ஒரு மதம் அல்ல.
9. நாம் இந்துக்கள் அல்ல; வரவிருக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இந்துக்கள் அல்ல என்று கூறவேண்டும்.
10. ஜாதியை ஒழிப்பது என்றால் பார்ப்பானைத் துவேஷிக்க வேண்டும்.

மாபெரும் வெற்றியாக அர்ச்சகர் நியமன மசோதா தமிழக சட்டமன்றத்தில் எந்தவித எதிர்ப்புமின்றி 2-12-70 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஒருமனதாக ஆதரித்தனர்.

## உ. பி. அரசின் இராமாயணத் தடை செல்லாது—உ. பி. அய்க்கோர்ட் தீர்ப்பு

20-1-71

தந்தை பெரியார் அவர்கள் ராமாயணம் பற்றி எழுதிய ஆங்கில நூல் (Ramayan a true reading) 1957-ல் சென்னையில் வெளியிட்டதையும், இதன் இந்தி மொழி பெயர்ப்பு "சச்சி ராமாயண்" என்ற நூல் 1968-ல் கான்பூரிலிருந்து வெளியிட்டதையும் இந்துக்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்துவதாகக் காரணம் காட்டி உத்திரபிரதேச அரசு அந்நூல்களை பறிமுதல் செய்து தடைவிதித்தது. அதை எதிர்த்து லாலாபாய்சிங்யாதவ் என்பவர் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்கை உயர்நீதிமன்ற 'புல்பெஞ்ச்' விசாரித்து உ. பி. அரசின்

தடை உத்தரவு செல்லாது என்று இ. பி. கோ. 124 ஏ, 153 ஏ, 295 ஏ. பிரிவு களைச் சுட்டிக்காட்டி இ. பி. கோ. 99 ஏ பிரிவுப்படி செல்லாது என்று தீர்ப்புக் கூறியது.

**பார்ப்பனர் பொய்ப் பிரசாரம்**

30-1-71

சேலத்தில் 23, 24-1-71 தேதிகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன் றான ''ஒருவன் மனைவி மற்றவனை விரும்புவது என்பதை ஒரு குற்றமாக்கக் கூடாது'' என்ற வாசகத்தைத் திரித்து, ''ஒருவன் மனைவியை மற்றவன் அபகரித் துக் கொள்ளலாம்'' என்று தீர்மானம் நிறை வேற்றியதாக பார்ப்பன ஏடுகள் செய்திகள் வெளியிட்டன. அப்போது தமிழக சட்ட மன்றத்துக்குத் தேர்தல் நடைபெறவிருந்த தால் திராவிடர் கழகம் ஆதரிக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தைப் பதவிக்கு வர விடாமல் செய்வதறகு இந்தப் பொய்ப் பிரசாரத்தைப் பார்ப்பனர்களும், அவர்களது ஏடுகளும், மற்றும் மூட பக்தர்களும் கை யாண்டு முழுமூச்சுடன் செயல்பட்டனர். நிலைமையை அறிந்த தந்தை பெரியார் அவர்கள் உண்மையை விளக்கி 30-1-71 விடுதலையில் ''பொய்—பொய்—அயோக் கியத்தனமான பொய்'' என்று அறிக்கை விடுத்து தமிழினத்தை உஷார்படுத்தினார்.

**பார்ப்பன ஏடுகளுக்கு ''நோட்டீஸ்!''**

1-2-71

சேலம் மூடநம்பிக்கை ஒழிப்புத் தீர்மானத்தைத் திரித்து பொய்ச்செய்தி வெளியிட்ட Hindu, Indian Express, தின மணி ஆகிய மூன்று பார்ப்பன ஏடுகளுக்கும் மாநாட்டு வரவேற்புத் தலைவர் தி. வை. சொக்கப்பா சார்பில் உயர்நீதி மன்ற வழக்கறிஞர் எஸ். துரைசாமி மூலம் 1-2-71 அன்று நோட்டீஸ் அனுப்பப் பட்டது. நோட்டீஸ் கிடைத்த மூன்று நாட்களுக்குள் உண்மையான செய்தியை வெளியிட்டு மன்னிப்புக் கேட்காவிடில் சிவில், கிரிமினல் நடவடிக்கை எடுக்கப் படும் என்று எச்சரிக்கப்பட்டது.

**கருஞ்சட்டைப் படை கிளர்ந்தெழுந்தது**

7-2-71

சேலம் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தைத் திரித்துக் கூறியும், அங்கு கடவுள் அவமதிப்பு செய்யப்பட்டது. என்றும் பார்ப்பனர்களும் அவர்களைப் பின்பற்றுவோரும் ஓரணியாக நின்று கொண்டு முழுப் பலத்தையும் பயன்படுத்தி தி. மு. கழகத்தைத் தேர்தலில் எதிர்த்தனர். எதிரிகளை முறியடித்தே தீரவேண்டும் என்று உறுதிபூண்டு தமிழக முழுதும் திராவிடர்கழகத் தோழர்கள் திரண்டெழுந் தனர். தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி பார்ப்பனர் சூழ்ச்சியை முறியடிப்பதற்கான விளக்கங்களை அறிவித்துக் கொண்டே யிருந்தார். கழகத் தோழர்கள் ஆங்காங்கே தேர்தல் குழுக்களை அமைத்துக்கொண்டு தி. மு. க.வை வெற்றிபெற வைப்பதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டனர்.

**பார்ப்பன ஏடுகள்மீது வழக்கு**

9-2-71

சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு தீர்மானத்தை திரித்து செய்தி வெளியிட்ட பார்ப்பன ஏடுகள் Hindu, Indian Express, தினமணி, ஆகிய ஏடுகள் மீது 5-வது மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் 9-2-71 அன்று மான நஷ்ட வழக்குத் தொடுக்கப்பட்டது. வழக்கை ஏற்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்ப மாஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டார். பிரதம மாகாண மாஜிஸ்டிரேட்டிடம் தனியார் கிரிமினல் வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது.

**பெரியார் வேண்டுகோள்**

13-2-71

'விடுதலை'யில் '' வேண்டுகோள் '' என்ற தலைப்பில், ''ஆதாரமற்ற செய்தி களை பிரசுரித்தமைக்காக தினமணி, இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய பத்திரிகைகள் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. ஓட்டர்களே! ஆதாரமற்ற செய்திகளை நம்பாமல் தி. மு. க. வுக்கே ஓட்டளியுங்கள்'' என்று—13-2-71 அன்று தந்தை பெரியார் தம் கையெழுத்துடன் அறிக்கை வெளியிட்டு தமிழின மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

**‘இந்து’ ஏடுமீது**
**கோர்ட் அவமதிப்பு வழக்கு**

17-2-71

சேலம் மாநாடு தீர்மானத்தைத் திரித்து வெளியிட்டதாக கோர்ட்டில் ஒரு வழக்கு இருக்கும் போதே, அதே செய்தியை 14-2-71-ல் மீண்டும் Hindu வெளியிட்டதைச் சுட்டிக் காட்டி. கோர்ட் அவமதிப்பு வழக்குஒன்றை 17-2-71 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் திராவிடர் கழக பொது செயலாளர் கி. வீரமணி எம். ஏ. பி. எல் தாக்கல் செய்தார். அவ்வழக்கை பிரதம நீதிபதி கே. வீராசாமி, நீதிபதி வி. வி. இராகவன் ஆகியோர் விசாரித்து ‘இந்து’ ஆசிரியர், வெளியிடுபவர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

**மாணவர்கள் எழுச்சி**

17-2-71

சேலம் மாநாட்டுப் பிரச்சினையை வைத்து பார்ப்பனர்களால் தூண்டிவிடப்பட்ட சில மாணவர்கள் திருச்சியில் தந்தை பெரியார் சிலையைச் சேதப்படுத்தியதை அறிந்த திராவிடமாணவர்கள் கிளர்ந்தெழுந்தனர். பல்லாயிரக்கணக்கான திராவிட மாணவர்கள் 17-2-71 அன்று திருச்சி வீதிகளில் வீர முழக்கமிட்டுக் கொண்டு “தந்தையே எங்களுக்கு துணையிருங்கள்” என்று புத்தூர் பெரியார் மாளிகையில் வந்து அய்யாவிடம் கேட்டனர். தந்தை பெரியார் மாணவர்களை அமைதிபடுத்தி பலாத்காரத்தில் இறங்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டார்.

**சுயமரியாதைத் தீ**
**கொழுந்துவிட்டு எரிந்தது**

18-2-71

திராவிடர் கழகத்தின் கொள்கைக்கு மட்டுமே முழுக்க முழுக்க சவால் விட்டு, பார்ப்பன கூட்டுசக்தி தம் முழு பலத்தையும் பயன்படுத்தி 1971 தேர்தலில் நாடு முழுவதும் தீவிர பிரசாரத்தில் இறங்கியது. அது கண்டு சுயமரியாதை உணர்வுள்ள தமிழர்கள் ஒவ்வொருவரும் வீறுகொண்டெழுந்தனர். தந்தை பெரியாரின் கருஞ்சட்டைப் படையோ ஆங்காங்கே நேரடியாகத் தேர்தல் பணியில் இறங்கி பம்பரம்போல் சுழன்று சுழன்று பணியாற்றத் துவங்கின. நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சுயமரியாதைத் தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. பார்ப்பன கூட்டுக் கும்பலின் பொய்ப் பிரசாரமோ எல்லை மீறிப் போய்க்கொண்டிருந்தது. நிலைமையை உன்னிப்பாக கவனித்துக்கொண்டு வந்த தந்தை பெரியார் அவர்கள்,

“நான் தேர்தல் சுற்றுப்பயணத்திற்கு போக வேண்டியதில்லை என்ற எண்ணத்தில் இருந்தேன். ஆனால் பார்ப்பனர்கள் என் சிலையைக் கல்லால் அடித்து படத்தை எரித்து எனக்கெதிராக ஊர்வலங்கள் நடத்தஆரம்பித்துள்ளதனால்-நான்,தஞ்சை, திருச்சி, கோவை, சேலம், தர்மபுரி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் சுற்றுப் பயணத்திற்கு போவதாக முடிவு செய்து பயணத்தைத் தொடங்க இருக்கிறேன்” என்று அறிவித்து சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

திராவிடர் கழக பொதுச் செயலாளரான விடுதலை ஆசிரியர் கி. வீரமணி எம்.ஏ. பி. எல்., முன்னணி பேச்சாளர் திரு. திருவாரூர் கே. தங்கராசு மற்றும் பல கழகப் பேச்சாளர்கள் தமிழகத்தின் பல மாவட்டங்களில் பல்வேறு தொகுதிகளுக்கும் சென்று தி. மு. கழக உறுப்பினர்களுக்கு ஆதரவாகவும், பார்ப்பனர்கள் பிரசாரத்தை முறியடித்தும் பல்வேறு பொதுக்கூட்டங்களில் பேசி ஆதரவு திரட்டினார்கள்.

**ஆஸ்திகமும் நாஸ்திகமும்:**
**அடிகளார் விளக்கம்**

18-2-71

“இன்று ‘ஆஸ்திகம்’ என்பது உயர்சாதியினரின் நலம். இன்று ‘நாஸ்திகம் என்பது பெருவாரியான தமிழ் மக்களின் நலன். உங்களுக்கு இதில் எது வேண்டும்” என்று 18-2-71 விடுதலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அறிக்கை விடுத்து தமிழக மக்களுக்கு உணர்த்தினார்.

**மதவெறியர்களுக்கு மரண அடி**

24-2-71

சேலம் மூடநம்பிக்கை மாநாட்டின் நடவடிக்கைக்கு எதிராக பொதுமக்களை திருப்பிவிட மனப்பால் குடித்த மதவெறியர்கள் சேலம் மாநாட்டு நிகழ்ச்சிகளை கண்டித்து தமிழகம் முழுவதும் 24-2-71



திண்டுக்கல்லில் தந்தை பெரியார் சிலை திறப்பு விழா.

அன்று அர்த்தால் செய்ய கேட்டுக்கொண்டு செயல்பட்டனர். ஆனால் அவர்களது முயற்சிக்கு மரண அடி கொடுக்கும்வகை யில் தமிழகம் முழுவதும் அன்று புதிய உற்சாகத்துடன் இயங்கினர். அவர்கள் முயற்சி படுதோல்வி அடைந்தது.

### 1971-ல் நடந்த தேர்தல் உண்மை

3-3-71

"பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் இயக் கத்தை முன்பு தந்தை பெரியார் துவக் கினார். இப்போது ஆச்சாரியார் துவக்கி யுள்ளார். இந்தத் தேர்தலின் ஒரே புதிய அம்சம் இதுதான்" என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி திருச்சியில் செய்தி யாளர்கள் கூட்டத்தில் கேள்விகளுக்கு பதிலளித்து விளக்கினார்.

### திராவிடர் இயக்கத்தின் மாபெரும் வெற்றி

11-3-71

திராவிடர் கழகக் கொள்கை ஒன்றை மட்டுமே வைத்துத்தான் இந்தத் தேர்தல் (1971) தமிழகத்தில் நடைபெறுகிறது என்று பரவலாக எல்லோரும் கூறிக்கொண் டிருந்த தேர்தலின் முடிவு 11—3—71 அன்று வெளிவரத் தொடங்கியது. முதல் நாள் அறிவிப்பே பார்ப்பனக் கூட்டுச் சக்தியின் கழுத்தை நெறிக்கும் வகையில் சட்டமன்றத் தொகுதி 133 இடங்களுக்கு அறிவிக்கப்பட்ட முடிவில் தி. மு. க. 111, சிண்டிகேட் காங்கிரஸ் 6, சுதந்தரா5 என்று வெளியானது. பார்ப்பனக் கூட்டுச் சக்தி இருந்த இடமே தெரியாத வகையில் இறுதி முடிவு தி.மு.க. சார்பில் 183 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாபெரும்வெற்றியாக அறிவிக்கப்பட்டது. எதிர்த்த பார்ப்பன கூட்டுச் சக்தி சுதந்தரா, சிண்டிகேட் காங்கிரஸ் கூட்டணிக்கு 21 இடங்களே கிடைத்தன.

### தந்தை பெரியார் வாழ்த்து

தமிழ்நாடு முதலமைச்சரும் திராவிட முன்னேற்ற கழக தலைவருமான கலைஞர் மு. கருணாநிதிக்கு தந்தை பெரியாரவர்கள் 11—3—71 அன்று ஒரு வாழ்த்துத் தந்தி கொடுத்தார்.

அதில் " உங்களைப் பாராட்ட எனக்கு தமிழில் வார்த்தை இல்லை; எனக்குப் பழி நீங்கியது. உங்களுக்கு உலகப் புகழ் கிடைத்தது" என்று குறிப்பிட்டார்.

### தந்தைக்கு அமைச்சர்கள் மரியாதை

12-3-71

தேர்தல் முடிவு வெளியானதும் தி. மு. கழக அமைச்சர்கள் அனைவரும் முதல்வர் கலைஞர்கருணாநிதி தலைமையில் வந்து 12-3-71 அன்று காலை சென்னை யிலுள்ள விடுதலை பணிமனையில் தங்கியிருந்த தந்தை பெரியார் அவர்களைச் சந்தித்து மாலை அணிவித்து மகிழ்ச்சி பொங்க மரியாதை செலுத்தினர். அய்யா தலைமையில் 'அண்ணா சமாதி' சென்று, அண்ணனுக்கு வெற்றி மலர்களை காணிக்கையாக்கினர்.

### தந்தை முன்னிலையில் பதவி ஏற்பு

15-3-71

சென்னை பல்கலை கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 15-3-71 மாலை 4—30 மணி அளவில் தந்தை பெரியார் முன்னிலை யில் புதிய அமைச்சர்களின் பதவி ஏற்பு விழா நடைபெற்றது. முதல்வராக கலைஞர் மு. கருணாநிதியும், மற்றும் நாவலர் நெடுஞ் செழியன், பேராசிரியர் அன்பழகன், என்.வி. நடராசன், திருமதி. சத்தியவாணிமுத்து, ப.உ. சண்முகம், எஸ். மாதவன், எஸ். ஜே. சாதிக்பாட்சா, சி.பா. ஆதித்தனார், அன்பில் தர்மலிங்கம், க.இராசாராம், ஓ. பி. இராமன் எஸ். இராமச்சந்திரன், எம். கண்ணப்பன் ஆகியோரும் அமைச்சர்களாகப் பதவி ஏற்று முடிந்ததும் ஒவ்வொருவரும் தந்தை பெரி யாரிடம் வந்து வாழ்த்துபெற்று அமர்ந்தனர்.

### 'இந்து ஏடு'-நிபந்தனையற்ற மன்னிப்பு

16-3-71

சேலம் மாநாட்டுத் தீர்மானம் பற்றி கோர்ட்டை அவமதித்து செய்தி வெளி யிட்ட Hindu ஏட்டின்மேல் திராவிடர் கழக பொது செயலாளர் கி. வீரமணி எம்.ஏ. பி. எல்., சென்னை உயர்நீதிமன்றத் தில் 17-2-71 அன்று தொடுத்த வழக்கு 16-3-71 அன்று விசாரணைக்கு வந்தது. பிரதமநீதிபதி கே. வீராசாமி, நீதிபதி வி. பி. இராகவன் ஆகியோர் விசாரித்தனர். 'இந்து' ஏட்டின் சார்பில் ஆஜரான திரு. ரங்கராஜ் திரு. இராமமூர்த்தி அய்யர் ஆகியோர் ஆஜராகி அச்செய்தி வெளியிட்டதற்கு





பகுத்தறிவாளர் கழக சார்பில் அமைச்சரவை பாராட்டு.

சீர்காழியில் கடவுள் மறுப்பு பிரசாரம்.



உண்மையான, நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரினர். மன்னித்து வழக்கு திரும்பப் பெறப் பட்டது.

**நம் கொள்கையில் நகராட்சிகள்**

25-3-71

பார்ப்பன ஏடுகளின் சூழ்ச்சியை விளக்கி தந்தை பெரியார் விடுத்த வேண்டு கோளுக்கிணங்க தமிழகத்தில் தனி நபர்கள் ஆயிரக்கணக்கில் பார்ப்பன ஏடுகளை காசு கொடுத்து வாங்குவதில்லை என்று நாள் தோறும் உறுதி எடுத்து வந்தனர். அதனைப் பின்பற்றி 25-3-71 அன்று சேலம் நகராட்சியும், (28-3-71ல்) பாளையங்கோட்டை நகராட்சியும் நகராட்சி படிப்பகங்கள் அனைத்திலும் பார்ப்பன ஏடுகள் வாங்கு வதை நிறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றின. பார்ப்பன ஏடுகள் சாதிப் பூசலை வளர்க்கப் பாடுபடுகின்றன என்று தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

**மக்களவையில் நம் குரல்**

1-4-71

அனைத்திந்திய வானொலியில் பகுத் தறிவுக் கருத்துக்களை பரப்புவதற்கு தனி நேரம் ஒதுக்கப்படவேண்டும் என்று தி.மு.க. உறுப்பினர்கள் ஆர். பி. உலகநம்பி, ஜி. விசுவநாதன் ஆகியோர் பார்லிமெண்டில் (மக்களவையில்) 1-4-71 அன்று கோரினார் கள்.

**நம் கொள்கையில் புதுவை அரசு**

3-4-71

தந்தை பெரியார் இயக்கத்தின் கொள் கையான சுயமரியாதைத் திருமணத்தை, சட்டப்படி செல்லும் என்று புதுவை அரசாங்கத்தின் சார்பில் சட்டம் இயற்றப் பட்டது. இதற்கான மசோதா 3-4-71 அன்று புதுவை சட்டமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.

**நமது உரிமைபற்றி நாவலர்**

18-4-71

திருவல்லிக்கேணி தொகுதி வாக்காளர் களுக்கு 85-வது வட்டத்தில், 18-4-71 அன்று இரவு நன்றி அறிவிப்புக் கூட்டம் நடைபெற்றபோது, "ஆச்சாரியார் பார்ப் பனரை ஒன்று திரட்டும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும்போது தந்தை பெரியாருக்கு மட்டும் பார்ப்பனரல்லாதாரை ஒன்று திரட்டும் உரிமையில்லையா?" என்று தமிழக கல்வி அமைச்சரும், தி. மு. கழக பொது செயலாளருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் கேட்டார்.

**உயர்நீதி மன்றத்தில் நம் கருத்து**

22-4-71

தந்தை பெரியார் அறிவித்த உண்மை விளக்கங்களை ஏற்கும் வகையில் சேலம் நகராட்சி பார்ப்பன ஏடுகளை வாங்குவ தில்லை என்று தீர்மானித்ததை எதிர்த்து நகராட்சி கவுன்சிலர் வி. எம். ராமசாமி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' போட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி டி. ராமபிரசாத்ராவ் (22-4-71) "நகராட்சியின் முடிவில் நீதிமன்றம் தலை யிடாது" என்று தீர்ப்புக்கூறினார்.

**புரட்சிக்கவிஞர் நினைவாக**
**புதுவை அரசு சார்பில் விழா**

29-4-71

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 80வது பிறந்த நாள்விழா புதுவையில் 29-4-71 அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட புதுவை முதலமைச்சர் பரூக் மரைக்காயர், புரட்சி கவிஞர் துணைவியாருக்கு மாதந்தோறும் ரூ. 200 உதவிப்பணம் வழங்குவதென்றும், புரட்சிக் கவிஞர் பிறந்த நாள் விழாவை ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண் டாடி அரசு விடுமுறை நாளாக ஆக்கப் படும் என்றும் அரசின் முடிவை அறிவித் தார்.

**நமது கொள்கையில் பிரதமர்**

5-5-71

இந்தியாவில் உள்ள பெரும் பத்திரிகை கள் பல பார்ப்பன பாரம்பரியத்திற்கும், அந்தப் பாரம்பரியத்தின் தனிச் சொத்தான பிதற்றலுக்கும் தாங்களே வாரிசுகள்என்றும் தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக் கொள்கின்றன. ஆனால் இடைத்தேர்தலில் (1971 தேர்தல்) அவற்றின் கணிப்புகளை எல்லாம் மக்களின் கணிப்பு செல்லாக் காசா கத் தூக்கி எறிந்துவிட்டது என்று புது டில்லியில் யு. என். அய். செய்தி நிறுவனத்



பம்பாயில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழா.



தேர்தல் முடிவுகளின் பின் அய்யாவுக்கு வெற்றி கனி அன்பளிப்பு.

தின் பத்தாவது ஆண்டு விழாவில் பிரதமர் இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

**இராமாயண ஊர்வலத்துக்குத் தடை**

16-5-71

திருவாரூரில் தஞ்சை மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற மாநாட்டினை ஒட்டி ராமன்-சீதை வேடம் அணிந்து விளக்க மளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊர்வலம் மாவட்டக் கலெக்டரால் தடைசெய்யப்பட்டது. அதை அறிந்த கழகத்தோழர்கள் பதினாயிரக்கணக்கில் உணர்ச்சிப் பிழம்பாயினர் புரட்சிக்கோர் இலக்கணமாய் கொதித்தெழுந்தனர். ஆனால் தந்தை பெரியார் அவர்கள் தோழர்களை அமைதிப்படுத்தி, அதற்குப் பதில் நடவடிக்கையாக, தமிழரை இழிவுபடுத்தும் இராமாயணத்தை 15 நாட்களில் அரசு தடை செய்ய வேண்டும். தவறினால் குடிகார ராமன், விபசாரி சீதை வேடமணிந்து தமிழகம் முழுவதும் சூத்திர சம்பூகனை வெட்டிக் கொல்லப்படும் காட்சி விளக்கப்படும்'' என்று ஒரு மனதாக தீர்மானத்தை நிறைவேறச் செய்தார். இரண்டாந் தீர்மானமாக இது நிறைவேற்றப்பட்டது. மற்றும் முக்கிய அய்ந்து (5) தீர்மானங்களும் நிறை வேற்றப்பட்டன.

இதன் எதிரொலியாக ''இராவண காவிய''த்திற்கு உடனே தடை நீக்கம் ஏற்பட்டது!

**'இராவண விழா'**

6-6-71

புதுவையில் 6-6-71 காலை 8.30 மணிக்கு "வீரத்தமிழன் இராவணன் விழா" மிகச் சிறப்பாகத் தொடங்கி அன்று இரவு வரை நடைபெற்றது. சு. ந. சாமிநாதன் தலைமையில் தொடங்கிய இவ்விழா ராம பக்தர்களுக்கும், இராமாயணப் பிரியர்களுக்கும் சரியான பதில் கொடுத்து தமிழினத்தை தட்டி எழுப்புவதாக அமைந்திருந்தது. பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து விழாவில் கலந்து கொண்ட அறிஞர்கள் ராமாயணப்புரட்டை அம்பலப்படுத்தினர்.

**மது விலக்கில் நம் கொள்கை வெற்றி**

19-6-71

தமிழகத்தில் முதன்முதலாக பார்ப்பன இனநன்மைக்காகவே ஆச்சாரியாரால்அமுல் நடத்தப்பட்ட மதுவிலக்கால் ஏற்பட்ட கேடுகளை தந்தை பெரியார் அவர்கள் தொடர்ந்து எடுத்துக்காட்டி மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் அறிவுறுத்தி வந்தார்கள். அதனால் ஏற்படும் சமுதாய அழிவைத் தடுக்கும் வகையிலும், நம் கொள்கைக்கு முழுவெற்றி தரும் வகையிலும் 1971ம் ஆண்டு ஆகஸ்டு 30ந்தேதி முதல் மது விலக்கை ஒத்திவைப்பதாக 19-6-71 அன்று தமிழக சட்டமன்றத்தில் முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார்.

**'பகுத்தறிவுக் கொள்கைக்கு டாக்டர் பட்டம்'**

23-7-71

''என் உழைப்பில் நான் மேலும் உற்சாகம் பெற்றிட என் கொள்கைகளில் நான் மேலும் உறுதி கொண்டிட இந்தச் சிறப்பு (அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அளித்த டாக்டர் பட்டம்) எனக்குத் தரப்பட்டுள்ளதாகக் கருதி, பண்பட்ட பகுத்தறிவுக் கொள்கைக்கு அளிக்கப்பட்ட விருது எனக் கொண்டு-இந்தப்பெருமையை என்னருந்தமிழர்க்கும், எனை வளர்த்த தலைவர்க்கும் காணிக்கையாக்குகின்றேன்'' என்று (23-7-71ல் முதல்வர் கலைஞருக்கு டாக்டர் பட்டம் அளித்ததற்கு) அண்ணா மலை பல்கலைகழக பட்டமளிப்புவிழாவில் கலைஞர் குறிப்பிட்டார்.

**சட்ட மன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிகு பிரகடனம்**

28-7-71

''தமிழ்நாடு அரசு நாலாஞ்சாதி மக்களான சூத்திரர்களுக்காக பாடுபடும் அரசு தான். எங்களையெல்லாம் ஆளாக்கி உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களுடைய மொழியில் கூறுகிறேன்;இவ்வரசு நாலாந்தர அரசுதான். பிராமண, வைசிய, சத்திரிய, சூத்திரன் என்ற முறையில் நாலாந்தர அரசைத்தான் நாலாந்தர மக்களின் நலனுக்காகவே நடத்துகிறோம் என இறுமாப்புடனும் பெருமையுடனும் கர்வத்துடனும் கூறிக்கொள்கிறேன்'' என்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் முதல்வர் கலைஞர் 28-7-71 அன்று அறிவித்தார்.

# கேள்வி ? பதில் !

கேள்வி : கடவுள் எங்கே இருக்கிறார் ?

பதில் : முட்டாள்கள் உள்ளத்தில் இருக்கிறார்.

கேள்வி : கடவுள் எப்போது ஏற்படுத்தப் பட்டார் ?

பதில் : மக்கள் காட்டுமிராண்டிகளாய், முட்டாள்களாய் இருந்த காலத்தில்.

கேள்வி : கடவுள் பக்தி எங்கே இருக்கிறது ?

பதில் : சிறிது பாகம் மடையர்களிடத்திலும், பெரும் பாகம் அயோக்கியர்களிடத்திலும் இருந்து வருகிறது.

கேள்வி : கடவுளை பரப்புவதற்கும், பாது காப்பதற்கும் பாடுபடுபவர்கள் யார் ?

பதில் : சிறு அளவு மூடர்களும், பெரும் அளவு பார்ப்பனர்களுமேதான்.

கேள்வி : நமது நாட்டில் கடவுள்களால் ஏற்பட்ட பலன் என்ன ?

பதில் : ஜாதிப் பிரிவும், பார்ப்பனர் உயர்வும்,அயோக்கியத்தனமான வாழ்வும்தான்.

## மதம்

கேள்வி : மக்கள் யாவரும் ஒன்றாக இணைய வேண்டுமானால் என்ன ஆகவேண்டும் ?

பதில் : மதங்கள் ' ஒழிக்கப்பட்டாக வேண்டும்.

## இந்து மதம்

கேள்வி : மக்கள் பகுத்தறிவாளர்களாய், சமத்துவம் உள்ளவர்களாக, மனிதாபிமானம் உள்ளவர்களாக, ஒழுக்கம், நாணயம், நன்றி, விசுவாசம் உள்ளவர்களாக ஆக வேண்டுமானால் என்ன செய்யவேண்டும் ?

பதில் : இந்து மதம் என்னும் பார்ப்பன (ஆரிய) மதமும் அதன் சார்பு நூல்களும் தடை (Ban) செய்யப் பட்டாக வேண்டும்.

## விவகாரங்கள்

கேள்வி : நீதி ஸ்தலங்களில் சிவில் விவகாரங்கள் பைசலாக 10 வருடங்கள் வரையும் காலம் ஆகிறதே; இது மாற்ற மடைய என்ன செய்யவேண்டும்.

பதில் : விவகாரம் நடத்தும் முறை, சட்ட முறை ஆகியவைகள் மாற்றமடைய வேண்டும்.

கேள்வி : விவகாரங்கள் பெருகுவதை குறையச் செய்ய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் ?

பதில் : வக்கீல்களை அடியோடு குறைத்துவிட வேண்டும்.

**சித்திரபுத்திரன்**

கேள்வி: வக்கீல்களைக் குறைத்து விட்டால் நீதிபதிகளுக்கு வழக்கு விபரம் விளங்க வேண்டுமே; அதற்கு என்ன செய்வது ?

பதில்: நீதிபதிகளுக்கு உதவி செய்ய என்று ஒரு கோர்ட்டுக்கு இத்தனை வக்கீல்கள் என்று நிர்ணயம் செய்து அவர்களுக்கு இவ்வளவு சம்பளம் என்று ஏற்பாடு செய்து சர்க்கார் வக்கீல்கள் பேரால் மக்கள் வக்கீல் என்று ஏற்பாடு செய்துவிட வேண்டும். அவர் (அந்த வக்கீல்) கள் வாதி-பிரதிவாதிகளுடன் நேரில் விவகரித்து விவகாரத்தின் தன்மை அறிந்து சாட்சியத்துடன் நீதிபதி முன் இரு தரப்பிற்கும் ஆஜராகி விளக்க வேண்டும்.

இப்படிச் செய்தால் இன்றைய வக்கீல்கள் எண்ணிக்கையில் 100க்கு 75 பாகம் வக்கீல், விவகார நீடிப்பு, விவகாரத்தில் தவறு, தீர்ப்பில் தவறு, செலவு, இரு தரப்புக்கும் தொல்லை, பித்தலாட்டம் முதலியவை குறைந்துவிடும்.

இப்போது பெரிதும் விவகாரம் நீதி ஸ்தலமும், வக்கீல்கள் பிழைப்பதற்கும்தான் இருந்து வருகிறது.


வாழ்க பெரியார்! வளர்க பகுத்தறிவு!

**தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்த நாளில் எங்களின் அன்பு கலந்த**

**நல் வாழ்த்துக்கள்**

தொலைபேசி: **85**

—( )—

**புதிய ரகங்கள் நிறைந்த இடம்**

**விலைகளுக்கு குறைந்த இடம்**

**ஜவுளிகளுக்குச் சிறந்த இடம்**

**விலை மலிவு,**

**பொருள் தெளிவு,**

**தரம் உயர்வு,**

**விலை குறைவு,**

**விலை ஒரு நிலை**

அனைத்திற்கும்:

**மதுக்கூர் ஜவுளி ஸ்டோர்**

**மார்க்கெட் தெரு, அரியலூர், திருச்சி மாவட்டம்.**

# பாரெங்கும்!
# பகுத்தறிவாளர் கழகங்கள்

சாதி ஆணவத்தையும் தமிழ் சமுதாயத்தைக் கவ்விப்பிடித்துக் கொண்டு தலைநிமிர விடாமல் அழுத்திக்கொண்டிருக்கும் மூட நம்பிக்கையையும் வேரோடும் வேரடி மண்ணோடும் வெட்டிச்சாய்க்கும் பணிக்கு தந்தை பெரியார் படையின் மற்றொரு அணியாக பகுத்தறிவாளர்கழக அமைப்புக்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் தோற்றுவிக்கப்பெற்றன. இந்த அமைப்புகளில் அரசுத்துறையில் பணியாற்றும் பெரிய பெரிய அதிகாரிகளும், பல்வேறு துறைகளின் அறிஞர் பெருமக்களும் பொறுப்பேற்று செயலாற்றத் தொடங்கினர்.

### முதலில் தோன்றியது சென்னையில்

முதன் முதலில் "சென்னை பகுத்தறிவாளர் கழகம்" துவக்க விழா 6-9-71 மாலை சென்னை சிறுவர் அரங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தமிழக சட்டமன்ற செயலாளர் க. து. நடராசன் தலைமையிலும், தமிழக கல்வி அமைச்சர் நாவலர் முன்னிலையிலும் தந்தை பெரியார் அவர்கள் கழகத்தைத் துவக்கி வைத்து அறிவுரையாற்றியதுடன் அதன் வளர்ச்சிக்கு ரூ. 1000 நன்கொடை அளித்தும் ஊக்குவித்தார்கள். அமைச்சர் நாவலர் சிறப்புரையாற்றுகையில் அரியதோர் விளக்கம் அளித்து "மூட நம்பிக்கையை தகர்த்து புதிய சமுதாயம் அமைப்போம்" என்று அறிவித்தார்.

சென்னை பகுத்தறிவாளர் கழக காப்பாளராக 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணியும், தலைவராக க. து. நடராசனும் மற்றும் நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பெரிதும் ஆர்வத்துடன் அரசு உயர் அதிகாரிகள் உட்பட மாணவர்களும், பல்வேறு துறை பணியாளர்களும் பகுத்தறிவாளர் கழகத்தில் தொடர்ந்து உறுப்பினர்களாயினர். அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் பரவலாக பகுத்தறிவாளர் கழகங்களும், சிந்தனையாளர் கழகங்களும், பகுத்தறிவு மன்றங்களும் ஆங்காங்கு உள்ள பகுத்தறிவாளர்களால் தொடங்கப் பெற்று அடிக்கடி செயற்குழுக்களை அமைத்துச் செயல்படத் தொடங்கின.

சென்னை பகுத்தறிவாளர் கழகம் வாரமொருநாள் பகுத்தறிவுப்பாடம் நடத்த ஏற்பாடு செய்து பயிற்சி வகுப்பு நடத்தப் பட்டது. 21-11-70 மாலை 6-15 மணிக்கு பெரியார் திடலில் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. சென்னை பகுத்தறிவாளர் கழக புரவலரான விடுதலை ஆசிரியர் கி. வீரமணி எம். ஏ. பி. எல்., 'கடவுள்' என்ற தலைப்பில் முதல் பாடத்தைத் துவக்கி வைத்து முதல் பாடத்திற்கு அடிப்படை நூல்களாக தந்தை பெரியார் அவர்களின் "பிரகிருதி வாதம் அல்லது மெட்டிரியலிசம்", மா. சிங்காரவேலனாரின் "கடவுளும் பிரபஞ்சமும்" பெர்ட்ரண்டு ரஸ்ஸலின் "நான் ஏன் கிறித்தவனல்ல" என்ற நூல்களை எடுத்துக் காட்டி விளக்கினார்.

### தர்மபுரி பகுத்தறிவாளர் கழகம்

13-10-70 மாலை தர்மபுரி அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் உதவி மாவட்ட மருத்துவ அதிகாரி, டாக்டர் அபிபுல்லா எம். பி. பி. எஸ். தலைமையில் பகுத்தறிவாளர் கழகத்தை தந்தை பெரியார் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

### திருத்துறைப்பூண்டி பகுத்தறிவாளர் கழகம்

24-10-70 பகல் 2 மணியளவில் வாசன் திரைப்பட அரங்கில் திருத்துறைப்பூண்டி பகுத்தறிவாளர் கழகத்தை சிவில் சப்ளை அதிகாரி வி. பார்த்தசாரதி தலைமையில் தமிழக கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் தொடங்கி வைத்தார்.

## மாயூரம் பகுத்தறிவாளர் கழகம்

மாயூரம் பகுதியில் உள்ள அரசு ஊழியர்களும், பிரமுகர்களும் இணைந்து உருவாக்கிய மாயூரம் பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா 25—10—70 காலை 10—30 மணிக்கு மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் மாயூரம் வட்ட உணவு வழங்குத் துறை அதிகாரி வி. இராமு தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. "விடுதலை" ஆசிரியர் கி. வீரமணி பகுத்தறிவாளர் கழகத்தைத் துவக்கி வைத்து விளக்கவுரை ஆற்றினார்.

## அரியக்குடி பகுத்தறிவாளர் கழகம்

7—11—70 அன்று அரியக்குடி பகுத்தறிவாளர் கழகம் அமைக்கப்பட்டு சி. அன்பரசு தலைமையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

## காரைக்குடி பகுத்தறிவாளர் கழகம்

காரைக்குடியில் பல்வேறு அரசு அலுவலர்களும் பிரமுகர்களும் சேர்ந்து அமைத்த காரைக்குடி பகுத்தறிவாளர் கழகத்தை 8—11—70 அன்று ஆர். சுப்ரமணியம் நிறுவனத்தில் தந்தை பெரியார் துவக்கி வைத்து அறிவுரையாற்றினார்.

## பண்ருட்டி பகுத்தறிவாளர் கழகம்

18—11—70 அன்று மாலை பண்ருட்டி பயணிகள்விடுதியில் பகுத்தறிவாளர் கழகம் தந்தை பெரியார் அவர்கள் தலைமை தாங்க அமைக்கப்பட்டது. அன்றே நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## திண்டுக்கல் பகுத்தறிவாளர் கழகம்

27—3—71 சனி மாலை 6 மணிக்கு வழக்கறிஞர் ஆர். ஜனார்த்தனம் தலைமையில் திண்டுக்கல் பாரதி திடலில் திண்டுக்கல் பகுத்தறிவாளர் கழகத்தை தந்தை பெரியார் துவக்கி வைத்தார்.

## மதுரை பகுத்தறிவாளர் கழகம்

28—3—71 அன்று மதுரை பகுத்தறிவாளர் கழகத்தை மதுரை தமுக்கம் கலை அரங்கில் தந்தைபெரியார்அவர்கள் துவக்கி வைத்தார்கள்

## நெல்லை பகுத்தறிவாளர் கழகம்

18—4—71 அன்று திருநெல்வேலி இராஜாஜி மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக தலைமை எழுத்தர் பி. சுப்பராயலு தலைமையில் நெல்லை பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## அறந்தாங்கி பகுத்தறிவாளர் கழகம்

11—4—71 அன்று அறந்தாங்கி சூர்ய மூர்த்தி குளத்தில் மிகப் பெரிய விழாவாக நடத்தப்பட்டு ஏ. டி. மாரியப்பன் தலைமையில் அறந்தாங்கி பகுத்தறிவாளர்கழகத்தை தந்தை பெரியார் துவக்கி வைத்தார்.

## மானாமதுரை பகுத்தறிவாளர் கழகம்

14—4—71 அன்று மானாமதுரை பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் மானாமதுரையில் நடைபெற்றது.

## நன்னிலம் பகுத்தறிவாளர் கழகம்

25—4—71 அன்று நன்னிலம் என். ஜி. ஜி. ஓ. கட்டிடத்தில் நன்னிலம் பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

## தஞ்சை பகுத்தறிவாளர் கழகம்

2—5—71 அன்று தஞ்சையில் டாக்டர் பி. சின்னதுரை தலைமையில் தஞ்சை பகுத்தறிவாளர் கழகத்தை தந்தைபெரியார் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அமைச்சர்கள் மாண்புமிகு க. ராசாராம். அன்பில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வடசேரி பகுத்தறிவாளர் கழகம்

4-5-71 அன்று வடசேரியில் க. சி. தமிழ் மணி தலைமையில் பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

## விழுப்புரம் பகுத்தறிவாளர் கழகம்

6-5-71 அன்று விழுப்புரம் நேரு சாலை, 671ம் எண் கட்டிடத்தில் விழுப்புரம் பகுத்தறிவாளர் கழகத்தை தந்தை பெரியார் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## மேட்டூர் பகுத்தறிவாளர் கழகம்

9-5-71 அன்று கீழ் மேட்டூரில் மேட்டூர் பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம்

நடைபெற்றது. அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**'பகுத்தறிவு விழா'**

7—5—71 அன்று பெரியார் திடலில் சென்னை பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில் தமிழக அமைச்சரவைக்குப் பாராட்டு விழா நடத்தப் பெற்றது. சட்ட மன்ற செயலாளர் சி. டி. நடராசன் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் முதல்வர் கலைஞர் கருணாநிதி, கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் உட்பட எல்லா அமைச்சர்களும் கலந்து கொண்டனர். தந்தை பெரியார் அமைச்சரவையை பாராட்டி அறிவுரையாற்றுகையில் "2500 ஆண்டு வரலாற்றில் இதுவே பகுத்தறிவைத் தீவிரப்படுத்த பக்குவமான நேரம்" என்று குறிப்பிட்டார். தொடர்ந்து, "பகுத்தறிவு விழாக்களை நடத்துங்கள். பகுத்தறிவுப் பிரசாரத்தை அரசு தடுக்காது" என்று முதல்வர் கலைஞர் கருணாநிதி அறிவித்தார். அன்றே முதல்வர் கலைஞர், அமைச்சர்கள் நாவலர், திருமதி. சத்தியவாணிமுத்து, அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பகுத்தறிவாளர் கழகத்தில் உறுப்பினர்களானார்கள். அதற்கு முன்பு அமைச்சர்கள் என். வி. நடராசனும், க. ராசாராமும் உறுப்பினராயினர்.

**தமிழ்நாடு மின்வாரிய பகுத்தறிவாளர் கழகம்**

7—5—71 அன்று சென்னை அண்ணா சாலையில் தமிழ்நாடு மின் வாரிய பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அப்போது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**குரும்பலூர் பகுத்தறிவாளர் கழகம்**

8—5—71 அன்று குரும்பலூர் ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தில் பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் ஜே. எஸ். இராசு எம். எல். ஏ. தலைமையில் நடைபெற்றது. அப்போது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**உரத்தநாடு பகுத்தறிவாளர் கழகம்**

9—5—71 அன்று உரத்தநாடு எழுத்துக்காரத் தெருவில் தஞ்சை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. சி. விசாலாட்சி தலைமையில் உரத்தநாடு பகுத்தறிவாளர் கழகத்தை தந்தை பெரியார் துவக்கி வைத்தார்.

**மகுடஞ்சாவடி பகுத்தறிவாளர் கழகம்**

10—5—71 அன்று மகுடஞ் சாவடியில் பகுத்தறிவாளர் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது.

**கடத்தூர் பகுத்தறிவாளர் கழகம்**

11-5-71ல் கடத்தூர் சந்தை வெளியில் கடத்தூர் பகுத்தறிவாளர்கழகத்தை தந்தை பெரியார் அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

**திருவாரூரில் பகுத்தறிவாளர் கழக மாநாடு**

15-5-71 அன்று காலை 9 மணியளவில் தஞ்சைமாவட்ட திராவிடர்கழகச் சார்பில் பகுத்தறிவாளர் கழக மாநாடு திருவாரூர் விசயபுரம் சந்தைத்திடலில் தொடங்கி சிறப்பாக நடைபெற்றது. அன்று முழுதும் நடைபெற்ற அம்மாநாட்டில் தந்தை பெரியார் அவர்களும், மற்றும் தமிழகத்தின் எல்லாப்பகுதிகளிலும் இருந்து வந்து கலந்து கொண்ட பகுத்தறிவுவாதிகளும் அரியதோர் பகுத்தறிவு விளக்கம் அளித்தனர். பகுத்தறிவின் துணைகொண்டு தமிழினம் முன்னேறுவதற்கான வழிவகைகளை விளக்கி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பொள்ளாச்சி பகுத்தறிவாளர் கழகம்**

16—5—71 அன்று பொள்ளாச்சி வாடகை காரோட்டிகள் சங்க கட்டிடத்தில் பொ. அ. இராதா தலைமையில் பொள்ளாச்சி பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**அவலூர்பேட்டை பகுத்தறிவாளர் கழகம்**

19—5—71 அன்று செஞ்சிவட்டம் அவலூர் பேட்டையில் பகுத்தறிவாளர் கழகம் அமைக்கப்பட்டது. அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**செல்லியம்பாளையம் பகுத்தறிவாளர் கழகம்**

20—5—71 அன்று ஆத்தூர் வட்டம் செல்லியம் பாளையத்தில் செல்லியம் பாளையம் பகுத்தறிவாளர் கழகம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### கொளத்தூர் பகுத்தறிவாளர் கழகம்

28—5—71 அன்று மேட்டூர் வட்டம் கொளத்தூர் பகுத்தறிவாளர் கழகத்தை தந்தை பெரியார் துவக்கிவைத்தார்.

### மன்னார்குடி பகுத்தறிவாளர் கழகம்

3—6—71 அன்று மன்னார்குடி மணி மேகலை நடுத்தரப்பாடசாலையில் மன்னார் குடி பகுத்தறிவாளர்கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது அப்போது நிர் வாகிகள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### வேலூரில் பகுத்தறிவாளர் கழகம்

5—6—71 மாலை வேலூர் கோட்டை மைதானத்தில் நகரமன்றத்தலைவர் மா.பா. சாரதி எம். எல். ஏ. தலைமையில் பகுத்தறி வாளர் கழகத்தை தந்தை பெரியார் துவக்கி வைத்தார்.

### நாமக்கல் பகுத்தறிவாளர் கழகம்

6—6—71 அன்று நாமக்கல் பகுத்தறி வாளர்கழக அமைப்புக்கூட்டம் கணேசபுரம் திராவிடர் கழக கட்டிடத்தில் நடைபெற்றது.

### இராசபாளையம் பகுத்தறிவாளர் கழகம்

13—6—71 மாலை இராசபாளையம் தி. மு. கழகப் பணி மனையில் இராச பாளையம் வட்டார பகுத்தறிவாளர்கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. அது போது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### கீரமங்கலம் வட்டார பகுத்தறிவாளர் கழகம்

17-6-71 மாலை கீரமங்கலம் வட்டாரப் பகுத்தறிவாளர் கழகத்தை வேம்பங்குடி வள்ளுவர் திடலில் தந்தை பெரியார் திறந்து வைத்தார்.

### திருவெற்றியூர் பகுத்தறிவாளர் கழகம்

27—6—71 அன்று முகவை மாவட்டத்து திருவாடானை வட்டத்தைச் சேர்ந்த திருவெற்றியூர் பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

### தூத்துக்குடி பகுத்தறிவாளர் கழகம்

2—7—71 அன்று மாலை தூத்துக்குடி நகர் பீச் ரோடில் உள்ள அரசினர் சுற்றுலா மாளிகையில் தந்தை பெரியார் அவர்கள் முன்னிலையில் தூத்துக்குடி பகுத்தறி வாளர் கழக அமைப்புக் கூட்டம் நடை பெற்றது.

### நாகை பகுத்தறிவாளர் கழகம

4-7-71 அன்று நாகை அபிராமி அம்மன் சன்னதியில் நாகை பகுத்தறிவாளர் கழக தொடக்க விழாவில் விடுதலை ஆசிரியர் கி. வீரமணி எம்.ஏ., பி.எல் மேற்படி கழகத் தைத் துவக்கி வைத்தார்.

### கரூர் பகுதி பகுத்தறிவாளர் கழகம்

11-7-71 அன்று கரூர் பயணிகள் விடுதி யில் கரூர் பகுதி பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அது போது காப்பாளராக வீர. கே. சின்னப்பன், பி.ஏ., பி.எல்.,லும் மற்றும் நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்கழகம் பின்னர் 15—8—71ல் தந்தை பெரியார் அவர்களால் துவக்கப் பெற்றது.

### பாப்பிரெட்டிப்பட்டி பகுத்தறிவாளர் கழகம்

11-7-71 அன்று பாப்பிரெட்டிப்பட்டியில் பகுத்தறிவாளர் கழகத்தை வே. வச்சிரம் தலைமையில் தந்தை பெரியார் துவக்கி வைத்தார்.

### திருவண்ணாமலை பகுத்தறிவாளர் கழகம்

24—7—71 அன்று திருவண்ணாமலை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தில் இ. து. உத்திரா அருணாசலம் தலைமையில் பகுத்தறிவாளர் கழக அமைப் புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### குளித்தலைவட்ட பகுத்தறிவாளர் கழகம்

25-7-71 அன்று குளித்தலை காவிரி நகர் அண்ணா திருமண மண்டபத்தில் புலவர் து. தயாளசாமி தலைமையில் குளித் தலை வட்ட பகுத்தறிவாளர் கழக அமைப் புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது நிர்வாகிகள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### ஊத்தங்கரை பகுத்தறிவாளர் கழகம்

24—7—71 அன்று கல்லாவி ஊராட்சி அலுவலகத்தில் வி. வி. ஆறுமுகம்

தலைமையில் ஊத்தங்கரை வட்டார பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### கல்லக்குறிச்சி பகுத்தறிவாளர் கழகம்

26—7—71 அன்று கல்லக்குறிச்சி வள்ளுவர் திடலில் மு. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற விழாவில் கல்லக்குறிச்சி பகுத்தறிவு மன்றத்தை விடுதலை ஆசிரியர் கி. வீரமணி திறந்துவைத்தார்.

### சீர்காழி பகுத்தறிவாளர் கழகம்

8—8—71 அன்று சீர்காழி தென்பாதி பயணிகள் விடுதியில் சீர்காழி பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் ச. சைமன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### கிராமம் பகுத்தறிவாளர் கழகம்

13—8—71 அன்று கிராமம் அண்ணா திடலில் ஆ. நாகதெய்வநாயகம் தலைமையில் "கிராமம் பகுத்தறிவாளர்கழக" திறப்பு விழா நடைபெற்றது.

### தமிழின ஒற்றுமை விழா

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு அண்ணாமலை பல்கலை கழகம் டாக்டர் பட்டம் அளித்ததை யொட்டி 14—8—71 அன்று மாலை சுமார் 6 மணி யளவில் சென்னை பகுத்தறிவாளர் கழக சார்பில் ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. தஞ்சை பெரியார் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில் பகுத்தறிவாளர் கழக சார்பில் ஒருபெரிய புத்தகம் போன்று உருவாக்கப்பட்ட பரிசுப்பொருள் முதல்வருக்கு தந்தை பெரியார் அவர்களால் வழங்கப்பட்டது. அதில் தந்தை பெரியார் அறிஞர் அண்ணா, முதல்வர் கலைஞர் ஆகியோரது திருவுருவங்கள் வெள்ளியினால் பொறிக்கப்பட்டிருந்தன.

மேலும் அப்பரிசுச்சின்னத்தில் "டாக்டர் கலைஞர் அவர்களே! தாங்கள்பெற்ற பட்டம் பகுத்தறிவுக் கொள்கை பெற்ற தலையாய வெற்றி. இந்த அரசு நாலாந்தர சாதியினரான சூத்திரர்களின் அரசுதான் என்பதைப் பிரகடனப்படுத்திய தங்கள் பின்னால் தமிழர் சமுதாயம் நிற்கிறது. வெல்க நம் கொள்கை. வளர்க உங்கள் பணி" என்ற வாசகமும் வெள்ளியினால் செதுக்கப்பட்டிருந்தது.

கலைஞருக்கு சிலை வைக்கவேண்டும் என்று தந்தை பெரியார் அறிவித்ததற்கிணங்க சிலை அமைப்புக் குழுவும் நியமிக்கப்பட்டு உடனே நிதியும் ரூ. 2,756 வசூலானது. கலைஞர் பேசுகையில், "தந்தையின் கட்டளை எனக்குச் சிலை வைக்கத்தான் வேண்டுமென்றால் தந்தை பெரியார் அவர்களுக்கு சென்னையில் நாங்கள் சிலை வைத்த பிறகு சிந்திக்கலாம்" என்று அறிவித்து விட்டு தாம் ஈரோட்டில் குடியரசு ஏட்டில் பணியாற்றிக் கொண்டிருந்த பகுத்தறிவுக் கொள்கையுடன்தான் தொடர்ந்து இருந்து வருவதாகவும், நாலாம் சாதி என்று வர்ணிக்கும் தமிழினத்தை நாலாம் தளத்தினராக ஆக்கிவிட்டுத்தான் நாம் ஓய்வு பெறுவோம் என்றும் அறிவித்தார். விழாவில் உரையாற்றிய தந்தை பெரியார், குன்றக்குடி அடிகளார், அமைச்சர்கள் நாவலர் நெடுஞ்செழியன், ப. உ. சண்முகம், க. ராசாராம் மற்றும் சென்னை பல்கலைக் கழக துணை வேந்தர் நெ. து. சுந்தர வடிவேலு, ஏ. என். சட்டநாதன், விடுதலை ஆசிரியர் கி. வீரமணி ஆகிய அனைவருமே இது போன்ற விழாக்களை தமிழினத்தின் ஒற்றுமை விழாக்களாகக் கருதி செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

## குமரி மாவட்டம்

### நாகர் கோவில் - 2

தலைவர் : எச். ஷேக் முகமது

செயலர் : பீர்கண்ணு

## வடஆற்காடு மாவட்டம்

### அரக்கோணம்

தலைவர் : பே. க. ஏழ்மைவாணன்

செயலர் : தங்க. சங்கரபாண்டியன்

### காட்பாடி

தலைவர் : எஸ். சொக்கலிங்கம்

செயலர் : வி. என். சண்முகம்

### வாழ்குடை

தலைவர் : வி. எஸ். கிருஷ்ணசாமி

செயலர் : க. சினேந்திரன்

(தலைமையாசிரியர்)

திருவண்ணாமலை

தலைவர் : டி. ஆர். கே. டி. எசு. மூர்த்தி
செயலர் : மு. குணசேகரன், எம்.ஏ.,

**நெல்லை மாவட்டம்**

தலைவர் : சி. சு. மணி, பி.ஏ.,
செயலர் : பி. சுப்பராயலு

தூத்துக்குடி

தலைவர் : பி. வே. அடைக்கலம் காத்தான், பி.இ.,
செயலர் : ஏ. முத்துசாமி, (வழக்கறிஞர்)

வல்லநாடு

தலைவர் : சங்கரலிங்கம்
செயலர் : ப. முத்தரசு

**முகவை மாவட்டம்**
திருவெற்றியூர்

தலைவர் : வ. நல்லபெருமாள்
செயலர் : இரா. சேரன்

திருப்பத்தூர்

தலைவர் : ஒயா ஒளி
செயலர் : பி. முஸ்தபா கமால்

தேவகோட்டை

தலைவர் : ம. சுப்ரமணியம், எம்.பி., பி.எஸ்.,
செயலர் : மு. செல்லத்துரை

காரைக்குடி

தலைவர் : கவிஞர் முடியரசன்
செயலர் : மு. அரங்கநாதன்

மானாமதுரை

தலைவர் : கே. முத்துவேலு
செயலர் : எஸ். எம். கே. சேதுபதி

**கோவை மாவட்டம்**
கோவை - 2

தலைவர் : கு. வெ. கிருட்டினசாமி, எம் ஏ.,
செயலர் : அருணா. இராசகோபால், எம்,ஏ..

மீனாட்சிபுரம்

செயலர் : சக்கரை மொய்தீன்

வால்பாறை

அமைப்பாளர் : புலவர். மாரி விசுவநாதன்
செயலர் : வே. எ. வில்லவன்

திருப்பூர்

தலைவர் : சி. மா. கிருஷ்ணன்
செயலர் : இரா. கந்தசாமி

அவிநாசி

தலைவர் : சாமிநாதன்
செயலர் : புலவர். அரங்கசாமி

பொள்ளாச்சி

தலைவர் : பொ. வ. இராதா
செயலர் : வை. பார்த்திபன்

குருப்ப நாயக்கன் பாளையம்

தலைவர் : க. பழனியப்பன்
செயலர் : க. அண்ணன்

**மதுரை மாவட்டம்**
மதுரை - 9

தலைவர் : ஆர். வி. மாருதி
செயலர் : சா. இரா. இங்கர்சால் பி.எஸ்.சி., பி.இ.டி.,

மதுரை - 7

செயலர் : த. சங்கரன்துரை

**தென்ஆற்காடு மாவட்டம்**
சிதம்பரம்

தலைவர் : கே. சுவேதாரண்யம்
செயலர் : புலவர் முத்து. தமிழரசன்

விழுப்புரம்

தலைவர் : புலவர் சி. சானகிராமன்
செயலர் : நா. தயாநிதி (வழக்கறிஞர்)

பெண்ணாடம்

தலைவர் : அய். அரங்கநாதன்
செயலர் : ஆ. திருஞானசம்பந்தம்

விருத்தாசலம்

தலைவர் : நா. ராசமாணிக்கம்
செயலர் : ரெ. சித்தன்

அத்திப்புலியூர்

தலைவர் : சோ. மாரியப்பன்
செயலர் : இரெ. ஆறுமுகம்

கள்ளக்குறிச்சி

தலைவர் : கோ. சாமிதுரை, எம்.ஏ., பி.எல்.,
செயலர் : ஆர். நல்லமுத்து

கண்டமங்கலம்

தலைவர் : பா. கு. அரங்கநாதன், (தலைமை ஆசிரியர்)
செயலர் : வ. சோமசுந்தரம், (தலைமை ஆசிரியர்)

நெல்லிக்குப்பம்

தலைவர் : சி. பால வேலாயுதம்
செயலர் : வ. பாண்டுரங்கம்

**சேலம் மாவட்டம்**

மேட்டூர் அணை

தலைவர் : எஸ். ஜி. அரசங்கோவன், பி.இ.,
செயலர் : டி. கே. ராமச்சந்திரன்

மகுடஞ்சாவடி

தலைவர் : ப. கந்தசாமி
செயலர் : பெ. வேலுசாமி

ஆத்தூர்

தலைவர் : புலவர் ப. இராசு
செயலர் : எம். சின்னுசாமி

நாமக்கல்

தலைவர் : உலக. சுப்ரமணியம் எம்.ஏ.,
செயலர் : பெ. முத்துசாமி

திருச்செங்கோடு

தலைவர் : எஸ். கே. வரதராஜுலு

சங்ககிரி

தலைவர் : மு. அங்கமுத்து
செயலர் : ம. கா. கதிரேசன், பி.எஸ்ஸி.,

**தர்மபுரி மாவட்டம்**

தர்மபுரி

தலைவர் : எஸ். கே. தும்பராஜ் (துணைத் தாசில்தார்)
செயலர் : புலவர் துரை கணேசன்

மெணசி

தலைவர் : செ. அரங்கநாதன்
செயலர் : இல. கோவிந்தசாமி

மொரப்பூர்

தலைவர் : ச. துரைசாமி (ஆசிரியர்)
செயலர் : ஏ. தீர்த்தான் (ஆசிரியர்)

காட்டுப்பட்டி

தலைவர் : குன்னத்தூர் வி. வி. ஆறுமுகம்
செயலர் : கி. சிதம்பரம் (ஆசிரியர்)

கிருஷ்ணகிரி

தலைவர் : வி. என். ராம்குமார், பீ. இ.,
செயலர் : பி. வி. துக்காராம், பீ.ஏ.,பி.எல்.,

கடத்தூர்

தலைவர் : கே. ஏ. விசுவநாதன்
செயலர் : சு. வாசுதேவன்

காவேரிப்பட்டணம்

தலைவர் : என். எம். சீராமுலு
செயலர் : கே. வி. பழனிசாமி

பாப்பிரெட்டிப்பட்டி

தலைவர் : வே. வச்சிரம், பி.எஸ்சி., பீ.டி.,
செயலர் : வ. முல்லைவேந்தன்

அரூர்

தலைவர் : இரா. இளஞ்செழியன்
செயலர் : சி. எம். சேகர்

**திருச்சி மாவட்டம்**

கரூர்

தலைவர் : சு. கருப்புசாமி, பி.இ.,
செயலர் : குப்புசாமி, பி.ஏ., பி.எல்.,

### திருச்சி

தலைவர் : கே. எம். சுப்ரமணியம், பி.இ.,
செயலர்கள் : வே. ஆனைமுத்து
து. மா. பெரியசாமி

### குரும்பலூர்

தலைவர் : கே. வி. இராசு
செயலர் : கே. முகுந்தன்

### மணப்பாறை

தலைவர் : ஏ. ஆய் அறிவன் (ஆசிரியர்)
செயலர் : மா. செல்லக்கண்ணு, பி.இ.,

### புதுக்கோட்டை

தலைவர் : ஆர். தருமராசன்
(உதவி ஸ்டேஷன் மாஸ்டர்)
செயலர் : நாகராசன் (எல்.அய்.சி.)

### சின்ன தாராபுரம்

தலைவர் : எம். சி. அப்துல் மஜீத்
செயலர் : மு. ஜெய்லானி, பி.ஏ.,

### ஆலத்தூர் கேட்

தலைவர் : அரு. சோமசுந்தரம், தி. மு. க.
(பொதுக்குழு உறுப்பினர்)
செயலர் : ஏ. எஸ். முத்துசாமி

### அவலூர்பேட்டை

தலைவர் : கே. எஸ். ராமலிங்கம்
செயலர் : ஏ. அழகேசன்

### கொளக்குடி

தலைவர் : பழ. அருட்குமரன்
செயலர் : கே. டி. அரசு

### செந்துறை

தலைவர் : புலவர் பூ. பொய்யாமொழி
செயலர் : து. ராசமாணிக்கம்

### குளித்தலை

தலைவர் : க. சந்திரமோகன், பி.ஏ.,
செயலர் : மு. மணி,
(உடற் கல்வி ஆசிரியர்)

## தஞ்சை மாவட்டம்

### ஆடுதுறை

தலைவர் : பொ. இராமசாமி (ஆசிரியர்)
செயலர் : அரங்க. கோவிந்தசாமி

### பட்டீச்சுரம்

தலைவர் : கே. கலியமூர்த்தி
செயலர் : எம். காசிநாதன்

### இரும்புதலை

தலைவர் : எச். சந்தானகிருட்டினன்,
பி.எஸ்.சி.,
செயலர் : எம். லோகநாதன்

### வடசேரி

தலைவர் : கா. சி. தமிழ்மணி
செயலர் : ந. பன்னீர்செல்வம்

### உரத்தநாடு

தலைவர் : இரா. பண்டரிநாதன்,
பி.எஸ்.சி., பி.டி.,
செயலர் : வீ. பொற்கோவன்

### திருவாரூர்

தலைவர் : கு. பஞ்சாபகேசன், (ஆசிரியர்)
செயலர் : ஆமூர் க. முனியாண்டி,
(ஆசிரியர்)

### சீர்காழி

தலைவர் : கே. பாலசுப்ரமணியன்,
பி.ஏ., பி.எல்.,
செயலர் : பி. கோபாலகிருட்டிணன்,
பி.ஏ., பி.எல்.,

### கீரமங்கலம்

தலைவர் : இரா. அரசக்கண்ணன்,
எம்.ஏ., பி.டி.,
செயலர் : ம. சிவசங்கரன்

### காரக்கோட்டை

தலைவர் : சி. சுப்பையா
செயலர் : எஸ். பன்னீர்செல்வம்

### திருத்துறைப்பூண்டி

தலைவர் : வி. பார்த்தசாரதி,
(தனி தாசில்தார்)
செயலர் : சு. பழனிவேலு, (நில அளவர்)

### மாயூரம்

தலைவர் : ப. சவுந்தரராசன்
செயலர் : கலி. பூங்குன்றன்

மன்னார்குடி

தலைவர் : கே. கோபாலகிருட்டிணன்
செயலர் : எஸ். எம். ஜெகதீசன்

நன்னிலம்

தலைவர் : மு. மாரியப்பன்
செயலர் : வெ. செல்வராசு

பட்டுக்கோட்டை

தலைவர் : டி. வி. சிவஞானகோவிந்தசாமி
செயலர் : எஸ். சரவணன், பி. ஏ.,

தஞ்சாவூர்

அமைப்பாளர் : இரா. பாண்டியன்

நாகப்பட்டினம்

தலைவர் : மீ. அண்ணாமலை
செயலர் : த. கிருட்டிணமூர்த்தி

நீடாமங்கலம்

தலைவர் : எஸ். சரவணன், பி.ஏ.,
செயலர் : ஏ. வி. பாலசுப்ரமணியம்

அறந்தாங்கி

தலைவர் : ஆர். நாராயணசாமி
செயலர் : பி. விசுவநாதன்

அறந்தாங்கி

தலைவர் : எஸ். செல்வராசு
செயலர் : கோ. மங்கை சம்பந்தம்

அறந்தாங்கி

தலைவர் : க. மெய்யநாதன்
செயலர் : கரு. இருளப்பன்

**சென்னை-21**
(வண்ணை)

தலைவர் : எஸ். ஆர். சாண்டோ
செயலர் : தி. ந. மதிவாணன்

சென்னை - 38
(அய். சி. எஃப்)

தலைவர் : டி. முத்து
செயலர் : பெரியார் தொண்டன்
ந. சண்முகசுந்தரம்

சென்னை - 5
(தமிழ்நாடு மின்வாரியம்)

தலைவர் : கந்தசாமி
செயலர் : செங்குட்டுவன்

[பி. கு. : கிடைத்தவரை தொகுக்கப்பட்ட விவரங்கள் இவை.]


Telegrams : "LOCKS"    Telephone : 94 PBX

**வாழ்க பெரியார் !**

# K. KALIAPPA NADAR & SONS.,

POST BOX NO. 22

**DINDIGUL-1.**

DEALERS AND STOCKISTS OF :

Asian Paints, Bombay.
National Paints, Bombay.
GKW Bolts & Nuts, Madras.
Carborundum Universal Ltd., Madras (Ajax Sand Paper)
Hindustan Steel Files, Calcutta.
Charminar Asbestos Cement Ltd., Hyderabad.
Dindugul Locks, Hardware, Iron & Steel, etc.,

Grams : " ANGUVILAS " Phone : 71
Regd Numbers : 12700 & 149348 Estd. 1925

**வாழ்க பெரியார் !**

ஸ்தாபகர் :

**அங்குவிலாஸ் M. V. முத்தையா பிள்ளை**
**திண்டுக்கல்**

# அங்கு விலாஸ்

**M. V. முத்தையா பிள்ளை**
(பர்ம்)
**வாசனைப் புகையிலை**
தாம்பூலத்துடன் சுவைப்பதற்கு தின்பண்டம் போன்றது.

★

ANGU VILAS Scented Tobacco stands foremost in India. If a little of this Scented Tobacco is chewed with Betel leaves, nut and Chunnam and spit out, it will go on refreshing your mind & Body.

**ANGUVILAS M. V. MUTHIAH PILLAI (FIRM)**
*Scented Tobacco Factory,*
DINDIGUL. (South India) Tamil Nadu.

## ஜான்சி மெடிக்கல்ஸ்

**லாலா பஜார், T. வாடிப்பட்டி**
(மதுரை மாவட்டம்)

எங்களிடம் எல்லாவிதமான இங்கிலீஸ் மருந்துகளும் கிடைக்கும்.

**இந்துஸ்தான் லிவர்ஸ் ஸ்டாக்கிஸ்ட்**

**ஏஜண்ட்ஸ் :**

N. V. S. பட்டணம் பொடி—திண்டுக்கல் அங்குவிலாஸ் வாசனைப் புகையிலை—குடியாத்தம் ராஜாபீடி

**விற்பனையாளர்கள் :**

பாரி கம்பெனி உரங்கள்,
டால்மியா சிமெண்ட்.

**K. நடராஜ நாடார் & சன்.**

## மு. கா. நா. மா. பாண்டி நாடார் & கோ.,

**87, கீழமாசி வீதி,**

**மதுரை-1.**

எங்களிடம் GKW ஆறுபட்டை, குடை போல்ட், ரிவிட் அயிட்டங்களும், டாடா விவசாய கருவிகளும், மற்றும் கம்பி, சட்டம் அயிட்டங்களும், வீடு கட்டும் சாதனங்களும், பம்பு சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

# தாய்க்குதிரையும் குட்டிக்குதிரையும்!

**புலவர் ந. இராமநாதன் B.O.L.**

1947 இந்திய உரிமை நாள். இந்தியப் பெரு நிலப் பரப்பு முழுவதும் மிக்க பர பரப்போடு விளங்குகிறது. உண்மை யாகவே போர்க் களத்தில் நின்று பெரும் போரிட்டுப் பல் உயிர்களையும், பொருள் களையும் இழந்து வெற்றியடைந்தார் போல, இங்குள்ள காங்கிரசு இயக்கத்தினர் வெற்றிக் களிப்பில் மிதந்து கொண்டிருந் தனர். அதுவரையில் நாட்டு நடப்பைப் பற்றிச் சிறிதும் எண்ணாமலும், பேசா மலும், இயன்றதைச் செய்யாமலும் நாமுண்டு, நம்முடைய பிழைப்புண்டு என்று இருந்த கோடிக் கணக்கான மக்களும் வாராது போல் வந்த மாமணியான உரிமை நாளைக் கொண்டாட விரைந்தனர். இந்திய உள்நாட்டு நிலையைச் சிறிதும் அறியாத, அறிந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணமும் இல்லாத வெளிநாட்டு அரசியல் வாதிகளும் பிறரும் மிக ஆர்வத்தோடு இந்தியப் பெரு நிலப் பரப்பை நோக்கினர். இத்தகைய சூழ்நிலையில் இந்தியப் பெரு நிலப் பரப்பின் தென்கோடியிலிருந்து ஒரு குரல் எழுந்தது. அக்குரல் இந்திய உரிமை நாளை இது உரிமை நாளன்று; துக்கநாளே என்று முழங்கியது. இவ்வாறு முழங்கிய குரல் யாருடையது? வழி வழியாக ஆளுதற் கென்றே ஆண்டவனால் அனுப்பப் பெற்ற வெள்ளையர் ஆட்சி இந் நாட்டில் என்றும் நிலைத்து நீடிக்க வேண்டுமென்று விரும்பும் கோடிக் கணக்கான அடிமைகளின் சின்னமோ அக்குரல்? அன்று உலக முழுவதும் அரசியலில் மட்டுமல்லாமல் சமுதாயம், பொருளியல் போன்ற எல்லாத் துறைகளிலும் உரிமை பெற்றுப் பொது வுடைமை அரசாக உலகம் ஆகவேண்டும் என எண்ணிப் பேசிப் புரட்சி விளைத்த பெரியார் உள்ளத்திலிருந்து எழுந்தது அக் குரல். பொதுவுடைமை அரசைக் கற்ப னைக் கண்களால் ஏடுகளில் படிக்க அவர் விரும்பவில்லை. அரசியல் என்ற பெயரால் இந்தியப் பெரு நாட்டில் பண்டாரங்களும், பணியாட்களும், பார்ப்பனர்களும் ஆதிக்கம் கொண்டிருந்த காலத்தில், பொதுவுடைமை கருவே இந்திய அரசியலில் உருவாகாத காலத்தில் உருசிய நாட்டிற்குச் சென்று உண்மைகளை அப்பட்டமாக உள்ளபடி அறிந்து வந்து, அக்கொள்கையைத் 'திசை யெட்டும் சேர்ப்போம்' என்று முழங்கியவர் அவர். அவர் உருசிய நாட்டிலிருந்து வரும் வழியில் இலங்கையில் முழங்கினார். அக் கால இந்தியப் பேரரசு, ஞாயிறு மறையாத பெருமை படைத்த வெள்ளையர் ஆட்சி கலங்கியது. இந்தியாவிற்கு வருமுன்பே கைது செய்யத் திட்டமிட்டது. இந்தியாவில் நாமட்டுமன்று. அரசியல், சமுதாயயியல், பொருளியல்போன்ற எல்லாத் துறைகளின் ஆதிக்கக்காரர்களை ஒருங்கே சாய்க்கும் ஒப்பற்ற, அஞ்சத்தக்க எதிரி பெரியார் ஒருவரே யென்பதை அன்றைய வெள்ளை யர் அரசு உணர்ந்து கொண்டது.

இத்தகைய பெரியார்தான் இந்திய உரிமை நாளைத் துக்க நாளென்றார். இந்தியாவில் காங்கிரசு ஒன்றுதான் உரி மைக்குப் பாடுபட்டதென்று சொன்னால், அக்கொள்கை வழிச் செயலாற்றிய வகை யில் பெரியாருடைய பங்கு மிகப் பெரிய தென்பதை நாமுணர வேண்டும். இவர் காங்கிரசில் இருந்த காலத்தில் அப்பொழுது காங்கிரசில் இருந்த தலைவர்கள் என் னென்ன செய்தார்களோ அவைகளில் பெரி யாரின் செயல் முறைகள் ஒரு சிறிதும் குறைந்தவையல்ல. தான் உண்மையென்று நம்பிவிட்ட ஒன்றில் செயல்படும் போது பெரியாருடன் செயல்பட யாராலும் முடியாது. கதர் இயக்கத்தை நம்பியபோது

கதர்த் துணிகளை மூட்டையாகக் கட்டித் தூக்கிக்கொண்டு விற்றவர் அவர். வெள்ளையரசாங்கத்திற்குப் பெரிய வருவாயைக் கள் தேடிக் கொடுத்தது என்பதற்காகக் காந்தியார் அம்மரங்களை வெட்டச் சொன்னார். வடநாட்டில் ஈச்ச மரங்களில்தான் கள் இறக்கினர். இம்மரங்களால் வேறு பயன் பெரியதாக இல்லை யாதலின் காந்தியார் அம்மரங்களை வெட்டச் சொன்னார். தென்னாட்டு நிலை வேறு. இங்கு தென்னை மரங்களில்தான் கள் இறக்கினர். தென்னை மரம் வேறு வகையிலும் பெரிதும் பயன்படும். இவ்வேறுபாட்டைக் கொஞ்சமும் எண்ணாமல், காந்தியார் சொன்னார் என்பதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு நூற்றுக் கணக்கான, தன்னுடைய மரங்களை வெட்டி வீழ்த்தியவர் பெரியார். காங்கிரசில் இருந்த காலத்தில் சிறைக்குச் சென்று தொல்லைப் பட்டதிலும் நம் பெரியாரை யாரும் மிஞ்ச முடியாது. அத்தகைய பெரியார்தான் துக்க நாளென்றார்.

இவ்வாறு பெரியார் கூறக் காரணம் என்ன? வெள்ளையர் தாம் உண்மையான அரசியல்வாதிகள். அதிலும் நாகரிகம் தெரிந்த அரசியல்வாதிகள். அவர்கள் ஆட்சி வந்த பிறகு இந்திய நாட்டு மக்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க பல நல்ல விளைவுகள் ஏற்பட்டன. இந்திய நாட்டு அரசியல் அல்லது இந்தியர் பேசும் அரசியலெல்லாம் சாதியில் போய் முடிவதாக இருக்கும். இந்திய நாட்டு அரசியல், மதம், சமயம், இலக்கியம், தத்துவம் எல்லாம் சாதி அடிப்படையில் எழுந்தனவே யாகும்; பார்ப்பனர்கள் என்றும் எல்லாத் துறையிலும் உயர்ந்து நிற்க வழி வகுப்பன. இவ்வுண்மையைக் கண்டவரும், கண்டுகொண்ட வண்ணம் அதனை ஒழிக்கக் கடந்த நாற்பது ஆண்டுகட்கும் மேலாகப் பாடுபட்டு வருபவரும் பெரியார்தான். இந்திய நாட்டு அரசியலுரிமை என்பது இந்தியர் கைக்கு மாறினால் அது பார்ப்பனர்கள் ஆட்சியாகத்தானிருக்கும் என்பதை அவர் நன்குணர்ந்தார். நூற்றுக்கு அய்ந்து பேர் கூடப் படிப்பறிவில்லாத கோடிக் கணக்கான மக்களை இந்து மதத்தின் பெயரால் வழிவழியாக அடிமை கொண்டு சுரண்டிப் பிழைக்கும் ஓரினம் அரசியலிலும் அடிமையாக்கி விடுமே என்று பயந்தார். அரசியலுரிமை என்பது எல்லாவற்றையும்விட வன்மையுடையது. ஆகவே இதனை நாம் கொண்டாடக்கூடாது. மாறாக துக்க நாளே என்று ஒரு கணத்தில் முடிவெடுத்து அறிவித்துவிட்டார். பேசவும் தொடங்கினார். பெரும்எதிர்ப்புக்கிடையில் அவர்கள் பேசும் பேச்சும் எழுதும் எழுத்தும் தனித்தன்மையுடையதாக இருக்கும். சிந்தனையாளருக்கு அவருரை செந்தேனென இனித்தது. பெரும்பாலான தமிழ் மக்கள் இந்திய உரிமை நாளைக் கொண்டாடுவது எப்படியிருக்கிறது என்பதற்குப் பெரியாரவர்கள் சென்னைக் கடற்கரைப் பேச்சில் ஒரு கதை சொன்னார். ஒருவனுக்குப் பைத்தியம் பிடித்திருந்தது. அவனைக் கட்டிப் போட்டிருந்தனர். ஒரு நாள் அவன் தன் மனைவியை அழைத்து "அடியே! எனக்குப் பைத்தியம் தெளிந்துவிட்டது; உலக்கையை எடுத்துக்கொண்டு வா! கோவணம் கட்டிக் கொள்ளலாம்" என்றானாம். அதுபோல உள்ளது என்றார். பைத்தியக்காரனுடைய பேச்சால் அவனுக்கு இன்னும் பைத்தியம் தெளியவில்லை என்பது தெரிகிறது. அதுபோல இந்திய மக்கள் உரிமை நாளைக் கொண்டாடுவது இருக்கிறது என்றார். அவன் ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ளவன். இனி ஆளப்போகின்றவனோ இரண்டாயிரம் மைல்களுக்கு இப்பால் உள்ளவனும் நம்மோடு வாழ்ந்து கொண்டு இருக்கின்ற நூற்றுக்கு மூன்று பேருமாக உள்ளவனுமே யாவான், என்பதுதான் வேறுபாடு. முன்பு ஆண்டவன் உலகப் போக்கை யொட்டிய அரசியல் நாகரிகம் தெரிந்தவன். இவனோ அரசியல் முதலான எல்லா இயல்களையும் சாதிகளில் முடிப்பவன். ஆகவே இந்நாளை கொண்டாடாதிருப்பது என்பது மட்டுமல்ல; துக்க நாளென்று அறிவிப்பது என்று முடிவு கட்டினார்.

அய்யா அவர்களின் இந்த அறிவிப்பு பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அய்யா காட்டிய உண்மைகளை அவர் புரியாதவர் அல்லது அறியாதவர் என்று யாரும் கூற மாட்டார்கள். அவர்கள் மற்றொரு கோணத்தில் சிந்தித்தார்கள். நாம் அரசியலில் கூறும் எல்லா நியாயங்களையும் வெள்ளையர் ஆட்சியை ஆதரிப்போரென்ற கெட்ட பெயரால் மக்கள் உள்ளத்தில் நம் கருத்துக்கு இடம் இல்லாமல் செய்து விட்டனர். நாமும் அய்யா போலவே வழக்கமாகச் செய்து வருவது போலவே பேசியும், எழுதியும் வந்தால் அரசியலில் நமக்கு இடம் சிறிதுமில்லாமல் அழித்து விடுவர். பின்னர் நாம் எக்காலத்தும் தலைகாட்டவே முடியாது என்று நம்பினார். அறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய பொது வாழ்வில்

அன்றுதான் பெரியாருக்கு எதிராக எண்ணினார்; எழுதினார். அன்றைய "திராவிட நாடு" இதழின் பதினெட்டுப் பக்கங்களிலும் தன் கையாலேயே 'கொண்டாட வேண்டுமென' எழுதினார். அவர்கள் காட்டிய முக்கிய கருத்து வருமாறு: "நம்முடைய அடிமைத் தன்மையென்பது அரசியலிலும் இருக்கிறது, சமுதாயத்திலும் இருக்கிறது, பொருளியலிலும் இருக்கிறது. இந்த நாட்டில் வழிவழியாக வாழ்கின்றோமே தவிர நம் வாழ்வு அடிமை நீங்கிய வாழ்வு இல்லை. நமக்குள்ள பல்வேறு அடிமைத் தனங்களில், அரசியலிலிருந்து இன்று நாம் விடுபடுகின்றோம். அந்த அளவிற்கு அதுபற்றி மகிழவேண்டியதுதானே! நாம் ஏன் துக்க நாளென்று கூறி விலக வேண்டு"மென எழுதினார். நம்மவரில் ஒரு சாரார் கலந்து கொண்டு கொண்டாடினர்.

இவ்வாறு கருத்து வேறுபாடுகட்கு இடந்தந்த இச்சூழ்நிலையில் புரட்சிக் கவிஞர் ஒரு அருமையான கவிதையை வரைந்தார். இருவருடைய கருத்து வேறுபாடுகட்கிடையில் யாரும் புக எண்ண வில்லை. நம் புரட்சிக் கவிஞர் இடைபுகுந்து ஓர் அருமையான இலக்கியப் படைப்பை அளித்தார்: அவர் ஒரு சிறு கதையாகப் பாடினார்.

"புல்வெளியும் நெடியகுன்றும் புனல் வற்றாத நல்ல நீரோடைகளுமுள்ள ஒருகாடு இருந்தது. அக்காட்டில் வேட்டையாட வேடர் சிலர் சென்றனர். காட்டில் பறை தப்பட்டி போன்றவைகளை ஒலித்துக் கொண்டு வலைகட்டி வேட்டையாடினர். அவ்வலையில் தாய்க்குதிரை யொன்றும் குட்டிக்குதிரை யொன்றும் அகப்பட்டன. வேடுவர்கள் இவ்விரண்டையும் கட்டியிழுத்து சென்றனர். குப்பன் என்பானிடம் குட்டியையும் குதிரையையும் விற்றுவிட்டனர். குப்பன் இவைகளை வளர்த்து வந்தான். குட்டி வண்டியிழுக்கப் பயன்படும்-ஆனால் குதிரை வயதானது; ஒன்றுக்கும் பயன்படாது எனக் கண்டான்.குதிரையை கொட்டிலிலே கட்டிப் போட்டான். குட்டிக் குதிரைக்கு நல்ல தீனி கொடுத்தான்.இதனால் குட்டி நன்கு பருத்து வளர்ந்து சிறப்பாகயிருந்தது வண்டியில் கட்டி குட்டியை விரட்டி ஓட்டினார்கள். குட்டி வருத்தப்படுவதையே தன்னுடைய வழக்கமாக ஆக்கிக்கொண்டு காலந் தள்ளிற்று. ஒருநாள் வண்டி குடைசாய்ந்தது. அதன் தொடையில் புண் ஏற்பட்டது. இவ்வாறு வண்டியில் தான் பட்ட பாட்டையெல்லாம் தன்னுடைய தாயிடம் வந்து ஒருநாள் கூறியது. "அம்மா! இந்த வண்டியிலிருந்து நான் விடுதலை பெற வேண்டும் எனப் பெரிதும் விரும்புகிறேன்." இதற்குள் குப்பன்வந்து குட்டியை இழுத்துக்கொண்டு போய்க் குன்றொத்த வண்டியில் கட்டி ஓட்டினான். நிற்கக் கூட நேரமில்லாமல் அந்த நெடிய வண்டியைக் குட்டிக் குதிரை இழுத்துக் கொண்டு ஓடியது. இவ்வாறு பத்து மாதங்கள் சென்றன.

ஒருநாள் குட்டிக்குதிரை வண்டியை இழுக்க மறுத்துச் சண்டித்தனம் செய்தது. குப்பன் தன்னுடைய ஏறுகுதிரையாக இதனை ஆக்கிக் கொண்டான். தன்னுடைய ஏறு குதிரைமீது குப்பன் ஏறிச்செல்லுவான். குதிரையோ, மின்னலைப் போல உடலை நெளித்துக் கொண்டு விரைந்தோடும் மான்போல ஓடியது. 'எனக்குப் பின்புறம் வண்டியில்லை-நான் விடுதலைபெற்றேன்' என்று ஆரவாரம் செய்தது. இவ்வாறு தானே மகிழ்ந்து கொண்டிருந்த குட்டி ஒரு நாள் தாயின் பக்கம் சென்றது. "அம்மா! நான் விடுதலை பெற்றேன், நான் மகிழ்ச்சி கொண்டேன்; என்னை வருத்திய துன்பமெல்லாம் நீங்கின. அம்மி சுண்டெலிமேல் ஏறி அமிழ்தல் போல இனி வண்டி என்னை அமிழ்த்தாது" என்றெல்லாம் கூறி மகிழ்ந்தது. ஆனால் குட்டிக் குதிரையின் வாய்கிழிந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இது கடிவாளத்தால் ஏற்பட்ட விளைவு. இதனையும் உணராமல் இது கொண்டாடும் கொண்டாட்டத்தைக் கண்டு தாய்க்குதிரைக்கு வருத்தமாக யிருந்தது. அது கீழ்வருமாறு உரைத்தது:

" அடிமையே உனைப்பிணித்த ஆங்கில
  வண்டி இல்லை

வடக்குள குப்பன் உன்றன்
  வன்முதுகின்மேல் ஏறி

கடிவாளம் இறுக்கு கின்றான்
  கருதினாய் இல்லை வாயில்

வடிந்திடும் குருதி காணாய்!
  வலியுணர் கின்றாய் இல்லை.

அடிமையை வியந்தாய் அந்தோ!
  அகத்தினில் இருளைச் சேர்த்தாய்

வீழ்ந்தனை அடிமைச் சேற்றில்
  விடுதலை விழாமேற் கொண்டாய்

ஆழ்ந்துபார் உன்னா டெங்கே
அருங்கலை ஒழுக்க மாங்கே

தாழ்ந்து தாழ்ந்து எவனை நீ
போய் தாங்கிட ஒப்புகின்றாய்

வாழ்ந்தநம் உரிமை வாழ்வை
நினைக்கவும் மறுக்கின் றயா?

கடிவாளப் பிடிப்பிற் கப்பால்
கதைத்திடும் மதம்என் கின்ற

நெடுங்குன்றுக் கப்பால் சாதிநிறை
முள்ளுக் காட்டுக் கப்பால்

மடிவிலாக் கலைசொல் பூக்கும்
மணிப்புனல் ஓடை தன்னை

உடையபுல் வெளியி லன்றோ!
உன்முழு உரிமை யுண்டு

என்று தாய்ப்பரி உரைத்து
எதிர்நின்ற தன்னுடைய குட்டி

யைப்பார்த்துத் தன்னுயிர் விட்டது"

என்று முடித்துள்ளார். இப்பகுதியில் கவிஞர் தம்முடைய கருத்தை இலக்கியமாக ஆக்கிக் காட்டும் திறம் வியக்கத் தக்கது. தாய்க்குதிரையாகப் பெரியாரை உருவகம் செய்து அறிஞர் அண்ணாவை அவர் குட்டிக் குதிரையாக உருவகித்து உரை யாட விட்ட அழகை என்னென்று கூறுவது. நமக்கு உரிமை யென்பது என்ன என் பதைக் குதிரையின் வாழ்வோடு பொருத்தி விளக்கும் திறம் வியக்கத் தக்கது. "அடிமையே உனைப் பிணித்த ஆங்கில வண்டியில்லை" என்ற தாய்க்குதிரையின் கூற்றில் 'ஆங்கில' என்ற சொல்லைப் போட்டுக் குதிரைக் கதையாக வந்த செய்தியை அரசியல் கதையாக ஆக்கி விடு கின்றார்; இக்காலக் கவிஞர்கள், தமிழறி ஞர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். உமி குற்றிக் கைசலிப்பார் போல, அரைத்த மாவை அரைத்துக்கொண்டிருப்பது போல அறிஞர்கள் செல்லும் இக் காலச் செலவை, இதைப் பார்த்தாவது விட்டொழிக்க வேண்டும். எல்லாவற்றையும் விடத் தாய்க் குதிரை தன்னுடைய உரிமை யென்பது என்ன என்பதைக் கவனிக்க வேண்டும்.

கடிவாளப் பிடிப்பு—மத்திய அரசாங்கம்

மதம் என்னும் மலை—மதப் பிடிப்பில்
மனிதன் விடுபடவேண்டும்.

சாதி நிறை முள்ளுக்காடு—இதனையும்
தாண்டவேண்டும்.

குதிரையின் உரிமைக்குக் கடிவாளம்
பெரிய எதிரி.

மலையில் குதிரை தாவாது—முள்ளுக்
காட்டில் வாராது.

நீரோடை சேர்ந்த புல்வெளியில் வாழும்
இங்கு

வாழ்வதுதான் அதற்கு முழு உரிமை
யாகும்.

மாநில அரசின் உரிமைகளை மாய்க்கும் மத்திய அரசு ஒரு வன்மையான தடை. மனிதனுக்கு மதம் விளைவித்துள்ள தடை எளிமையுடையதன்று. ஆகவே அதனை மலையாக உருவகித்தார். மதம் பெற்ற பிள்ளைதான் சாதி. மதம் ஒழிந்தால் சாதி யாகிய நிறைந்த முள்ளு தானாக ஒழியும். இவையெல்லாம் தாண்டிய இடத்தில்தான் தமிழ் மக்களின் முழு உரிமையுண்டு என்று காட்டிய திறமும் வியக்கத்தக்கது. கவிஞர் கதையில் காட்டிய தாய்க் குதிரை இறந்து விட்டது. உண்மை வாழ்வில் தாய்க்குதிரை இறக்கவில்லை. தாய்க்குதிரையாக உரு வகம் செய்த கவிஞர் இறந்தார். குட்டிக் குதிரையாக உருவகம் செய்யப்பட்ட அறிஞர் அண்ணாவும் மறைந்தார். தாய்க் குதிரை இன்னும் தம் அறிவுரையினை வழங்கிக் கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணாவின் வழியில் ஆளவந்த கலைஞ ருக்கும், கோடிக் கணக்கான தமிழ் மக்களுக் கும் தன்னறிவுரையினை வழங்கிய வண்ண முள்ளது. கவிஞர் காட்டிய முழு விடு தலையை நம் முன் கொண்டுவர அது முனைந்து நிற்கிறது. நாம் வாழ, நாடு வாழ, நல்லரசு வாழ, அது நீடூழி வாழ்க வென நாமும் நம் விருப்பினைப் புலப்படுத்து வோமாக!!



# வரலாறு காணா இனக் காவலர்

**இறையன், B. A., B. T.,**

தந்தை பெரியார் அவர்கள் இந்நாட்டில் தோன்றியிரா விட்டால் ............?

நினைத்துப் பார்க்கவே உள்ளமும் உடலும் நடுங்கும் நிலை.

தன்னை இன்னாரென்றே தெரிந்து கொள்ள முடியாமல் நாயினும் கேடாய், புழுவினும் இழிவாய், நடத்தப்பட்டு வந்த தமிழினம் ஆரியத்தின் ஆற்றல்மிக்க பிடியி லிருந்து மீட்கப்பட்டு, காக்கப்பட் டிருக்குமா ?

தமிழ்க் குருதி ஓடுபவர்கள் கருதி யுணரக் கடமைப்பட்டவர்கள்.

"உலக வரலாற்றிலேயே மிகமிகக் கொடுமை நிறைந்த வன்னெஞ்சினர் ஆரியப் பார்ப்பனரே !"—ஆபே டுபே எனும் ஃப்ரெஞ்சுப் பேரறிஞரின் அரிய கண்டு பிடிப்பு இது.

"கோட்பாட்டிலும் நடைமுறையிலும் பார்ப்பனரும் அவர்தம் கடவுளரும் எந்த வொரு வல்லாட்சிக்கும் உட்பட்ட வல்லாட்சியாக இல்லாமல் அனைத்து வல்லாட்சிகட்கும் மேலான வல்லாட்சி யாக விளங்கினர்."

(In theory and in practice the Brahmans and their gods are not an IMPERIUM IN IMPERIO but an IMPERIUM SUPER IMPERIUM) என்பது சர் சார்லசு எலியட் என்ற ஆங்கில ஆசிரியரின் ஆராய்ச்சி மிக்க மதிப்பீடு.

இக்கருத்துக்களில் பொய்மையோ மிகையோ உண்டா? இல்லை- இல்லவே யில்லை.

'புராணங்கள்' நமக்குத் தரும் செய்தி கள் யாவை ?

ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே 'மனுதருமத்'திற்கு மாறாகச் சம்பூகன் எனும் சூத்திரன் 'தவம்' செய்யத் துணிந்த தால் ஒரு பார்ப்பனச் சிறுவன் இறந்து விட்டான் என்று கேள்வியுற்று, அச் சம்பூகனைத் தன் வாளால் துணித்து, தருமம் (?) காத்தான் அயோத்தி இராமன் என்பது ஒரு செய்தி.

பெற்ற தாயைக் கொலை செய்து விட்ட "பாவத்திற்குக் கழுவாயாக" பரசு ராமன் பார்ப்பனர்களின் பகைவர் களை இருபத்தி யொரு முறை படை யெடுத்துக் கொன்று குவித்ததுமின்றி, விசுவாமித்திரர் வற்புறுத்தலுக் கிணங்கி முழுவுலகத்தையே பார்ப்பனருக்கு வழங் கினான் என்பது மற்றொரு செய்தி.

தன் சொந்த முயற்சியினாலேயே சிறந்த வில்லாளனாக உயர்ந்த ஏகலை வனிடம் 'மனு (அ) நீதி' அடிப்படையில் முன்னர் அவனுக்குக் கலைகற்பிக்க மறுத்து விட்ட துரோணாச்சாரி அவனுடைய வலது கைக்கட்டை விரலையே காணிக்கை கேட்ட கொடுமைச் செய்தி இன்னொன்று.

இலக்கிய மென்று எடுத்துக் கொண் டால், தமிழ் நாகரீகத்தினைப் படம் பிடித்துக் காட்டும் ஒரேவொரு நூல் என்று பறை சாற்றப்படும் சிலப்பதிகாரத் தில், மன்னன் தவற்றுக்காக மாநகர் முழுமையும் எரிக்கப் புகுந்த கண்ணகி பார்ப்பனருக்கு விலக்களிக்கிறாள் எனும் செய்தியில் பார்ப்பனர் எத்துணை சிறப்

பீடத்தில் வைக்கப்பட்டிருந்தனர் என்பது புலப்படுகிறது!

தமிழ் மொழிக்குச் செய்யப்பட்ட மிகத் தொன்மை இலக்கணம், என்று கருதப்படும் தொல்காப்பியமே மறையோதும் அந்தணர் மன்னர் பதவியும் உரிமையாய்ப் பெறலா மென்றும், ஆனால் உழவர்கட்குப் பயிர் விளைக்கும் கடமை தவிர பிறவாழ்க்கை கிடையாது என்கிறது.

இத்தகைய பின்னணியையும் வலிமை யையும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்திருக்கும் கொடுமையின் உருவங்களாம் ஆரிய விலங்குகளிடம் நம் இன மக்கள் என்ன பாடுபட்டிருப்பர்?......

அரை நூற்றாண்டாக நம் இனத்தை மீட்க-காக்க தந்தை பெரியார் அவர்கள் எவ்வளவு கடுமையாக உழைத்திருக்க வேண்டும்?.........

பெரியாரவர்கள் 'காங்கிரசு'ப் பற்றுக் கொண்டு நாட்டுத் தொண்டு புரிந்து வந்த காலத்திலேயே பார்ப்பனர் ஏற்றம் குறித்து நன்கு ஆழமாய்க் கணித்து விட்டார்கள். (சான்று: திரு. வி. க. வின் வாழ்க்கைக் குறிப்புக்கள்)

தந்தையின் தொலை நோக்கின் கூர்மைக்கு எடுத்துக் காட்டாகத் தமிழ கத்தில் நடந்த நிகழ்ச்சிகள் சிலவற்றினை நினைவு கூர்வோம்.

சேரமாதேவி குருகுலத்தில் நமது பிள்ளைகட்குப் பழைய சோறும், 'அவாள்' குழந்தைகட்கு உப்புமாவும் காஃபியும் வழக்கமாக வழங்கப்பட்டன. இருவேறு நீர்ப்பானைகள் வைக்கப் பட்டன. இதில் குறிப்பிடத்தக்கது என்ன வென்றால் காந்தியார் தலையிட்டும் பார்ப் பனர் தங்கள் தனித்தன்மையை விட்டுக் கொடுக்க மறுத்து விட்டனர்! (சான்று: திரு. வி. க.வின் வாழ்க்கைக் குறிப்புக்கள்)

பெரியாரவர்களின் வகுப்புரிமைத் தீர் மானத்தைக் காஞ்சி மாநாட்டில் நிறை வேறவிடாது தடுத்தனர் பார்ப்பனர்.

தாழ்த்தப்பட்ட மக்கட்குக் கோயில் நுழைவு உரிமை வழங்கும் முயற்சிக்கு மிகக் கடுமையான, வலுவான எதிர்ப்புக் காட்டப்பட்டது.

ஆச்சாரியார் 1937 ல் ஆட்சிக்கு வந்த போது நம் குழந்தைகள் கல்வி பயின்று முன் னேறக் கூடாதென்றும் 'மனுதர்ம'க் கொள் கையுடன் இரண்டாயிரம் பள்ளிகளை மூடத் துணிந்தார். வடமொழிக்கு நல்ல எதிர்காலம் அமைக்கும் 'உள்நோக்க'த் துடன் இந்தியைக் கட்டாய பாடமாக்கி இரு தமிழர்களின் உயிரையும் குடித்தார்.

பொது மேடைகளில் இசை நிகழ்ச்சி கள் நடக்கையில் தமிழிலே பாடல்கள் பாடப் பார்ப்பனக் கலைஞர்கள் மறுத்தனர்.

1950-ல் அரசியல் சட்டம் நடை முறைக்கு வந்தவுடனேயே சட்டம் எழுதிய அல்லாடி அய்யரே சென்னை உயர் முறை மன்றத்தில் வழக்காடி,' வகுப் புரிமை ஆணை' செல்லாது எனும் தீர்ப் பினை வாங்கினார்.

இறைச்சியுண்ணும் ஒரு குடும்பத்தால் அடுத்த வீட்டு 'மொட்டைச்சி' யொருத்தி யின் 'ஆசாரம்' கெட்டுவிட்டதாகக் கருதி, அக்குடும்பத்தையே வெளி யேற்றிவிடவேண்டுமென வாடகைக் கட்டுப்பாடு அதிகாரிக்குக் கட்டளை யிட்டார் பார்ப்பன நடுவர் ஒருவர்.

'சுயமரியாதைத் திருமணம்' திரு மணமே அல்ல என்று ஆக்கினர்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பெரும் துணை புரிய வல்ல எழுத்துச் சீர்திருத்தத் திட்டத்தை ஒழித்துக் கட்டினர் பார்ப் பனர்.

செய்தித் தாட்களில் வெளியாகி நாடே அறிந்து கொண்ட நிகழ்ச்சிகள் இன்னும் நிறைய உண்டு.........

இவை போல எண்ணத் தொலையா ஆரியக் கொடுமைகளையெல்லாம் எதிர் நின்று போராடி, வென்று, தமிழினத்தைக் காத்த தலைசிறந்த தலைவர் தந்தை பெரியார்!

ஆரியத்தின் ஆணவத்தை அடக்கப் பெரியார் அவர்கள் அறமுறை மறியல், களிமண் பிள்ளையார் உடைப்பு, இந்திப் பெயர் அழிப்பு, ''பிராமணாள்'' பெயர் அழிப்பு, தற்காப்புக் கத்தி வைத்துக் கொள்ளும் தீர்மானம், இராமன் பட எரிப்பு, அரசியல் சட்ட எரிப்பு, நாட்டுப்பட எரிப்பு, கொடி யெரிப்புத் தீர்மானம் ஆகிய வீரம்

செறிந்த போர் நெறிகளை அருமையாகக் கையாண்டார்கள்.

தள்ளாத பருவத்திலும், ஆட்கள் தாங்கிப் பிடித்துவர நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று நீடு துயிலில் ஆழ்ந்திருந்த தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பி, தன் மானமும், இனவுணர்வும் பகுத்தறிவும் ஊட்டினார்கள்.

மெல்ல, மெல்ல-ஆனால் நல்ல, நல்ல பயன்கள் விளைந்தன.

அந்தோ......ஆரியம் நடுங்கியது, அலறியது; அடங்கியது!

இவ்வாறு தந்தை பெரியார் அவர்கள் உலக வரலாறு காணா இனக் காவலராக விளங்குகிறார்கள்.

இவ்வுண்மையினை அறிவுள்ள தமிழர்கள் உணருகிறார்கள். "தந்தை பெரியாரவர்கள் இந்நாட்டில் தோன்றியிராவிட்டால்...? என்ற கேள்வியினைத் தாங்களே கேட்டுக் கொண்டு விடையும் விளக்கமும் காண முயலுகிறார்கள்.

அம்முயற்சியின் முடிவுதான் கிண்டிப் பேராசிரியரின் உள்ளத்தைத் தொடும் உரையாகும்.

"காற்றினை எப்படி நாம் அறியாமலேயே உட்கொள்ளுகிறோமோ அது போலவே பெரியாரவர்களின் தொண்டின் பயனை நம்மையறியாமலேயே துய்த்துக் கொண்டிருக்கிறோம்!"

இந்த ஆழமான நன்றியுரையினையே தமிழினத்தின் சார்பாகத் தந்தையவர்கட்குக் 'காணிக்கை'யாக வைப்போமாக!


தொலைபேசி: வீடு: 23145
கடை: 22319

வாழ்க பெரியார்!



பெரியார் ஆண்டு 93!

எமது வாடிக்கைகாரர்களுக்கும், அன்பர்களுக்கும் தந்தை பெரியார் 93-வது
**பிறந்த நாள் வாழ்த்துக்கள்!**

# சொ. வே. இராமலிங்கம்

வியாபாரம்.

**6, சுவாமி சந்நதி சந்து, கீழமாசி வீதி, மதுரை-1.**

மதுரையில் மாத வாடகைக்கு தங்குவதற்கு நகரின் மையத்தில் அமைந்த சிறந்த லாட்ஜ்

**ஸ்டெர்லிங் மேன்சன்**

93-94, அம்மன் சன்னதி :: மதுரை-1.

போன் : | கடை : 259
| இல்லம் : 365

தந்தி : கற்பகம்.

**திருமணம்**

மற்றும் விசேஷங்களுக்குத் தேவையான

**காஞ்சிபுரம் பட்டு**

சரிகைச் சேலைகள் வாங்க சிறந்த இடம்

# கற்பகம் & கோ

பட்டு நூல் & மில் ஐவுளி வியாபாரம்

**117, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-1.**

பகுத்தறிவுலக மேதை
தந்தை பெரியார் வாழ்க !



# அசோகா ஸ்டோர்ஸ்,

**51/54, தேரடி வீதி,**

**திருவண்ணாமலை**

எங்களிடம் எல்லாவிதமான பால் பேரிங்குகளும், சூப்பர் எனாமல் (ரீ ஓயிண்டிங்) ஒயர்களும் மலிவாய் கிடைக்கும்.

93-வது ஆண்டு காணும் தந்தையே
வாழ்க வாழ்க !

# MURTHEY RADIO SERVICE

**Radio Dealers &
Talkie Engineers,**

**29-B. Thiruvudal St.,
Tiruvannamalai. N. A.**

Authorised Dealer :

AIRVOICE, TELEFUNKEN, WESTON.

Prop :

**T. R. K. T. S. MURTHEY.**

# வாழ்க பெரியார்!

[ சந்த்ராம், பி. ஏ., ஜாட்பட் தேவக் மண்டல்-புரானிபஸி, ஹோஷியார்பூர்-பஞ்சாப் ]

உத்தமர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் 93 வது பிறந்ததினத்தன்று எனது மனமுவந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியாருள் பெரியார் என்று யாரைக் குறிப்பிடுகின்றோம்? பெரிய படிப்பாளியையா? அல்லது பெரிய கோடீஸ்வரனையா? கிடையாது! மாறாக யார் மக்கள் சேவையே பெரிதெனக் கருதி தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து தியாகம் செய்கின்றார்களோ அவர்களே பெரியார் எனப்படுவர்.

புத்தர், இயேசு, கபீர், தயானந்தர் ஆகியோர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களா? அல்லது பெரிய செல்வந்தர்களா? அவர்களை எதைக் கொண்டு பெரியார் என்று அழைக்கிறோமோ, அதே வகையில் பெரியார் என்று அழைக்கக்கூடிய தகுதி படைத்தவர் நம் காலத்துப் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஒருவரே ஆவார்கள். சமுதாய சீர்திருத்தப்பணியில் ஈடுபட்டு, சாதியால் உயர்வு தாழ்வு அற்ற, சமத்துவ மனிதர்களை உருவாக்குவதற்கு உயிரையே கொடுத்து உழைக்கிறார்!

பெரியாருடைய புகழ் மங்காப் புகழாகும்! சமுதாயப்பணியில் அரிய பெரிய காரியங்களைச் செய்து அத்தனைபேர்களுடைய உள்ளத்தில் உறைந்து விட்டிருக்கிறார்! அந்த உள்ளங்களிலிருந்து அவரைப் பெயர்த்தெடுக்கவே முடியாது! அதனால் தான் அவர் பெரியார் ஆகியிருக்கின்றார்!

ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த ருஷ்ய நாட்டுத் தலைவரின் புகழ் என்னவாயிற்று? புதை குழியினின்று அவரது சவத்தை வெளியெடுத்து, மாசுகற்பித்து அவமதித்தார்கள்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் இடைவிடா தொண்டு, இது நாள் வரை போராடிப் பெற்ற வெற்றிகள் காலத்தால் அழிக்கமுடியாதவை! பெரியார் சமுதாயத் தலைவர்.

ஸ்டாலினைப் போன்று தற்காலிக அரசியல் தலைவர் அல்ல.

ஆகவேதான் பெரியாருக்குத் தனிச் சிறப்பு! பிறவித் தலைவர் பெரியாராகி யிருக்கிறார்!

சூத்திரத் தன்மையை ஒழித்து, தீண்டாமையை ஒழித்து, இவை இரண்டையும் நிலைநிறுத்தவே பாடுபடும் பார்ப்பனர்களின் செருக்கைத் தகர்த்து, யாவரும் சரி நிகர் சமானமான மனிதர்கள் என்ற இலட்சிய ஆவேசத்துடன் பாடுபடும் ஒரே தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமியே ஆவார்கள்!

பழைய கால நிகழ்ச்சி ஒன்று நினைவிற்கு வருகிறது: பெரியாரும் காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களும், நான் பஞ்சாப் லாகூரில், ஜாதி ஒழிப்புக் கழகத் தலைவனாகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது என் இல்லம் போந்தார்கள். பெரியாரை: 'நீங்கள் ஏன் இந்தியை வெறுக்கிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்குப் பெரியார்: "பிராமணன் உயர்ந்தவன் என்றும், சூத்திரன் தாழ்ந்தவன் என்றும் பேதங்கற்பிக்கும் மொழி ஒரு மொழியா? அது ஆங்கிலமொழியைப் போல் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், சுயசிந்தனையையுமா போதிக்கிறது? அது ஒழியத்தான் வேண்டும்!" என்றார். உடனே எனக்கு, அவர் சொல்வது முழு உண்மையென்பதை கீழ்காணும் பிரசித்திபெற்றதாகக் கூறும் துளசிதாஸ் 'ராம்சரித மான'ஸில்வரும் செய்யுளால் உணரமுடிந்தது:—

பூஜியே விப்ர சீல குண ஹீனா,
சூத்ர ந குண கண் ஞனபிர வீனா.

அர்த்தம்: (சீல குண ஈனனையும் பார்ப்பானானால் பூஜிக்கவும். சீலவான், குணவான், ஞானியேயானாலும் சூத்திரனை மட்டும் பூஜிக்காதே)

ஆக பெரியாருடைய மூச்செல்லாம் ஜாதி பேதம் ஒழியவேண்டும்; சிந்தித்து பகுத்தறிவுடன் சேவை செய்யவேண்டும். அதற்கு எது தடையாக நின்றாலும் உடைத்துக் கொண்டு முன்னேற வேண்டும்; மனிதன் அறிவாளியாக மாறவேண்டும்; என்பதில் தான் இருக்கிறது. இப்படிப்பட்ட பெருந் தொண்டரை, தொண்டு இளைஞரை, தொண்ணூற்று மூன்றாம் பிறந்த நாளாகிய இன்று மனமகிழப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். வாழ்க பெரியார்! வளர்க அவர் தொண்டு!!

*With Best Compliments :*

**From**

# R. NARAYANA SAMY

**Engineering Contractor**

(Civil and Sanitary works)

**54, RAVI COLONY,**

ST. THOMAS MOUNT,

MADRAS-16.

தந்தை பெரியார் வாழ்க !

**நிறைந்த ருசியுள்ள**

**குளிர்ந்த பானங்களுக்கு**

**சிறந்த இடம்**

**V. S. P. பொன் மார்க்**

சோடா பாக்டரி, வாடிப்பட்டி.

**பகுத்தறிவு பெற**

விடுதலை, உண்மை படியுங்கள்.

**S. P. சுப்பையா**

**நியூஸ் ஏஜண்ட்,**

**வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.**

தந்தை பெரியார் 93-வது பிறந்தநாளில் எனது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாழ்க பெரியார் !**



**பெரியார் மிதிவண்டி நிலையம்**

உரிமையாளர் :

**ந. உத்திராபதி,**

தி. க. செயலாளர்,

இரும்புலிக்குரிச்சி,

(வழி) உடையார் பாளையம்,

திருச்சி மாவட்டம்.

# தமிழ் இலக்கியத்தில் பகுத்தறிவுக் கருத்துக்கள்



டாக்டர்: சாலை இளந்திரையன்

மூவாயிரம் ஆண்டுகளாகப் பலப்பல வகையான செடிகளையும் கொடிகளையும் மரங்களையும் வளர்த்து வந்திருக்கிறது தமிழ் இலக்கியத் தோட்டம். இந்தத் தோட்டத்திலே, அந்தக் கற்பனை நெடி மிகுந்த மலர்களையும் மணமே இல்லாத காகிதப் பூக்களையுமே மிகுதியாகக் கண்டு கண்டு அலுத்துப் போன பகுத்தறிவாளர் கள், ''பாரதிதாசப் பைங்கொடி இங்கே படரும் வரை இந்தத் தோட்டத்தில் பகுத் தறிவு மலர்களே இதழ் அவிழ்த்ததில்லை'' என்று சொல்லி வந்திருக்கிறார்கள்.

இந்தக் கூற்றில் பெரும் அளவு உண்மை இருக்கவே செய்கிறது. என் றாலும், தமிழ் இலக்கிய வரலாற்றில்,— பகுத்தறிவுச் சிறுமலர்கள்,—சில மலர்கள் ஏற்கனவே இதழ் நெகிழ்த்திருப்பதை அங்கங்கே காணவே முடிகிறது. அத் தகைய சிறுமலர்கள் நறுமலர்களாகப்பெருக முடியவில்லை என்பதும் காணக் கூடிய தாகவே இருக்கிறது. அதற்குக் காரணம், இந்த நூற்றாண்டில் கிடைத்தவர்கள் போன்ற சமுதாயக் காவலர்களான தோட் டக்காரர்கள், தமிழ் வரலாற்றில் வேறு எப் போதும் கிடைத்திருந்ததில்லை, அதனா லேயே, அங்கங்கே முகங்காட்டிய பகுத் தறிவு முகைகளும் மொட்டாகவே கருகிப் போக வேண்டியதாயிற்று.

## வள்ளுவர் அறிவு

பழைய தமிழ் வரலாற்றில், கற்பனைப் புகை மூட்டத்தால் முழுமையாக மூச்சுத் திணறிப் போகாத சிந்தனையாளர்களில் முக்கியமான ஒருவர் வள்ளுவர். தமிழ் நிலத் தில் பரவிய 'அதீத வாதம்' அவரையும் ஓரளவு பற்றியிருக்கிறது என்றாலும்,— சிற்சில முனைகளில், அவருடைய பார்வை திருந்திய பகுத்தறிவுப் பார்வையாக உள்ளது.

“எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும்,
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

இந்த இரண்டு பாடல்களிலும் பகுத்தறிவின் இலக்கணம் தெளிவாகச் சொல்லப் பட்டுள்ளது. கூடவே. அக்காலத்தில் பகுத்தறிவுக்குப் பெரிய எதிரிகள் முளைத்துப் படர்ந்திருந்தார்கள் என்னும் உண்மையும் குறிப்பாக உணர்த்தப்படு கிறது.

எந்த ஒரு பொருள் (புறத்தே அல்லது மேம்போக்காக) என்ன விதமாகக் காட்சி யளித்தாலும், அதன் உள்ளார்ந்த தன்மை யைக் கண்டு தெளிவதே அறிவு என்பது முதற்பாட்டின் பொருள். அதேபோல், எந்தப் பொருளைப் பற்றி எத்தகையவர் என்ன சொன்னாலும், (அவருடைய நிலைமையைக் கருதாமல்) அப்பொருளின் உள்ளார்ந்த உண்மைத் தன்மையைக் கண்டு தெளிவதே அறிவு என்பது இரண்டாவது பாட்டின் பொருள்.

## விளக்கம் விரிந்ததேன் ?

"ஒரு பொருளின் அல்லது ஒரு மனிதனின் அல்லது ஒரு நிகழ்ச்சியின் உண்மைத் தன்மையைக் கண்டு தெளிவதே அறிவு" என்னும் விளக்கமே போதுமானதாக இருக்க, "எத்தன்மைத்து ஆயினும்", "யார் யார் வாய்க் கேட்பினும்" அடைமொழிகளை வள்ளுவர் இணைப்பானேன்? அந்த அடைமொழி இணைப்பிலேதான் வள்ளுவருடைய காலநிலை பேசுகிறது. அதாவது, ஒரு பொருளை வேறுபொருள் போலக் காட்டும் மாயாவாதமும், தனிமனிதர்கள் தங்கள் சமுதாய உயர்நிலையைக் காட்டி உண்மைகளுக்கே திரைபோடும் தீயார் வாதமும் வள்ளுவருடைய காலத்திலேயே வளர்ந்துவிட்டன என்பதையே இது காட்டுகிறது.

திருக்குறளுக்கு முந்தியதாகக் கருதப் படுகிற சங்க இலக்கியத்தின் புறநானூற்றில் பின்வரும் பாடல் ஒன்று உள்ளது:

"பல்சான்றீரே! பல்சான்றீரே!
கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்,
பயன்இல் மூப்பின், பல்சான்றீரே!
கனிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை, இரங்குவிர் மாதோ;
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது;—அன்றியும்,
நல்ஆற்றுப் படூஉம் நெறியும்மார்
அதுவே!"

சமுதாயப் பெரும் பதவிகளிலும் பொறுப்புக்களிலும் இருந்த சிலரைக் கடுமையாகத் தாக்கும் ஒரு கவிஞனுடைய குரல் இது. "உங்கள் தலை வெள்ளை வெளேரென நரைத்திருக்கிறது. அதாவது, நீங்கள் நன்றாக மூப்பெய்தி விட்டீர்கள். ஆயினும், உங்கள் முதுமை பயனில்லாத முதுமை. காரணம், முதுமை என்னும் திரைக்குப் பின்னால் நீங்கள் மக்களுக்குத் தீங்கு செய்கிறீர்கள். நீங்கள் யாருக்கும் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை; மற்றவர்களுக்குத் தீங்காவது செய்யாமல் இருங்கள்!"

இந்தக் குரலை ஒருவன் எழுப்ப வேண்டுமானால் அந்தப் "பெரியவர்கள்" எவ்வளவு தீங்கினராக இருந்திருக்க வேண்டும்! இன்று ஆட்சிபீடம் முதல் அனைத்துத் துறைப்பீடங்களிலும் மண்டிக் கிடக்கும் போலிகள் புறநானூற்றுக் காலத்திலேயே இங்கே பிறந்திருந்தார்கள் என்பதையே இது காட்டுகிறது. இவர்கள்,- தங்கள் போலித்தனம் பிறருக்குப் புலப் படக் கூடாது என்பதற்காக, உண்மைகளையே திரை போட்டு மறைத்திருப்பார்கள்; அப்படிப் போட்ட திரைகளுக்குப் பாதுகாப்பாகத், தங்களுக்குக் கிடைத்திருந்த பெரும் பதவிகளையே கயிறுகளாகக் கட்டியிருந்திருப்பார்கள்!

இந்தப் பின்னணியில் அறிவுக்கு விளக்கம் கொடுக்க வந்ததாலேதான்,- "எப்பொருள் எத்தன்மைத்தாயினும்" (எந்த ஒரு பொருளை மற்றவர்கள் எந்த விதமான சாயங்கள் ஏற்றி மாற்றிக் காட்டினாலும்) என்றும், "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்" (அதை, இன்ன படித்தானது என்று எவன் திரித்துச் சொன்னாலும்),-மாயைகளைக் கண்டு மயங்காமல், பதவிகளைக் கண்டு மருளாமல் அதன் உண்மைத் தன்மையைக் காண்பதே அறிவு என்கிறது வள்ளுவம். அதாவது, **உண்மை காணும் தெளிவும், அதை யாருக்கும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் துணிவும் உடையதே பகுத்தறிவு** என்பது வள்ளுவரின் நோக்கு.

## வள்ளுவக் குழப்பம்

இரண்டு இடங்களில் இவ்வளவு தெளிவாக அறிவுக்கு இலக்கணம் சொன்ன வள்ளுவரும் வேறோரிடத்தில், மரபுவழிச் சிந்தனைக்கு அடிமைப்பட்டு, அறிவு முனைப்புக்குத் தடை விதித்து விடுகிறார்:

"உலகத்தார் உண்டென்பது இல்லென்பான்,
வையத்து
அலகையா வைக்கப் படும்!"

'உயர்ந்தோர் எல்லாரும் உண்டென்று சொல்லும் பொருளை இல்லை என்று மறுக்கும் புல்லறிவாளன், மண்ணுலகத்தில் மாந்தன் வடிவில் வாழும் பேயாகக் கருதப் படுவான்' என்பது இதன் பொருள். இந்தப் பாடலுக்கு உரை வகுத்த பெருமக்கள்,

"உலகத்தார் உண்டு என்பவை கடவுள், மறுபிறப்பு, இருவினைப்பயன், மோட்சம், நரகம் முதலியன'' என்று விளக்கம் தருகிறார்கள்.

இவர்களின் விளக்கத்தை நாம் ஏற்றாலும் (''அது திருவள்ளுவர் கருத்து அல்ல'' என்று) மறுத்தாலும், ''பெரியோர்கள் என்பவர்கள் உண்மை என்று சொல்லி வைத்துள்ள ஒன்றை அவர்களின் வழியில் வரும் மற்றவர்கள் மறுப்பது அறிவுடைமை ஆகாது'' என்பதே வள்ளுவர் கருத்து என்பதில் அய்யப்பாடு இல்லை. பெரியோர்கள் உண்மை என்று சொன்னதை எல்லோரும் அப்படியே ஏற்றுக் கொள்வதானால், ''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது'' எப்படி? எனவே, ''சிற்சில பொருள்களைப் பற்றிப் புதிய சிந்தனைகளுக்கு இடமில்லை,—சிற்சிலர் சொல்லுவது முடிந்த கருத்து'' என்னும் மதவாதக் கருத்தை வள்ளுவரும் வழிமொழிகிறார் என்றே தெரிகிறது. இப்படிச் சில கருத்துக்களுக்கும் சில நிலையினருக்கும் மறுக்கத் தகாத ''புனிதப் பெரியதன்மை'' ஏற்றியதாலேதான் இங்கே பகுத்தறிவும் அதன் விளைவான ஆராய்ச்சிகளும் பெருகவில்லை.

## அவ்வை சொன்னது

முதல் இரண்டு பாடல்களில் வள்ளுவர் சொன்ன அறிவின் இலக்கணம் அவர் தலையிலே திடீரென்று வந்து குதித்து விடவில்லை; அவருக்கு முந்திய சில சான்றோர்கள் அந்தத் தெளிவுக்கும் துணிவுக்கும் வழி காட்டியிருக்கிறார்கள் :

நாடாக ஒன்றோ, காடாக ஒன்றோ ;
அவலாக ஒன்றோ, மிசையாக ஒன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழிய நிலனே......

இது அவ்வையார் பாடல். 'நாடு என்றால் என்ன?' என்ற கேள்விக்கு அறிவு நெறி சார்ந்த விளக்கமாக அமைகிறது இப்பாடல்.

கழனியாகவோ காடாகவோ இருக்கலாம்; பள்ளமாகவோ மேடாகவோ இருக்கலாம் ;—ஒரு நாடு இவைகளிலே எந்தத் தன்மை உடைய (நிலப்பரப்பின)தாக இருக்கிறது என்பது பற்றிக் கவலை இல்லை; எந்த நாட்டின் மக்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ அந்த நாடே நல்ல நாடு. இதுதான் மேற்குறித்த பாடலின் கருத்து.

## அறிவுப் பாடல்

எதுவும் மக்கள் உழைக்காமல் மேலிருந்து வந்திடுவதில்லை. மக்களின் உழைப்பு இல்லையாயின், வளம் மிக்க நாடும் வளம் குன்றிப் போகும்; மக்களின் உழைப்பு உண்டு எனில், வறண்ட காடும் செழிய நிலமாகும். 'காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கிய' வரலாறு அன்றோ, நன்மக்களின் வரலாறு? எனவே, 'பொறுப்புணர்ந்த நன்மக்களின் நாடே இலட்சிய நாடு' என்னும் இந்த இலக்கணம் பகுத்தறிவுக்குப் பொருந்தியதாக இருக்கிறது.

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' (ஒரு நாட்டு மன்னனே அந்நாட்டு மக்களுக்கு உயிர்!) என்னும் கொள்கை நிலவி வந்த அந்தக் காலத்தில்,—''நல்ல அரசனைப் பெற்றதே நல்ல நாடு'' என்று பாடவும், அவ்வாறு பாடி ஓர் அரசனை மகிழ்வித்துப் பெரும் பரிசில் பெறவும் வாய்ப்புக்கள் இருந்த காலத்தில்,—அவைகளை மீறி எழுந்த துணிவான அறிவுக் குரல் இது. முதலாளித்துவச் சமுதாயத்தில் நின்று கொண்டு நாட்டுக்கு இலக்கணம் சொல்லும் வள்ளுவர், ''தள்ளா விளையுளும் தக்காரும் **தாழ்வலாச் செல்வரும்** சேர்வதும் நாடு'' என்று கூறி, பணக்காரர்களையும் நல்ல நாட்டின் ஓர் உறுப்பாகச் சேர்த்துக் கொண்டதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. அத்தகைய வெளிச் செல்வாக்கு (Pressure) களுக்கு ஆட்படாமல், உண்மையான விளக்கத்தைத் தருவதாலேதான் அவ்வையின் பாடல் அறிவுப் பாடலாக மிளிர்கிறது.

## சடங்குக்கு எதிர்ப்பு

நம்பி நெடுஞ்செழியன் என்னும் மாவீரன் இறந்து போனான்; அவனுடைய இறுதிச் சடங்குக்காக எல்லோரும் கூடி இருக்கிறார்கள். 'அவனுடைய உடம்பைப் புதைப்பதா, சுடுவதா?' என்னும் கேள்வி எழுந்து இழவு வீட்டுக்கு வந்தவர்களை இரு கட்சிகளாகப் பிரித்து விட்டது. இரண்டு கட்சிக்காரர்களின் வாதாட்டங்களையும் கேட்டுக் கொண்டிருந்த பேரெயின் முறுவலார் என்னும் புலவர்

எழுந்தார். "இது என்ன வீண்சண்டை? ஒருவன் உயிரோடு இருந்தபோது எப்படி இருந்தான் என்பதுதான் முக்கியமே தவிர, செத்த பிறகு அவன் உடம்புக்கு என்ன "மரியாதை" செய்யப்படுகிறது என்பது முக்கியமில்லை நம்பி நெடுஞ்செழியனை பொறுத்த வரையில்—அவன் வலியவர் என்பதற்காக ஒருவரைக் கண்டு அஞ்சிப் பதுங்கியதில்லை; எளியவர் என்பதற்காக யாரையும் இகழ்ந்து நின்றதுமில்லை. மற்ற வர்களிடம் அவன் எதற்கும் கையேந்தி நின்றது கிடையாது; தன்னிடம் வந்து கையேந்தியவர்களுக்கு அவன் இல்லை என்று சொன்னதும் கிடையாது. அது மட்டுமோ? மயக்கத்தைத் தரும் விதமாகப் பேசி அவன் யாரையும் குழப்பியதும் கிடை யாது. எனவே, இந்த நம்பி, ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டுமோ அப்படி (நிறை வாழ்வு) வாழ்ந்திருக்கிறான்; அதுவே அவனுக்குப் போதுமானது. அவனுடைய உடம்பைப் புதைப்பதாலோ, எரிப்பதாலோ அவனுக்குத் தனிச்சிறப்பு எதுவும் இனிமேல் உண்டாக வேண்டியதில்லை. ஆகையால் அதுபற்றி நீங்கள் யாரும் குடுமிப் பிடியில் இறங்க வேண்டாம்!......"

சடங்குச் சம்பிரதாயங்களுக்கு எதிரான இந்த அறிவுக்குரல், இந்த மண்ணிலே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுந் திருக்கிறது. இதைக் கவனிக்கிற போது,- அந்தக் காலத்திலேதான் மனித வாழ்வின் பல (இன்ப துன்ப) நிகழ்ச்சிகளோடு தொடர் புடைய மூடத்தனச் சம்பிரதாயங்கள் பரவின என்றும், அன்றையப் புலவர்களில் சிலராவது அவைகளைக் கண்டித்து மக்க ளுக்குத் தெளிவுதர முயன்றார்கள் என்றும் ஊகிக்க வேண்டியிருக்கிறது. (இந்த அரிய கருத்தை உள்ளடக்கிய மேற்கண்ட நிகழ்ச்சி 239ம் புறப்பாடலில் சொல்லப் பட்டுள்ளது.)

### மணிமேகலை சொல்வது

மூடத்தனத்துக்கு முழுச் சாமரம் வீசாமல், அக்கால வாழ்வை அப்படியப் படியே (ஒருணர்ச்சிப் பாடல்களால்) சித்திரித்து வந்துள்ள சங்க இலக்கியத்தில் அக்கால நம்பிக்கைகளுக்கும் ஓரளவு இடம் உண்டு. ஆயினும், அவ்வையார், பேரெயின் முறுவலார் போன்ற அறிவுத் தெளிவாளர் களின் குரலும், (முன்பே ஓரிடத்தில் சுட்டிய) நரிவெரூஉத்தலையார் போன்ற வர்களின் கண்டன நற்குரலும் அந்த இலக்கியத்தில் கேட்கவே செய்கிறது. மதமான பேய் பிடித்து மடிந்து போன பிற்காலத் தமிழ்ச் சமுதாயத்திலேதான், அறிவுக் கருத்துக்கள் மிகுதியாகத் தலை எடுக்க முடியவில்லை.

சமயச் செல்வாக்குக்கு உட்பட்டுக் கதை கதையாகச் சொல்லிச் செல்லும் மணிமேகலை, சில நல்ல செய்திகளையும் சொல்லுகிறது. அவற்றுள் ஒன்று,

'மண்டிணி ஞாலத்து
வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி கொடுத்தோர்
உயிர்கொடுத் தோரே'

என்பது. இது, ஏற்கெனவே சங்கப் பாட லில் வலியுறுத்தப்பட்ட ஒரு கருத்தே.

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்
கொடுத்தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே..."

குடபுலவியனார் என்னும் புலவர் பாடிய புறநானூற்றுப் (18ம்) பாடலின் ஒரு பகுதி இது.

மனிதனுக்கு அடிப்படையான தேவை உணவு; அதைத் தருவதற்கு வாய்ப்பாக, நாட்டிலே நீர் வளமும், நிலவளமும் பெருக்கி விளைவைப் பெருக்குகிறவர்களே மக்களுக்கு உடம்பும் உயிரும் தந்தவராவார் கள் என்பது இதன் கருத்து. இந்தக் கருத் தையே, காலத்துக்கு ஏற்றவாறு (மேலே கண்ட விதமாக) எடுத்து விளக்கி அருளறம் பரப்பியது மணிமேகலை.

### சித்தர்கள் குரல்

மணிமேகலைக்குப் பிறகு வந்த பெரும் பல தமிழ் இலக்கியங்களும் சமய வெறியையே நெறியாகப் பரப்ப முற்பட்டு விட்டன; சமய வெறியை நேரிடையாகப் பரப்பாத நூல்களும், சமய வழிச் சிந்தனை

களின் பாதிப்புக்கு ஆளான வரலாறு தமிழ் இலக்கியங்களில் தெளிவாகவே தெரிகிறது. இல்லாவிட்டால், அண்ணனை ஆபத்தில் கைவிட்டுக் காட்டிக் கொடுத்தவன் ஆழ்வாராகியிருக்க முடியுமா? இல்லை, ஒரு வீரனை மரத்தில் மறைந்து நின்று (தழிஞ்சி என்னும் தமிழ்ப் போர் மரபுக்கு முரணாகக்) கொன்றவன்தான் கடவுளாகி யிருக்க முடியுமா?

இந்தவிதமான செய்திகளை எடுத்துச் சொன்னால் இப்போது சிலருக்கு ''மனம் புண்பட்''டாலும்,—சமய வழிச் சிந்தனை களால் தமிழ்ச் சமுதாயமே பாழ்பட்டுக் கொண்டிருந்த நிலையைக் கண்டு பிற்காலச் சித்தர்கள் மிகமிக மனம் நொந்தார்கள். கடவுள் நம்பிக்கை என்ற ஒன்றைச் சுற்றி மதம், சாத்திரம், சாதி, சம்பிரதாயம், மூடத் தனம் என்னும் பல்லாயிரம் புதர்கள் மண்டி நிறைந்துவிட்டதைக் கண்டு அவர்களின் உள்ளம் கொதித்தது. எனவே, அவர்கள் தங்களின் கூரிய சொற்களால் அடித்து அடித்து மக்களை எழுப்ப முயன்றார்கள்.

''சாத்தி ரங்கள் ஓதுகின்ற
சட்ட நாத பட்டரே
வேர்த்து இரைப்பு வந்தபோது
வேதம் வந்து உதவுமோ?''

என்று சிவவாக்கியர் கேட்பதில், சாத்திரம் என்ற ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட ''அதிபுனிதத்துவ முக்கியத்துவம்'' அறிவு நெறியிலே அலசப்படுகிறது.

''பறைச்சி யாவது ஏதடா?
பணத்தி யாவது ஏதடா?
இறைச்சி தோல் எலும்பிலும்
இலக்க மிட்டி ருக்குதோ?''

என்னும் கேள்வியை எழுப்பி,—

''மேதியோடும் ஆவுமே
விரும்பியே புணர்ந்திடில்
சாதிபேத மாய் உருத்
தரிக்கு மாறு போலவே,
வேதம் ஓதுவானுடன்
புலைச்சி சென்று மேவிடில்
பேதமாய்ப் பிறக்கி லாத
வாற தென்ன, பேசுமே!''

என்னும் விளக்க வினாவைத் தொடுக்கும் போது, நாட்டிலே பலர் நாட்டிக் காத்து வந்த சாதிச் சழக்கின் ஆணிவேரே அசை கிறது.

வெளிப் பகட்டான கடவுள் வழிபாடு, உருவ வழிபாடு முதலியவை பற்றியும் சிவ வாக்கியர் கடுமையான கண்டனம் தெரிவித் துள்ளார். ''கோயிலாவது ஏதடா, குளங்க ளாவது ஏதடா,—கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே?'' என்று போலிப் பக்தரை விளித்து,

''நட்ட கல்லைத் தெய்வம் என்று
நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணமு ணென்று
சொல்லும் மந்த்ரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ,
நாதன் உள்ளிருக் கையில்?
சுட்ட சட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ?''

என்று முதன் முதலில் வினா எழுப்பியவர் சிவவாக்கியர் என்றே தெரிகிறது.

இத்தனை தீவிரமான சொல் வீச்சுக் களும் நாத்திகம் தழுவிய அறிவு வீச்சுக்கள் அல்ல என்பதை நாம் உணரவேண்டும். சித்தர்களும் அவர்களைப் போன்ற மற்றவர் களும் விரும்பியது பக்தி நெறிச் சீர்திருத் தமே; அனைத்து நம்பிக்கைகளுக்கும் அடித்தளமாக உள்ள கடவுள் நம்பிக் கையை அடியோடு ஒழிக்க அவர்கள் முனையவில்லை.

### இடை வந்த சிலர்கள்

இவர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் இந்த அளவு தானும் அறிவு உணர்ச்சி தமிழ் இலக்கியத்தில் பாயவில்லை. காளமேகம் போன்ற சிற்சிலர், கடவுள் மதக் கதைகளை அங்கங்கே கிண்டல் பண்ணினாலும்,— அவை ''நிந்தாஸ்துதி'' என்னும் பெயரில் முனை மழுக்கப்பட்டு ஒருவகையான பக்திப் பாடல்களாகவே சேர்க்கப்பட்டு விட்டன. அதன் மூலம், பக்திப் பாடல் நெறிக்கு ஒரு புதிய துறை கிடைத்ததே தவிர, அறிவு நெறியில் அணுவளவும் வெளிச்சம் படரவில்லை.

சுப்பிரமணிய பாரதிக்கு வழிகாட்டியாக அமைந்தவர்களில் ஒருவர் வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள். இவரும்,—சித்தர்கள் போலவே,—கடவுள் நம்பிக் கையை வைத்துக்கொண்டு, அதைச் சுற்றிப் படர்ந்து கிளைத்த மதம், சாத்திரம், ஆச்சாரம் போன்றவைகளை மட்டுமே வன்மையாகக் கண்டித்தார். எனவே, அடிப்படையை அசைக்காத அதுவும், சமுதாயத்தில் பெரிய விழிப்பையோ, அதிர்ச்சியையோ ஏற்படுத்தவில்லை. இதே முறையைக் கடைப்பிடித்துச் சென்றவர் களே, பிறகு வந்த சுப்பிரமணிய பாரதி, கவிமணி போன்றவர்கள்.

## புரட்சிக் கவிஞர்

1925ல் கருக்கொண்ட தன்மான இயக்கமே, நீண்ட காலத்துக்குப் பிறகு தமிழகத்தில் பகுத்தறிவு எண்ணங்களுக்கு வலுவாக விதை ஊன்றியது. அதன் வேகமே, 'சுப்பிரமணியர் துதியமுது' பாடிக்கொண்டிருந்த சுப்புரத்தினத்தை அடியோடு மாற்றிப் புரட்சிக் கவிஞராகத் தமிழ் உலகுக்கு அறிமுகம் செய்தது. தமிழ் வரலாற்றிலேயே வன்மையான பகுத்தறிவு கவிதைகளைப் பொழிந்த முதல் கவிஞர் புரட்சிக் கவிஞரே. குறிப்பாக, பாரதிதாசன் கவிதைகளின் முதல் தொகுதி, ஆற்றல் மிக்க பகுத்தறிவுப் படைக் கலன்களைக் கொண்ட களஞ்சியமாக விளங்கியது.

நாட்டிலே கேட்டைப் பெருக்கிய சாதி, மதம், இதிகாசம், புராணம், இலக் கியம் என்பவைகளைச் சாடியதோடு, இவைகளை ஊட்டி வளர்த்துக் கொண்டி ருக்கும் கடவுள் நம்பிக்கையையும் கண்ணோட்டமின்றித் தாக்கினார் பாரதி தாசன். தமக்கு முன்பு, கண்ணெட்டும் தூரம் வரை தெரிந்த மதவழித் தமிழ்ப் புலவர்களை எல்லாம் பின் கண்டவாறு மதிப்பீடு செய்தார் அவர்:

"அழியாத மூடத்தனத்தை—மிக
அழகாய் வரைந்திடும்
பழிகாரர் தம்மை
முழுதாய்ந்த பாவலர் என்பார்—அவர்
முதலெழுத்து ஓதினும்
மதி இருட்டாகும்!"

"இந்த உலகில் எண்ணிலா மதங்கள் கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்", "இருட் டறையில் உள்ளதடா உலகம்,—சாதி இருக் கிறது என்பானும் இருக்கின்றானே!" என்பன போன்ற தீக்கணைகளை அள்ளி வீசித் தெருவெல்லாம் பகுத்தறிவு வெளிச்சம் பரப்பிய புரட்சிக் கவிஞர்,

"சீரங்க நாதனையும்
தில்லைநட ராசனையும்
பீரங்கி வைத்துப்
பெயர்த் தெறிவது எந்நாளோ?"

என்று முழங்கினார். தாலாட்டுப் பாடல் களிலேகூட மதம், சாதி, சாமி ஆகிய வற்றைக் கருவறுக்கும் கருத்துக் குவியல் களை வாரி வழங்கினார். ஆயினும் இவரு டைய ஏற்றப் பாட்டில் "ஒரு கடவுள் உண்டு—தம்பி, உண்மை கண்ட நாட்டில்" எனவும்-குறிஞ்சித் திட்டில், "ஒரு கடவுள் உண்டென்போம்—உரு வணக்கம் ஒப்போம்" எனவும் வரும் செய்தி சற்றுத் திகைப்பையே தருகிறது.

## வளரும் பரம்பரை

பாரதிதாசனுக்குப் பிந்திய தமிழ்க் கவிதை அவருடைய பகுத்தறிவுக் கருத்துக் களில் பலவற்றைப் "பின்பாட்டு" என்ற தரத்திலேயே ஒலிக்கிறது. சாதி, மத, கடவுட் கண்டனங்கள் அவ்வளவு வலிமை யாக எழுப்பப்படுவதாகத் தெரியவில்லை. ஒருவேளை, பகுத்தறிவு வாதத்திலேயே, நாத்திகப் பகுத்தறிவு வாதம் கடவுள் நம்பிக்கை உடைய பகுத்தறிவு வாதம் என்ற ஓர் இணக்க நெறி உண்டாகி வருவது இதற்குக் காரணமாக இருக்கலாமோ? ஆயினும், அறிவு நெறிப்பட்ட சிந்தனை யோடு, அதைப் புறக்கணித்த கடவுள் நம்பிக்கை பொருந்திப் போகாது என்பது தெளிவே.

கடவுள் நம்பிக்கையாலும் அதன் விரிவுகளான மதம், வழிபாடு முதலிய வற்றாலும் இங்கே சோசலிசம் என்னும் பொதுமை நலப் பெருவாழ்வு வராது என்னும் எண்ணம் இப்போது சிறிதாவது ஏற்பட்டுள்ளது: "சாதிகளைச் சுமந்து கொண்டு தடுமாறும் தடையல்ல சோச லிசம்!" எனவும்,—

"அந்தச்சாமி இந்தச்சாமி
சொந்தச் சாமிகள்—நமக்கு
அப்புச் சாமி குப்புச்சாமி
சுப்புச் சாமிகள்!
எந்தச் சாமி சோற்றுப் பாட்டைத்
தீர்த்து வைத்தது?—நம்மை
எந்தச் சாமி ஒற்றுமைக்குள்
சேர்த்து வைத்தது?"

எனவும் வருவன எல்லாம் அந்த எண்ணத்தின் வெளிப்பாடுகளே.

### நம்ப இடம் உண்டு

பகுத்தறிவுக் கருத்துக்கள் நாம் விரும்பி எதிர்பார்க்கிற அளவில் இன்னமும் தமிழ் இலக்கியத்தில் செழிப்புற வில்லையாயினும், பகுத்தறிவுப் படையின் போராட்டம் இத் துறையில் சில வெற்றிகளைத் தந்தே இருக்கிறது; நீண்ட காலமாகத் தமிழ் இலக்கியத்தை ஆண்டுவந்த சமயவழி மாயாவாதப் போக்கு விலகி, "எதார்த்த நோக்கில் இலக்கியம் படைத்தாக வேண்டும்" என்னும் எண்ணம் இங்கே வலுவடைந்து வருவதற்குப் பகுத்தறிவுப் பிரச்சாரமே அடிப்படைக் காரணம்.

ஆண்டவனை நோக்கி அழுது புலம்புவதும், "பரமசிவன் அருள் புரிய வந்து வந்து போவ"துமான செய்திகள் தமிழ்க் கலைகளை விட்டு அடியோடு தொலைந்து விடவில்லை. ஆனால், தமிழ் இலக்கியத் துறையில் இந்தக் கேடு இப்போதெல்லாம் மிகமிக அருகியே காணப்படுகிறது. அந்த அளவிற்கு இலக்கியவாணர் அனைவரும் தெளிந்து விட்டார்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும், "இனிமேல் அறிவு வழிப்பட்ட எதார்த்த வாதத்தை விட்டால் வழியில்லை" என்னும் அச்சம் அவர்களுக்கு உண்டாகியே இருக்கிறது. எனவே, அரசியல் மற்றும் சமுதாயத் துறைகளில் ஏற்பட்டுள்ள சிறிய மாறுதல்கள் இப்படியே வளர்த்துச் சொல்லப்படுமானால், இங்கே பகுத்தறிவுக் கருத்துக்கள் மலிந்த இலக்கியம் மிகுதியாக உருவாகும் என்று நம்ப இடம் இருக்கிறது.


**தமிழக அரசின் உறுதுணையாய் இருக்கும்**

**தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்த நாளன்று**

**எங்கள் மனங்கனிந்த வணக்கத்தையும், வாழ்த்தையும்**

**காணிக்கையாகப் படைக்கிறோம்.**



**வாடிப்பட்டி ஸ்ரீ லாலா டாக்கீஸ்**

உரிமையாளர்கள் :

**P. பெருமாள், B. A., பொன். சுப்பையா, P. திருமலைசாமி.**

(மதுரை மாவட்டம்)

வைக்கம் வீரர் தந்தை பெரியார் வாழிய வாழியவே!

போன்: 316

# K. P. அருணாசலம் அண்ட் சன்ஸ்

6, நஞ்சப்ப முதலியார் தெரு,

திருச்செங்கோடு (சேலம் மாவட்டம்)

**கணபதி சாயத் தொழிற்சாலை, நூல் வியாபாரம், உணவு தானிய மொத்த வியாபாரம்.**

*With the Best Compliments:*

PHONE: 87511

# KUGA PROCESS

**Specialists: Tri-Colours, Half Tone Line Blocks, Cartan Publicity Blocks.**

2/17, MEERAN SAHIB St, MADRAS-2.

## 'தினமணி'யாரின் இன்றைய கேள்விக்கு 'குடி அரசி'ல் பெரியாரின் அன்றைய பதில்!

தினமணி கதிர் பத்திரிகை சார்பாக மிகவும் குறும்புத்தனமாக விஷமத் தனமாக என்னிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. மிகுந்த பொறுமையோடு பதில் அளித்தேன். அதில் ஒரு கேள்வி—

"பெரியார் ஈ.வெ.ரா. துவேஷித்து அதனால் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளான பிராமணர்கள், படிக்க வேண்டாமென்று சொல்லுகிறார்களே என்று வேறு முடிவெடுத்து, தொழில் அதிபர்களாகி—பிராமணர்கள் எல்லாம் தொழில் அதிபர்களாக-சிறந்து விளங்குகிறார்கள். அதற்காக பிராமணர்கள் பெரியாருக்கு நன்றி செலுத்துகிறார்களே, உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்கப்பட்டது.

அதற்கு நான், " பிராமணர்கள் நன்றி சொல்கிறார்கள் என்பதை உங்கள் மூலம்தான் கேள்விப்படுகிறேன்'' என்று பதில் கூறினேன். அந்தக் கேள்வியும் பதிலும் பத்திரிகையில் இடம் பெறவில்லை.

(14—8—71ல் பகுத்தறிவாளர் கழக பாராட்டு விழாவில் கலைஞர் பேச்சு.)

ஏதோ சொல்லிவைத்தாற்போல தினமணி அய்யரின் கேள்விக்குத் தந்தை பெரியார் அவர்கள் அவரது "குடி அரசு" வார ஏட்டில் 9-11-1946-ல்—அதாவது 25 ஆண்டுகட்கு முன்பே—அளித்த சுவையான பதில் கீழே தரப்படுகிறது:—

"இந்த நாட்டில் பார்ப்பனர்மீது பாமரர்களுக்கு வெறுப்பு உண்டாகும் படிச் செய்துவரும் (என்னால் தோற்றுவிக்கப்பட்ட) சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றின் பிரசாரத்தால் பார்ப்பனர்கள் தங்களுக்கு உரிய வைதீக சம்பந்தமான ஏழ்மை வாழ்க்கையை விட்டுவிட்டு, பாங்கி, வியாபாரம், இயந்திர முதலாளி முதலிய தொழில்களில் ஈடுபட்டு, ஏராளமான பணம் சம்பாதித்து, அவர்களில் அநேகர் செல்வவான்களாகவும், இலட்சாதிபதி களாகவும் ஆகிவிட்டார்கள். இதுதான் துவேஷப் பிரசாரத்தால் ஏற்பட்ட பயன் என்று பார்ப்பனர்கள்மீது வெறுப்புக்கொண்ட பலர் என்னைக் குற்றம் சொல்லுகிறார்கள்.

இது உண்மையானால், எனக்கு மிகவும் மகிழ்ச்சியேயாகும்.

எனக்கு, எனது சுயமரியாதை, திராவிடர் கழகப் பிரசாரத்தின் கருத்து, ஒரு பார்ப்பான்கூட "மேல் ஜாதி''யான் என்பதாக இருக்கக்கூடாது; என்பதற் காகத்தானே தவிர, பார்ப்பான் பணக்காரன் ஆகக்கூடாது; அவன் நல்வாழ்வு வாழக்கூடாது; அவன் ஏழையாகவே இருக்கவேண்டும் என்பது அல்ல. ஒவ்வொரு பார்ப்பானும் ராஜா சர். அண்ணாமலை செட்டியார், பொப்பிலிராஜா, சர். ஷண்முகம் செட்டியார், சர். ராமசாமி முதலியார் போன்றவர்களாக, கோடீஸ்வரனாகவும், இலட்சாதிபதியாகவும் ஆகிவிட்டாலும் சரியே; எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், எந்தப் பார்ப்பானும், மடாதிபதிகள் உட்பட எவரும் சிறிதுகூட நமக்கு மேல் ஜாதியினன் என்பதாக இருக்கக்கூடாது என்பது தான். பணக்காரத்தன்மை ஒரு சமூகத்துக்குக் கேடானதல்ல. அந்த முறை தொல்லையானது, சாந்தியற்றது என்று சொல்லலாம். என்றாலும் அது பணக் காரனுக்கும் தொல்லையைக் கொடுக்கக்கூடியதும், மனக்குறை உடையதும், இயற்கையில் மாறக்கூடியதும், எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றக்கூடியது மாகும்.

ஆனால், இந்த மேல் ஜாதித் தன்மை என்பது இந்த நாட்டுக்கு, பெரும் பாலான மனித சமுதாயத்துக்கு மிகமிகக் கேடானதும், மகா குற்றமுடையது மாகும். அது முன்னேற்றத்தையும், மனிதத் தன்மையையும், சம உரிமையையும் தடுப்பதுமாகும். ஒரு பெரிய மோசடியும் கிரிமினலுமாகும். ஆதலால், என்ன விலை கொடுத்தாவது மேல் ஜாதித் தன்மையை ஒழித்தாக வேண்டும் என்பது எனது பதிலாகும்.

**ஈ. வெ. ரா.**

# வேதியம் வீழ்வதைப் பார்!

[கவிஞர்-கலி. பூங்குன்றன்]

ஆதிக்கக் கரங்கள் முறிந்தன—அய்யா
மூட்டிய தீயின் முனையினால்—அதோ
வேதியம் வீழ்வதைப் பார், பார்!

ஆயிரம் சாதியின் அடுக்கினில்—அம்மா
ஆயிரம் ஆண்டாய்க் கிடந்தோமே
ஆயிரம் ஆயிரம் மகான்கள்—இங்கு
அவதரித் தகதை கேட்டோமே
தாயினுங் கோடிப் பொருளாக—நம்மைத்
தாங்கிப் பிடித்திடத் 'தந்தை'யல்லால்
நாயன் மார்தான் வந்தாரா—நம்மை
நாடிப் பிடித்துதான் பார்த்தாரா?
—ஆதிக்கக் கரங்கள் முறிந்தன.........

ஆரியச் சூதினில் அந்தோ—அசல்
அடிமையின் வடுவாய் வெந்தோம்
பாரினில் பட்டதோர் மரமாய்—பாழும்
மதத்தின் கிடப்பினில் விழுந்தோம்
தேரினில் தெய்வமும் வந்ததே—நாம்
தேம்புங் குரலினைக் கேட்டதோ?
ஊருணிப் பெரியா ரன்றோ—உயிர்
ஊட்டப் பொருளினைத் தந்தார்!
—ஆதிக்கக் கரங்கள் முறிந்தன.........

'ஊமையின்' உதடுகள் பேச—ஓடும்
உதிரம் பிழிந்தே கொடுத்தார்
'ஆமையின்' முதுகுகள் நிமிர—அண்ணல்
அயரா நீச்சலை போட்டார்
தீமையின் குகைகளைத் தேடி—தந்தை
தீராக் கணக்கினை முடித்தார்
'ஆமையும்' 'ஊமையும்' என்றும்—அய்யா
அடிமலர் செருப்பாய்க் கிடப்போம்!
—ஆதிக்கக் கரங்கள் முறிந்தன.........

மனிதப் பயிராய் நிமிர்ந்தோம்—இனி
மாட்டும் இருளினில் மயங்கோம்
'புனிதம்' பேசி இங்கே—பொய்ப்
புரட்டும் வேர்களை அறுப்போம்
தனியொரு யுகத்தினைத் தந்த—தந்தை
தத்துவ வயலினில் பூப்போம்
இனிஎன்ன இங்கு பயமே—தந்தை
இருக்க வெற்றி மயமே!
—ஆதிக்கக் கரங்கள் முறிந்தன.........



# அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவு ஓவியம்

அறிஞர் அண்ணாவின் கருத்துரைகளை—பொன்மொழிகளை—உவமைகளையெல்லாம் மேற்கோள் காட்டிப் பேசாதவர்களே இன்று இல்லை. ஆனால் இவர்கள் காட்டும் அண்ணாவின் ஓவியம் பூரணமானது அல்லஎன்பதை நாம் வேதனையுடன் ஒப்புக்கொள்ளவேண்டும். அண்ணா எத்தனை பெரிய தீவிர பகுத்தறிவாளராக இருந்தார் என்பதை நினைவுறுத்தவே, அவர் தீட்டிய பகுத்தறிவு ஓவியங்களை இங்கே அளிக்கிறோம்.

### சுயமரியாதைப் பணிகளுக்கு வெற்றி

சுயமரியாதை இயக்கம் கடந்த இருபது ஆண்டுகளாக இப்பணியை பலவித இடையூறுகளுக்கிடையே செய்துவந்திருக்கிறது. 'மனு'வை மாற்ற உங்களால் முடியுமா என்று வைதீகம் சீறிற்று. முன்னோர் முறைகளைக் குறை கூற நாம் யார் என்று நவின்றனர் சங்கராச்சாரிகள். தர்ம சாஸ்திரங்களை நிந்திக்காதீர்கள் என அதர்ம நூல்களின் ஆதாரங்களுடன் போருக்குப் புறப்பட்டனர் பலர். இன்று, நிலை, தலைகீழ் மாறி இருக்கிறது. நாம் எதனைத் தகர்த்தெறிந்தால் மக்கள் மக்களாக வாழமுடியும் என்று கூறினோமோ அதே பேச்சு, கொஞ்சம்கூட மாற்றமுறாமல், மற்றவர்களால் இப்போது பேசப்படுகிறது. நமது பேச்சுக்கு இருட்டடித்து மறைத்து வந்தவர்கள் இன்று அதே பேச்சு வேறு இடத்திலிருந்து கிளம்பும் காரணத்தால் அலங்காரத் தலைப்புகள் கொடுத்து, முக்கியமான இடத்தில் பிரசுரிக்கின்றனர்.

1—4—1948 'திராவிட நாடு'

### மே தின விழாவும் சுயமரியாதைக் கட்சியும்

வைகாசியில் கருடசேவை, ஆனியில் திருமஞ்சனம், ஆடிப்பூர உற்சவம், ஆவணி அவிட்டம், புரட்டாசி சனிக்கிழமை உற்சவம், அய்ப்பசியில் தீபாவளி, கார்த்திகையில் தீப விழா, மார்கழியில் திருவாதிரை, தைப் பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், சித்திரையில் பௌர்ணமி—இப்படி மாதந் தோறும் ஒவ்வொரு திருவிழா நடத்தி, தலைமுறை தலைமுறையாக நடத்திப் பழக்கப்பட்ட மக்களிடையே மேதின விழா கொண்டாட முற்பட்டிருக்கிறோம்...... முதன் முதலில் தமிழ் நாட்டில் மே தினம் கொண்டாடிய கட்சி சுயமரியாதைக் கட்சிதான்.

—பொன்மலையில்
1948 மே தின விழா உரை

### கோயிலிலே கூத்தியுடன் குலாவும் கடவுள்

மூலாமில்லாத மதத்தைப் பெற்று, இன்ப வாழ்வு வாழ்ந்துவந்த தமிழரிடம் கோபிகைகளுடன் கூடும் கடவுளையும், கோயிலிலே கூத்தியுடன் குலாவும் கடவுளையும், தேவி மகன் ஒருவன்--பிற காமக் கருவிகள்பால் தோன்றியவர் வேறு என்ற அளவுக்கு வந்த கற்பனைக் கடவுள்களையும் காட்டி மயக்கியதுடன் தமிழரின் தனிக் கொள்கையை மாய்த்தது. சாதி என்ற சொல்லை அறியாத தமிழரிடை, நால்வகை சாதியைப் புகுத்திற்று. பேதமற்ற வாழ்க்கை

நடத்திய தமிழரிடையே விபரீத வர்ணாசிரமத்தைப் புகுத்திற்று. இவைகளால் வேதனைப்பட்ட நேரத்திலே விதவிதமான கற்பனைகளையும் காட்டி தமிழனின் உண்மை உணர்ச்சியை மாய்த்தது. வீரத் தமிழனை வீணனாக்கிவிட்டது வெளியிடத்துக் கலாச்சாரம்.

13—1—48 'திராவிடநாடு'

### புராணக் கதைகளின் அபத்தக் களஞ்சியம்

பாற் கடலில் பள்ளிகொண்ட பரந்தாமனின் உந்தியினின்றும் கொடியொன்று கிளம்பி, அதன் நுனியிலே தாமரை மலர்ந்து காட்சிதர, அந்த மலரணைமீது நான்முகன் அமர்ந்திருக்க அவன் நாவிலே சரஸ்வதி வீற்றிருக்க, அவள் கையிலே வீணை இருந்து ஒலிக்க, அதுகேட்டு இன்புற்று நாரதர் கீதம் பாட, அதற்கேற்ப நந்தி மிருதங்கம் கொட்ட, முக்கண்ணன் நடனம் ஆட, அய்யன் ஆடுவது கண்டு அகிலமெல்லாம் ஆனந்தக் கூத்தாட, அதன் சூட்சமத்தை விளக்கி சுத்தானந்த பாரதியின் பேனா ஓட, அதனை மதுரகீதமாக்கி வசந்த கோகிலம் பாட......இப்படி இன்றும், பிரபஞ்ச உற்பத்திக்கு என்றோ ஏற்பட்ட பழைய கதையைத்தான் பயன்படுத்துகின்றனர்.

21—12—47 'திராவிடநாடு'

### பிள்ளைவரம் கேட்கவா விஞ்ஞான சாதனம்?

நாமோ இன்னமும், பூமாதேவி-அண்ட சராசரங்களையும் ஆதிசேஷன் தாங்குவது—இரண்யாட்சன் பூலோகத்தைப் பாயாகச் சுருட்டிக்கொண்டுபோய் ஒழித்துவிட்டது போன்ற கதைகளை, புண்ணிய கதைகள் என்று நம்புவதும், இந்த நம்பிக்கைக்கு ஏற்றபடியான பூஜைகள் செய்வதும் திருவிழாக்கள் நடத்துவதுமாகக் காலம் தள்ளுகிறோம்...மேனாட்டினரின் ஆராய்ச்சியின் பலன்களை அனுபவிக்கிறோமே, அப்போதாவது அறிவுக்கு வேலை தருகிறோமா—நன்றியறிதலையாவது காட்டுகிறோமா? அந்த ஆராய்ச்சியாளர்கள் அளித்த அருமையான சாதனங்களை உபயோகித்துக் கொண்டே, அந்த ஆராய்ச்சியாளர்களெல்லாம் ஆத்மார்த்தம் அறியாதவர்கள் என்று நையாண்டியும் செய்கிறோம்! நியாயமா? நாம் கண்டுபிடிக்காத ரயிலில் பிரயாணம் செய்து, எங்கே போகிறோம்? பிள்ளை வரம் கேட்க இராமேஸ்வரமோ, முடிதர திருப்பதிக்கோ, பெரியபாளையத்தாளின் அருளைத் தேடியோ!

21—12—47 'திராவிடநாடு'

### தேர்த் திருவிழா ஏன் கொண்டாடக் கூடாது?

கேள்வி: தேர்த் திருவிழா, பண்டிகை இவை ஏன் கொண்டாடக்கூடாது?

பதில்: ஏன் கொண்டாட வேண்டும்? பக்திக்காகவா? ஆம் என்றால் அதற்கு வழிபாடும் தியானமும் போதுமே! ஒழுக்கத்துக்காகவா? ஒழுக்கம் இவைகளால் கெடுகிறதே ஒழிய வளர்வதில்லையே! தேர்த் திருவிழா, பண்டிகை ஆகியவைகள் காட்டுமிராண்டிக் காலத்திலே மக்களின் மனதிலே புத்தறிவு தோன்றாத முன்பு இருந்து வந்த நம்பிக்கைகளின் பேரால் உள்ளவை. இந்த நம்பிக்கைகள் இன்று கூடாது என்று அறிஞர்கள் ஒதுக்கியும் விட்டனர். இந்நிலையில் மீண்டும் மீண்டும் அந்த தேர் திருவிழாக்கள், பண்டிகைகள் ஆகியவற்றைக் கொண்டாடுவதால், அந்தப் பழைய நம்பிக்கைகளைத் தலை தூக்க விடுகிறோம், இது கூடாது என்பதற்காகவே அவை கூடாது என்கிறோம்.

*—16—1—1947* 'திராவிட நாடு'

### சீரங்கநாதர் யார் பக்கம் பேசுவார்?

பார்ப்பனருக்கு தேவதா பூஜைக்குப் பிறகு வெண் பொங்கலும் சர்க்கரை அக்கார வடிசிலும் ததியோதனமும் புளியோதரையும் தந்து வருவதை நிறுத்திவிட்டு அதைவிட சாதாரணமான பிரசாதத்தை பிழைக்க வழியற்றவர்களுக்குத் தந்தால் நல்லது தானே. சீரங்கம் கோயிலில் திருச்சி ஜில்லாவிலுள்ள பிச்சைக்காரர்களில் உழைத்துப் பிழைக்க முடியாத நிலைமையில் உள்ள அய்யாயிரம் பிச்சைக்காரர்களுக்கு சோறிட்டுக் காப்பாற்றினால் நல்லதாகாதா? 'திருப்பாவை' பாடிய பிறகு துளசியும், தீர்த்தமும் பிழைக்க வசதியுள்ள பக்தர்கள் பெறட்டும். பிரசாதம், பிழைக்க வழியற்ற பேர்வழிகளுக்குத் தரப்படட்டும். ஏன், என் யோசனையைக் கேட்டால் பள்ளிகொண்டிருக்கும் ரங்கநாதர் திடுக்கிட்டு எழுந்து "இது கூடாது" என்று கூறுவார் என்றா கருதுகிறீர்கள்? இன்று

அந்தப் பிரசாதத்தை நம்பி வாழும் பார்ப்பனர் பதைப்பர். ரங்கநாதர் என் பக்கந் தான் பேசுவார், பேசும் வழக்கத்தை அவர் இப்போது கைக் கொள்வதாக இருந்தால்!

2—11—1947 'திராவிட நாடு'

## திருவண்ணாமலை தீபமும் காலரா மிரட்டலும்

திருமாலுக்கும் நான்முகனுக்கும் சிவன் வாக்களித்தபடி திருவண்ணாமலை உச்சியில் ஒரு தீப ஒளி தானாகத் தோன்றுவது மில்லை; அவர் திருவாய் மலர்ந்தருளியபடி அந்தத் தீப ஒளியைக் காண்பவர்கள் நோயும் பசியுமில்லாத வாழ்க்கையை நடத்தவுமில்லையே. எங்கு பார்த்தாலும் பசியும் பட்டினியும் தாண்டவமாடுகிறதே. இவ்வாண்டுத் தீப ஒளியைப் பார்க்க வருகின்றவர்கள் தங்கள் தங்கள் உணவுக்குப் போதிய அரிசியை அவசியம் கொண்டு வரவேண்டும் என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறதே.

அதுமட்டுமல்ல, திருவண்ணாமலையில் காலரா நோய் இருப்பதால் அங்கு மக்கள் கூடக்கூடாது என்றும் சர்க்கார் கட்டளை பிறப்பித்திருக்கிறதே. தீப ஒளியைப் பார்த்தால் பசியும் நோயும் பறக்கும் என்று பரமன் திருவாய் மலர்ந்தருளினார் அன்று! இன்று திருவண்ணாமலைத் தீபத்துக்குப் போனால் பசியும் நோயும் வாட்டும்; எனவே அங்கு செல்லாதீர்கள் என்று சர்க்கார் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறதே! இவ்விரண்டு திருவாய் மலர்ந்தருளுதல்களையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் எவராவது, இப்படியிருக்க ஏன் அப்படிப் புராணம் நாட்டில் இருக்க வேண்டும் என்று கேட்டால், நல்ல பாம்பாகி விடுகிறது இந்த நம்பனடியார்கட்கு.

12—12—1948 'திராவிட நாடு'

## புராணப் பிரியர்களும் சிரிக்கிறார்கள்

"நமது பெரியவர்கள் சொல்லிவிட்டுப் போன புண்ய கதைகளைச் சொன்னால் இந்தக் காலத்துப் "பசங்கள்" கேலி பேசறா; நம்ப மாட்டேன் என்கிறா—நையாண்டி செய்யறா—அனுமாரின் வாலை நீர் அளந்து பார்த்தீரோ; அரம்பை ஆடுவது கண்டீரோ; இந்திரன் கண்களை எண்ணிப் பார்த்தீரோ என்றெல்லாம் கேள்விகளைப் பூட்டிப் பேசறா—நாம் என்ன இருக்கு, செய்ய? ஒவ்வொன்றுக்கும் காரணம் கேட்கிறா, அர்த்தம் கேட்கிறா, ஆதாரத்தைக் காட்டுன்னு மல்லுக்கு நிற்கிறா—" என்றுதான் வைதீகர்கள்—புராணப் பிரியர்கள் தங்கள் முகாமிலேகூட ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் போது விசாரப்படுகிறார்கள்; பதைக்கிறார்கள் முதலில்—பிறகு திகைக்கிறார்கள்—கடைசியில் அவர்களே சிரிக்கிறார்கள். ஆமாம்! இந்தப் பயல்கள் சொல்வது போல புராணக் கதைகள் நம்ப முடியாதவைகளாகத்தான் இருந்து தொலைக்கின்றன—நாம் என்ன செய்வது-என்று சிந்தித்துவிட்டுச் சிரிக்கிறார்கள்.

5—12—1948 'திராவிட நாடு'

## ஏன்—எதனால்—யாரால் சூத்திரராக்கப்பட்டோம்?

தமிழ் மக்களில் உயர்ந்தோர் எனக் கருதும் தமிழ் மக்கள், ஆரியர் வகுத்த சாதி முறை நான்கனுள் கீழ்ப்பட்ட சாதியாகிய சூத்திர சாதியுள், சற் சூத்திரர்களாகவாவது தங்களை மதிக்குமாறு செய்துகொள்ள விரும்புகின்றனரேயன்றி, நாம் ஏன்—எதனால்—யாரால் சூத்திரராக்கப்பட்டோம் என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. இங்ஙனம் எண்ணிப் பாராதது மட்டுமல்ல; தமிழனுடைய மொழி, கலை, இலக்கியம், சமூக வாழ்வு என்ற அனைத்தும் ஆரியர்களின் உதவியால்தான் நிலை பெற்று நிற்கின்றன என்று நன்றாய்க் கற்பிக்கப் பட்டும் விட்டனர்.

29—8—1948 'திராவிட நாடு'

## நெருப்பில் தள்ளப்பட்ட பறையன் பார்ப்பானாக ஆகிவிட முடியுமா?

மதப் பிரசாரம் செய்கின்றவர்கள், தங்களுடைய மதியையும் சிறிதளவாவது கூர்மையாக்கிக் கொண்டாலன்றி விழிப் படைந்த இன்றைய மக்களால் கேட்கப் படும் கேள்விகளுக்கு விடை கூற முடியாது போகுமே! சொல்வதையெல்லாம் அப்படியே கைகட்டி—வாய் பொத்தி நின்று கேட்கும் காலமல்லவே இது.

சைவ சமய அன்பர்களான நந்தனார், தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரி, இராமலிங்க அடிகளார், திருநாவுக்கரசர் முதலான தமிழ்ப் பெரியவர்களின் முடிவு எப்படி ஏற்பட்டது என்று கேட்பார்களே! விளக்கம் கூறவேண்டுமே! நெருப்பில்

தள்ளப்பட்ட பறையன், பார்ப்பானாக மாறினான் என்ற தெனாலிராமன் கதைகளை இன்றைய விழிப்படைந்த உலகம் ஒப்புக்கொள்ளாதே! வரலாறுகள் கூறும் உண்மை என்ன? ஆராய்ச்சியாளர்களின் முடிவு என்ன என்று கேட்பார்களே! மதப் பிரசாரகர்களின் மக்கிப் போன புராணக் கதைகளால் மக்களை மயங்க வைக்க முடியாதே.

11—7—1948 'திராவிட நாடு'

## சைவமதம் காட்டும் ஒழுக்கம் இதுதானா?

ஒழுக்கம் இல்லாதவர்களாய் இருந்தாலும் அவர்கள் நீறணிந்து காணப்பட்டால் அவர்களை இகழ்ந்து பேசக்கூடாது என்றும், மீறி இகழ்ந்தால் நரகம் கிடைக்கும் என்றும் ஒரு (பெரிய) புராணம் பாடப்பட்டிருக்குமாயின் அத்தகைய ஒரு நூலை உயிரைக் கொடுத்தாயினும் மானத்தைக் காக்கும் தமிழ் மக்களுக்கு உரிமையாக்கிப் பேசுவது போன்ற பேதைமை வேறொன்றிருக்க முடியுமா என்பதனைப் புராண அன்பர்கள் எண்ணிப் பாராமல் வறிதே எம்மீது சீறி விழுவதால் பெறப்படும் பயன் யாதோ நாமறியோம்.

இனி, மானத்தையும் இழந்து, உடம்பையும் அழுகி ஒழுகும் தொழு நோய்குள்ளாக்கி, வாழ்க்கையைப் பாழாக்கும் முறை தவறிய சிற்றின்ப நுகர்ச்சியில் ஈடுபடும் ஒருவனை-அவன் நீறணிந்துள்ளான், எனவே அவன் பால் மாசில்லை; அவன் மன்பதையின் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவன் என்ற முறையில் அவனுக்கு இரட்டித்த மதிப்புக் கொடுப்பதுதான் சைவ சமயத்தின் சிறந்த பண்பென்றால்அதனை அறிவுடைய எவரும் தங்கள் சமயமாகக் கொள்ளவே மாட்டார் என்பது ஒருதலை.

28—12—1947 'திராவிட நாடு'

## சகஜானந்தர் சல்லடம் கட்டுகிறார்

பொது இடங்களிலும் பள்ளிக் கூடங்களிலும் மதங்களைக் கண்டித்து யாரும் பேசக்கூடாது என்று தடை விதிக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை, சகஜானந்தர் சட்ட சபையிலே கொண்டு வருவதாக இருக்கிறாராம். இந்த அபூர்வ கைங்கரியத்தை இவர் செய்ய முன் வந்தது கேட்டு வைகுந்தமும், கைலாயமும் இவரை வரவேற்க ஒன்றோடொன்று போட்டியிடும் என்று நம்புகிறோம். பூதேவர்கள், "ஆஹா! புதிதாக ஒரு ரட்சகர் கிளம்பினார்" என்று கூறிப் பூரிப்படையக் கூடும்.

மதத்தைக் கண்டிக்கக் கூடாதாம்! தடை உத்திரவாம்! மடாதிபதிகள் அல்ல-ஜீயர்கள் அல்ல—வேத சாஸ்திர விற்பன்னர்கள் அல்ல—சகஜானந்தர் சல்லடம் கட்டுகிறார்.

ஓய், சகஜானந்தரே! உமது இனத்தவரை—திராவிடப் பழங்குடி மக்களை—மதத்தின் பெயர் கூறித்தான் இதுநாள்வரை கோயிலிலே நுழையக்கூடாது என்று தடுத்து வந்தனர். ஆதித் திராவிடரை ஏன் ஆலயத்துக்குள் விடக்கூடாது? அவர்கள் வந்தால் சாமியா தீட்டுப்பட்டு விடும் என்று முதன் முதலில் கேட்க ஆரம்பித்தவர்கள், அவ்விதமான அநாகரிக வழக்கத்தைக் கண்டித்தவர்கள், அந்த வழக்கத்தை வேத சம்மதமுள்ளது என்று வாதிட்ட வைதீகர்களின் மதப் பித்தத்தைச் சாடியது யாரோ, அவர்களின் நாவைத்தானே துண்டிக்கச் சொல்கிறீர்! தாராளமாகச் செய்யச் சொல்லும்!

3—8—1947 "திராவிட நாடு"

## சமண, பௌத்த மதங்களை சைவம் அழித்தது ஏன்?

"யாதொரு தெய்வங் கொண்டீர், அத்தெய்வமாகி ஆங்கே, மாதொரு பாகனார் தாம் வருவார்" என்று கூறியவர்களே சமண சமயத்தை ஒழித்துக்கட்ட முன் வந்திருப்பார்களா? சமண சமயமும் அதன் கடவுளும் "யாதொரு தெய்வம்" என்பதில் அடங்கவில்லையா? அடங்கவில்லையென்றால், "யாதொரு தெய்வம்" என்பதன் பொருள்தான் என்ன? சமண சமயத்தில் நின்று அம்சமயக் கடவுளை வழிபட்ட போதிலும் மாதொரு பாகனான சிவனே வந்து அருள் பாலிப்பான் என்பதில் சைவர்களுக்கு நம்பிக்கை இருந்தால் சமணம், பௌத்தம் முதலான சமயங்களை ஒழிப்பதில் முனைவானேன்? அதற்காக தனித் தனி அவதாரங்கள் எடுப்பானேன்?

1—6—1947 'திராவிட நாடு'

## பார்ப்பனீயத்தை எதிர்த்த வேமன்னா

பார்ப்பனீயத்தை எதிர்த்து நடத்தப்பட்ட புரட்சி கலைத்துறையிலே அடிக்கடி

நடைபெற்றிருக்கிறது. ஆந்திர நாட்டிலே ஆரியத்துக்கு அடிபணிய மறுத்து சிந்தனைச் சுதந்திரத்துக்கு பாடுபட்ட பெரியார்களில் வேமன்னா மிக முக்கியமானவர். அவர் மதத் தரகரின் மண்டைக் கர்வத்தையும் அவர்களின் மாயா வாதத்தைக் கேட்டு மதி மயங்கியவர்களின் ஏமாளித் தனத்தையும் கண்டித்தார்; சாதிமத பேதத்தைச் சாடினார். புரட்டு அவருக்கு எட்டி; புரோகித போதனை, வேம்பு.

வேமன்னா வேதியக் கூட்டத்துக்குத் துதிபாடியிருந்தால் அவரைவிடச் சிறந்த விற்பன்னர் இல்லை என்றும் அவர் வியாசரின் மறுபிறவி என்றும் ஆரியர் ஏடெழுதி விட்டிருப்பர். அவர் ஆரியத்தின் உச்சி குலுங்க அடித்தவராதலால் அவரைப் பற்றி 'இருட்டடைப்பு' ஏற்பட்டு விட்டது.

8—4—1945 'திராவிட நாடு'

**கல்யாண மந்திரத்தின் பொருள் என்ன?**

அக்கினி சாட்சியாக ஆரியப் புரோகிதனைக் கொண்டு திருமணம் செய்கிறோம். அதுவே முறை என்று பழைமை விரும்பிகள் கூறுகின்றனர். வைதீக முறைப்படி நடக்கும் கல்யாணத்திலே ஆரியப் புரோகிதர் கூறும் மந்திரம் என்ன? அதன் பொருள் என்ன? இதோ, வங்கப் பல்கலைக் கழக சரிதப் பேராசிரியர் தோழர் நிருபேந்திரநாத தத்தர் கூறுகிறார் கேளுங்கள், களியுங்கள். ஆரியரே! வெட்கித் தலை குனியுங்கள், ஆரிய அடிவருடிகளே! ஆத்திரத்தை அடக்கி அறிவைப் பரப்புங்கள் தன்மானத் தோழர்களே!

என்ன கூறுகிறார், கல்யாண மந்திரமாக? மணப்பெண்ணை நோக்கிக் கூறுகிறார் புரோகிதர்—மாப்பிள்ளை சார்பில்! "முதலிலே சோமதேவனிடம் நீ இருந்தாய். பிறகு கந்தர்வனிடம் சேர்ந்தாய். அக்கினி தேவன் உன் மூன்றாம் கணவன். நான் உனக்கு நான்காம் நாயகன்" "கலவி இச்சை ஏற்படும் காலம் வரையிலே பெண்ணைச் சோமன் வைத்துக்கொண்டிருக்கிறான். அந்த ஆசை பிறந்ததும், தனபாரங்கள் தோன்றியதும் கந்தர்வன் அவளைச் சேர்கிறான். பருவம் அடைந்த பிறகு அக்கினி அவளை அனுபவிக்கிறான்."

இதுதான் கல்யாண மந்திரம். ருக் வேதம் ஆதாரம்; சு. ம. சொன்னதல்ல; வங்கப் பேராசிரியர் எழுதியிருப்பது! அய்யர் இல்லாமல் கல்யாணம் செய்வதா என்று அங்கலாய்த்துக் கொள்கிறாயே அன்பனே! அய்யர் சொல்வதைக் கேட்டாயா? மணப் பெண் நான்காம் புருஷனைக் கல்யாணம் செய்து கொள்கிறாளாம்! பெருமைப்படு, பேதையாக இருப்பின்! இன்றேல் ஆரியத்தைக் கைவிடு, சுயமரியாதை இருப்பின்.

8—4—1945 'திராவிட நாடு'


போன் : 128

**H. P. சைக்கிள் மார்ட்**

பஸ் ஸ்டாண்ட் ரோடு,

**தருமபுரி.**

எங்களிடம் எல்லாவிதமான சைக்கிள்களும், ஸ்பேர் பார்ட்ஸ்களும், சைக்கிள் டயர், ட்யூப் சாமான்களும் கம்பெனி விலைக்கு கிடைக்கும்.

உரிமையாளர் : **N .S. உசேனி பீரான்.**

தந்தை பெரியார் அவர்களின் 93வது பிறந்த நாளில்
என் நல் வாழ்த்துக்கள் !

குடும்ப விழாக்களுக்குத் தேவையான
ஸ்வீட், காரங்களுக்கு
சிறந்த இடம்

# சூர்யா ஸ்வீட் ஸ்டால்

மணிக்கூண்டு, தஞ்சாவூர்.

உரிமையாளர்: சாமி. நாகராசன்.

தொலை பேசி எண் : 123

# மகாலிங்கம் அச்சகம்

**தெற்கலங்கம், தஞ்சை.**

எல்லா வகையான அச்சு வேலைகளும், நூற்பதிப்புகளும்,
வண்ண அச்சு வேலைகளும், சுவரொட்டிகளும்,
கணக்கு நோட்டு, புத்தகம் முதலிய கட்டு
வேலைகளும் குறித்த காலத்தில் அழகாகவும்,
சிறப்பாகவும் செய்து தரப்படும்.

**எங்களிடம்**

அலுவலகத் தொடர்பான கருவிப் பொருள்கள், பள்ளிக்கூட நோட்டுப் புத்தகங்கள், விண்ணப்பத் தாள்கள், குத்தகைப் பத்திரங்கள் முதலியன மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

உழைப்பைப் போற்றி
உயர்ந்திடுவோம் !

ஊரைப் பேணி
வளர்ந்திடுவோம் !

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்

**பல்வேறு பிரிவுகளில் உற்பத்தி செய்யப்பெற்ற**

| | | |
|---|---|---|
| கதர் | ரெடிமேட் ஆடைகள் | வெல்லம் |
| கதர்ப்பட்டு | நாட்டுச் செக்கு எண்ணெய் | தீப்பெட்டி |
| கம்பளி | சோப்பு | தோல் பொருள்கள் |
| பதநீர் | கையாற் செய்த காகிதம் | தேன் |
| பனைப் பொருள்கள் | மண் பாண்டங்கள் | பழரசங்கள் |
| பனை வெல்லம் | உலோக வார்ப்படங்கள் | மூலிகை வகைகள் |
| பனஞ் சக்கரை | நார்ப் பொருள்கள் | |

வீட்டு உபயோகத்திற்கான சுண்ணாம்பு

| | | |
|---|---|---|
| பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் | (கட்டிடங்களுக்கான சாந்து) | மூங்கில் |
| மர சாமான்கள் | அரக்குப் பொருள்கள் | பிரம்புப் பொருள்கள் |

இத்தனைக்கும் இன்னும் உங்கள் தேவை
அத்தனைக்கும் கீழ்க்கண்ட இடங்களை அணுகுங்கள் :

**கதர் கைத்தொழில் அங்காடி (குறளகம்)**
(சென்னை எஸ்பிளனேடு—சட்டக் கல்லூரிக்கெதிரில்)

மற்றும்

**கதர் கிராமத் தொழில் விற்பனை நிலையங்கள்**
(தமிழகமெங்கும்)

நம் நாட்டு விவசாயிகள், கிராம வாசிகளின் நலமுயர்த்தும் இப்பொருள்களை வாங்குவது நமது மக்களுக்கு நாம் ஆற்றும் பணியாகும்.

**உண்மையான நாட்டுப் பற்றுக்கு அதுவே உகந்த வழி**

வெளியீடு :

**கதர் - கிராமத் தொழில் இயக்குநர்**

**2, சர் தேசிகாச்சாரி சாலை, : : சென்னை-4.**



# அய்யாவின் தனி வாழ்க்கை

* கி. வீரமணி *

நாலு கோடி தமிழர்களுக்கு தன்மானம் ஊட்டிய தனிப்பெருந் தானைத் தலைவராம் தந்தை பெரியார் அவர்களது தனி வாழ்க்கை, மர்மம் நிறைந்ததோ, மறைத்து வைக்கப்படுவதோ இல்லாத ஒன்று என்பதை நாடு அறியும்!

பொது வாழ்க்கையில் ஈடுபட்டு பொதுத் தொண்டுக்கு வரும் எவருக்கும் தனி வாழ்க்கை என்பதே சிறிது சிறிதாக அருகித்தான் வரும். பொதுத் தொண்டின் இமயமாய் உயர்ந்துவிடுபவர்களுக்கு அது அறவே இல்லாத ஒன்றாகவே ஆகிவிடுகிறது.

மலையை எவர் எங்கிருந்து நோக்கினாலும் தெரியும். அதை மறைக்கவோ, மூடவோ முடியாது அல்லவா? அது போன்று பொது வாழ்வில் பற்றற்ற பெருநிலைக்குச் சென்று, தொண்டே மூச்சாய்-பேச்சாய், அன்றாடப் பணியில், கடமையாய் உள்ள தலைவர்களுக்கும் "தனி வாழ்க்கை" என்ற வாழ்க்கையே இல்லாமற் போய்விடுகிறது!

இந்த வரிசையில், முதல் வரிசையில் முதலில்வைத்து எண்ணப்பட வேண்டியவர்கள் நமது அய்யா அவர்களாவார்கள்!

### பயமறியாப் பயணம்

ஓய்வறியா உழைப்பு! பயமறியா லட்சியப் பயணம்—இவைகளின் வடிவமாகத் திகழும் அய்யா அவர்களது 'தனி வாழ்க்கை' என்று நான் குறிப்பிடுவது, நெருங்கித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று பொதுமக்களில் பலர் தெரிந்துகொள்ளும் சில செய்திகளை வைத்தேயாகும்!

இரகசியமாக எதையும் செய்வது, பேசுவது என்பது அரசியல் தலைவர்களிடம் உள்ள ஒன்று. மதத் தலைவர்கள் நிலையோ சொல்ல வேண்டியதே இல்லை. ரகசியம்தான் அவர்களது வாழ்வின் கேடயமாக நின்று அவர்களைக் காப்பதாகும்.

அரசியலுக்கும் மதத்திற்கும் அப்பாற்பட்டு, அதனை வெறுக்கும் சமுதாயப் புரட்சி மேதையாம் தந்தை பெரியார் அவர்களிடம் ரகசியம் என்ற ஒன்று எப்போதும் கிடையாது! சில நிமிடங்கள் கூட அவர்களிடத்தில் தங்கவே தங்காது!

தனக்கு ஏற்பட்டுள்ள வருமான வரி தொல்லை முதல், வந்துள்ள உடல் உபாதை வரை எல்லாவற்றையும் ஒரு சிறு அம்சம் கூட விடுபடாமல் கூறும் தலைவர் தந்தை பெரியார் அவர்களைத் தவிர வேறு எங்காவது காணமுடியுமா?

### ஒளிவு—மறைவு இன்மை

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, ஒரு குறிப்பிட்ட செய்திபற்றி அண்ணா, அய்யா அவர்களிடம் தெரிவித்தார்கள்—தன்னை பகலில் சந்தித்து உரையாற்றியபோது. அன்று மாலை பொதுக்கூட்டத்தில் (கரூரில்) பேசுகையில், அண்ணாவை வைத்துக் கொண்டே, அய்யா அந்தச் செய்தியினை பொதுக்கூட்டத்தில் சொல்லத் துவக்கிவிட்டு, ஒலிபெருக்கி முன்னாலேயே, பக்கத்தில் இருந்த அண்ணாவைப் பார்த்து,

"அது, இப்போது ரகசியங்களா? வெளியிடக் கூடாது—இல்லீங்களா?" என்று சொல்ல, அருகில் இருந்த அண்ணா கண் ஜாடையுடன் தலையாட்ட, பக்கத்திலிருந்தவர்கள் சிரிப்புடன் இதை ரசிக்க, அண்ணா அவர்கள் டெல்லியில் சென்று இதனை நண்பர்களை வைத்துக்கொண்டு கூறி சிரித்து சிரித்து மகிழ்ந்தாராம்.

சிலருக்கு வெள்ளை உடை—கறுப்பு மனம் உண்டு. இவர்களுக்குக் கறுப்பு உடை—வெள்ளை மனம். ரகசியம் என்று எதனையும் ஒதுக்கவேண்டிய 'அரசியல் துறை' பக்கமே தலைவைத்துப் படுக்காத தகைசான்றவர்கள் அல்லவா; அதனால் தான் போலும்!

### எளிமை

எப்போதும் அவர்கள் உடுத்தும் சட்டை, 5 முழ கைலியாக்கப்பட்ட வேட்டி; அதுவும் சவுக்காரம் கண்டு பல நாட்களான நிலையில்!

எனக்குத் தெரிய தனக்கென சலவையாளரை வைத்துக்கொள்ளாத தலைவர் தந்தை பெரியார் அவர்கள். அம்மா அவர்களோ, மற்றவர்களோ சவுக்காரம்போட்டு துவைத்த துணியுடன் எத்தனை நாட்களை தள்ள முடியுமோ அத்தனை நாட்களைத் தள்ளுவதில் கண்ணுங் கருத்துமாய் இருப்பார்கள்.

### சட்டையை மாற்ற சண்டை

சில முக்கிய விழாக்கள், கூட்டங்களுக்குச் செல்லுகையில் அழுக்கேறிய உடைகளை மாற்றுவதற்கு அய்யா அவர்களிடம் சண்டைபிடிக்கும் நிலையும் வருவதுண்டு! அவர்களுக்கு லட்சியப் பயணம்தான் முக்கியமே தவிர, உடைகள் அல்ல; உணவல்ல. வாழ்வதற்கு எந்த அளவிற்கு குறைந்தபட்சமாக சமுதாயத்தில் தேவையோ அந்த அளவுக்குப் போதும் என்பதே அவரது கொள்கையாகும்.

உடையில் மட்டுமல்ல, உணவிலும் அவர்களிடம் பல்லாண்டு காலமாக ஊறியுள்ள பழக்கம்...ஒரு கறியுடன் சுவைத்து உணவைச் சாப்பிடும் பழக்கமாகும். இலை நிறைய பல்வேறு காய்கறிகள் மற்றவைகளையும் அடுக்கிச் சாப்பாடு போடுவதும்—சாப்பிடுவதுமாக உள்ள நம் நாட்டில், சுகபோகத்தில் ஊறித் திளைத்த வற்றாத வசதியும் வாய்ப்பும்பெற்ற நிலையில்கூட இந்த உணவுமுறை என்றால், அங்கே காணும் எளிமை இயற்கையான ஒன்று—செயற்கையானதல்ல என்று தெளிவாகும்.

### சிக்கனப் பழம்

பழங்களிலேயே அய்யா அவர்கள் விரும்பி சாப்பிடும் பழம் மலை வாழைப் பழமாகும். அதனை வாங்கிக்கொண்டு வரும்போது, அதன் விலை எவ்வளவு என் பார்கள். பழம் ஒன்று 10 காசு 15 காசு என்றால், அதனைக்கூட எண்ணிக்கையில் பெரும் அளவுக்குக் குறைத்துவிடுவார்கள்!

ரயில் பயணம் என்றால் மூன்றாவது வகுப்புதான்; ஏன் மூன்றாவது வகுப்பில் பயணம் செய்கிறீர்கள் என்று அதிர்ச்சியுடனும், வேதனையுடனும் கேட்ட ஒருவரை பார்த்து, "நாலாவது இல்லை—ஆகவே தான் மூன்றாவது வகுப்பில் பயணம் செய்கிறேன்" என்றார்கள். எளிமையை, வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் கையாளும் போதுதான் அந்த எளிமை தனி மரியாதையைப் பெறுகிறது. அய்யா அவர்களின் தனி வாழ்க்கையில் சுடர்விட்டு ஜொலிப்பது எவராலும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத அந்த எளிமையாகும்!

### அரவணைப்பு

மற்றவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை எப்படி தெரிந்துகொள்வது, இன்றைய இளைஞர்களுக்கு எந்தப் பள்ளிமூலம் இதனைப் போதிப்பது என்று கவலைப்படுவோர்கள் இதனைத் தெரிந்துகொள்வது முக்கியம்.

தன்னிடத்தில் பணியாற்றக்கூடியவர்களைக்கூட மரியாதை கொடுத்து நடத்துபவர் தந்தை பெரியார் அவர்கள்!

சில நேரங்களில் கடும் தாக்குதல்களுக்கும் கோபத்திற்கும் ஆளானால்கூட, உடனே அவர்களது அன்பான அரவணைப்பு தானே பீறிட்டுக் கிடைக்கும். பால் நினைந்தூட்டும் தாயினும் தாயாய் நின்று அவர்கள் புண்ணுக்கு மருந்துபோடும் பொறுப்புள்ள மருத்துவர் போல் காரியமாற்றுவார்கள்.

குறித்த காலத்தில் குறித்தபடி எதையும் செய்வது (Punctuality) என்பதற்கு எடுத்துக்காட்டு அய்யா அவர்களே ஆவார்கள்.

சுமார் அரை நூற்றாண்டுக்குமேல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, அன்றாடம் பொது நிகழ்ச்சிகளிலேயே தமது நேரத்தின் பெரும் பகுதியை செலவழிக்கும் அவர்கள் காலந் தவறாமை என்பதை கண்ணாய், கடமையாய்க் கொண்டுள்ளார்கள்!

## வாழ்க்கை நெறி

ஒப்புக்கொண்ட செய்தியை ரத்து செய்வதோ, அல்லது தாமதித்துச் செல்வதோ அய்யாவுக்கு அறிமுகமில்லாத ஒரு பழக்கம்! அப்படி இயக்கத் தோழர்கள் யாரேனும் செய்ய முனைந்தால், அதை அவர்கள் மிகப் பெரியதொரு குற்றமாகக் கருதுபவர்கள் என்பது பலருக்கும் தெரிந்த உண்மையாகும்.

கூட்டம், திருமணம் மற்றும் எந்த நிகழ்ச்சியானாலும் குறித்த நேரத்திற்கு முன்பாகவே அவர்கள் தயாராகிவிடுகிறார்கள். 'கடிகாரம் ஓடுமுன் ஓடு' என்றார் புரட்சிக் கவிஞர்—கல்விக்கூடத்திற்குச் செல்லும் மாணவியைப் பார்த்து! அய்யா, அதனை தமது வாழ்க்கை நெறிகளிலே ஒன்றாகவே ஆக்கிக்கொண்டுள்ளார்கள்.

கூட்டமோ, நிகழ்ச்சியோ குறிப்பிட்ட காலத்தில் நடைபெறுபவை. அதற்கு மட்டும்தான் குறித்த காலத்தில் செல்ல வேண்டும் என்பதல்ல அவர்கள் தத்துவம். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பயணம் ஆகும்போதும் இத்தனை மணிக்குப் புறப்பட வேண்டும் என்று நினைத்து மற்றவர்களிடம் கூறுவார்கள். அங்கிருந்து புறப்பட்டுச் சென்று அந்த ஊரில் போய் படுப்பதாகவோ அல்லது நிகழ்ச்சி ஏதும் இன்றி ஓய்வாக இருப்பதாகவோதான் இருக்கும் என்றாலும், 'நிகழ்ச்சிதான் இல்லையே, கொஞ்சம் தாமதம் ஆனால் என்ன!' என்று அவர்கள் நினைப்பதில்லை. எக்காரணம் கொண்டு தவக்கமானாலும் அது முக்கிய காரணமாக இருந்தாலும்கூட அதுபற்றி சிறிதும் லட்சியம் செய்யாமல் கொதித்துக் கிளம்பும் சிம்மமாக ஆகிவிடுவார் அய்யா அவர்கள்!



உடன் உதவுவதற்கும், தோள்கொடுப்பதற்கும் ஆட்கள்கூட அந்த நேரத்தில் அவர்கட்குத் தேவை இல்லை. 'வாய்மைப் போருக்கு என்றும் இளையார்' என்றாரே பாவேந்தர்—அந்த வரிகள் உண்மைதான் என்பதைத் துடிக்கும் இளமை பொங்க வேகவேகமாக தானே நடந்து வண்டியில் அமர்ந்துவிடுவார்கள். அந்த வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் உடன் உள்ள மற்றவர்கள்—அம்மா அவர்கள் உட்பட படும் பாடு—தாளம் படுமோ, தறி படுமோ! காலந் தவறாமை அவர்கட்கு ஒரு பழக்கமல்ல—ஒரு நெறியாக வளர்ந்துவந்துள்ளது. தனது எதிரிகளைக் கடுமையாகத் தாக்கும் அவர்களை, தனி வாழ்க்கையில் நேருக்கு நேர் சந்திக்கும் எவரும் அவரது அன்பும் பண்பும் நிறைந்த நடவடிக்கையால் காந்தம் போல் கவரப்படுவது அன்றுமுதல் இன்று வரை உள்ள பண்பு.

மரியாதை, மதிப்பு என்பதை பிறருக்கு அவர்கள் தரும் பாங்கே பாங்கு! இயக்கத்தில் அறிமுகமான முக்கியத் தொண்டர்கள் தோழர்கள் தவிர மற்ற அனைவரிடத்திலும் அவர்கள் முகம் மலர்ந்து வரவேற்பதும், எழுந்து வழி அனுப்புவதுபோன்ற வழக்கமும் அவர்கள் வயதுக்கு, அனுபவத்திற்கு, தகுதிக்குத் தேவைதானா என்றுகூட சிலர் கேட்கலாம். அதிலும் அவர்கள் தனித்த ஒரு பெரியார்தான்!

மிகுந்த மரியாதை காட்டி வரவேற்பதும் அவர்களிடம் அன்பு தவழ உரையாடுவதும் உற்சாகம் காட்டுவதும்—வளரும் இளைஞர்கள், வருங்காலத் தலைவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய முறைகளாகும்.

## பண்புடைமை

இன்றுள்ள அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்கள் பலரும் அவர்களால் உருவாக்கப்பட்ட அவரது குடும்பத்தினர்தான் என்றாலும் அவர்கள் வரும்போது அது மேடையானாலும், வீடேயானாலும் 'வேன்' ஆனாலும் எழுந்து நின்று வரவேற்று, எழுந்து உடன் வெளியே புறப்பட்டு வழியனுப்புவது கண்டு வியக்காதவர்களே இல்லை—மற்றவர்களை மதிப்பதும், மரியாதை செய்வதும் மனிதத் தன்மை; சுயமரியாதை என்பது நமக்கு மட்டுமல்ல,

பிறர்க்கும் உண்டு என்று அவர்கள் புரிந்து அந்தந்த பதவி, தகுதி அறிந்து இவைகட்கு உரியதொரு மரியாதையை அளிப்பதில் தாம் மற்றவர்கட்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைப்பது எல்லோருக்கும் எளிதில் வரும் பண்பாகுமா ?

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், தந்தை அவர்களைச் சந்திக்க வரும் போதும் அவர்கள் காட்டும் பணிவு, மரியாதை, வணங்கி வரவேற்கும் முறை நம் இனத்தவர்க்குக் கலங்கரை விளக்கமாக நின்று பாடம் போதிக்கும் செயலாகும்.

பார்ப்பனர்கள் ஒரு துரும்பைக் கிள்ளி "சங்கராச்சாரி" என்று வைத்துவிட்டாலும்கூட அவருக்கு எவ்வளவு மதிப்பு, மரியாதையை உண்டாக்கி அதன்மூலம் அவர்களது கொள்கையை ஆணியடிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் நாமோ (நம்மவர்களா அவர்கள்,) எவ்வளவு உயர்ந்தாலும் 'ஊர்க் குருவி' என்கிறோமே தவிர உயரப் பறக்கும் 'பருந்து' என்று ஒப்புக்கொள்ளக் கூட மனம் வருவதில்லையே !

## படிப்பு! படிப்பு!!

93-வது ஆண்டில் அடியெடுத்துவைக்கும் அவர்கள், இன்னும் தேர்வுக்கு முன் ஆயத்தம்செய்யும் ஒரு இளம் மாணவனைப் போல படிக்கிறார்கள். படிக்கிறார்—படித்துக்கொண்டே இருக்கிறார் !

சில செய்தித் தாட்களின் சிறிய எழுத்துக்கள் சரியாகத் தெரியாத நிலையில்கூட அவர்கள் தமது கையில் உள்ள "டார்ச் லைட்"டைப் பயன்படுத்தி தொடர்ந்து படிப்பதை எவரும் பார்க்கலாம்.

பழைய பதிப்பான ராமாயணம், பாகவதம், பாரதம், புராணங்கள் முதல் அகராதி, அபிதான சிந்தாமணி வரை அவர்கள் படிக்காத நூல்களே கிடையாது; படிப்பதை அடிக்கோடிட்டு 'மார்க்' செய்வார்கள். சுட்டிக் காட்ட விரும்பும் சில முக்கிய பக்கம்பற்றி நூலின் இறுதியிலுள்ள உள் அட்டையில் சில வார்த்தைகளுடன் பக்கங்களை அவர்கள் குறிப்பார்கள்.

## கவனமுடைமை

செய்தித் தாள்களில் வரும் சில முக்கிய குறிப்புகளை அடிக்கடி அவர்களது "சிட்டை, பேரேடு ஆகிய சர்வமும் ஆன தமது "டயரியில்" குறித்து வைப்பார்கள். சில வேளைகளில் கத்தரித்து எடுத்து ஒட்டி வைத்துக் கொள்வதும் உண்டு.

'மிகவும் கவனமாக எதையும் செய்தல்' (Meticulous) என்ற சொல்லுக்குப் பொருள் என்ன என்பதை இம்மாதிரி நேரங்களில் எவரும் புரிந்து கொள்ளலாம் !

தினசரிகளில் வரும் சில செய்திகளை அவர்கள் படித்து அதைப்பற்றி எங்களைப் போன்றவர்களிடம் எழுதும்படி சுட்டிக் காட்டுகையில்தான் அவர்கள் எவ்வளவு பிரமிக்கும்படியாக எதையும் படிக்கிறார்கள் என்பது விளங்கும் !

## ஒருமுனைப்பு ஆற்றல்

சாதாரணமாக அவர்கள் படிக்கும் போதும் சரி, எழுதும்போதும் சரி, அருகில் எவர் எவ்வளவு நேரம் நின்றாலும் அவர்கள் அதைக் கவனியாமல் எடுத்த வேலையில் மிகவும் தன்னை ஆட்படுத்திக் கொண்டிருப்பது அவர்களுக்கு இந்த வயதிலும் எவ்வளவு ஒருமுனைப்படுத்தி காரியமாற்றும் சக்தி (Concentration Power) உள்ளது என்பது தெரியும்.

## ஏமாந்துவிடுவோம்

அவர்கள் அடிக்கடி, 'இப்போதெல்லாம் எனக்கு ஞாபக மறதி அதிகம்' என்பார்கள். இதை நாம், ஒன்று-அவை அடக்கமாகவோ, அல்லது அவர்கள் இலட்சிய வேகத்திற்கான நினைவாற்றல் அவர்களது வேகமான சிந்தனை ஓட்டத்திற்கு ஈடு கொடுக்கும் தன்மையில் இல்லை என்பதைக் குறிக்கிறார்கள் என்றுதான் கொள்ளவேண்டுமே தவிர, மற்றபடி அந்த வெறும் வார்த்தைகளைக் கொண்டு பொருள் பார்த்தால் நாம் ஏமாந்தவர்களாகி விடுவோம்.

இன்னமும் பழைய கதைகள், நினைவுகள், நிகழ்ச்சிகள் பற்றி அவர்கள் விவரிக்க முனைந்தால்—அந்த வர்ணனை சிறு சிறு விஷயங்கள்கூட விடுபடாத ஒரு கதாசிரியனின் ஓவியமாகவே இருக்குமே தவிர வெறும் 'போர'டிக்கும் வெற்று உண்மைகளாக இருக்காது.

அந்தக்கால இளமை வாழ்க்கை நிகழ்ச்சிகளையோ, காங்கிரஸ் சுயராஜ்ஜிய

இயக்கத்தின் நடப்புகளையோ, சூழ்ச்சி சம்பவங்களையோ விவரிக்கையில் இந்த முறை பளிச்சென எவருக்கும் தென்படும்!

பழைய குடும்ப நண்பர்கள், வியாபாரத் துறையில் அறிமுகமானவர்கள் இவர்களை சந்திக்கையில் அவர்களது மூன்று தலை முறைகளுக்கு முன்னால் உள்ளவர்களின் பட்டியலைத் தொடங்கி அவர்கள் விசாரிக் கும் முறை கண்டவர்கள், இவரது நினை வாற்றல் குறைந்து வருகிறது என்கிறாரே என்றுதான் வியப்படைந்து போவார்கள்!

### பொறுப்புடைமை

எந்த ஒரு காரியமானாலும் அது முற்று பெறும் வரை முழு கவலையுடனும் பொறுப் புடனும் அக்கறை காட்டுவார்கள், விசாரிப் பார்கள்; பல நேரங்களில் துளைத்தும் எடுத்து விடுவார்கள்.

'கைக்கெட்டி விட்டதாலேயே அது வாய்க்கு எட்டிவிட்டது' என்று நினைக் காமல், வாய்க்கு எட்டும்வரை அதை வெற்றி என்று ஒப்புக்கொள்ளாதவர்கள் அவர்கள் என்றால் அதற்குப் பொருள் அவர் நம்பிக்கை வைக்காதவர்கள் என்பதல்ல; தமது காரியத்தில் அவருக்கு அதிகமான கவலையும் பொறுப்பும் உள்ள தன்மையா லேயே யாகும்!

### சேர்ப்பதெல்லாம் செலவளிக்க......

அவர்களது சிக்கனம் ஒரு அறிஞர் குறிப்பிட்டது போல தமிழ்நாட்டின் பொக்கி ஷம் ஆகும்.

நீரை ஆவியாக இழுத்து மழையாகப் பெய்வது போல சில்லரையாகச் சிக்கனப் படுத்தி லட்சக்கணக்காகக் கல்விக்கும், மருத்துவ மனைகளுக்கும், பொதுப் பணி களுக்கும் வரையாது தரும் வள்ளல் அவர்! அது கருமித்தனம் அல்ல—சிக்கனத்தின் சீரிய தன்மையை உலகுக்கு உணர்த்துவ தாகும்.

இவ்வளவுக்கும் மேலாக அவர்களது நகைச்சுவை உணர்வு இந்த வயதிலும்—மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்!

தனி உரையாடல்களில் 'நறுக்குத்' தெறிப்பது போல இடையிடையே அது 'மின் வெட்டாகத்' தோன்றும்! கலகலப்பை உண்டாக்கும்!

### சூடானது—என்ஜினா? வயிறா?

சென்ற நவம்பர்—டிசம்பரில் காரில் பம்பாய் பயணம் சென்றோம். அய்யா அவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகும் பல இயக்க நண்பர்களும் குடும்ப சகிதமாகப் பயணம் செய்யும் அரியதொரு வாய்ப்பு, அப்போதெல்லாம் 24 மணி நேரமும் காரி லேயே செலவாகும் நிலையும் உண்டு. அய்யாவின் நகைச்சுவை, பயணத்தின் களைப்பைப் பஞ்செனப் பறந்தோடச் செய்யும். தோட்டாக்கள் வெடிப்பது மாதிரி சில துணுக்குகள் வெளியாகும்!

பம்பாய்க்குப் போகுமுன்னால், மலைப் பகுதிகளைக் கடந்து செல்வதால் என்ஜின் சூடாகிறது. அதற்காக வண்டி நிறுத்தப் படுகிறது. 'ஏன் நிற்கிறது' என்று கேட் கிறார் அய்யா. என்ஜின் சூடாகிவிட்டது என்கிறார் ஓட்டிவரும் நண்பர் தியாகராசன். உடனே, "உனக்கு எப்போதாவது ஏதாவது சாப்பிடவேண்டும் என்று நினைப்பு வரு கிறதோ, அப்போது என்ஜினும் சூடாகி விடுகிறது—நல்ல எஞ்ஜினப்பா இது!"

ஒரே கலகலப்பு.

ஒரு நண்பர் பின் தொடர்ந்துவரும் மற்றொரு வண்டியில், அவரது துணைவியார் அய்யா அவர்களின் வேனில். வண்டி நின்ற வுடன் அவர் வந்து அய்யாவிடம் நிற்பார். 'என்ன செய்தி—அம்மா பத்திரமாக இருக் கிறார்கள். அம்மா, உன் முகத்தைக் கொஞ்சம் அய்யாவுக்குக் காட்டு; இனி நம் வண்டி புறப்படலாமா?' என்பார். பயணக் களைப்பு வருமா?

*14—8—71* அன்று சென்னை பகுத்தறி வாளர் கழகப் பாராட்டு விழாவில் கலந்து கொள்ள தவத்திரு அடிகளார் வந்தார்.

### அடிக்கடி போகணும்

சோவியத் ருசியாவிற்குச் சென்று திரும்பிய நிலையில் அய்யாவைப் பார்க்க வந்த அடிகளார் பொன்னாடை போர்த்தி, ஹார்லிக்ஸ், பழங்கள் அய்யாவிற்குத் தந் தார்கள். உடனே அய்யா மகிழ்ச்சியில் வேடிக்கையாக, "சாமி அடிக்கடி வெளி நாடுகளுக்கு போய்விட்டு வரணும்" என்றார் கள் பவ்வியத்துடன். அடிகளார் உட்படக் கூடியிருந்த அனைவருக்கும் சிரிப்பினை

அடக்க சில மணித் துளிகள் ஆயின! இப்படி எத்தனையோ!

### நூறில் ஒரு பங்கு போதும்

நன்றியறிதல் இல்லாமல் நம்மவர்கள் பலர் நடந்து கொள்வது கண்டு அவர்கள் சீற்றமடைய மாட்டார்கள். 'நமது இனத்தின் சுபாவம் அதுதான். அதை எல்லாம் பார்த்து நாம் தொண்டாற்ற முயலக்கூடாது' என்று மற்றவர்களுக்கும், உடன் இருப்பவர்களுக்கும் அடிக்கடி கூறுவார்கள்.

பழகப் பழக பால் புளிக்கலாம்; பயில்தோறும் பண்பட்ட வாழ்க்கை தெவிட்டாது தேன் போல் இனிக்கவே செய்யும்!

தனி நபராக இல்லாது, தனித்ததோர் நிறுவனமாக ஓங்கி வளர்ந்து தனி வாழ்க்கையற்ற தலைவரின் தனி வாழ்க்கைப் பண்புகளை இன்றைய இளைஞர் குலம் நூறில் ஒரு பங்கு தெரிந்துகொண்டால்கூட அது நமது லட்சிய சமுதாயத்தை உருவாக்கிவிடும் என்பது உறுதி.

## தந்தை பெரியாரின் 'சாராயச் செலவு' என்ன?

"சுற்றுச் சார்புதான் (Association and Surroundings) ஒரு மனிதன் வாழ்க்கை, லட்சியம், கொள்கை ஆகியவைகளுக்குக் காரணமானது என்று சொல்லப்படுகிறது. அனுபவத்தில் பெரிதும் அப்படித்தான் இருந்துவருகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை ஒரு துறையிலாவது சுற்றுச் சார்பு என்னை அடிமைப்படுத்தியதாகச் சொல்லுவதற்கு இடமே கிடைக்கவில்லை. நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு தன்மை, என்னைச் சுற்றியிருந்த சுற்றுச்சார்பு, சகவாசம் ஆகியவைகளுக்கு மாறாகவே இருந்துவந்திருக்கிறேன்.

உதாரணமாக, எனது நல்ல வாலிபப் பருவத்தில், 20 முதல் 32 வயது வரையில் சகபாடிகள், ஏறக்குறைய அந்தரங்க சகபாடிகள் எல்லோரும் மது அருந்துபவர்கள் ஆவார்கள். அது மாத்திரமா?

என்னிடத்தில் அதிக காதல் உள்ள சர்க்கார் அதிகாரிகள், ஜமீன் தார்கள், மிராசுதார்கள் ஆகியவர்களும் மது அருந்துபவர்கள். மேற்கண்ட வயதில் அநேகமாக இரவெல்லாம் இந்தக் கூட்டத்தாருடனேயே கோலாகலமாய் இருந்து காலை 6-மணிக்கு வீட்டிற்கு வந்து கொத்துச் சாவியை எடுத்துக் கொண்டு கடை திறக்கப் போய்விடுவேன். ஒரு ராத்திரிக்கு 4 பாட்டில் 5 பாட்டில் (பிராந்தி) உடைபடும். எனக்கும் மாதத்தில் இந்தச் செலவு சுமார் 40, 50 ரூபாய் ஆகும். என் வீட்டில் சதா 4, 2 பாட்டில்கள் இருக்கும். நானே என் கையால் டம்ளரில் ஊற்றிச் சோடா கலந்து கொடுப்பேன். சிலர் அதிகம் குடித்துவிட்டு போதையில் என்மீது துப்புவார்கள்.

ஒரு காலத்தில் ஒரு டிப்டி கலெக்டரும் ஒரு சால்ட் அசிஸ்டெண்ட் கமிஷனரும் நான் ஊற்றிக் கொடுத்ததையே சாப்பிட்டுவிட்டு, என்னைப் பிடித்துக் கீழே தள்ளி என் வாயில் பலவந்தமாக ஊற்றினார்கள். அப்படியெல்லாம் இருந்து என்னை அந்த சகவாசமும் சுற்றுச் சார்பும் அது (மது அருந்தினால்) எப்படி இருக்கும் என்று யோசிக்கக்கூடத் தூண்டவில்லை. என் மனைவியாருக்கு என்மீது அடிக்கடி சந்தேகம் தோன்றும். என் வாயை ஊதிக்காட்டச் சொல்லுவார்கள். நான் கிராக்கி செய்வேன். பலாத்காரத்தால் என் வாயை முகர்ந்து பார்த்துத் திருப்தி அடைவார்கள்.

—**'தமிழர் தலைவரில்' தந்தை பெரியார்.**

தொலைபேசி : 108 நிறுவனம் : 1936 தந்தி : வெண்சங்கு

நறுமண சீயக்காய் தூள் REGD No. 13817

தரத்திலும், நறுமணத்திலும்
சிறந்தது !
கூந்தலை உதிராது
ஒளிபெறச் செய்வது !!
உடல் தூய்மைக்கும்
சிறந்தது !

# வெண்சங்கு சீயக்காய்த்தூள்

எங்கும் கிடைக்கும்.

**நறுமணம் கமழும்
செல்வம் ராணி &
சேகர் ஊதுபத்திகளையும்
செல்வம் ராணி ஸ்பெஷல்
ஊதுபத்திகளையும்
வாங்கி உபயோகியுங்கள்.**



உருசியில் சிறந்த

## வெண்சங்கு மார்க் சேமியாவை

**வாங்கி உபயோகியுங்கள்.**

தயாரிப்பாளர் :

# வெண்சங்கு தொழிற்சாலை,

**தஞ்சாவூர்.**

**With the Best Compliments**

FROM

## Thiru. A. GUNARAJ

CONTRACTOR, HIGHWAY DEPARTMENT,

55, IInd Street, Pudhupet,

MADRAS-2.

தபால் பெட்டி எண் : 3 தோற்றம் : 1910 தொலைபேசி எண் : 214

**ஸ்ரீ கமலாம்பிகா கூட்டுறவு அர்பன் பாங்கு லிமிடெட், நெ. 378.**



**திருவாரூர், தஞ்சை மாவட்டம்**

தலைவர் : **திரு. M. ராம்தாஸ் முதலியார்,** B.A., B.L.,

(தமிழ்நாட்டில் சிறந்த கூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டுதல் தெரிவித்து இப் பாங்குக்கு சென்னை மாநில அரசு 1964லிலும், தமிழக அரசு 1970-லும் கேடயங்கள் வழங்கியுள்ளன.)

**புள்ளி விபரங்கள் : 30—6—'71-ல் உள்ளபடி**

| | | | | |
|---|---|---|---|---|
| மெம்பர்கள் | ... | ... | ரூ. | 12,090 |
| ப்ங்குத் தொகை | ... | ... | ரூ. | 8,52,414 |
| டெப்பாசிட்டுகள் | ... | ... | ரூ. | 52,57,581 |
| கடன்கள் | ... | ... | ரூ. | 43,58,634 |
| 30-6-'71 உடன் முடிந்த ஒரு வருஷ நிகர லாபம் | | | ரூ. | 1,48,358 |

5 முதல் 8 சதவிகிதம் வரை பிக்சட் டெப்பாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

ரூ. 5,000க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் டெப்பாசிட்டர்கள் விரும்பினால் மாதாந்திர வட்டி வழங்கப்படும். விபரங்களுக்கு காரியதரிசிக்கு எழுதவும்.

# சிலை உடைப்பு

## - வரலாற்றில் ஓர் சுவை ஏடு—

"ஆராய்ச்சியாளன்"

**சிலை உடைப்பு இயக்கம் உலக வரலாற்றில் முதல் முதலாக எப்போது காணப்படுகிறது? ஒரு தனி நிகழ்ச்சி என்றில்லாமல் பேரியக்கமாக அது நடத்தப்பட்டது எப்போது? இந்தக் கேள்விகளுக்கு ஆராய்ச்சி பூர்வமான ஆதாரங்களுடன் பதில் கூறுகிறது இக்கட்டுரை.**

அது பிள்ளையார் சிலை உடைப்புக் காலம். பார்ப்பனப் பத்திரிகைகள் எல்லாம் அந்த உடைப்பு இயக்கம்பற்றி பரபரப்பாக செய்தி வெளியிட்டன. எல்லாம் கண்டனமும், கிண்டலும், கேலியும், ஏச்சும், பேச்சும், கூக்குரலும், கொலை மிரட்டலும் தான். தமிழ்ப் பத்திரிகைகள் எத்தனை வேகமாக, விஷமமாக, விஷமாக செய்திகள் வெளியிட்டனவோ அதே வேகத்தில், விஷமமாக, விஷமாகச் செய்திகள் ஆங்கிலப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன.

நான் அப்போது கல்லூரி மாணவன். ஆங்கிலப் பத்திரிகை படிக்கும் பழக்கம் ஆரம்ப கட்டத்தில் இருந்தது. தந்தை பெரியார் அவர்களையும், அவர்தம் இயக்கத்தையும் ஆங்கில ஏடுகள் ICONOCLAST என்ற சொல்லால் குறிப்பிட்டதைக் கண்டதும், இச்சொல் "விக்கிரக உடைப்பு" என்ற பொருளை உடையது என்று புரிந்து கொள்ளச் சிரமம் இருக்கவில்லை.

### அகராதி கூறும் பொருள் என்ன?

என்றாலும் எதையும் ஆழமாகச் சிந்திக்கும் மனப் பக்குவம் கொஞ்சம் வந்து விட்ட பருவம் என்பதால் அச்சொல்லின் வேர்ப் பொருள் என்ன என்று ஆராயத் தலைப்பட்டேன். வேர் ஆராய்ச்சிக்குப் பயன்படும் அகராதிகளைப் புரட்டிப் பார்த்ததில் இந்தச் சொல்லின் பின்னே ஒரு மாபெரும் வரலாறு பின்னிக் கிடப்பதைக் கண்டுகொண்டேன். தரமான அகராதி என்று உலகம் முழுவதும் பரவலாக நம்பப்படும் 'ஆக்ஸ்ஃபோர்டு 'கன்சைஸ்' அகராதி (Concise Oxford Dictionary) இச்சொல்லுக்குப் பொருள் என்ன கூறுகிறது?

ICONOCLAST என்ற சொல் ICON என்ற சொல்லும் CLAST என்ற சொல்லும் இணைவதால் ஏற்பட்ட ஒரு கூட்டுச் சொல். ICON என்றால் சிலை; CLAST என்றால் உடைப்பவன் என்று பொருள். இவை இரண்டும் EIKON என்ற கிரேக்கச் சொல்லையும், KLAO என்ற கிரேக்கச் சொல்லையும் ஆதாரமாகக் கொண்டவை —இதுதான் மொழிநூல் அடிப்படையிலான சொல் ஆராய்ச்சி; வேர்ச்சொல் ஆராய்ச்சி.

### பின்னணியில் உள்ள வரலாறு என்ன?

இந்தச் சொல் முதல்முதலில் எப்போது உருவாக்கப்பட்டது? இந்தக் கேள்விக்கும் அகராதி பதில் கூறுகிறது. "Breaker

of images, especially one who took part in movement in 8th and 9th century against use of images in religious worship iu Churches in the east" என்பதுதான் இச்சொல்லுக்கு ஆக்ஸ்ஃபோர்டு அகராதி வழங்கும் முழுப் பொருள். தமிழில் இது வருமாறு : ''விக்கிரகங்களை உடைப்பவன், சிறப்பாக கிழக்கத்திய மாதா கோயில்களின் மத வழிபாட்டில் விக்கிரகங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக 8-வது மற்றும் 9-வது நூற்றாண்டுகளில் நடைபெற்ற இயக்கத்தில் பங்கு பெற்ற ஒருவன்''.

எனவே ICONOCLAST என்ற சொல் 8-வது நூற்றாண்டில் பிறந்தது என்று தெரிந்துகொண்டேன். ஆனால் அப்போது நடைபெற்ற விக்கிரக எதிர்ப்பு இயக்கம்பற்றிய வரலாறு என்ன என்பதை வெகு காலமாகத் தெரியாமலேயே இருந்துவந்தேன். மாமூலான வரலாற்று நூல்களில் இந்த சங்கதிகள் எல்லாம் இடம்பெற நியாயமில்லை. அப்படியே இடம் பெற்றிருந்தால்கூட இவ்வியக்கத்தைப்பற்றி இல்லாததும் பொல்லாததுமான தகவல்களை இட்டு நிரப்பி வரலாறு என்ற பெயரில் கட்டுக் கதையைக் கடைவிரிப்பார்களே தவிர உண்மை வரலாற்றை யார் எழுதியிருப்பார்கள்? பல வரலாற்று நூல்களைத் துருவி ஆராய்ந்து கண்ட உண்மைகள் சுவையானவை; பகுத்தறிவு இயக்கத்துக்கு மிகவும் பயன்படுபவையாக உள்ளன.

### மதம் நசித்துப்போய் மக்களைக் கெடுத்தது

கிரேக்க நாட்டின் ஒரு பகுதியான பைசாண்டியம் அல்லது கான்ஸ்டாண்டிநோபிள் கி.பி. அய்ந்தாம் நூற்றாண்டுமுதல் 15-ம் நூற்றாண்டு வரை பெரிய சாம்ராஜ்யமாக இருந்தது. ரோம் சாம்ராஜ்யத்திற்குக் கிழக்கே இந்த சாம்ராஜியம் இடம் பெற்றிருந்ததால் இதற்கு கிழக்கத்திய சாம்ராஜியம் என்றும் பெயர் வந்தது. இந்த சாம்ராஜியத்தின் ஆட்சிக்குட்பட்ட மதச் சபைகள் அனைத்தும் கிழக்கத்திய மதச் சபைகள் என்று அழைக்கப்பட்டன.

பைசாண்டைன் பகுதி மக்களின் வாழ்வு அய்ந்தாம் நூற்றாண்டு முதற்கொண்டே நசிக்கத் தொடங்கிவிட்டதாகவும் இவ்வாறு லௌகீக வாழ்க்கை நசித்ததற்குக் காரணம் ஆன்மீக வாழ்க்கையின் ஆதாரமான மதம் நசித்ததே என்றும் பரவலாகப் புகார் கூறப்பட்டு வந்தது. மதத்தின் பெயரால் மத குருக்கள் நடத்திய சுரண்டல்கள், ஊழல்கள்தான் இதற்குக் காரணம். இந்த ஊழல்களைக் களையவும் மதத்தை ஒரு எல்லைக்குள் நிறுத்திவைத்து மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படச் செய்யவும் வேண்டி அய்ந்தாம் நூற்றாண்டு முதற்கொண்டே சிலபல முயற்சிகள் செய்யப்பட்டன.

### சுரண்டலுக்காக வேண்டி உருவ வழிபாடு

இந்த முயற்சிகள் யாவும் எட்டாம் நூற்றாண்டில் உச்சம்பெற்று புரட்சிகரமானதொரு இயக்கமாக முகிழ்த்தன. கிரேக்க நாட்டில் கிறிஸ்தவ மதம் காலடி எடுத்துவைத்த நாள்முதலாக, அந்நாட்டின் பழைய மதமான புராதன மதம் (PAGAN) உலகின் எல்லா மதங்களையும்போல உருவ வழிபாட்டையே மையமாகக் கொண்டிருந்தது. மக்களை இலகுவாக வசப்படுத்த வேண்டும் என்பதற்காக 'பேகன்' மதத்தின் புறச் சின்னங்கள் பலவற்றையும் கிறிஸ்தவ மதம் அப்படியே ஏற்றுக்கொண்டது. உருவ வழிபாட்டுக்குரிய பூஜை புனஸ்காரங்கள், தேர் திருவிழாக்கள், ஆச்சார—அனுஷ்டானங்கள் எல்லாம் கிறிஸ்தவ மதத்திலும் தொடர்ந்தன. இவ்வாறு தொடர்வதின் மூலம் தங்கள் சுரண்டலுக்கு நல்ல அமைப்புக் கிடைத்துவிட்டது என்பதால் புரோகிதக் கும்பல் இதை ஆதரித்தது.

சிறு தணலாக இருந்த இந்த இயக்கம் ஏழாம் நூற்றாண்டில் பரபரப்பாகச் செயல்படத் துவங்கியது. பின்னர் ஓரிரு நூற்றாண்டுகளாக இந்த இயக்கம் காட்டுத் தீ போல பரவியது. உருவ வழிபாடு கூடாது என்று மட்டுமே முதலில் கூறிய இந்தச் சீர்திருத்த இயக்கம் பின்னர் வேறு பல மதச் சீர்திருத்தங்களையும் அரவணைத்துத் தங்கள் இலட்சியமாக அய்க்கியப்படுத்திக்கொண்டது. மத சம்பந்தமான புனிதச் சின்னங்கள் (Relics) மதிக்கப்படக் கூடாது என்பது ஒரு கொள்கை. மதத்தைக் கண்காணிக்கும் மதகுருக்கள் தங்களுக்கு என்று தனியிடங்களைக் கட்டிக்கொண்டு மடாலய வாழ்க்கை நடத்தக் கூடாது; மக்களோடு மக்களாகவே வாழவேண்டும் என்பது ஒரு கொள்கை. கன்னிமேரி வணக்கம் என்பது கூடாது என்றும் வற்புறுத்தப்பட்டது.

## கோயில் சிலைகள் அனைத்தும் தவிடுபொடி

இந்த நிலையில் லியோ என்பவர் 716-ம் ஆண்டு கிழக்கத்தியப் பேரரசின் மன்னரானார். இதுவரை மக்களின் மத்தியில் மட்டுமே பரவியிருந்த இயக்கம் லியோவின் காலத்தில் அரண்மனையின் ஆதரவு பெற்ற அரசின் நேரடிப் பொறுப்பில் நடத்தப்பட்ட ஓர் இயக்கமாக மாற்றப்பட்டது. இந்த இயக்கத்தின் நேர்மையைப் புரிந்துகொண்ட லியோ மன்னர் அதன் வேலைத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பைத் தனது படைகளிடமே ஒப்படைத்தார்.

பிறகு கேட்க வேண்டுமா—மன்னரே ஆணையிட்டுவிட்டார் என்றால்; அதுவும் மக்கள் மத்தியில் செல்வாக்குடன் விளங்கிய ஒரு இயக்கத்தின் இலட்சியங்களை செயல்படுத்த கொஞ்சமா தீவிரம் இருக்கும்? விக்கிரக ஆராதனைக்கு காரணமான உருவங்கள்—சிலைகள் அனைத்தும் தவிடுபொடியாக்கப்பட்டன. சிலை உடைப்புடன் நின்றுவிடவில்லை. இயக்கத்துக்கு சம்பந்தமில்லாத பிறரும் இதில் பங்குகொண்டு வேறு பல புதிய செயல்களும் ஊர்தோறும், தெருத்தோறும் செய்யப்பட்டன.

## தாடிகளில் எண்ணெய் ஊற்றி தீவைப்பு

கோயில்களில் குவிந்து கிடந்த பொன்னும் பொருளும் கொள்ளையடிக்கப்பட்டன. கோயில்களிலும் மடங்களிலும் முடங்கிக் கிடந்த மதகுருக்களின் தாடியிலே எண்ணெய் ஊற்றப்பட்டு தீ வைக்கப்பட்டது. தாடி பொசுங்கி, முகம் வேகவேக அவர்கள் துள்ளித் துடித்தது மக்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கன்னி மாடங்களில் பதுங்கிக் கிடந்த கன்னியாஸ்திரிகள் கண்டுபிடிக்கப்பட்டு கற்பழிக்கப்பட்டனர். இவற்றில் சில நடவடிக்கைகள் இயக்கத்தாரே செய்தவை; இன்னும் சில, யார்—யாரோ உள்ளூர் போட்டி—புகைச்சல் காரணமாகச் செய்தவை.

மதகுருக்கள் பலரும் கோயில்களின் உள்ளே, இயக்கத்தினர் சம்மட்டி, சுத்தியல் சகிதமாக நுழையும்போது மரியாதையாக ஒதுங்கிக்கொள்ளாமல் வீணாக மல்லுக்கு நின்றிருப்பார்கள். அதனால் மரியாதை குலைந்து இப்படிப்பட்ட மக்கள் கொதிப்புக்கும், கோபத்துக்கும் ஆளாயினார்கள்.

பொன்னும் பொருளும் கிடைக்கிறது என்பதால் பிற விஷயங்களில் யார் எப்படி நடந்தாலும் அதைப்பற்றி மன்னரின் படைகள் அதிகம் கவலைப்படவில்லை. படைகளில் பலருக்கும் கன்னியா ஸ்திரிகள்மீது ஒரு கண் இருந்திருந்தால் அதில் வியப்பில்லை.

## மதகுரு—கன்னியாஸ்திரி கட்டாயக் கல்யாணம்

கன்னியா ஸ்திரிகள் என்றும், மதகுரு என்றும் காமத்தை வென்றவர்கள்போன்று காட்சியளித்து உள்ளே உளுத்துப்போன காமவிகார வாழ்க்கை வாழ்ந்துவந்ததாகச் சில ஊர்களில் நடப்பு இருந்திருக்கும் அல்லவா? அங்கெல்லாம் அந்த மதகுருக்களும் அவர்களின் ஜோடிகளான கன்னியா ஸ்திரிகளும் ஊர்மத்திக்கு இழுத்துவரப்பட்டனர். மதகுருவும் கன்னியா ஸ்திரியும் ஒருவர் கையை மற்றவர் பிடித்துக்கொள்ள சற்றுத் தூரம் அணிவகுத்து நடை பயிலச் செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் இருவருக்கும் கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. கான்ஸ்டான்டிநோபிள் நகரத்தின் பிஷப், ஊழல்களில் அதிகம் ஈடுபடாதவர். அவர்கூட மக்கள் மன்றத்தின் கோபத்திலிருந்து தப்ப முடியவில்லை. அவர் கழுதை ஒன்றின்மீது அமர்த்தப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். வழிநெடுக அவரை ஆண்களும் பெண்களுமாக கேலி—கிண்டல் பேசினார்கள். அவரது முகத்தில் அனைவரும் காரி உமிழ்ந்தனர்.

இவ்வாறு காட்டுவெள்ளம்போல பிரவாகித்துஓடிய அந்த இயக்கம், அடுத்து 780 முதல் 802 வரை ஆட்சிக்கு வந்த ஐரீன் மகாராணி காலத்தில்தான் நிறுத்தப்பட்டது.

இவள் மதத்தின்மீது மிகப் பெரிய பக்தி கொண்டு இவ்வாறு இந்த இயக்கத்தைத் தடுத்து நிறுத்தினாள் என்பதில்லை. மாறாக, இவள் ஆட்சிக்கு வந்த காலத்தில் இந்த இயக்கம் கண்டவர்கள் கையில் சிக்கி அதன் இலட்சியம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, சில்லறைத் தனமான வெறியே தலை தூக்கி நின்றது. அது மட்டுமல்ல, இவள் சில பெரிய இடங்களை, போப் உள்ளடங்கிய பெரிய மனிதர்களைக் 'காக்கா' பிடிக்கவேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் சிக்கியிருந்தாள். முறைப்படி மன்னனாகியிருக்க வேண்டியவன் இவளது சொந்த மகனே. என்றாலும் இவள் தன் மகனின் இரண்டு கண்களையும் தோண்டிக் குருட

னாக்கிவிட்டு தானே சிம்மாசனம் ஏறினாள். நாற்காலி சுகத்துக்காக தான் பெற்ற பிள்ளையையே குருடாக்கிய இந்தப் பாதகி தனது இச்செய்கையை மேலிடத்து மனிதர்கள் மன்னிக்கவேண்டும் என்பதற்காக இவ்வியக்கத்தைத் தடுத்தாள்.

### இன்றும்கூட அங்கு சிலைகள் இல்லை

இதற்குள் கிழக்கத்திய மதச் சபையின் கோயில்களில் மருந்துக்குக்கூட ஒரு சிறு சிலையும் இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது. என்றாலும் கிரேக்க நாட்டின் மத வரலாற்றில் இந்த இயக்கம் மிகவும் ஆழமாய்ப் பதிந்துவிட்டது. நிரந்தரமாக இதன் விளைவுகள் நிலைத்துவிட்டன.

இன்றும்கூட கிரேக்க நாட்டின் மாதா கோயில்களில் முழு அமைப்பிலான சிலை எதுவும் காணமுடியாது. பெரும்பான்மையான மாதா கோயில்களில் வெறும் படம் மட்டுமே வைக்கப்பட்டிருக்கிறது. பிற மாதா கேயில்களில் அரை அமைப்பு சிலை (புடைப்பு ஓவியம்போல) மட்டுமே வைக்கப்படுகின்றன.

'சிலை உடைப்பு' என்ற சொல்லின் பின்னே எத்தனை சுவையான வரலாறு பதுங்கிக் கிடக்கிறது பார்த்தீர்களா ?

## பாட்டிசைப்போம்!

### குருவிக்கரம்பை சண்முகம், எம்.ஏ.,

வெண்மேகங்கள் தவழும் வானத்தின்கீழ் நாங்கள்
கறுஞ்சட்டை அணிந்து பாட்டிசைப்போம் !

சாக்ரடீசின் கண்களாய்ப் பிளோட்டோவின் சிந்தனையாய்ப்
புராணக் குப்பைகளின் சாம்பல் மேடுகளில்
நிர்வாணச் சாமிகளை நிர்மூலப் படுத்திய
கர்ம வீரராய்ப் புதுயுகக் காவலராய்
மூல தனங்களின் மூலத் தலைவராய்
உலாவரும் புதிய உலகத்தின் தலைவரை

வெண்மேகங்கள் தவழும் வானத்தின்கீழ் நாங்கள்
கறுஞ்சட்டை அணிந்து பாட்டிசைப்போம் !

காவியத்துக்குரிய எங்கள் கறுப்புக் குயில்அன்று
சோவியத்துப் பூங்காவைச் சுற்றிவந்த பின்னால்தான்
சிவப்பு மலர்களின் சீவ மலர்ச்சிஇங்கு
கறுப்புக் குயிலால் கண்ணில் தெரிந்தது !
வெண்தாடி போல் விளங்கும் வெண்மேகங்கள் !
எங்கள் உடல்களில் கறுப்புச் சட்டைகள் !
எங்கள் உளங்களில் செம்மலர் மொட்டுகள் !

வெண்மேகங்கள் தவழும் வானத்தின்கீழ் நாங்கள்
கறுஞ்சட்டை அணிந்து பாட்டிசைப்போம் !

# சங்கராச்சாரியார் திருவுளப்படி

கிராமம் கிராமமாக பாரதப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றும் அதற்குத் தகுதி வாய்ந்த ஆட்களைத் தாம் தேடி வருவதாகவும் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார் சமீபத்தில் அறிவித்தார் அல்லவா?

"பெரியவாள்" அவர்களின் திருவுளப்படி பாரதப் பிரச்சாரத்துக்குப் பயன்படும் வண்ணம் பாரதக் கதையின் முக்கியமான சில கட்டங்களைப் படமாகத் தீட்டித் தரும்படி நமது ஓவியரிடம் கேட்டிருந்தோம். அதன் விளைவு தான் இந்தப் படத்தொகுப்பு.

சங்கராச்சாரியார் தமது பிரசாரகர்களை ஏவும்போது தவறாமல் இந்தப் படங்களையும் கையோடு கொண்டுபோய் அவற்றின் முழுக் கதைகளையும் விளக்கமாக எடுத்துக்கூறி பாரதம் காட்டும் இந்த "நல்வழி"யில் தமது மெய்யன்பர்களையும் நடக்கச் செய்வாராக!

★

## மனைவிக்கு 'பார்சலில்' அனுப்பிய ஆண்மை



காட்டிலே வேட்டை முகாமில் படுத்திருந்த வசுராஜன் கனவிலே வீரியம் ஸ்கலிதமாயிற்று. அதை இலையில் கட்டி வல்லூறு மூலம் மனைவிக்கு அனுப்ப, அதனுடன் ராஜாளி சண்டையிட வீரியம் நதியில் கொட்டியது. அதை விழுங்கிய மீன் இரண்டு குழந்தைகளை ஈன்றது.

## அய்ந்து போதாதென்று ஆறாவது தேடியவள்



அய்வருக்கும் பத்தினியான பாஞ்சாலிக்கு மனதிலே தீராத காம வேட்கை. ஆறாவதாக கர்ணனையும் வளைத்துப் பிடித்துப் போட்டுக்கொண்டால் எப்படியிருக்கும் என்று ஆசைப்பட்டாளாம். இந்த ரகக் கற்பு சங்கராச்சாரியின் சிஷ்யைகளுக்கு நல்ல வழிகாட்டியாக அமையலாமே!

## விதவை மருமகளுக்கு பிள்ளைவரம்



தமது மருமகளான அம்பிகை விதவையாகிவிட்ட நிலையில், வேத வியாசனுக்கு அவளைப் பலவந்தமாகக் கூட்டிக் கொடுத்து பிள்ளையுண்டாக வைத்து வமிச விருத்தி செய்கிறாள் பரிமளகந்தி.

பட்டப்பகலில்.........பருவமாகா சிறுமியுடன்.........



ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பெண்ணைக் கூடினால் சத்புத்திரன் பிறப்பான் என்று, ஆற்றிடையில் திட்டு உண்டாக்கி, பட்டப்பகலில், பருவமடையாத சிறுமியான மச்சகந்தியைப் புணர்ந்து பிள்ளை பெற்றான் பராசன். அந்தப் பிள்ளையே வியாசன்.

சாமி இருக்கையில் 'சதி' எதற்கு ?



பரசுராமனால் சூரிய குலம் நாசமடைந்த போது சூரிய வம்சத்து அரசிகள் தீக்குளிக்க ஏற்பாடு செய்தார்கள். அதுகண்ட காசிபர் அப்பெண்களைத் தடுத்து நிறுத்தி பள்ளியறைக்கு அனுப்பி ராஜகுருமார்களுடன் கூடி புத்திர சந்தானம் பெறும்படி செய்தார்.

## பிரம்மன் சபையில் ஆபாச வெள்ளம்



பிரமன் சபையில் கங்கை நுழைகிறாள். அவளது ஆடைகளை வாயு பகவான் சற்றே நீக்குகிறான். அங்கங்கள் தெரிந்த அந்த ஆபாசக் காட்சியைப் பார்த்து அனைவரும் கண் பொத்துகிறார்கள். ஒரே ஒருவன் மட்டும் அதை ரசிக்கிறானே, அவன்தான் வருணன்!


**தந்தை பெரியார் வாழ்க!**

—) o (—

**சுவைமிக்க**

**உணவு, பிரியாணி,**

**டீ, காபி,**

**சிற்றுண்டிகளுக்கு**

# செல்வம் உணவு விடுதி

**பஸ் ஸ்டாண்டு, தஞ்சாவூர்.**

—( )—

டெலிபோன்: **404** உரிமையாளர்: **M. A. கோயா.**



# எனது உற்சாகத்தின் ரகசியம்

★

**தந்தை பெரியார்**

எனக்குத் 92 வருஷம் முடிந்தது. நாளது செப்டம்பர் மாதம் 17-ம் தேதியோடு 92 முடிந்து 93-வது வருஷம் பிறக்கிறது.

எனக்கு, மனித சமுதாயத்திற்குத் தொண்டு செய்வதுதான் மனித ஜீவனின் இன்றியமையாத பணி என்ற கருத்துத் தோன்றிய காலம் முதல்—சுமார் சென்ற 50 ஆண்டுக் காலமாக அதே பணியாகப் பணியாற்றி வருகிறேன்.

எங்நாளும் பலனைப் பற்றிக் கவலைப் படாமல் பணியாற்றி வருவதால்—துவக்க நிலையிலிருந்து இன்றளவும் சிறிதுகூடச் சலிப்புத் தோன்றாமலும், உற்சாகம் குறையாமலும் தொண்டாற்றி வருகிறேன்.

நான் ஆற்றிவந்த, ஆற்றி வருகிற தொண்டு மனித சமுதாயப் பொதுத் தொண்டாக மாத்திரமல்லாமல், சமுதாயத்தில் எனக்குச் சுயநலத் தொண்டாகவும் அமைந்துவிட்டதால்-துவக்க முதல் இன்றளவும் சிறிதும் உற்சாகமும் முயற்சியும் சிதையாமலிருந்து பணியாற்றி வருகிறேன்.

நமது நாட்டில் வேறு எந்தத் தொண்டு செய்வதானாலும் மக்களுக்கு இடமுண்டு; ஆனால், மனித சமுதாயத் தொண்டு செய்வதானால் மக்களுக்கு இடமில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால்—மனித சமுதாயத்தில் நம் நாட்டைப் பொறுத்தவரை, மேல் கீழ் என்ற தன்மையில் வகுப்புக்கள் பிரிக்கப்பட்டு விட்டதால், அப்பிரிவின்படி பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே மக்கள் வாழ்ந்து பழக்கமும், சகிப்பும் ஏற்பட்டுவிட்டதால்—உயர்வு தாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் பங்கு ஏற்பட்டு விட்டதால், உயர்வு தாழ்வை ஒழிக்கும் உணர்ச்சி தோன்றாவிட்டாலும், யாருக்காவது தோன்றி அத் தொண்டாற்ற யாராவது வந்தாலும், அதைச் சகிக்கவும் அதற்கு இடம் கொடுக்கவும் முடியாத நிலை ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருப்பதோடு, கூடுமான அளவு எதிர்க்கவும் வேண்டியவர்களாக ஆகிவிடுகிறார்கள். அதனாலேயே இந்த நாட்டில், இந்த இரண்டு மூன்று ஆயிரம் ஆண்டுகளாக மனித சமுதாயத் தொண்டு செய்ய யாருமே எவருமே ஏற்படவில்லை என்பதோடு, ஏற்பட முடியாமலும் போய்விட்டது. அப்படிப்பட்ட நிலையில், நான் மாத்திரம் ஏன் இத்தொண்டில் ஈடுபட்டேன் என்றால், "வெளியூர்க்காரன் பேய்க்கு பயப்பட மாட்டான்" என்று சொல்லுகிறபடி; அதாவது—வெளியூர்க்காரன் நம் ஊருக்கு வந்தால் நம் ஊரில் எங்தெந்த இடத்தில் "பேய்" இருக்கிறது என்று நாம் பயப்படுவோமோ அந்த இடங்களுக்கு வெளியூர்க்காரன் வந்து போகையில் பயப்படாமல் வருவான், போவான். ஏனென்றால், அந்த இடத்தில் பேய் இருப்பது உள்ளூர்க்காரனுக்குத்தான் தெரியுமேயொழிய வெளியூர்க்காரனுக்குத் தெரியாது. ஆதலால், அவன் பயப்படாமல் நடந்து, கடந்து போவான்.

உள்ளூர்க்காரன் ஏன் பயப்படுகிறான் என்றால், உள்ளூரில்—ஊரிலுள்ள எல்லோரும், "அந்த மரத்தில் பேய்", "இந்தச் சந்தில் பேய்", "இந்த வீட்டில் பேய்" என்பதாகவெல்லாம் பேசிப் பேசிப் பிரபலமாய் விட்டதால் உள்ளூர்க்காரன் "பேய்க்கு"ப் பயப்படுவான்.

அதுபோல்தான், நான் சிறு வயது முதலே இந்து சமுதாயக்காரன் அல்லாதவன் போலவே நடந்து பழகிவிட்டேன் ஆனதால், எனக்கு எதைப்பற்றியும் கட்டுத் திட்டம் என்பதில்லாமல் போய்விட்டது.

என்ன செய்தாலும், எப்படி நடந்தாலும் அதன் பயனாக எனக்கு ஏற்படும் பயனைக்

கருதித்தான் நடந்துகொள்வேன்; அதனால்தான் ஒரு மனித சமுதாயத் தொண்டனாக ஆக முடிந்தது என்பது எனது கருத்து. இப்போதும் சொல்லுகின்றேன்: என்னவென்றால், சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு "மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள்!", "நம்மை எப்படி மதிப்பார்கள்!" என்கின்ற எண்ணமே இருக்கக்கூடாது என்பதோடு, அந்தப்படி நினைப்பவன் மனித சமுதாயத் தொண்டுக்கு அருகன் ஆகவே மாட்டான் என்றும் தைரியமாய்ச் சொல்லுவேன்.

உதாரணமாக,

மனித சமுதாய பேத அமைப்புக்கு ஆதாரமாக, பேதப் பிரியர்கள் சொல்லும்—சாட்டும் காரணம் என்ன?

"கடவுள், மதம், சாஸ்திரம், தர்மம், முன்னோர் நடந்தவை" என்பவைகளாகும். அவைகளில் நம்பிக்கை இல்லாமல், மதிப்பும் இல்லாமல் அவற்றை இழிவுபடுத்தத் தயங்கேன் என்று முன் வருவானானால் அவனை உலகில்—நாட்டில் எவன்தான் காரண காரியங்களைச் சொல்லி எதிர்க்க முடியும்? தடுக்கமுடியும்?

அப்படிப்பட்டவனுக்கு மனித சமுதாய பேதத்திற்கு உரிய எதை ஒழிப்பது கஷ்டமாக—அசாத்தியமாக இருக்கமுடியும்? இதுதான் மனித சமுதாயத்தில் உள்ள எந்த விதமான உயர்வு தாழ்வு பேதத்தினுடையவும் இரகசியமாகும்.

இதை உணர்ந்த எவனும் சமுதாயத் தொண்டனாகலாம். இப்போது மனித சமுதாய பேத ஒழிப்புக்குப் பலர் வருகிறார்கள் என்றால், இதை உணர்ந்ததால்தான், உணர்ந்தவர்கள் தாம் உண்மையாக வருகிறார்கள், வரமுடிகிறது.

கடவுள், மதம், சாஸ்திரம், தர்மம், முன்னோர் நடந்தவை என்பவைகளில் நம்பிக்கை உடைய எவராலும், சமுதாய பேதத்தை ஒழிக்கும் தொண்டிற்கு ஒரு நாளும் வரமுடியாது. அப்படி வந்தவர்களை இத் தொண்டிற்கு நாம் நம்புவதும் ஏமாற்றமாய்த்தான் முடியும்.

---

## தந்தை பெரியார் கொடுத்த பிள்ளைவரம்!

சுமார் 40 வயதுள்ள ஒரு பெண்மணி சுமார் 20 வயதுள்ள தன் பெண்ணுடன் வந்தாள். "இந்தியாவிலிருந்து வந்திருக்கும் சாமியார் எங்கே?" என்று தேடினாள். அங்கிருந்தவர்கள் சிரித்துக்கொண்டே இராம'சாமி'யாரைக் காட்டினர். அவள், உடனே தன் பெண்ணுடன் வந்து அவர் கால்களில் விழுந்து வணங்கினாள்; எழுந்தாள். "சுவாமி, நான் 10 கல்லுக்கு அப்பால் இருந்து வருகிறேன். ஆதலால் நேரமாகி விட்டது, உங்கள் உபதேசத்தைக் கேட்கக் கொடுத்து வைக்கவில்லை. இவள் என் பெண். இவளுக்குக் கல்யாணம் ஆகி நான்கு வருஷங்கள் ஆயின. இன்னும் பிள்ளை பிறக்கவே இல்லை. நீங்கள் ஏதாவது நல்ல வாக்குக் கொடுக்கவேண்டும். தங்கள் வரத்தால்தான் பிள்ளை பிறக்கவேண்டும்" என்று பரிதாபக் குரலில் கூறினாள்.



அவளை நோக்கி, "அம்மா! நான் சாமியல்ல; வெறும் ஆசாமிதான். எனக்கே 30 வருஷமாகப் பிள்ளையில்லை. நான் சொல்வதை நம்பாவிட்டால் இந்த அம்மாளைக் (நாகம்மையாரைக் காட்டி) கேட்டுப் பார். தனக்கே பிள்ளை இல்லாதவன் உனக்கு எப்படி வரம் கொடுக்க முடியும்?" என்றார்.

அப்பெண் பிள்ளை, "சாமி-நீங்கள் சொல்லுவதை நான் நம்பமாட்டேன். பெரியவர்கள் இப்படித்தான் சொல்லுவார்கள். ஏழையின்மேல் பெரிய மனது வைத்து ஆசீர்வாதம் பண்ணவேண்டும்" என்று பிடிவாதம் பண்ணினாள். இறுதியில் அவளுக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி, "சரி, உன் மகளுக்கு இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிள்ளைக் கவலை வேண்டாம். பிறகு நல்ல ஆண் குழந்தை பெற்றுச் சுகமாக வாழ்வாள்" என்று சொன்னார். அவளும் சமாதானமடைந்து சென்றாள். —"**தமிழர் தலைவரி**"**ல் மலேயா நிகழ்ச்சி.**

சந்தாதாரராகி விட்டீர்களா?

# “தி மாடர்ன் ரேஷனலிஸ்ட்”

இங்கிலிஷ் பகுத்தறிவு மாத இதழ்!

## பகுத்தறிவுச் சுடர் பரப்பும் ஒரே இங்கிலீஸ் ஏடு!

ஆண்டு சந்தா ரூ. 5/-

விவரங்கட்கு:

நிர்வாகி,
‘தி மாடர்ன் ரேஷனலிஸ்ட்,’
வேப்பேரி,
சென்னை-7.

# திருவாரூர் தேர் "பாக்க" வாரீகளா ?

* ஓடாமல் நின்றுபோன தேர் மீண்டும் ஓடியதாம் —துள்ளிக் குதிக்கிறது பக்தர் உலகம். ஆனால்.........

* அந்தத் தேரிலே ஓடிப் பெருகிவரும் ஆபாச வெள்ளம் அவர்கள் கண்ணில் படவில்லையா ?

* அவர்கள் பக்தி போதையில் குருடாகிப் போனவர்கள் ; விட்டுத் தள்ளுவோம்.

* சினிமாவிலோ, சுவரொட்டியிலோ, பத்திரிகையிலோ, பாடலிலோ சாடைமாடையாகக் காட்டினால் கூட "ஆபாசம்—ஆபாசம்" என்று மூக்கைப் பிடிப்பவர்கள்—சட்டத்தின் காவலர்கள், இதற்கு என்ன கூறுகிறார்கள் ? இதை என்ன செய்யப் போகிறார்கள் ?

**சொல்லவே வாய் நாறும்-கண்டாலோ ...**



நிர்வாணக் கோலததிலே ஒரு பெண் ; அவளருகே, அவளை நிர்வாணமாக்கிய ஆண் ; அவனுக்கும் அதுவே கோலம் ! அந்த ஆபாச பேர் வழியின் கை எங்கே போகிறது ? அந்தக் கேடு கெட்டவளின் கையும்தான் எங்கே போகிறது ? சீச்சீ...... சொன்னாலே வாய் "நாறும்"! நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.

## ஆபாச வினாயகா ! நீயும் ஒரு கடவுளா ?



நிர்வாணக் கோலத்தில் ஒரு பெண்! அவளைத் தொடையிலே தூக்கி வைத்து... அவளது பெண் குறியில் தனது தும்பிக்கையை நுழைத்து......! எத்தனை ஆபாசம்! மனிதனே செய்யக் கூசும் இதை கடவுள் செய்யலாமா? செய்பவனைக் கடவுள் என்று கும்பிடலாமா ?

## ஆபாசத் தடியர்களுக்கு பெயர் முனிவர்களா ?



சோலையிலே ஒரு சுந்தராங்கி! அவளை வஸ்தராபகரணம் செய்து....சுற்றி நின்று ஒரு கும்பல் ரசிக்கிறது என்றால்- ஏதேதோ செய்யக் குறுகுறுக்கிறது என்றால் அந்த தடியர் கும்பலை முனிவர்கள் என்பதா? முக்தி பெற இவர்கள் துணை நாடுவதா ?

தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்தநாளில்
எமது நல்வாழ்த்துக்கள்!

**M. N. ஜெயராமன்,**

# M. S. நாகப்பா & கோ.,

"சிலை-சிற்பக்கலை"

3, நரசிங்கபுரத் தெரு,
சென்னை-2.

தோற்றம்: 1919. தொலை பேசி எண்: 442.

கருந்தட்டாங்குடி

# திராவிட கூட்டுறவு நகர வங்கி லிமிடெட்.

**தஞ்சாவூர்-2.**

(பொன் விழா)

பேரன்புடையீர்! 1—7—70 முதல் குறித்தகால வைப்புத் தொகைகளின் (Fixed Deposits) பேரில் உள்ள வட்டி விகிதங்கள் கீழ்க்கண்டவாறு அதிகரிக்கப் பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| 3 மாதங்கள் | 6·/. | 24 மாதங்கள் | 7½·/. |
| 6 ,, | 6¼ /. | 24 மாதத்திற்குமேல் 36 மாதத்திற்குள் | 7¾·/. |
| 9 ,, | 6½·/. | | |
| 12 ,, | 7·/. | 36 மாதங்கள் | 8./. |
| 12 மாதத்திற்குமேல் 24 மாதத்திற்குள் | 7¼·/. | 60 ,, | 8¼·/· |
| | | 84 ,, | 8½·/· |

**குறிப்பு:** (1) ஒரு ஆண்டிற்குமேல் ரூ. 10000/-மும், அதற்கு மேலும் குறித்த கால வைப்பில் (Fixed Deposit) முதலீடு செய்பவர்களுக்கு மேற்படி வட்டி விகிதத்திற்குமேல் ¼·/. வட்டியும் அதிகம் வழங்கப்படும்.

(2) ரூ. 2000/-மும், அதற்கு மேலும் குறித்தகால வைப்புத் தொகை களில் முதலீடு செய்பவர்களுக்கு, முதலீடு செய்யும்போது கோரினால் மாதந்தோறும் வட்டி வழங்கப்படும்.

(செயற்குழு ஆணைப்படி)

**K. திருஞானசம்பந்தம்,**
செயலாளர்.

**S. சுந்தரம்,** B.A., B.L.,
தலைவர்.



# பட்டினப்பாக்கம் கூட்டுறவு பண்டகசாலை,

(பதிவு எண் XNC 564)

**சென்னை-28.**

**ஆண்டொன்று கூடினாலும் அவர் மெருகு குறையாது;**
**ஆண்டு நூறு ஆனாலும் அவர் உறுதி தளராது.**
**தமிழர் தம் வாழ்வுக்கும் வளத்துக்கும் உழைத்திடும் அய்யாவின்,**
**தொண்ணூற்று மூன்றாம் பிறந்த நாளில் குவித்திடுவோம்**

**நல் வாழ்த்துக்களை**

நிர்வாகிகள்:

**பட்டினப்பாக்கம் கூட்டுறவு பண்டகசாலை.**

# தையல் கொண்ட மையல்
# ஸ்ரீகிருஷ்ணு மார்க் நல்லெண்ணெய்




எவ்வகை சமையலுக்கும் ஏற்றதோர் நல்லெண்ணெய். 100% தூய்மையானது.

பல வகை உணவுகளின் நன்சுவை கெடாமல் தயாரிக்க ஏற்றது.

ருசியுள்ள உணவு. முழுமையான உணவு. வாசனையுள்ள உணவு. சமைக்க ஸ்ரீ கிருஷ்ணு மார்க் நல்லெண்ணெய் உபயோகியுங்கள்.

*ஸ்ரீ கிருஷ்ணு மார்க் நல்லெண்ணெயில் சமைத்துப் பாருங்கள். தனிப் பெரும் ருசியினை சுவைத்துப் பாருங்கள்.*

**டி. அண்ணமலை கவுண்டர் சன்ஸ்.**
ஸ்ரீ கிருஷ்ணு ரைஸ் & ஆயில் மில்.
189. சத்தி ரோடு, ஈரோடு-1.



TAS-2416TM




Criterion CO 2490

# தமிழ் நாடெங்கும் எங்கள் பணி . . . .

## வேளாண்மை

எங்கள் துறை . . .

## ‘பசுமைப் புரட்சி’

எங்கள் குறிக்கோள் . .

**விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நாள்தோறும் பலவகையில் பணிசெய்வதே எங்கள் கடமை . . .**

**அமுலில் இருக்கும் விசேட திட்டங்கள்:**

| | |
|---|---|
| கிணற்று நீர் பாசன திட்டங்கள் | —18 |
| தோட்டக்கால் திட்டங்கள் | — 5 |
| நிலச் சீர்திருத்த திட்டம் | — 1 |

**மேலும் பல திட்டங்கள் உருவாகின்றன . . .**
**ஆண்டுதோறும் பெருமளவில் அளிக்கப்படும் அபிவிருத்திக் கடன்கள்—மின் இணைப்புக்காக விசேட கடன் ஏற்பாடுகள் . . .**

*விவசாய அபிவிருத்தியின் முன்னணியில்*
*நிற்கின்றன—நிலவள வங்கிகள்*

வெளியிடுவோர்

**தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி லிட்.,**

''நெடும்பலம் சாமியப்பா இராமலிங்கம் நிலையம்’
32, லஸ் சர்ச் சாலை, மயிலை, சென்னை—4

எம். சண்முகம், எம். எல் ஏ.,
தலைவர்

வாழ்க பெரியார்! வளர்க பகுத்தறிவு!!



# தந்தை பெரியார் பிறந்தநாள் 17-9-71

முல்லாக்களையும் - பாதிரிகளையும் பார்ப்பனரையும் கொன்றுவிட்டு கோவில்களை எல்லாம் இடித்துவிட்டு கோவில் சிலைகளை எல்லாம் உடைத்தெரிந்து விட்டு அதன்பின் உலகில் கடவுள் நம்பிக்கையும்-மதஉணர்சியும் தோன்றுகிறதா என்று பாருங்கள்

-தந்தை பெரியார்

தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்த நாளில் அய்யாவின் கொள்கைகளை மதிப்போம் - எண்ணங்களை செயலாக்குவோம் என்று சூளுரைப்போம்.

## -:O. V. K. நீர்காத்தலிங்கம் அன் சன்ஸ்:-

138, வடக்கு மாரட்வீதி- மதுரை- 1

தந்தி:-"FRUITS"

போன்-இல்லம்:- 24655
கடை :- 24077

உரிமையாளர்கள்

ஓ. வி.கே. நீர்காத்தலிங்கம், ஆர். சந்திரா

வாழ்க பெரியார்

# T. K. கோவிந்தசாமி

*லீக்கோ அண்டு யூரியாவிற்கு மொத்த விற்பனையாளர்*
*கரி அண்டு தென்னங்கீற்று மொத்த, சில்லறை வியாபாரம்*
*ஏசண்ட்:* **நட்சத்திர மார்க் ஷாவாலா உரங்கள்**
**6, பழனிசாமி முதலியார் தெரு,**
**திருப்பத்தூர் (வ. ஆ.)**

## தந்தை பெரியார்

தமது வாழ்நாளில் பாதியை 45 ஆண்டு
சமுதாய வளர்ச்சிக்காகவே உழைத்ததுபோல்
அய்யா அவர்கள் நமக்குப் பகுத்தறிவை ஊட்டவும்
மாநில சுய ஆட்சித் தத்துவம் முழுமையாக மலரவும்
தந்தை அவர்கள் நம்மிடையே பல்லாண்டு வாழவேண்டுமென்றும்
அவரது அறிவுரையினால் நம் அறிவு பெருகியதுபோல்
விவசாயிகள் நெய்வேலி யூரியாவை உபயோகித்து
உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டை
வளமாக்க வேண்டுமென மனமார
உளமார வேண்டுகிறேன்.

T. K. **கோவிந்தசாமி**

---

*தந்தை பெரியார் 93–வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்*

# A. D. GOPAL

Mfrs. of Hospital Equipments, Surgical Instruments, Household Utensils, Steel Trunks, Agricultural Implements, Commercial and Utility Articles.

*SSI REGD NO SSI PR 504 005 07*

| Works: | | Office: |
|---|---|---|
| 32, Ragava Mudali Street | | 19, Big Bazaar Street, |
| TIRUPATTUR | Phone No 138 | TIRUPATTUR(N A.Dt) |

*Greetings To Thanthai Periyar*

**THE IMMORTAL DRAVIDIAN.**



[Equipped With R.C A SIMPLEX XL 220 Double Projectors]

*With Best Compliments Of :*

# THE
# TAMILMANI TALKIES LTD

[ Estd 1947. Founder : S.A Muthu Nadar ]

*Managing Director*

**S-A-M- MUTHUMURUGAN**

**47. Virudhunagar Road**

**ARUPPUKKOTTAI**

**( Ramanathapuram District )**



# There's an Easier Way...

With MYERS or WASP Pumps you get plenty of Water continuously

**Myers** OR **Wasp**

**PUMPS**

**WATER SUPPLY SPECIALISTS PRIVATE LTD.**

330, Thambu Chetty Street, MADRAS-1

Grams: **PUMPMEN** P.B. No: 1707

**Offices & agencies throughout India**

Regd. & Head Offices :

**8, HAMAM STREET, BOMBAY – I.**

Phone: 23436 -- 27225

வாழ்க பெரியார்!    வளர்க பொதுநலம்



**M. P. Muthukaruppiah**
**Auto Stores, Periyakulam**

**Anand Auto Stores**
**Theni**

**Anand Hardwares**
**Periyakulam**

**Anand Auto Stores**
**Bodinayakkanur**

**M.P.M. Automobiles**
**Batlagundu**

வாடிக்கைதாரர்கட்கு வணக்கம், எல்லோருடைய ஆதரவையும் விரும்பும்:

**LN. ம. பெ. முத்துக்கருப்பையா**
பெரியகுளம். போன்–75

TELE { PHONE: PBX. 10.
GRAM: "KANGAROO"

MUTHU JUBILEE 75th YEAR
1890-1965

177-178. B. B. ST.,
POST BOX No. 8.

# M/s. K.T.O.S. MUTHUKKARUPPA NADAR, DINDIGUL.1.

AGENTS FOR: Bombay paints, MUTHU BRUSH & Parry's SWEETS.
STOCKIST FOR: Binaca PRODUCTS & SANKAR CEMENT.

கா.த.ஒ.சோ. முத்துக்கருப்ப நாடார், திண்டுக்கல்-1.

AGENTS FOR



Bombay paints
& ALLIED PRODUCTS LTD




KANGAROO PAINTS BEST IN THE LONG RUN

# அனைத்து இந்தியாவுக்கும்

# வழிகாட்டி தமிழ்நாடே!

பசுமைப் புரட்சியில் முன்னணியில் நிற்பது

தமிழ்நாடு

குடிநீர் வடிகால் வாரியம் அமைத்திருப்பது

தமிழ்நாடு

குடிசைமாற்று வாரியம் அமைத்திருப்பது

தமிழ்நாடு

ஏழையின் சிரிப்பில் இறைவனை காண

எல்லா திட்டங்களிலும் வழிவகை செய்வது

தமிழ்நாடு

மக்களாட்சியின் மாண்புக்கு உறுதியான

அடித்தளம் அமைப்பது

தமிழ்நாடு

பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு தருவது

தமிழ்நாடு

அமைதி தவழும் தமிழ்நாடு

அனைத்து இந்தியாவுக்கு வழிகாட்டியாக

ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றத்தின்

சின்னமாக திகழ்கிறது.

இயக்குனர்

செய்தி விளம்பரத்துறை

தமிழ்நாடு அரசு.

வாழ்க தந்தை பெரியார்!

ஊராட்சிகளின் உற்ற நண்பன்

நிறுவனம்: 1953

# பஞ்சாயத்துச் செய்தி

## PANCHAYAT NEWS

ESTD: 1953 ஆசிரியர்: K. கோவிந்தராஜலு நிறுவனம்: 1953

தொலைபேசி: 4186

19 ஆண்டுகளாகத் தமிழகத்தில்
ஊராட்சிகளின் உயர்வுக்காக கட்சிச் சார்பற்ற முறையில்
பணியாற்றி வரும் ஒரே வார இதழ்.

## 19-வது ஆண்டு மலர்ச் செய்திகள்



### தந்தை பெரியார் அவர்கள்:

"...'பஞ்சாயத்துச் செய்தி' பத்திரிகை மேலும் பல ஆண்டுகளுக்கு நிலைத்து தொண்டாற்ற வேண்டும். அதைப் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் முழுவதும் நல்ல வண்ணம் ஆதரித்துப் பயன்பெற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்".



மத்திய அரசு
முன்னாள் சமுதாய நலத்திட்ட அமைச்சர்

### திரு. எஸ். கே. டே:

"... I am very happy the weekly journal 'Pancha at News' is now enter ng the 19th year of publication. For a journal of this specialised character this is highly complimentary".



உள்ளாட்சித்துறை அமைச்சர்
மாண்புமிகு

### நாவலர் நெடுஞ்செழியன்:

"...'பஞ்சாயக்துச் செய்தி' கடந்த பதினெட்டு ஆண்டு காலமாக பாடுபட்டு இப்போது 19-வது ஆண்டை துவக்க விருக்கிறது என்பதை அறிந்து மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன்".

ஆண்டு சந்தா
ரூ. 10-

விவரங்கட்கு:—நிர்வாகி,
"பஞ்சாயத்துச் செய்தி",
திருச்சி-2

## THE SOUTHERN RAILWAY EMPLOYEES'

# CONSUMER CO-OPERATIVE STORES Ltd.,

## THANJAVUR.

(Regd. No. T. 1577)

## கூட்டுறவே ! நாட்டுயர்வு !! நம்உயர்வு !!!

கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் உருவாக்க வேண்டுமென்ற திட்டம் உருவாவதற்கு முன்பேஒருமாதிரிகூட்டுறவு சிறப்பு அங்காடியை ரெயில்வே ஸ்டோர் என்றபெயரில் தஞ்சாவூரில் தென்னக இரயில்வே தொழிலாளர் கூட்டுறவுப்பண்டகசாலை நிர்வாகக் குழுவினர் திறம்பட நடத்தி வருகின்றனர்.

பண்டிகை காலங்களுக்குத் தேவையான பலப்பல வண்ணவண்ணத் துணிகள், டெர்லின், டெர்லான், ஆர்லான், டெர்ரின், டெரிக்காட்டன், பின்னி, அரவிந்த், கட்டாவ், மபெட்லால் ஆகிய பலவகை மில் துணிகள் மலிவான விலையிலும் பலஊர் கைத்தறித் துண்டுகள், வேட்டிகள், சேலைகள், குறைந்த விலையிலும் கிடைக்கின்றன, பலமில் துணிகளில் முத்திரை விலைக்கே 2 சதவிகிதம் தள்ளுபடிவேறு செய்யப்படுகிறது. சுத்தம் பண்ணப்பட்ட மளிகை சாமான்கள், ஊத்துக்குளி வெண்ணை, தரம் வாய்ந்த குடைகள், பனியன்கள், பலவகையான ரெடிமேடு ஆடைகள், பிளாஸ்டிக்பொருள்கள், குழந்தைகள் விளையாட்டு சாமான்கள், பெண்கள் அழகுசாதனபொருள்கள் ஊட்டி கோடைக்கானல் காய்கறிகள், மற்றும் பலவகை சாமான்கள் எல்லாம் ஒரே இடத்தில் அதுவும் மலிவான விலையில்!

**வாருங்கள்! காணுங்கள்! ஆதாயம் அடையுங்கள்!**

**திரு. D. ஜோன்ஸ்,**
B. COM. H. D. C.
செயலாளர்.

**திரு. V. செங்கமலம்,**
தலைவர்.

தோற்றம் 1934 வளர்க விவசாயம் தொலைபேசி: 48

# தந்தை பெரியார் அவர்களின் 93வது ஆண்டு பிறந்த நாள் விழாவில் எங்கள் வாழ்த்துக்கள்



35 வருடங்களாக எங்கள் பர்மில், வீடுகட்டுமானங்களுக்கு தேவையான மரம், இரும்பு, வர்ணம், சிமிண்டு, சிமிண்டு தகடு, கொல்லம் ஓடுகள், மின்ஒளி, மின்ஒளி சாதனங்கள் உத்திரவாதத்துடன் சகாயமான விலையில் சப்ளை செய்துவருகிறோம். "**பிரிமியர்**" எலக்ட்ரிக் மோட்டார், பம்பு, ஸ்டாட்டர், சுவிட்சுகளை. உத்திரவாதத்துடன் விநியோகம் செய்கிறோம். தங்கள் மேலான ஆதரவை என்றும் விரும்பும்,

**K. C. P சிதம்பரம்,**

மானேஜிங் பார்ட்னர்

## K. C. P. சங்கரலிங்க நாடார் & பிரதர்,

இரும்பு, மரம் வியாபாரம் அண் எலக்டிரிக் டீலர்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்

கூட்டுறவே! திருத்துறைப்பூண்டி நாட்டுயர்வு

# கூட்டுறவு நகர வங்கி லிமிடெட், நெ 603

திருத்துறைப்பூண்டி.

தொலைபேசி எண் 21 **** Estd 1911

தலைவர் திரு என் எஸ். இராமலிங்கம், பி. ஏ.,
( Dip in Pol. & Pub. Admn. )
as on 30-6-71

| | |
|---|---|
| அதிகாரம்பெற்ற மூலதனம் (Authorised Share Capital) | 500000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் (Paid-up Share Capital) | 246326 |
| சேம நிதி (Reserve Fund) | 159971 |
| இதர நிதிகள் (Other Reserves) | 14[illegible]775 |
| அலுவல் நிதி (Working Capital) | 1356129 |
| டெபாசிட் (Deposits) | 1004[illegible]95 |
| கடன் நிலுவை (Loans Outstanding) | 1215377 |

**30-6-71 முடிய உள்ள ஆண்டின் மொத்த வரவு, செலவு ஒரு கோடி ரூபாய்க்கு மேலாகிறது.**

தமிழ்நாட்டின் முக்கியமான எல்லா இடங்களுக்கும் டிராப்டுகள் வழங்கப்படுகின்றன

கீழ்க்கண்ட விகிதங்களில் பிக்செட்டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 6 மாதம் வரை | 6% |
| 6 மாதத்திற்குமேல் 12 மாதம் வரை | 6½% |
| 12 மாதத்திற்குமேல் 24 மாதம் வரை | 7% |
| 24 மாதத்திற்குமேல் 36 மாதம் வரை | 7½% |
| 36 மாதத்திற்குமேல் | 8% |
| கால் டெபாசிட் (ஒரு வார நோட்டீஸ்) | 5% |

**கரண்ட், சேவிங்ஸ், தினசரி டெபாசிட், ரெக்கரிங் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

10,000-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள்
பாங்கின் மூலம் பயனடைகின்றனர்.

எங்கள் சேவை மேலும் விரிவடைய
பொதுமக்கள் ஆதரவையும், ஒத்துழைப்பையும் கோருகிறோம்.

மக்கள் தேவைக்கேற்ற சேவையே எங்கள் குறிக்கோள்

ஏனைய விவரங்களுக்கு பாங்கிற்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**வி. கணபதி, பி. ஏ.,**
காரியதரிசி.

தபால் பெ. எண். 1

தொலை பேசி எண். 70
தந்தி கோ பேங்

# தென்னுற்காடு கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட். கடலூர். 1.

## கிளைகள்.

1. செஞ்சி
2. உளுந்தூர்பேட்டை
3. திண்டிவனம்
4. சிதம்பரம்
5. பெண்ணடம்
6. பண்ருட்டி
7. விருத்தாசலம்
8. கள்ளக்குறிச்சி
9. நெல்லிக்குப்பம்
10. விழுப்புரம்
11. திருக்கோவிலூர்
12. மூங்கில்துறைப்பட்டு
13. காட்டுமன்னார்கோவில்
14. கண்டமங்கலம்
15. அனந்தபுரம்
16. தியாகதுருகம்
17. கீழ்புவனகிரி

## தலைவர்: திரு எம். செல்வராஜ், எம். எல். ஏ.

| | | | |
|---|---|---|---|
| 1. | அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 1,00,00,000 |
| 2. | செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ... ரூ. | 88,89,000 |
| 3. | பாங்கின் க்ஷேமநிதி | ... ரூ. | 11,89,000 |
| 4. | டெபாசிட்டுகளும் இதர நிதிகளும் | ... ரூ. | 2,11,22,000 |
| 5. | நடைமுறை மூலதனம் | ... ரூ. | 6,43,89,000 |

## நிரந்தர டெபாசிட்களின் வட்டி விகிதங்கள்.

| | |
|---|---|
| 3 மாதங்களும் அதற்கு மேலும் ... | 5.75 % |
| 6 மாதமும் அதற்கு மேலும் ... | 6.25 % |
| 12 மாதமும் அதற்கு மேலும் ... | 6.75 % |
| 2 வருடமும் அதற்கு மேலும் ... | 7.00 % |
| 3 வருடமும் அதற்கு மேலும் ... | 7.25 % |
| 5 வருடமும் அதற்கு மேலும் ... | 7.75 % |
| 7 வருடமும் அதற்கு மேலும் ... | 8,00 % |
| சேமிப்பு கணக்குகளுக்கு ... | 4.25 % |

தவணை வைப்புகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் செலுத்தப்படும் தொகைகளுக்கு அசலுக்கும் வட்டிக்கும் தமிழக அரசினர் உத்திரவாதம் அளித்துள்ளனர்.

நீண்ட கால தவணை வைப்புகளுக்கு வட்டி மாத தவணைகளிலும் மூன்று மாத தவணைகளிலும் வழங்கப்படும்.

ரெக்கரிங் டெபாசிட்டுகள் 12, 24, 36, 48, 60, 72, 84, மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு வட்டி 6¼ சதவிகிதத்திலிருந்து 7½ சதவிகிதம் வரை தவணை காலத்தை அனுசரித்து கொடுக்கப்படும்.

தவணை விபரங்கட்கு தலைமையகத்தி ் செயலாளரிடமும் கிளைபாங்குகளில் முகவரிடமும் தொடர்பு கொள்ளவும்.

கே. நடராஜன், பி. ஏ.,
செயலாளர்.

Telegram: VASANTA.

Telephone: { 25522 / 25523

# THE VASANTHA MILLS LIMITED

REGISTERED OFFICE

SINGANALLUR, COIMBATORE - 5.

Authorised Capital : Rs **55,00,000**

Paid up Capital : Rs. **36,00,000**

SPINDLES : **48,124.** LOOMS: **266**

*Managing Directors :*

Mr. R. K. KANDASWAMY, B. A., B. Sc., (Tech) A. M. C. T.

Mr. K V. RAMACHANDRAN, B. Sc., B S., (Hons.)

SPINNING:

Ring yarn of all counts ranging from 20s to 100s.

**SINGLE** **CHEESES**

**DOUBLE** **CONES**

**STAPLE FIBRE** **GASSED & MERCERISED**

MANUFACTURING

**GADA** **DHOTIES**

**MULLS * TOWELS * LONG CLOTH**

---

*With Compliments to Thanthai Periyar From*

# MADURA SOUTH INDIA CORPORATION PRIVATE LTD.,

Wholesalers & Retailers : IRON & STEEL

Selling Agents :'SUJA, P.V.C. Pipes.'

**80, Sembudoss St., MADRAS. 1.**

Telephone : 23291 , 22725. Telegrams " MUSIC"

## தயாராகின்றது!

# பகுத்தறிவாளர் டைரி

அய்யா, அண்ணா, கலைஞர் ஆகியோர் படங்களுடன் பொன் மொழிகள் ஒவ்வொரு பக்கத்திலும் அச்சிடப்பட்டு தினத்திற்கு ஒரு பக்கமாக, பகுத்தறிவாளர் கழகங்களின் விவரங்களுடன் கைக்கு அடக்கமாக கவர்ச்சியான பிளாஸ்டிக் மேலுறையுடன் தயாராகின்றது.

டேபிள் டைரி : ரூ 2.00

பாக்கெட் டைரி: ரூ 1.25

(10 டைரிகளுக்கு மேல் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 10 சதவிகிதம் கழிவு உண்டு)

விவரங்களுக்கு :

ஸ்புட்னிக் மவுண்ட்ஸ்,
32, ஜட்ஜ் செல்லப்பநாயக்கன் தெரு,
சென்னை. 56.

பெரியார் சுயமரியாதைப் பிரசார ஸ்தாபன செயலாளர் திருமதி ஈ.வெ.ரா. மணியம்மையார் அவர்களை ஆசிரியராகவும், பிரசுரதாரராகவும் கொண்டு, சென்னை திராவிடன் அச்சகத்தில்(ரண்டால்சுரோடு, சென்னை-7)வெளியிடப் பட்டது.

Phone : Office. 3834
Res. 3668
Grams : DIESEL

# Adaikalam Fuel Injection Service & sales

PALAKARAI, TIRUCHIRAPALLI-8.

AUTHORISED
DISTRIBUTORS FOR
**MICO & BOSCH**
PRODUCTS

**Adaikalam Auto Diesel Works**

Specialists in Overhauling All kinds of
Automobile Diesel Engines
PALAKARAI, TIRUCHIRAPALLI-8
Res. P. 3668

**JULIE AUTOMOBILES**

Dealers in Automobile Spare Parts &
Accessories
PALAKARAI, TIRUCHIRAPALLI-8
Res P. 5876

**A. P. J. AUTO SERVICE**

Lubricating Service Station
For Trucks & Buses
TANJORE Rd. TIRUCHIRAPALLI-8
Phone: 5875 5876.

